# நாடார் மன்னரும்,

# நாயக்க மன்னரும்.

இராமலிங்கக் குருக்கள்,
V. A. குமரைய நாடார்.

விலை ரூ. 1

விருதுநகர், சச்சிதானந்தம் பிரஸ்—பதிப்புரிமை.

# மதிப்புரைகள்

ஸ்ரீமத்

மஹாமஹோபாத்யாய–திராவிடவித்யாபூஷண

தாக்ஷிணாத்ய கலாநிதி—டாக்டர்

## உ. வே. சாமிநாதையரவர்கள்

அன்புள்ள ஐயா,

தாங்கள் இம்மாதம் 11–ம் உ அனுப்பிய கடிதமும் "நாடார் மன்னரும் நாயக்க மன்னரும்" என்ற புத்தகமும் வந்தன. புத்தகம் அனுப்பியமைக்கு மிக்க நன்றி பாராட்டுகிறேன்,

சரித்திர சம்பந்த மாகவும், புதுமுறையாகவும், பழைய நூல்களிலிருந்தும் பிற்காலத்து நூல்களிலிருந்தும், பல விஷயங்களை எடுத்துக் காட்டி யிருக்கிறீர்கள். அவற்றால் தங்களுடைய பல நூலாராய்ச்சியும் தமிழ்ப்புலமையும் விளங்குகின்றன.

தியாகராஜவிலாசம்,
திருவேட்டீசுரன் பேட்டை,
சென்னை,
**25—1—1937.**

இங்ஙனம்,
அன்புள்ள,
வே. சாமிநாதையர்,

திருவாளர்

## J. S. பொன்னையா அவர்கள், M. A. (F. R. E. S.),

சரித்திர பொருளாதார ஆசிரியர்,

தலைவர், ஆராய்ச்சி சேவை இலாகா; அமேரிக்கன் காலேஜ்,

மதுரை.

---

இந்நூல் நாடார் குலத்தவர்களாலும் பிற குலத்தவர்களாலும் பெரிதும் போற்றத்தக்கது. இந்நூலின் நான்காம் பாகத்தில் இற்றைக்கு இருநூறு முந்நூறு வருடங்கட்குமுன் நம் தென்னாட்டிற் பற்பலபாகங்களிற் பிரபலமாக வாழ்ந்துவந்த நாடார்குலப் பிரமுகர்கள் பலரைப் பற்றிய பல அரிய குறிப்புக்கள் கர்னபரம்பரை ஆதாரங்களுடனும் சரித்திர ஆதாரங்களுடனும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இத்தகைய உண்மைவரலாறுகளடங்கிய நூல்கள் ஒவ்வொரு தமிழ்நாட்டுப் பழங்குடிகளைப்பற்றியும் எழுதப்படுமேல் அவை சரித்திர ஆராய்ச்சிக்கும் குடியியல் ஆராய்ச்சிக்கும் பெரும் பயன் அளிக்கும் என்பது திண்ணம்.

12—1—'37,
மதுரை.

J. S. பொன்னையா, M. A.
(F. R. E. S.),

திருவாளர்

## A. இராஜகோட்டியப்ப பிள்ளை அவர்கள்

தலைமைத் தமிழாசிரியர்,

**நாடார் டவுன் ஹைஸ்கூல், விருதுநகர்.**

"நாடார் மன்னரும் நாயக்க மன்னரும்" என்னும் இந்நூல், விருதுநகர் திருவளர் தேசிக மரபிற் பெரும் புலமை யாளரும், சமத்துவ சகோதரத்துவ சத்திய சீலரும், உண்மைப்பகுத்தறிவாளரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்து அங்கத்தினரும், சச்சிதாநந்தம் அச்சியந்திர சாலை யதிபரும் ஆகிய கற்றோர்க்கு ஊருணி யன்ன கருணைப் பெரியார் உயர்திருவாளர் இராமலிங்கக் குருக்களவர்களும், பெருநாழி வித்வான் ஆ. குமரய்யக் கவிராயரவர்களும் இயற்றியதாகும்.

பண்டை நூல்கள் பல, பிற்கால நூல்கள் பற்பல, கர்ண பரம்பரை வரலாறுகள் அநேகம், சரித்திர நூல்கள் பல, சிலாசாஸனங்கள் அநேகம், இன்னும் பல அரியசாத னங்களைத் துணைக் கொண்டு தக்க ஆராய்ச்சியும்மிக்கபுலமை யும் வெளிப்படத் திறமையுடன் பலவருஷ கால உழைப்பின் பலனாக வெளிவருவது இந்நூல். நாடார் குலமக்கள் தம் ஒட்பமும் திட்பமும் நன்கறிந்து பெட்புறத் திகழ்வதற்கு இந்நூல் தலையாய கருவியேயாம்.

நாடார் குலமக்களை யன்றி, ஏனைத் தமிழ் நாட்டாரனை வரும் இந்நூலைப் படித்து இன்பங் காண்பார்கள் என்பது ஒருதலை. சரித்திரக் கண் கொண்டு நோக்கு வார்க்கு இஃது ஒரு சாதிக்கே யுரிய சரித்திர மெனத் தோற்றாது, தமிழர் சரித்திரமாகவே புலப்படு மென்பது நிச்சயம். ஆகவே ஆராய்ச்சியாளர்க்கு அழகியதோர் விருந்தா மென்பதில் ஐயமில்லை.

தமிழ் நாட்டிலும் பிறவிடங்களிலும் இந்நூல் யாவரா லும் நன்கு போற்றப் பெறும் என்பதே என் துணிவு.

# திருவாளர்,

## A. அருளப்பன் அவர்கள், B. A.,

தமிழாசிரியர், செயின்று சேவியர்ஸ் காலேஜ்,

பாளையங்கோட்டை

பல்லாயிரம் ஆண்டுகட்குமுன் தென்னிந்தியா வந்தமைந்த தமிழர் (திராவிடர்) சேர சோழ பாண்டியரென்று மூக்குடிகளாய் தத்தம் தலைவர் கீழடங்கி வாழ்ந்துபெருகி தொழிற் பாகுபாட்டால் அரசர் அந்தணர் வணிகர் வேளாளர் எனப்பட்டு தம்மையும் தம்மொழியாம் செந்தமிழையும் பேணி சிறப்புற்றோங்கினர் வேறு மன்னரைத்தம்மடிப் படுத்திக் குறுநில மன்னர். பலர் துணையொடு தம் நாட்டில் செங்கோலோச்சிய மும்முடி மன்னராகு சேர சோழப் பாண்டியப் பழங்குடி வழிவந்தோர் என்னுயினர்? இன்று தமிழர் மலையாளிகள், தெலுங்கர்முதலிய பெரும் பிரிவினருள் சொல்லிறந்த மொழிப்பிரிவொடும் எண்ணிறந்த குலப் பிரிவொடும் விளங்குநரும் விளங்காத வருமாய மக்கள் எவ் வெக்குடி வழிவந்தோரென ஆராயத்துணியும் பெரியார் நுரையிலமர்ந்த ஈ யெனத்தயங்காதிருக்கத் துணையாம் அரிய நூல்களுள், விருதுநகர். உயர் மறைத் திருவாளர் இராமலிங்கக்குருக்கள். எழுதிய 'நாடார் மன்னரும் நாயக்க மன்னரும்' என்ற நூலும் ஒன்றென மதிக்கத்தகும் பொருத் தன்மையுடையது என்பதற்கையமில்லை. அச்சு நூல்களும் ஏட்டுநூல்களுமாய சங்ககால, பிற்காலத் தற்கால நூல்களினின்றும் சாசனங்களினின்றும் பழம் வரலாறுகளினின்றும் பிறப்பெருமாராய்ச்சி யாளர் சொல்லினின்றும் உரிய மேற்கோள்களும் எடுத்துக்காட்டுகளும் கொண்டாண்டெழுதிய இவர் நூல் குலவாராய்ச்சிக்கு அச்சாணியன்னதென்பது மிகையோ? ஆகவே கற்றார் மெய்யுணர்வொடு காமுறுதற்குரியது இந்நூலென்பது துணிபு.

21—1—37<br>
பாளையங்கோட்டை

A. அருளப்பன். B. A.

# OPINION

The Nadars are low, cries, Sarma-Dasa pride.
Untrue is the charge;ever by themselves denied.
Are they not then in strictest reason clear,
Who wisely indeed make out their case here?

Though the present time is not opportune, for ethnologic research, and the production of treatises, on the subject of castes, and creeds, yet, a Nadar scholar of life-long celibacy, and the standing of Gurukal Ramalinga Periyar, is certainly within his rights, to bring to light the unanswerable facts and figures, based on the perennial, and unprejudiced, opinions of no less persons, than Dewan Bahadur, V. Nagamiah, the first graduate, of the Maharajah's College, Trivandram, and the distinguished author of Travancore State Manual, honoured with the admirable imprimatur of three

of the Consummate premiers of England viz. Earl Asquith, Lord Balfour and last, but not least, Mr. Lloyd George, 'the Wizard of Wales' happily now living, and Rao Bahadur Sundaram Pillai M A. a solid Tamil scholar, and the well-known author of the dramatic Manonmaniyam, men, who would never sell themselves for gold, or suffer themselves to be seduced from their first love of truth, as the malign Carpers, who apply themselves, now-a-days, to the mean purpose of murdering their conscience, in cold blood, with the swords of the figment of bards, and canard of sycophants, on subjects of ethnologic importance, and Tamil antiquarian interest.

**A. PONNIAH NADAR.**

Late of Hindu College, & C.M. College
Tinnevelly.

Editor "The Southern Star" and Author
of "Life and Liberty etc".

திருநெல்வேலி
மதுரை திரவியம்தாயுமானவர் இந்து காலேஜ்
பிரின்ஸிபால்

## திருவாளர். அலெக்ஸாந்தர்ஞானமுத்து அவர்கள், எம். ஏ.

---

திருவாளர். இராமலிங்கக் குருக்கள் எழுதிய 'நாடார் மன்னர்'— என்ற நூலை நான் மிகுந்த உற்சாகத்துடன் படித்தேன். இது நாடார் சமூகம் சம்பந்தப்பட்டவரையில் தென்னாட்டு சரித்திரத்தை ஆதியோடந்தமாய் அறிவிப்பதாக இருக்கிறது. இந் நூலாசிரியருடைய ஆராய்ச்சித் திறமை, சீரிய நேரிய முடிபு, தமிழ் இலக்கிய ஆர்வம் இந் நூலின் மேன்மைக்குக் காரண மெனலாம். பழங் காலத்திய நாடார் மரபினர் நாகரீக உயர்ச்சி, சுதந்திரவேட்கை, அறப் பணி, திருப்பணி ஊக்கம், ஆட்சி, அதிகார முறைமை முதலியவற்றை இந்நூல் நன்ருகத் தெரிவிக்கிறது. இதைப் படிக்கிற நாடார் மகாஜனங்கள், மிகப் பழங்காலத்திலேயே அரசராகவும், மேலவராகவும் வாழ்ந்துவந்த தங்கள் முன்னோர் சான்ருராக யாவராலும் நன்கு மதிக்கப்பட்டு, பின் பற்றப்பட்டு வந்த பண்பும், பயிற்சியும் உடையார் என்பதை தெரிய, மன எழுச்சி கொண்டுழைத்துப் பண்டை நிலையை எய்த முயலுவர் என்பது திண்ணம்.

4—3—'37.

# FOREWORD.

It affords me pleasure in writing a foreword to the book, "The Nadar Kings and the Naik Kings" as it comes from **the pens of Mr. Ramalinga Gurukal, a great Tamil Scholar, and Mr. Kumaraiya Kavirayor,** a distinguished poet of Perunali. The authors give a masterly exposition of the subject which is intricate and obscure, exploring it through the long and weary path of research Though the unreliable historical sources of tradition are handled in certain places, the main conclusions are based upon the solid evidences, such as, epigraphic, numismatic, archaeological, and historical writings, both Indian and foreign. The summary furnished at the end of each chapter and the general summary at the end of the book are commendable in as much as they drive home the points Simplicity, force, and clarity characterise the style of the book throughout.

To begin with, the authors prove with facts indisputable that the Nadars have been existing in 'Tamilakam' from time immemorial as a ruling community, giving rise to the dynasties of the Pandya and the Chola Kings. The martial spirit, the high sense of duty and self respect, the straightforwardness and other noble qualities exhibited by the Nadars, in whatever call they may be, corroborate the view that royal blood runs in their veins. The shock experienced by the invasion of Malik Kafur in the early part of the fourteenth century, the disruption of the Pandya and the Chola Kingdoms by the conquest of the Naik generals of Vijayanagar and the establishment of the Naik dynasties at Madura and Tanjore are then graphically narrated. Lastly the vicissitudes of the Nadars are traced to the present day by picturiug to us how they, after being dislodged from the citadel of power, were oppressed by the conquerors and how they took to commerce, agriculture, and other occupations.

Vincent Smith, the learned historian, says "The materials available for the study of early Dravidian institutions are not yet sufficiently explored to permit of history being based upon them. Some days, perhaps, the history of

Dravidian civilization may be written by a competent scholar skilled in all the lore and languages required for the study of the subject". These words plainly show that the history of 'Tamilakam' is obscured by the mist of time. A praiseworthy attempt has however been here made to tear the veil of obscurity surrounding the Cholas and the Pandyas and to give us a peep into the palmy days of Dravidian civilization.

History should not merely trace the rise and fall of dynasties, but it should illumine the present explaining how the present condition of society has evolved out of the past. It is pleasing to note that the authors have succeeded in holding a mirror to the present in order to make it intelligible. It is clearly set forth why there was the influx of the Hindustani, the Canarese and the Telugu speaking population into the Southern parts, resulting in the disappearance of the social equality and the right of temple entry for the Nadars. The authors explain why there is a concentrtion of the Nadar population in the Madura, Ramnad and Tinnevelly districts particularly in towns, like Sivakasi, Tirumangalam, Aruppukottah, Virudhu-nagar and Sattur which can boast of many Nadar merchant princes and philanthropists, leaders of social and political movements and big Nadar

educational institutions It is pointed out how some of the Nadar brothren were driven into the fold of Christianity. The authors expound all these in the course of the book in such a way as to give an intellectual treat to the reader. Hence they have succeeded in showing how to solve some of the pressing social problems of Tamil Nad in the light of the past.

The authors try to pave the way for national unity by taking care to lift the subject out of the undesirable communal controversy by not wounding the susceptibilities of other caste people. The Nadar community stands oppressed to-day with the loss of her birth right of temple entry in the Madura, Ramnad and Tinnevelly districts.- Ignorance is the cause of misunderstanding and prejudice. Since the cause of antipathy existing between the Nadar community and the other castes has been historically explained, I hope that the book would influence the other caste people to shake off their assumed 'superiority complex' and redress speedily the grievances of the Nadars and that it would make the Nadars feel proud of their past achievements in the arts of peace and war and inspire them to play their part, worthy of their past, in the larger national life of reawakening India.

**E. PARAMASIVAM, B. A., L. T.,**

History Assistant,
The Nadar Town High School.

**VIRUDHUNAGAR,**
**22-2-37.**

# முன்னுரை.

"நாடார் மன்னரும் நாயக்க மன்னரும்" என்னும் இந்நூல் ஜாதி சம்பந்தமான சரித்திரம். ஜாதி யென வொன்று தோன்றிய காலத்திலிருந்தே அதனை அடியோ டொழிக்கும் கிளர்ச்சி யெழுந்தது. 'கபிலரகவல்' இதற்குச் சான்று பகரும்.

"சாதி யழியச் சமயபேத மொழிய
நீதி தழைய நினைந்தேன் பராபரமே" என்பது

சமரஸ முன்னேற்ற விருப்பத்தையுடைய பெரியார் கூற்று. அறிவு நிரம்பி, உணர்ச்சி பொங்கிக் கிளர்ச்சி ததும்புங் காலம் மும்மரமாய் வளர்ந்து வருகின்றது. குருட்டு நம்பிக்கையும், மூடப் பழக்க வழக்கங்களும், கண்மூடித்தனமான கொள்கைகளும் மலை யேறுகின்றன. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம்! என்று ஆர்ப்பரிக்கின்ற இப் புதிய யுகத்தில் இத்தகைய ஜாதிநூல் எழுதல் வியப்பே! எனினும் காரணங்கள் உள.

சாதி அழியலாம்; சரித்திரம் வளர்தல் வேண்டும். சரித்திரம் நாட்டிற்குக் கண்ணும், ஆவியும் போன்றது. சரித்திரம் இல்லாத நாடு பழிக்கப்படும்; சரித்திரத்தைப் புறக்கணிக்கும் தேச மாந்தரும் பழிக்காளாவர். நம் தமிழ் நாட்டில் பல நூற்றுண்டுகட்கு முன்னிருந்த நம் மூதாதையர் தம் வரலாறுகளைத் திறம்படப் பொறித்திலர். அதனுல் நாம் அடையும் துயரம் கணக்கி லடங்கா தன்றோ? ஓர் நாட்டின் மக்கள் அயல் நாட்டவருடன் கலந்து அவரால் அதிசயிக்கத் தக்க வாழ்க்கை நடத்துதலே நாகரீகமாகும். நாகரீகத்தை விரும்-

பாத மாந்தர் இரார். நாகரீக வளர்ச்சியே தேச முன்னேற்றம் தேசமுன்னேற்றம், காலங்கள் தோறும் அடையும் மாறுதல்கள் முதலியனவே சரித்திரம். சமூகங்கள் பல சேர்ந்தது தேசம். சமூக சரித்திரங்கள் ஒன்று சேர்ந்து தேச சரித்திரமாகின்றது. சமூக முன்னேற்றம் தேசாபிவிருத்திக்கு அஸ்திவாரம்.

பாரத நாட்டில் பண்டைக் காலந்தொட்டுப் பண்புடன் வளர்ந்து வருகிற ஜனசமூகங்களில் நாடார் சமூகமும் ஒன்று. பல லக்ஷக்கணக்கானவர் இச் சமூகத்தினராகக் காணப்படுகின்றனர். பழந்தமிழ் நாடு முடியுடை மூவேந்தராலாளப் பெற்றுச் சகல வளங்களாலும் நிரம்பி முற்காலத்திற் குன்றின்மேலிட்ட விளக்குப்போற் பிரகாசித்தது மூவேந்தருட் பாண்டியர் தமிழ்வளர்த்த தண்ணளியும் மிக்கோராவர். அப் பாண்டியர் வரலாறு கூறப்புகுந்த அதிமேதாவிகளாகிய சரித்திராசிரியர் பலரும், பாண்டியர் ஆட்சியிழந்த பின் என்னவாயினர்? பாண்டியர் சந்ததியார் யாவர்? என்னும் வினாக்கட்குச் சரியான விடை யிறுத்தனரல்லர். "நாடார் குல மக்களே தமிழ் வளர்த்த வழுதி மன்னரின் சந்ததியார்" என்னும் உண்மை, அச்சரித்திராசிரியர்க்குப்புலப்பட வில்லையோ? அன்றி, அறிந்தும் அங்ஙனம் கூற மனம் ஒருப்பட்டிலரோ? அறியோம்.

"நாடார் குலத்தவர் பாண்டியர் மரபினரே" என்னும் சிறந்த உண்மை இந்நூலிற் பற்பல சங்கநூல் மேற்கோள்களுடன் விளக்கப் பெற்றுள்ளது. முறை யரசுரிமையைப் பாண்டியர் சுமார் அறுநூறு ஆண்டுகட்கு முன்னரே யிழந்தனர். அப்பால் சிற்றரசராகத் திகழ்ந்தனர். பின்னர் நாயக்

கர் ஆட்சியில் அவர்கள் தம்மாட்சி முழுதும் இழந்து பற்பல இன்னல்களுக்கு இலக்காயினர். நாய்க்க மன்னராட்சி யிறுதி யடையும் வரை நாடார் மன்னர் அடைந்த துயரங்கட் களவில்லை நாயக்கராட்சியில் நாடார் குலத்தவரின் வாழ்க்கை, "கரந்துறை வாழ்க்கை" யென்னும் அஞ்ஞாத வாசமே என்னலாம். அவ்வாட்சி அடியோடழிந்த பின்னர், நாடார்குல மக்கள், இழந்த முடியைத் திரும்பப் பெற்றில ரெனினும் சீரும் திருவும் பெருக வாழ்வாராயினர். இவ் வரலாறு பற்பல பகுதிகளாகப் பகுத்து விவரமாகப் பற்பல நூலாதாரங்களுடன் இப்புத்தகத்தில் நன்கு கூறப்பட்டிருக்கின்றது. இச் சரித்திரம் நாடார் குலத்தவர்க்கே யன்றி மற்றவர்க்கும் பழமையை விளக்கிக் காட்டி, "நம் தமிழ் நாட்டின் சரித்திரமே இஃது" என்று புகழத்தக்க வகையில் நடுநிலைமையுடன் கவனித்து எழுதப்பட்டிருக்கின்றது. யாங்கள் இந்நூலை இயற்றுதற்காக உபயோகித்த சாதனங்கள் பல. சிலா சாஸனங்கள், பழைய சுவடிகள், கர்ணபரம்பரைச் சரித்திரங்கள், இதற்கு முன் இதே துறையில் வெளிவந்த சில நூல்கள், பத்திரிகைகள் முதலிய பல ஆதாரங்களைக் கொண்டே இந் நூலை இக் காலத்துக்கேற்ப எழுதத் துணிந்தோம்.

இந் நூல் எழுதுகையில் மிக்க உதவியாயிருந்து பல அரிய விஷயங்களைப் புலப்படுத்திய செந்தமிழ்ப் பத்திரிகை இதழ்கள் பல. செந் தமிழ் வாயிலால் தமிழைப் புரக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கம் நீடு வாழ்க! சங்கநூல்கள் எமக்குக் காட்டிய உண்மைகள் பல. சங்கநூல்களைச் சிதலுண்டு மறையா வண்ணம் சிறப்பாக அச்சிட்டுதவி, தமிழ் நாட்டவரே யன்றிப் பிறநாட்டவரும் போற்றத் தமிழ்த் தலைமை பூணும் தமிழ் அன்னையின் தவப்புதல்வராகிய மஹாமஹோ

பாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் வே. சாமிநாதையர் அவர்கட்குத் தமிழ் மக்கள் செய்யத்தக்க கைம்மாறும் உளதோ ? நாடார் குலாபிமானியாய் நாடார் குல முன்னேற்றங்கருதி நூல்கள் பல இயற்றிய காலஞ்சென்ற திருவாளர் விஜயதுரைசாமிக் கிராமணி யவர்களும் நாடார் குல வரலாறியற்றிய ரபி. சட்டம்பிள்ளை ஐயா குமாரர் உயர்திரு. குலசேகரராஜ் அவர்களும் எமக்கு இந் நூலியற்றுந்துறையில் வழிகாட்டிகளாவர். பாளையங்கோட்டை செயின்ற் ஜான்ஸ் கல்லூரித் தலைமைத் தமிழ் ஆசிரியர், வித்வான். திருவாளர் தா. மாசில்லாமணி நாடா ரவர்களது “ ஆதித்த சரித்திரம் ” எமக்குப் பெருந்துணை புரிந்தது.

இப் புத்தகத்தைத் திருத்தமாக முழுவதூஉம் சுத்தப் பிரதியெழுதிக் கொடுத்து அச்சிதழ்களை யொப்பு நோக்கிப் பரிசோதித்தல் முதலிய உதவிகளை அன்புடன் செய்த எமது அன்பர், விருதுநகர் நாடார் டவுன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர். **A.** இராஜகோட்டியப்ப பிள்ளை அவர்களின் நன்றி மிகுதியும் பாராட்டற் பாலது. இந் நூலை எழுதுமாறு எம்மைத்தூண்டி இடையிடையே எம்மை ஊக்கி இஃது இனிது முடிதற்கு உற்றதுணைவராய் விளங்கியநண்பர், வீரவநல்லூர் மிராசுதார் **V.** ஆறுமுக நாடார் பௌத்திரரும், இராஜநாயக நாடார் குமாரருமான திருவாளர் **R. S.** துரைசாமி ( விருதுநகர், க்ஷத்திரிய வித்தியாசாலை ஹைஸ்கூல் எழுத்தாளர்) அவர்களது குலாபிமானமும்பேரன்பும் போற்றத்தக்கன ; தமிழ் நாட்டினர் இந் நூலைப் படித்துப் பார்த்து இன்பம் காண்பார்க ளென்பதே எமது நம்பிக்கை.

இங்ஙனம்,

ஆக்கியோர்.

# நாடார் மன்னரும்-
# நாயக்க மன்னரும்.

முதல் அத்தியாயம்.

## நாடார் மன்னரின் பூர்வீகம்.

### 1. சான்றார், க்ஷத்திரியர், நாடார் என்னும் சொற்களின் பொருள்.

**வட** பரதகண்டம், தென் பரதகண்டம் ஆகிய ஈரிடங்களிலும் பண்டைக் காலந் தொட்டு வழங்கும் பாஷைகளுள், ஆரியத்தில் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்றும், திராவிடத்தில் பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர் என்றும் வழங்குகின்ற ஜாதிகள் வகுக்கப் பெற்ற காலத்திலேயே அரசர் ஜாதியாகிய க்ஷத்திரிய சாதியினரே-சான்றோராவர்.

ஆதி நவபிரமாக்களில் 'மரீசி' என்பவருடைய மகன்-காசிபன்; அக்காசிபனுடைய மகன்-சூரியன். நவபிரமாக்களிலே மற்றொருவராகிய அத்திரியின் புத்திரன்-சந்திரன். பரதகண்டத்திலே ஆதி காலத்தில் அரசாண்ட அரசவர்க்கத்தினரின் மூலபிதாக்கள்-சூரியசந்திரரே எனப்புராணங்கள் கூறுகின்றன. சூரியனுக்கு, ஸம்ஸ்கிருதத்தில் "ஸாட்சி"

என்று ஒரு பெயர் உண்டு. ஸாட்சி என்னும் பதத்திற்கு நேரான தமிழ் மொழி, "சான்று" என்பது. சான்று என்னும் சொல்லடியாய்ப்பிறந்தது — "சான்றார்" என்னும் பெயர். சந்திரனது சந்ததியார் — "சாந்த்ரர்." சாந்த்ரர் என்னும் சொல்லே — "சான்றார்" எனத்திரிந்து வழங்கும். ஆகவே, இப்பரதகண்டத்திலே அரசாண்ட சூரியன் அல்லது சந்திரனது வமிசத்தவராகிய அரசர்க்கெல்லாம் "சான்றார்" என்னும்பெயர் பொருந்துவதேயாகும். அரசர் ஆட்சி புரியும் இடம் க்ஷேத்திரம்; க்ஷேத்திரம்—பூமி. க்ஷேத்திரத் திற் குரியோர்—"க்ஷத்திரியர்". 'பூமி' என்னும் சம்ஸ்கிருதச் சொல், தமிழில் 'நாடு' என வழங்கும். நாட்டையாள்வோர், "நாடார்" என்பதே பொருத்தம். இவ்விவரங்களை, நாடார் களும், கிராமணிகளுமாகிய சான்றோர்குலக் கல்விமான்கள் பலர், தாம்எழுதிய பலநூல்களில் விளக்கிக் காட்டியிருக் கின்றனர்.

## 2. அரசர்க்குரிய பெயர் வகைகள்.

இலக்கணவிளக்கம், பொருளதிகாரம், அகத்திணையியல் 222-ம் சூத்திரம்:—

"நிலப்பெயர், வினைப்பெயர், பண்புப் பெயரோடு,
குலப்பெயர், இயற்பெயர் கூறுப அவர்க்கே"—என்பது.

இச்சூத்திரத்தின்படி அரசர்க்கு நிலப்பெயர், வினைப்பெயர், பண்புப்பெயர், குலப்பெயர், இயற்பெயர் ஆகிய பல பெயர் கள் வழங்கும் என்று உணரலாகும். இப்பெயர்களுள், நிலப்பெயராவது — குருநாடன், கோசலநாடன் என்பன போன்று வருவது; வினைப்பெயராவது — பூமிகாவலாகிய

தொழிலால், காவலன், புரவலன், பூபாலன் என்பன போன்று வருவது; பண்புப் பெயராவது — இளஞ்சேட் சென்னி, முதுகுடுமிப் பெருவழுதி என்பன போலவருவது; குலப்பெயராவது— பாண்டியன், சேரன், சோழன் என்பன போலவருவது; இயற்பெயராவது — தாய், தந்தையரால் இடப்பெற்ற பெயர்.

இவற்றுள், பண்பு—குணம்: பூமியை ஆளுதல், அரசர்க் குரிய குணம். அவ்வாறு பூமியை ஆளுதலிற் செலுத்தப் படும் ஊக்கமே — சான்ருண்மை. சான்ருண்மையயுடை யோர்— " சான்ருேர். "

## 3. சான்ருண்மை — திருக்குறள்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் இயற்றிய பொய்யா மொழியாகிய திருக்குறளில் 99-ம்அதிகாரம்—சான்ருண்மை. சான்ருண்மை என்னும் சொல்லிற்கு உரையாசிரியராகிய பரிமேலழகர், " பல குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை " எனப்பொருள் கூறுகின்ருர். பூமியை ஆளுதலினும் சிறந்த ஊக்கம் வேறு யாது உளது?

> ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அது சான்ருேர்
> மாற்ருரை மாற்றும் படை. [திருக்குறள், 985.
>
> சான்றவர் சான்ருண்மை குன்றின் இருநிலந்தான்
> தாங்காது மன்னே பொறை. [திருக்குறள், 990.

என்பன வாதிய செய்யுட்களால்,

சான்ருண்மை யென்பது பூமியை ஆளும் ஊக்கத்தையும், சான்றவர், சான்ருேர் என்பவை பூமியைஆளும் அரசரையும் குறிக்கும் என்பது தெளிவாய் விளங்கும்.

## 4. சான்றவர், சான்றோர் — கம்பராமாயணம்.

கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், கிளை கண்டு நீங்குபடலத்தில்:—

" ஈன்றவர் முதலிய எண்ணில் சுற்றமும்,
சான்றவர் குழுவொடு தவத்து ளோர்களும்,
வான்றரு சேனையும் மற்றுஞ் சுற்றுற
மூன்றுநூல் கிடந்ததோள் முனியும் போயினன்."
[137-ம் செ.

எனவருஞ் செய்யுளில், "சான்றவர் குழூ" வென்பது தோள் வலி மிக்க அரசர்கூட்டத்தை உணர்த்துமாறு காண்க. அவ்வரசர் குலத்தினரே, தவமுடையோருமாவர் என்பது நன்கு தெளியப்படும்.

இன்னும் யுத்தகாண்டம், பிரமாத்திரப்படலத்தில்—

" சான்றோர் மாதைத் தக்க அரக்கன் சிறைதட்ட
ஆன்றோர் சொல்லும் நல்லற மன்னன் வசமானல்,
மூன்றாய் நின்ற பேருல கொன்றாய் முடியாவேல்
தோன்றா வன்றோ வல்லவின் வீரத் தொழிலம்மா!"
[215-ம் செ.

எனவருஞ் செய்யுளில், சீதாபிராட்டியை, "சான்றோர் மாது" என்று வெளிப்படையாய்க் கூறியிருப்பது காண்க.

இனி, மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகை, குரோதி ஸூ-த்து மார்கழிமாத இதழில் பின்வருஞ் செய்யுள் ஒன்று காணப்படுகிறது:—

"அந்தணர், வணிகர், வேளாண் மரபினர், ஆலி நாட்டுச்
சந்தணி புயத்து வள்ளல் சடையனே அனைய சான்றோர்,
உய்ந்தனம் அடியேம் என்னும் உவகையர் உவரி நாண
வந்தனர் இராமன் கோயில் மங்கலத் துரிமை மாக்கள்."

இச்செய்யுளும் கம்பராமாயணத்தில் உள்ளதே என அப்பத்திரிகையில் குறிக்கப்பட்டுளது. ஆனால், இஃது அச்சிட்டு வழங்கும் கம்பராமாயணப் பிரதிகளிற் காணப் படாது. கம்பர், தம்மையாதரித்த வள்ளலாகிய திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியாரை ஆயிரத்துக்கு ஒரு செய்யுளில் வைத்துப் பாடிய பாடல்களுள் இதுவும் ஒன்றாகும். இந்தச் செய்யுளில், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகியவரை அடைமொழியின்றி வழங்கிய கம்பர், தம் காவியக் கொடை நாயகனாகிய சடையப்ப வள்ளலை யொத்த சான்றோர் என்று உவமானம் கூட்டி அரசரைக் குறிப்பிட்டிருக்கின்றார். ஆகவே "சான்றோர்" எனவரும் இவ்விடத்தினும் — அப்பதம், அரசரையே குறிப்பதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளியப்படும்.

## 5. சான்றார் — பாரதவெண்பா.

பாரதவெண்பா, உத்தியோக பருவத்திலே, வீமன் தருமனைப் பார்த்துக் கூறுவதாக அமைந்த —

"ஈன்றார்க்கோர் மாதுன்பம்; இன்னார்க்கோர் இன்னாச்சொல்
சான்றார்கட் கெல்லாம் தலையிறக்கம்;—தோன்றும்
கொடுவில்வாட் டானைக் குலவேந்தே! மன்றில்
வடுவிலாள் வைத்த வடு."

என்னும் செய்யுளில், திரௌபதிக்கு ஏற்பட்ட மானபங்கத்தினால், பெற்றோர்க்குத் துன்பமும், பகைவர்க்குப் பழிச்

சொல்லும், நட்பினையுடைய அரசராகிய சான்றோர்கட் கெல்லாம் தலையிறக்கமாகிய வெட்கமும் ஏற்பட்டன வென்று வருவதை உற்றுநோக்குக. 'சான்றோர்கள்' என்னும் சொல்-- இச்செய்யுளில் நேருக்குநேராய் 'அரசர்கள்' எனப் பொருள் படுகின்றது! இன்னார் - பகைவர்; அதாவது பகையரசர். 'இன்னார்' - என்னும் சொல்லை யடுத்துச் 'சான்றோர்' என வைக்கப் பெற்றுள்ளது. பகைவருக்கு அடுத்த படியிலே கூறத்தக்கோர் - நட்பாளரான அரசராகிய சான்றோரேயாவர். இதுவன்றி, சான்றோர் என்னும் சொல்லிற்கு, தவமுடையோர், அறிவுடையோர் என்று வேறு பொருள் கூறுதல் பொருந்தாது. அரசகுலத்துப் பத்தினிக்கு ஏற்பட்ட அவமானம் நட்பரசர்க்கே மிக்க வெட்கத்தை யுண்டுபண்ணுவது இயல்பு. மற்றெவரையும்விட அன்புடையரசரே ஆறாத் துயரம் எய்துவர்.

## 6, சான்றோர் — புறநானூறு,

சுமார் இரண்டாயிரம் வருடங்கட்கு முன் தமிழ் நாட்டிலே 'கடைச்சங்கம்' சிறப்பாக நடைபெற்றது. அக்கடைச் சங்கத்திலே தங்கி ஏராளமான தமிழ்ப் பாடல்களைப் பாடிய புலவர் பலர். அப்புலவர்கள் பாடிய செய்யுட்களைத் தொகுத்துப் பல தொகை நூல்கள் வழங்குகின்றன. அவை எட்டுத் தொகை,பத்துப்பாட்டு,பதினெண்கீழ்க்கணக்கு முதலியவை. எட்டுத் தொகை நூல்களில் ஒன்று - புறநானூறு. பண்டைத் தமிழரது நாகரீகத்தையும், அரசியற் சிறப்பையும் இன்னும் பல அரிய விஷயங்களையும் புறநானூற்றில் தெளிவாகக் காணலாம். அப்புறநானூற்றில் கபிலர் பாடிய 117-ம் செய்யுள்:—

„ மைமீன் புகையினும், தூமம் தோன்றினும்,
தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்,
வயலகம் நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்கண்
ஆமா நெடுநிரை நன்புல் ஆர
கோஒல் செம்மையின் சான்றோர் பல்கி
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரைய
பாசிலை முல்லை முகைக்கும்
ஆய்தொடி அரிவையர் தந்தை நாடே."

கடையெழுவள்ளல்களில் ஒருவனும், அழியாப்புகழ் படைத்த அருங்கொடைப் பெருமானுமாகிய பாரி என்னும் பறம்பு மலைச் சிற்றரசன்மீது பொறாமையுற்ற சேரசோழ பாண்டியர், அவனைத்தம் வஞ்சகத்திறற் கொன்றொழித்த னர். பாரிக்குக் குணமணிகளாகிய இரு பெண்மணிகள் இருந்தனர். பாரி, உயிர்நீத்த பின்னர், பாரியின் உயிர்த் தோழராகிய கபிலர் என்னும் புலவர்பெருமான் பாரி மகளிரைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். அவர் அப்பெண்களை மணந்து கொள்ளும்படி பல சிற்றரச ரையும் தனித்தனியே கண்டு வேண்டினர். அவ்வரசர், 'சேர சோழ பாண்டியருக்குப் பாரி பகைவன்' என்பது கருதி, அங்ஙனம் செய்ய மறுத்து விட்டனர். ஆகவே புலவர் மனமுடைந்து, பாரிமகளிரை அந்தணரிடம் அடைக் கலமாக ஒப்புவித்து உயிர் துறந்தனர். அங்ஙனம் புலவர் அந்தணர் பால் அவர்களைக் கொடுக்கும் பொழுது, பாரியின் சிறப்பை எடுத்துக்கூறும் செய்யுளே மேற்குறிக்கப்பெற்றது. அச்செய்யுளில், "கோஒல் செம்மையிற் சான்றோர்" என்பது

செங்கோற் சிறப்பையுடைய சான்றோர் அதாவது அரசர் எனவும் பொருள்படுதல்காண்க.

இனி, அச்செய்யுளுக்குரிய பழையவுரை:—

" கருநிறமுடையசனி, தனக்குப் பகை வீடாகிய சிங்க ராசியிற் புகினும், எல்லாத் திசையிலும் புகைதோன்றினும், தென்றிசைக்கண்ணே வெள்ளி போக்குறினும், வயலிடம் விளைவுமிகப் புதலிடத்து பூமலர மனையிடத்துக் குழவியை யீன்ற மேவிய கண்ணையுடைய ஆமாவினது நெடிய நிரை நல்ல புல்லை மேயக் கோல் செவ்விதாகலின் அமைந்தோர் பலராக மழை பிழைப்பறியாத புல்லிய நிலத்தின் கண்ணது இளைய வெருகினது கூரிய பல்லையொப்பப் பசிய இலையை யுடைய முல்லை முகைக்கும் நுண்ணிய தொழிலையுடைய வளையினை யணிந்த மகளிருடைய தந்தை நாடு— "

இதன்கண், பாரியின் கோல் செவ்விதாகலின் அச் செங்கோற்சிறப்பு அமைந்தோர்—அதாவது சான்றோராகிய அரசர் கூட்டம் பெருக, எனப்பொருள் படுதல் நன்கு தெளியப்படும்.

## 7. சான்றான், சான்றார் — பழமையானஜாதி தொல்காப்பியம்.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், குற்றியலுகாப் புணரியல் 76-வது சூத்திரத்தின் உரையில், உரையாசிரிய ராகிய இளம்பூரணர், "சருஞ் சான்றான்"(சருமை—பெருமை) என்றது பண்புத்தொகை; கருஞ்சான்றான் எனத் தொகை யாயவழி, 'கரும்' என்பது கரியான்எனப்பால்காட்டிநிற்றலிற் புணர்க்கப்படாதாயிற்று." எனவரைந்துள்ளார். இவ்வுரை

யால், பண்டைத் தமிழ் நாட்டில் 'சான்றான்' என்னும் பண்புடைச் சாதி இருந்ததென்பது தெளிவாகின்றது. இன்னும், தொல்காப்பியம், புள்ளிமயங்கியல் 28-வது சூத்திர வுரையில், இளம்பூரணர், "எல்லாக் கொல்லரும், சான்றாரும், தச்சரும், பார்ப்பாரும்" எனவும் கூறியிருக்கின்றனர். தொல்காப்பியம், சொல்லதிகாரம், பெயரியல் 33-ம் சூத்திர வுரையில், சேனாவரையர், "எல்லாப் பார்ப்பாரும் எல்லாச் சான்றாரும்" என உவமானம் கூறுகின்றார். இதனால் சான்றார் — பழமையான சாதி என்பது மாத்திரமன்றி, பார்ப்பாருக்கு அடுத்த வரிசையில் வைக்கத் தக்கோரென்பதும் புலப்படுகின்றதல்லவா? பார்ப்பாருக்கு அடுத்த ஜாதியாய்த் தொன்றுதொட்டு வழங்குவது க்ஷத்திரியர் என்னும் அரசர் ஜாதியே! ஆதலால், இங்குச் 'சான்றார்' எனக்குறித்தது க்ஷத்திரியராகிய அரசரைக் குறிக்கும் என்பது வெளிப்படை.

## 8. சான்றோர் — ஒட்டக்கூத்தர்.

கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்க சோழன் கோவையில்:—

"சான்றோரும் அந்தண ரும்புறஞ் சூழத் தமனியப்பூண்
ஈன்றோர் கொடுப்ப எரிகரி யாயிதழ் தாதகியாம்
தேன்றோய் அலங்கல் உறந்தைக் குலோத்துங்கன் சென்னி [வெற்பில்
வான்றோய் புகழ்மன்ன னங்குழூஉ நீரில் மணந்தனனே!

என வரும் செய்யுளிலும்,

## 9. சான்றார் — நச்சினார்க்கினியர்.

சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், 361—ம் செய்யுள் நச்சினார்க்கினியர் உரையில், "இளையானும், மடவாளும் விரும்பிக் கொண்டுவந்த பார்ப்பார், சான்றார் உள்ளிட்டாரும் கூடி" என வரும் இடத்திலும்,

சான்றார் என்னும் அரசர், பார்ப்பாராகிய அந்தணரோடு ஒப்பக் கூறப்பட்டிருத்தல் உற்று நோக்கத்தக்கது.

## 10. சான்றோர் — போர்வீரர்.

(I) புறநானூறு 63—ம் பாடலில்,

" * * * *
தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்
தோல்கண் மறைப்ப ஒருங்குமாய்ந் தனரே
* * * * "

எனவும்,

அதன் உரையில், "தேர்கொடு வந்த போரிற்கு அமைந்தோரெல்லாம் தாம்பிடித்த பரிசை (கேடயம்) தம் கண் மறைப்பச் சேரப்பட்டனர்;" எனவும், வருதலால்- இவ்விடங்களில் சான்றோர் என்னும் சொல் 'போரிற்கு அமைந்த' வீரர் எனப் பொருள் படுவதை நன்கு தெரியலாம்.

(II) இன்னும் புறநானூறு 301-ம் பாடலில்,

"பல்சான் றீரே! பல்சான் றீரே!
குமரி மகளிர் கூந்தல் புரைய
அமரின் இட்ட அருமுள் வேலிக்
கல்லென் பாசறைப் பல்சான் றீரே!
* * * * * " எனவும்,

இதன் குறிப்புரையில், பிரம்மஸ்ரீ டாக்டர் வே. சாமிநாத ஐயர் "சான்றோர்—போர்வீரர்" என்று எழுதி யிருப்பதனோடு, மேற்கூறிய "தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்" என்ற புறநானூற்றுச் செய்யுள் அடியை மேற்கோள் காட்டி, "சான்றோர் மெய்ம்மறை" (பதிற்றுப் பத்து 14–12) என்னுமிடத்து 'ஈண்டுச் சான்றோர் என்பது போரில் அமைதியையுடைய வீரரை' என்னும் அதன் உரையும் அறிதற்பாலன எனவும் விளக்கிக் காட்டியுள்ளார்.

மேலே காட்டிய செய்யுளுக்குப் பொருளாவது: ஆடவர் கைபடாக் கன்னியர் கூந்தல் போன்று, ஒருவராலும் சேதிக்கப்படாத அரிய முள்வேலியை யுடைய முழக்கம் மிகுந்த பாசறையிலுள்ள வீரர் என்பதாம்.

(III) ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனது பட்டத்து மனைவியாகிய பெருங்கோப்பெண்டு, தம் கணவன் இறந்தபொழுது அவன் பிரிவாற்றாது வருந்தி, மற்றை மகளிர் போல யான் இனி உயிரோடிரே னென்று—

"பல்சான் றீரே! பல்சான் றீரே!
கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனில் மூப்பின் பல்சான் றீரே!
*   *   *   *" [புறநானூறு-195

என்ற பாடலைப் பாடினர். இங்கும் 'சான்றீர்' என்பது பல அமைந்த குணங்களையுடைய அரசவம்சத்தினராகிய வீரரைக் குறித்துக் கூறியதே!

(IV) சங்க காலத்து நூல்களில் ஒன்றாகிய பதிற்றுப் பத்தில்:

இரண்டாம் பத்து—நாலாஞ் செய்யுள்—

“நோன்புரிதடக்கைச் சான்றோர் மெய்ம் மறை”

என வருமிடத்திலும்

‘போர் வலியையுடைய சான்றோர்கள் உடலை மறைக்கும் கவசம்’ என்ற அதன் உரையிலும், சான்றோர் — வீரர் எனத் தெளிவாயினமை காண்க.

(V) இன்னும் பதிற்றுப்பத்து, ஒன்பதாம்பத்து — இரண்டாம் செய்யுளில்,

“கொலைக் கொலைக் குறையாத் தானைச் சான்றோர்
வண்மையுஞ் செம்மையுஞ் சால்பும் அறனும்”

... என்பதனாலும்,

“கொல்லக் கொல்லக் குறையாத சேனைகளையுடைய அரசவீரர்களாகிய சான்றோரது கொடையும், செம்மையும், பெருமையும், தருமமும்” என்ற அதன் பொருளுரை—யாலும்,

(VI) அதே பதிற்றுப்பத்தில், ஏழாம்பத்து — ஏழாம் செய்யுளில்,

(கடுங்கோ வாதனென்னும் சேரனைக் கபிலர் பாடியது)

“சாந்தெழில் மறைந்த சான்றோர் பெருமகன்”

என வரும் அடியாலும்: ‘சான்றோர்—வீரரே’ என்பது வெளிப்படை.

(VII) இனி, நல்லாப்பிள்ளை பாரதம்-வீட்டுமபருவம் முதற்போர்ச்சருக்கம்—30-வது செய்யுள்.

“ மறிந்து தாழ்வன வாசிகள் மாமத வேழம்
தறிந்து வீழ்வன தேர்நிரை தகர்வன சான்ரோர்
எறிந்த வேலினும் வாளினும் கணையினும் இளைஞர்
துறந்த வாக்கையை எத்தனை கோடியார் சொல்வார்”

எனவரும் செய்யுளினும், சான்ரோர் என்னும் சொல் போர் வீரர் எனவே பொருள் படுதல் எளிதில் அறியலாம்.

ஆகவே இவை போன்ற மேற்கோள்களைச் சங்க நூல்களினின்றும், பிற பிற்காலத்து நூல்களினின்றும் எடுத்துக் காட்டுவதென்னில், அதுவே ஒரு பெரிய புத்தகமாக விரிதல் கூடும் என்று அஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்வோம்.

நிகண்டு, திவாகர முதலிய நூல்களிலே, ஜாதிப்பெயர்களைக் கூறுமிடத்து, ‘சான்ரோர் ஜாதி’ அரசஜாதியாக இருந்து வந்தமையால், பலவேறு தொழில் முறைப்படியான ஜாதிகளைக்கூறிய அந்நூல்களில் சான்ரோர் ஜாதியென்பதாக சொல்லியிருக்கவில்லை, ஆக இதுவே அரசஜாதியாம்.

## 11. கிரேக்கரும் — சான்ரோரும்.

கி. பி. இரண்டாம் நூற்ருண்டில், ஐரோப்பாக்கண்டத்திலுள்ள கிரீஸ் தேசத்தினின்றும் “ கிளமென்ஸ் ” என்ற சரித்திராசிரியர், தம்உலகச் சுற்றுப்பிரயாணத்தின் இடையே இந்தியாவிற்கும் வந்திருக்கிருர். அவர், அலக்ஸாந்திரியா என்னும் பட்டணத்திலே பிறந்தவர். லத்தீன்பாஷையில், ‘பெரிப்ளஸ் மாரிஸ் எரித்ரே’ **(Periplus Maris Erythrae)**

என்ற பிரபல சரித்திரபுஸ்தகம் ஒன்றை இவர் இயற்றியிருக்கிறார். அப்புஸ்தகத்தில் பின்வரும் குறிப்புக்கள் காணப்படுகின்றன:

(I) "இந்தியாவின் மேல் கடற்கரையில், பைகூருக்கு மேற்கே அக்காலத்தில் அரசுபுரிந்த சாலிவாகனனைச் சேர்ந்த அரசர்களுடைய ஆட்சிமுற்றியபின் சான்றோன்களின் ராஜாங்கம் ஸ்திரப்பட்டது."

(II) "தென்கன்னடம் ஜில்லாவைச் சேர்ந்த கலியாணைபுரம் என்னும் துறைமுகம் (சாலியவாகன) சாதாகனன்கள் காலத்திற் சிறப்புற்று விளங்கிப் பின்னர் சான்றோன்களின் ஆளுகையிலும் செழிப்புற்று ஓங்கிற்று."

(III) "ஏதேனும் கிரேக்கக் கப்பல் அத் துறைமுகத்திற்கு வந்தால், சான்றோன்கள் அதனையறிந்து பல கட்டுப்பாடுகளுடன் காவற்காரன் ஒருவனது கண்காணிப்பில் அக் கப்பலைப் பருகாசா (**Barugaza**) என்னும் இடத்திற்குத் திருப்பி விடுவர்."

மேற்கூறிய பெரிபிளஸ் (**Periplus**) பிரயாண விவரப் புஸ்தகக் குறிப்பிலிருந்து பின்வரும் உண்மைகளை ஊகித்தறியலாம்: கிறிஸ்துவுக்கு முன் 50-ம் ஆண்டளவில், பரத கண்டத்திலே பிரபலம்பெற்ற பேரரசனாகிய விக்கிரமார்க்கன் செங்கோலோச்சினன். அவன் காளிகாதேவியின் அருளால் பலவரங்களைப் பெற்றுப் பல அற்புதச் செயல்களைச் செய்தவன். நம்நாட்டிலே வழங்கும் புராதன கதைகள் பலவற்றிற்குத் தலைவன் இவனே! இவன் க்ஷத்திரியன். பெரிபிளஸ் ஆசிரியர் குறிப்பிடும் சாலியவாகனன் கி. பி. 78-ல் அரசு

புரிந்தவன். அவன் பெயராலேயே சாலியவாகன சகாப்தம் வழங்கிவருகின்றது. அச்சாலியவாகனன், க்ஷத்திரியர்குலத்தில் உதித்தவனல்லன். அவன் பார்ப்பனனுக்கும், குயக்கன்னிக்கும் பிறந்தவன். "சாலியவாகனனைச் சேர்ந்த அரசர்களின் ஆட்சி முற்றியபின் சான்றான்களின் ராஜாங்கம் ஸ்திரப்பட்டது" என்பதனால், சாலியவாகனனுக்கு முன்சிறப்புற்று விளங்கியிருந்த சான்றான்களின் அரசாங்கம், அவன் காலத்தில் ஒளிமழுங்கியிருந்து, அவனது ஆட்சி ஒழிந்தபின் திரும்பத் தலையெடுத்தாத் தழைத்தோங்கிப் பண்டைச்சிறப்பு முழுமையும் எய்திற்று எனப்புலப்படுகின்றது. ஆகவே விக்ரமார்க்கனது சந்ததியின் ஆட்சியையே, சான்றான்களின் ராஜாங்கம் எனக்குறிப்பாகப் பெரிபிளஸ் ஆசிரியர் கூறினார் என்று கொள்ளவேண்டும். இதிலிருந்து— **சான்றார்கள்,** ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னமேயே இந்தியாவில் ஆங்காங்கு பிரபலம் வாய்ந்த அரசர்களாய் விளங்கினார்கள் என்பதும், விக்ரமார்க்கன் முதலிய க்ஷத்திரியகுல ராஜாக்களும் '**சான்றான்கள்**' என்றபெயருடன்வழங்கினார்கள் என்பதும், சான்றார்கள் க்ஷத்திரியரே என்பதும் நன்கு புலனாகின்றன.

## 12. ஏனாதிநாத நாயனார்.

சைவசமயத்தவர்கட்குக் கண்போல் மதிக்கப்படும் சிறந்தநூல் பெரியபுராணம். சிவபிரானைவழிபட்டு முத்தியடைந்த உண்மை நாயன்மார்களாகிய அறுபத்துமூவர் சரிதங்களை விரிவாகக்கூறுவது அந்நூல். பெரியார்களின் வரலாற்றைக் கூறுவதனால் பெரியபுராணம் எனப் பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் அநபாய குலோத்துங்க

சோழனது மந்திரியாக விளங்கிய சேக்கிழார். அநபாய குலோத்துங்க சோழனது காலம், கி. பி. 1078—1118. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் ஏனாதிநாத நாயனார். இவரைக் குறித்துச் சேக்கிழார்:

" ஈழக்குலச் சான்றார் ஏனாதி நாதனார் " என்று பிரஸ்தாபிக்கின்றார். அறுபத்துமூவர் சரித்திரத்தை விரிவாகக் கூறும் சம்ஸ்கிருத நூலாகிய உபமன்ய பக்தவிலாஸத்தில் ஏனாதி நாதர் என்பார், "ஸாக்ஷி குலோத்பவர்" என்று சொல்லப்பட்டிருக்கிறார். "ஸாக்ஷி" என்பது சூரியனுக் குரிய பெயர்களில் ஒன்று. ஆகவே ஏனாதி நாதர், 'சூரிய குல மன்னர் வம்சத்தைச்சேர்ந்தவர்' என்பது பிரத்தியட்சமாகத் தெரிகின்றது. ஆரிய நாட்டிலிருந்து திராவிட தேசத்திற் குடியேறி அரசு நிலைநாட்டிய சூரியகுல மன்னர்களுள் சோழன், ஈழன், தொண்டன் ஆகியோர் சிறந்தவராவர். இவர்களுள் ஈழமன்னவனின் வம்சத்தைச் சேர்ந்தவராதலின், ஏனாதிநாதரை "ஈழக்குலச் சான்றார்" எனச் சேக்கிழார் விளக்கினார். ஆதலால், மேற்சொல்லியபடி சான்றார் என்பது அரசர்க்கும், அரசவம்சத்தினின்று பலவாறகப் பல்கிய பெருங்குடிமாந்தர்க்குமே பெயர் எனச்சந்தேகமின்றிக் கூறலாம்.

## 13. சான்றார் — படைக்கல ஆசிரியர்

ஏனாதி நாத நாயனார் புராணத்தில் சேக்கிழார் கூறும் இன்னும் சில செய்யுட் பகுதிகள் ஆராய்தற்குரியவை:

(1) "மன்னர்க்கு வென்றி வடிவாட் படை பயிற்றும்
தன்மைத் தொழில் விஞ்சைத் தலைமை சார்ந்துள்ளார்"

(II) "தள்ளாத தங்கள் தொழிலுரிமைத் தாயத்தார்"

(III) "மறப்படை வாட் சுற்றத்தார்"

அரசர்க்கு, வெற்றிமிக்க கூர்மைவாய்ந்த வாள் முதலிய படைக்கலங்களைக் கொண்டு போர்செய்யும் வித்தையைக் கற்பிக்கும் படைக்கல ஆசிரியர்க்குத் தலைமைப் பதவியை ஏனாதி நாத நாயனார் பெற்று விளங்கினார் என்று ஆசிரியர் கூறுதலால், சான்றோர்குலமக்கள்—நாடுகாவல் பூண்டு, அரசு கட்டில் (சிங்காதனம்). ஏறி, செங்கோல் செலுத்தியது மாத்திரமே யல்லாமல், க்ஷத்திரிய தருமமாகிய போர்த் தொழிலும், படைக்கலத் தேர்ச்சியும் மிகுதியாகப் பெற்று விளங்கினார்கள் என்றும் நன்குபுலனாகின்றன அல்லவா? அரசர்க்கு ஆண்மையே ஆபரணம் ஆதலால் ஆயுதப்பயிற்சி முதலிய முக்கியமான காரியங்களில் அவர்கள் தாமே தமக்குப் பொறுப்பாளிகளாய்க் கவனித்துக் கொண்டார்கள் என்பதூஉம் தெரியவருகின்றது! அரச வம்சத்தினர், தம் குல மைந்தர்கள் முன்னேற்ற மடைவதற்கேற்ற படைக்கலப் பயிற்சியை அளிக்கும் ஆசிரியர்களாகவும் விளங்கினரென்றால், பண்டை அரசரது நன்னோக்கங்கள் எத்தன்மையனவாயிருந்திருக்கவேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும்!

## 14. ஏனாதிப்பட்டமும் சான்றோரும்.

மேற்கூறிய ஏனாதி நாதருக்கு அமைந்த 'ஏனாதி' என்னும் பெயர், சிறப்புப் பெயரே யன்றி இயற்பெயர் அன்று எட்டி, ஏனாதி, காவிதி முதலியன அக்காலத்திலே அமைச்சர், சேனாபதிகள், பிரபுக்கள் முதலியோருக்கு அரசரால் அளிக்கப்படும் சிறப்புப் பெயர்கள் ஆகும். இக்காலத்திலும்

அரசாங்கத்தார் ராவ்ஸாஹிப், ராவ்பஹதூர், திவான் பஹதூர் முதலிய கௌரவப் பட்டங்கள் வழங்குகின்றனர் அல்லவா? "தமிழ்க் கூறு சேனாபதி ஏனாதியாகிய சாத்தனால் எழுதப்பட்டது" எனப் பண்டைச்சாஸனம் ஒன்றிற் காணப்படுகின்றது. (செந்தமிழ், 6-ம் தொகுதி).

கொஞ்ச காலத்திற்கு முன் வாழ்ந்த சிலாசாஸன பரிசோதகர் **A.** கோபிநாத ராவ் அவர்கள் **M. A.**, "ஏனாதி என்னும்பெயரை மந்திரிகள் தரித்துக்கொண்டது போல சேனாபதிகளும் தரித்துக்கொண்டதாகத் தெரிகிறது" என எழுதியுள்ளார்.

மணிமேகலை **22**-வது சிறைசெய்காதையில் **205**-ம் அடி

"சோழிக ஏனாதி தன்முகம் நோக்கி"

எனவரும் பகுதிக்குக் குறிப்புரையாசிரியராகிய டாக்டர் வே. சாமிநாதையர், எடுத்துக்காட்டும் சில ஆராய்ச்சிக் குறிப்புக்கள் பாராட்டற்பாலன:

"ஏனாதி யென்பது வேந்தனாற் கொடுக்கப்படும் பட்டப் பெயர்களுளொன்று; இதனை, 'மாராயம்பெற்ற நெடுமொழி யானும்', (தொல்காப்பியம், புறத்திணையியல், சூ-8), என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியவுரையாலும் அதில்

"போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்
கார்க்கடல் பெற்ற கரையன்றோ — போர்க்கெல்லாந்
தானாதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சேர்
ஏனாதிப் பட்டத் திவன்"

என்று அவர் எடுத்துக்காட்டிய பழம் பாட்டாலு

முணர்க. பெரிய புராணத்துக் கூறப்பட்டுள்ள திருத் தொண்டர்களுள் ஒருவர்க்கு ஏனாதிநாத நாயனாரென்ற திரு நாமம் இதுபற்றியே வந்த குடிப்பெயர்போலும்! ‘ஆழி தொட்டான்’ என்பதற்கு, ‘ஏனாதி மோதிரஞ் செறித்த சேனாபதி’ (சீவக சிந்தாமணி-2167) என்று ஆசிரியர் நச்சி னார்க்கினிய ரெழுதி யிருக்கின்றனர். மேற்கூறியவாற்றாலும் இக்காதையின் தலைப்பில் ‘மந்திரியாகிய சோழிகவேனாதி என்றிருத்தலாலும் ‘சோழிகவேனாதி’ என்பதற்குச் சோழ னுடைய ஏனாதிமோதிரஞ் செறித்த சேனாபதியும் மந்திரியு மாகிய ஒருவனென்று பொருள் கொள்ளுதல் பொருத்த முடைத்து.

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளாகிய மணி மேகலை, மதுரையிற் கோவலன் வெட்டுண்டமையைக் கேள்வி யுற்றுத் துயரம் அடைந்தாள். மாதவியும் மணி மேகலையும் அறவணவடிகள் என்னும் பெரியாரைத் தரிசித்து, அவர்பால் உபதேசம்பெற்றனர். மாதவி கைம்மை (விதவை) நோன்புபூண்டாள். மணிமேகலையோ பௌத்தமத பிக்ஷு ணிக்கோலம் தாங்கி நல்லறங்கள் பலவற்றை நடாத்தி மேன்மையாக விளங்கினாள். மணிமேகலையின் கட்டழகைக் கண்டு அவளைக்காதலித்து நிழல்போல் தொடர்ந்து சென்ற சோழராஜகுமாரனாகிய உதயகுமாரன், காஞ்சனன் என்னும் வித்தியாதரனாற் கொல்லப்பட்டான். சோழமன்னவன் இதனையறிந்து “கணிகைமகளாகிய மணிமேகலையைச் சிறைப் படுத்துக” என்று தன்சேனாபதியும் மந்திரியுமாகிய ‘சோழிக ஏனாதி’ ச்குக் கட்டளையிட்டான். அக்கட்டளையைச் சோழிக ஏனாதியும் உடனே நிறைவேற்றினான். அக்காலத்திலிருந்த

சோழன்-நெடுமுடிக்கிள்ளி என்பவன்.

இவற்றால் நாம் அறிந்து கொள்ளத்தக்கவையாவன:—

பண்டைக்காலத்தரசர் தம் குலத்தைச் சார்ந்தவர்களாகிய அறிவாளிகளையே தமக்கு மந்திரிகளாகவும் சேனாபதிகளாகவும் நியமிப்பது வழக்கம் என்பதும்; அரசர் அவர்களுக்கு ஏனாதி, எட்டி, காவிதி முதலிய பட்டங்களும் அவ்வவற்றிற்குரிய மோதிரங்களும் அளிப்பது உண்டு என்பதும்; அரசாங்கத்திற் பொறுப்பு வாய்ந்த அதிகாரங்களை வகிப்போர் அரசவமிசத்தவராகிய பட்டம்பெற்றபிரபுக்களே என்பதும்; "ஈழக்குலச் சான்றார் ஏனாதிநாதனார்" என வருதலால், ஏனாதிப்பட்டமுடையோர் "சான்றார்" என்ற பெயருடனும் அழைக்கப் பட்டிருக்கின்றனர் என்பதும் 'சான்றார்,' அரசவம்சத்தில், பட்டம்பெற்ற பிரபு சிகாமணிகளாய் அரசாங்கஅதிகாரம் வகித்தனர் என்பதும் முதலிய உண்மைகளே யாம்!

## 15. ஈழ நாடும், ஈழ மன்னரும்.

"ஈழக்குலச் சான்றார்" என மேற்குறிக்கப்பட்டதில், ஈழக்குலம் இன்னதென இனி ஆராய்வோம். ஈழன் ஆண்டது ஈழநாடு. ஈழன், சோழனைப்போலவே சூரியகுலத்திலுதித்த ஓர் அரசன். சோழவம்சத்தினின்று பிரிந்து பின் தனியரசாகப் பெயர் பெற்றிருக்கலாம். ஈழநாட்டை ஈழமண்டலம் எனவும் சொல்வதுண்டு. மைசூர் ராஜ்யத்திற்கும் சோழ நாட்டிற்கும் இடையிலுள்ளது ஈழ மண்டலம்.

சோழ நாட்டின் எல்லை கூறப்புகுந்த கம்பநாடர்:

“ கடல் கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஈழநாட் டுப்பெண்ணை யிருபத்து நாற்காதம்
சோழநாட் டெல்லையெனச் சொல்” [தனிப்பாடல்.

கிழக்கே—கடல்; தெற்கே—வெள்ளாறு; மேற்கே—கோட்டைக் கரை; என்பதாகச்சொல்லி வடக்கே—ஈழநாட்டுப்பெண்ணை, அதாவது ஈழநாட்டின் வழியாக வருகிற பெண்ணையாறு என்று கூறுகிறார். ஆதலால் ஈழநாடு, சோழநாட்டின் வடமேற்குத் திசையிலிருந்ததாக ஊகித்தறியலாம்.

இனி, இதைக்குறித்து ‘முத்தொள்ளாயிரம்’ என்னும் நூலில் பின்வரும் செய்யுளொன்று காணப்படுகின்றது:

“ கச்சி யொருகால் மிதியா, ஒருகாலால்
தத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியா—பிற்றையும்
ஈழம் ஒருகால் மிதியா வருமே நம்
கோழியர்கோன் கிள்ளிக் களிறு.”

இச்செய்யுளில், சோழமன்னவனுடைய பட்டத்து யானையின் பராக்கிரமத்தை வருணிக்கப்புகுந்தபுலவர், தொண்டைராஜனது தலைநகராகிய கச்சியென்னும்காஞ்சியை ஒருகாலால் மிதித்து, சேரராஜதானியாகிய உஞ்சை யென்னும் அவந்தியை ஒருகாலால் மிதித்து, சோழனது பட்டத்துயானை புறப்பட்டு வரும் என்று சொல்லியதற்கு ஒப்ப ஈழராஜனது நாட்டையும் அவ்யானை ஒரு மிதியாய் மிதித்து வருமென்று சொல்லிமுடித்தார். இச்செய்யுளினின்று: தொண்டைநாடு. சேரநாடு, சோழநாடு ஆகிய நாடுகள் சிறப்புற்று விளங்கிய அந்நாளிலே, ஈழநாடும் அவைகளுக்கு அணித்தாகத்தொன்று தொட்டு இருந்த வந்த தென்பது பெறப்படுகின்றது.

## 17. இலங்கைக்கு ஈழம் என்று பெயரேற்பட்டது.

சற்றேறக்குறைய இரண்டாயிரம் வருடங்கட்கு முன் ஈழநாட்டில் 'நரசிம்மன்' என்ற ஓர் அரசன் இருந்தான். அவன், மதுரைமா நகரத்தில் செங்கோல் செலுத்திய பாண்டியன் மகளாகிய * 'அல்லி' என்னும் மாதை விவாகம் செய்தனன். அந் நரசிம்மன் தன் புயவலியால் இலங்கைத் தீவைஜெயித்து அதனைத்தன்னடிப்படுத்தினன். ஆனதால், அவன் “இலங்கையைச் செயித்தாண்ட பெருமாள்” எனப் புகழப் பெற்றான்.

“க்ஷத்திரிய ராஜாவாகிய இந்நரசிம்மனுடைய குலமும், நாடார்களாகிய சான்றோர் குலமும் ஏக குலம்” என்று கொச்சி ராஜ்யத்து ('எத்னாக்ரபி') — ஜனவிவரணப் புத்தகத்தில் **L. K.** அநந்த கிருஷ்ணையர் அவர்கள் **B. A.**, எழுதியிருக்கின்றனர்.

இலங்கைத் தீவிற்கு 'ஈழம்' என்றொரு பெயர் ஏற்பட்டது, இந்நரசிம்மனாகிய ஈழவேந்தன் அதனை வெற்றி கொண்டு ஆண்டதனாற்போலும்! ஈழக்குலச் சான்றோர் சிகாமணியாகிய நரசிம்மன் இலங்காபுரியை வெற்றி கொண்டதனால், அவன் சந்ததியாராகிய சான்றோர்களனைவருக்கும், “ஈழம் திறை கொண்ட இலங்காபுரியாதிபதி” என்று வாழ்த்துக்கூறும் வழக்கம் இன்றளவும் இருந்து வருகின்றது.

---

* இலங்கையிலுள்ள குதிரைமலைச் சார்பில் (முத்துச்சலாபம் மறிச்சுக்கட்டிக் கிராமத்தின் பக்கம்) அல்லி கோட்டை என்று ஒன்று இன்றும் உளது. அக்கோட்டை ஈழவரசனாகிய நரசிம்மனது தேவி-அல்லியின் ஞாபகார்த்தமாய்க் கட்டப்பட்டிருக்கலாம். இதை ஜனங்கள், பாண்டியன் மகளான அல்லி கோட்டை என்று சொல்கிறார்கள்.

## 18. “கூடை தொடோம்” – என்றவரலாறு.

“வடமலை பிறந்த மணியும் பொன்னும்,
குடமலை பிறந்த ஆரமும் அகிலும்,
தென்கடல் முத்தும், வடகடல் துகிரும்,
கங்கை வாரியும், காவிரிப் பயனும்,
ஈழத் துணவும், காழகத் தாக்கமும்,
தொக்க கலியுகத்து மூவாயிரத்துத் தொண்ணூற்றில்
மிக்க கரிகால் வேந்தனுந்தான்
பக்க மலைக்குப்புகழ் பொன்னியாறு கரைகட்டினான்.”

இஃது கரிகாற் சோழன் காவிரிநதிக்கு அணைகட்டிய வரலாற்றைக் குறிக்கும் ஒரு பழம் பாடல். கரிகாற் சோழன், தன் நாட்டிலுள்ள சகல குடிகளும் வந்து காவேரி நதிக்கு அணைகட்டும்படி கட்டளையிட்டனன். அரசன் ஆணையைச் சிரமேற்கொண்டு சமஸ்த ஜனங்களும் கூடை, மண்வெட்டியுடன் ஆற்றிற்கு வந்து கரைகட்டினர். சான்றோர் குடித் தலைவர்கள், “நாங்கள் எங்களுடைய முடியேந்தும் தலையிற் கூடையேந்தோம்” என்று மறுத்துரைத்தனர். அரசன் ஆற்றொணுக் கோபமுற்றுத் தன்வாளால் அவர்கள்தலைவனுடைய தலையை வெட்டினன். அவ்வற்றதலை, “தலைபோயினும் கூடை தொடோம்; கூடை தொடோம்” என்று சொல்லிக் கொண்டே தரையிலுருண்டது. அரசன், மற்றொருவனது தலையையும் வெட்ட, அத்தலையும் “அத் தலைக்கு இது பொய்த்தலையா? கூடை தொடோம்; கூடை தொடோம்” என்று சொல்லிக்கொண்டே உருண்டது. சான்றோர் குடித்தலைவர்களின் வீர வைராக்கியத்தைத் தெரிந்த சோழமன்னவன் ஆச்சரியமுற்று அவர்கட்கு வெகுமதிகள் பல

வற்றை அளித்து மேன்மைப் படுத்தினன். இது கர்ண பரம்பரையாய் வழங்கிவரும் கதை. வலங்கை மாலை, சான்றோர் புராணம் என்னும் நூல்களிலும் இக்கதை கேட்கப்படுகின்றது. இக்கதையினால் சான்றோர் குலமக்கள் ஒரு காலத்தில், சோழநாட்டில் அரசர் மெச்ச வாழ்ந்த பெருங்குடி மரபினர் என்பதும், அவர்களின் ஆண்மையும் ஆற்றலும் சொல்லுந் தாத்தன வல்ல என்பதும் நன்கு விளங்குகின்றன.

மேற்கூறிய சம்பவம் நிகழ்ந்தகாலத்தை ஆராயுமிடத்து 'கலியுகம்-3090' என்பதாகப்பாடலில் சொல்லியிருப்பதால் அது கி.மு. 10 ஆகிறது. கரிகாற்சோழன் காலம் கி.பி முதல் நூற்றாண்டு என்பது சரித்திரப்பிரசித்தம். ஆகவே கிறிஸ்துவுக்குமுன் சில காலமும், கிறிஸ்துவுக்குப்பின் பல ஆண்டுகளும் ஆண்டவன், கரிகாலன் என ஊகிக்க இடமுண்டு. அவன் காலத்ததே - இக்கதை!

## 19. சான்றோர் – சோழநாட்டுக் குடிகளும் சிற்றரசரும்.

பதிற்றுப்பத்து என்னும் சங்கநூலில் பரணர் பாடிய பாடல்:

"ஆருச் செருவிற் சோழர் குடிக்குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற் புறத்து......"

செங்குட்டுவன், நேரிவாயில்என்னும் ஊர்ப்புறத்துச் சோழர் குடிகளாயும், சோழர் மரபினராயுமிருந்த சிற்றரசர் ஒன்பதின்மரைத் தன் ஆற்றலாற் செயித்தான் என்பது இதன் பொருளாம்.

இன்னும்:

"மைத்துனன் வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொருஅர், ஏவல் கேளார்
வளநா டளிக்கும் மாண்பினர் ஆதலில்
ஒன்பது குடையும் ஒருபகல் அழித்து..."

சேரன் செங்குட்டுவன் தன் மைத்துனனாகிய சோழமன்னனுக்குப் பகைவராயிருப்பவர்களும், இளவரசுப்பட்டமாகிய சிற்றரசு புரிவதை ஏற்றுக்கொள்ளாதவர்களும், சோழனது சட்டத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுமான ஒன்பதின்மரையும் அழித்தனன் என்பது இதன் பொருள்.

இங்கு எடுத்துக்காட்டிய சம்பவம், சிலப்பதிகாரக்கதை நிகழ்ந்த காலத்தில் சேர நாட்டையாண்ட செங்குட்டுவனது செய்கையைக் குறிப்பதாகும். 'ஏவல் கேளார்' என்றது, அதற்கு முன் நிகழ்ந்த "கூடைதொடோம்" என்று மறுத்த விஷயத்தைக் கூறியதாகும்.

செந்தமிழ்த் தொகுதி 13-ல் பகுதி 3, பக்கம் 26-ல்:

" சோழக்குடி: இக்குடியினர் உள்நாடுகளிலும், புறநாடுகளிலும், சிற்றசர்களாகவும், தண்டத்தலைவர்களாகவும், மண்டிலமாக்களாகவும், கோட்டம், கூறு, நாடு முதலியவற்றின் அதிகாரிகளாகவும் இருந்து வந்தன ராதல் வேண்டுமென்று ஸ்ரீராதாகிருஷ்ண ஐயங்கார் எழுதியிருக்கின்றனர்.

## 20. சான்றூர் – பாண்டிய நாட்டுப் பழங்குடிகள்.

பத்துப்பாட்டில் ஒன்றாகிய சிறுபாணாற்றுப்படையில்,

" *      *      *      *

தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்

தென்புலங் காவலர் மருமான் ஒன்னார்

மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்

கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்

*      *      *      * " [62–65வரிகள்

இதற்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர், "முறிகின்ற நீரைத் தனக்கு எல்லையாக வுடைய கொற்கை என்னும் ஊர்க்கு அரசன், தெற்கின் கண்ணதாகியநிலத்தைக் காத்தற் றொழிலையுடையார் குடியிலுள்ளோன், பகைவர் நிலத்தை மாறுபாட்டாலே கைக்கொண்ட பாண்டியன், முத்துமாலையையுடைய கொற்றக் குடையினையும் கண்ணிற்கு அழகு நிறைந்த கண்ணியினையும் கடிய தேரினையுமுடைய பாண்டியன், என எழுதியிருக்கின்றனர். இதில், 'தென் புலங்காவலர் – என்ற செய்யுட் பகுதியும், அதன்உரையுமே ஈண்டு நாம் கவனிக்கத்தக்கவை. "தெற்கின் கண்ணதாகிய நிலத்தைக் காத்தல் தொழிலையுடையார்"—தாமிரபரணியாறு பாயும் செழுநிலப்பரப்பிற் பரம்பரையாய் வாழ்ந்துவருகின்ற பாண்டிய நாட்டுச் சிற்றரசரும், குடிகளுமாகிய சான்றோர் குலமக்களையே குறிப்பதாகும்.

" வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி

பண்பிற் றலைப்பிரித லின்று. " [திருக்குறள், 955.

என்ற செய்யுளில், 'பழங்குடி' என்பதற்கு- "பழமை தொட்டு வருகிற குடியிலே பிறந்தவர்; பழமை தொட்டு வருதலாவது – சேரசோழ பாண்டியரென்பது போல், ஆதி காலந்தொடங்கி மேம்பட்டு வருதல்" எனப் பரிமேலழகர்

குறிப்பிடுகின்றபடி, சோழ பாண்டிய ராஜ்யங்களிற் பழங் குடிகளாய் இருந்து வருவோர் — சான்றோர்களாவர்.

## 21. சான்றோர்—நியாய சபைத்தலைவர்கள்.

வேம்பத்தூர்ப் பெரும் பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், மாமனாக வந்து வழக்குரைத்த திருவிளையாடலில்:

“ மாற்றவர் ஒளிக்கக்கண்டேன் மருமகன் தன்னைக்கொல்வான்
கூற்றென வந்த தாயக் கொடுமைகண் டீர்கள் நீங்கள்
ஏற்றலை செய்தோர் தம்மை இறைநெறி முறைமையோங்குச்
சாற்றரும் பெரிய தண்டம் செய்யுமின் சான்றோ ராயின்.”

[24-ம் செ.

“ இக்கணக் கிப்படிக்கார் வெல்லுவார் இரங்கி நந்தம்
சொக்கனேயல்லா துண்டோ தொழுபவர்க்கெளியானென்று
மிக்கநீ தியையும் மாட்டாக் கைந்தலை விரைந்து நோக்குந்
தக்கபே ரன்பை யுங்கண் டதிசயித் தார்கள் சான்றோர்.”

[28-ம் செ.

மதுரையில் வாழ்ந்த தனபதி என்னும் வணிகனின் உருவாய்த் தோன்றி அவ்வணிகனின் மருமகனுக்காக மாமனாக நின்று நியாயசபையில் வழக்குச்சொல்லிய சொக்கநாதர் “ இத் தாயத்தார்களால் என் மருமகனுக்குத்தீங்கு நேரிடும். என்னைக்கண்டு அவர்கள் ஓடிஒளிந்த செயலையும், இவனுக்கு யமன்போல் தோன்றி இழைத்த கொடுமைகளையும் நீங்கள் நன்கு தெரிந்தீர்கள். நீங்கள் சான்றோர்களென்பது உண்மையாயின், இவர்களைப் பிடித்துத் தண்டனை செய்வீர்கள்” என மொழிந்து மறைந்தருளினர். மாமனாகவந்து வழக்குச்

சொல்லியவர் சொக்கநாதரே யல்லாமல் வேறெவரும் இல்லை யென்றுணர்ந்த சான்றோர் ஆச்சரியமுற்றனர் என்பது மேற்கூறிய இருசெய்யுட்களின் கருத்தாம்.

இவற்றுள் 'சான்றோர்' எனக் குறிப்பிடப்பட்டது நியாய சபைத்தலைவர்களையே யென்பது தெற்றெனப் புலப்படும். சான்றோர் என்பது பலதிறப்பட்ட அறிவாளிகளான மக்களுக்கெல்லாம் பொதுப் பெயராயினும், இராஜ்யபாரப் பொறுப்புக்கு ஆதாரமாகிய நியாயசபைத்தலைமை அரசர் குலப் பெருமக்களுக்கே வழங்கப் பெறுதல் மரபாதலால், ஈண்டுக்கூறிய சான்றோர்—என்னும் சொல், அவ்வண்ணம் நியாயசபைத் தலைமை வகிக்கும் அரசர்குலப் பெருமக்களை மட்டிலுமே சுட்டியதாகும்.

## 22. சான்றோர்—சேர நாட்டுப் பயிரிடுங்குடிகள்.

க்ஷத்திரிய மித்திரன் பத்திரிகை 2-ம் மலர், 11-வது இதழில்:

"திருவாங்கூர் ராஜ்யம் திருவண் வண்டூர்க் கிராமத்திலுள்ள ஓர் விஷ்ணுவாலயத்திற் காணப்படும் ஓர் சிலா சாஸனம்:—

(2-வது வரி) 'கோவின்னூர்கரி—100 கலம், பரவனூர்கரி—25 கலம்;'

3-வது வரி) 'இருபத்தைங்கலம் இந்திரநீலன்கரியில் விலைக்குக்கொண்டது சான்றோர் நெல் ஒன்பதினாழி.'

4-வது வரி) 'பறையால் அறுபது பறை.'

(7-வது வரி) 'இவ்வறுநாழி அரிக்கு அமைச்சபூமி, நாடொ—கொ...ண்...அல்லது தனகரியும்,

பரவஞர்கரியும் உன்னதன் வைப்பும், இந்திர நீலன் கரியாம்.'

(8-வது வரி) '......ச்சேரி அவரளகு கொண்ட சான்றோர் நெல் ஒன்பதிஞழிப்பறையால் அறுபது பறையும் இவ்வறு நாழி அமைக்க.'

இச்சாஸனம் கி. பி. 970-ம் ஆண்டளவில் பொறிக்கப் பட்டிருக்கலா மென்று சிலாசாஸன பரிசோதகர், A. கோபி நாதராவ் அவர்கள் M. A. அபிப்பிராயப்பட் டிருக்கின் றனர்.

மேற்கண்ட சாஸனம் 3 & 8-ம் வரிகளில் காணும் 'சான்றோர் நெல் ஒன்பதிஞழி,' 'ஒன்பதி ஞழிப்பறை' என்பவைஅளவுபடிகளின் கணக்கைக்குறிப்பிடுவதால், சான்றோர், விவசாயிகளாயிருந்து விளைபொருள்களான தானியங்களை அரசிறைக்கும், தெய்வ கைங்கரியங்களுக்கும் அளித்திருக் கிறூர்கள் எனத்தெரிகின்றது.

## 23. சான்றூர் — நாடன், நாடாள்வான்.

" சாண்பன் னிரண்டிற் சமைந்த தனிக்கோல்
போற்றுற வளர்ந்த நூற்றறு பதுகுழி
மாவொன் ருக வந்த வேலி
ஐம்பது வேலியில் அடைகுன்றங் காக்கும்
ஒன்பது வேலி யுடைய வரவோன்
கொம்பர் நாடும் குளிர்மலர்ச் சோலை
**அம்பர் நாடன்** ஆலங் குடிக்கோன் "

இஃது, கி. பி. 1323-ல் வரையப்பட்ட திருக்கோவலூர்ச் சாஸனத்திற் காணப்படும் ஓர் செய்யுள். அம்பர் நாடு

என்ற சிறுநாட்டின் கண்ணுள்ள ஆலங்குடி யென்னும் கிராமத்தின் அரசன் ஒருவனைப்பற்றி இப்பாடலிற் கூறப்பட்டிருக்கிறது. இவ்வரசன் 'நாடன்' என்னும் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் கவனிக்கத்தகுந்தது.

"சேனுபதி உய்யக்கொண்ட வளநாட்டுத் திரைமூர்நீர் நாட்டு நாடார் கிழான் ராஜ ராஜன் பரநிருப ராக்கதரான வீரசோழ இளங்கோவேள் ஒருவன் ஆடையூர் நாடாள்வான்"

* * * இஃது A. கோபிநாதராவ் அவர்கள் M. A. செந்தமிழ்—பிலவங்கஸு கார்த்திகைமீ இதழ், பக்கம் 49-ல் எடுத்துக்காட்டியுள்ள" சோழ சாஸனப் பகுதியாகும். இச்சாஸனத்தின் காலம் கி. பி. 1178 என்றும், "சிலவூர்கள் கொண்டது நாடு, நாடுகள் சில கொண்டது வளநாடு, நாடார் கிழான்—நாட்டுக்கு உரிமையாளன், பரவரசர்களையழிக்கும்படியான கோபவீரமமைந்த சோழஇளவரசன்" என்பது அச்சாஸனப் பகுதியின் பொருள் என்றும் எழுதியிருக்கின்றனர்.

மேற்காட்டிய குறிப்புக்களால், சிற்றரசர்கள் - நாடார் கிழான், நாடாள்வான் என்னும் சிறப்புப்பெயர்களால் வழங்கப்பட்டிருத்தல் அறியத்தக்கது.

யாழ்ப்பாணத்து வித்துவ சிரோமணியாகிய நா. கதிரைவேற் பிள்ளையவர்கள் தாம்தொகுத்த தமிழகராதியில், "சோழநாட்டுப் பிடவூர்க்கிழார்மகன் பெருஞ்சாத்தன்-அரசர் பெண்கொள்ளுஞ் சாதியிற்பிறந்தவன். நக்கீரனாற் பாடல் பெற்றவன்" என்று எழுதியிருக்கின்றனர். ஆகவே, அரசர் பெண்கொண்டு கொடுக்கும் சாதி சான்றோர் சாதி யென்பது முன் சொல்லி வந்த சிலகுறிப்புக்களால் தெரியவரும்.

நாடார்கிழான்—நாட்டுக்கு உரிமையாளன் என்று முன் சொல்லியிருப்பதுபோல், பிடவூர்க்கிழான்—பிடவூர் என்னும் கிராமத்திற்குத்தலைவன் என்று பொருள்படும்படி கூறியிருத்தலைக் கவனிக்குங்கால், "கிராமணி, கிராமமுற்றோன்" என்று நிகண்டு ஆசிரியர் கூறியபடி, பூர்வம் கிராமத் தலைமையுடையவராயிருந்து அதனால் அடையப் பெற்ற கிராமணிகள் என்னும் பெயரைத் தொண்டை நாட்டுச் சான்றோர்களிடத்துக் காணலாம்.

## 24. சான்றார் — வலங்கைச் சாதிகள்.

செந்தமிழ்-பிலவங்கவருஷத்து மார்கழிமாத இதழ், 66-ம் பக்கத்தில் பின்வரும் சிலா சாஸனப்பகுதி யொன்று காணப்படுகிறது:—

" * * * சேனைத் தலைவர்கள் வலங்கை வேலை(ளை)க்காரர், பராந்தகக் கொங்க வாளர், நிகரிலி, சோழத் தெரிந்த குதிரைச் சேவகர்கள், சிறிது தனம்படைத்த வடுகர்கள் * * * "

செந்தமிழ் 16-ம் தொகுதி, 3-ம் பகுதி, 135-ம் பக்கத்தில், **A**. கோபிநாதராவ் M. A. எழுதுவதாவது:

"வேளைக்காரர் என்னும்பதம், தென்னிந்திய சாஸனங்களில் வெகுவாய்க் காணப்படுகின்றன. தஞ்சாவூர்ப் பிரகதீசுவரன் கோயிற் சாஸனங்களிலும், மற்றைய விடங்களிற் கண்ட கல்வெட்டுக்களிலும் பெருந்தனத்து வலங்கை வேளைக்காரர், சிறுதனத்து வலங்கைவேளைக்காரர், அழகிய சோழத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்..."

ஷை 139-ம் பக்கத்தில் எழுதுவதாவது: "வேளைக்காரர்-சமயங்களில் வந்து உதவும் சேவகர்கள் என்பது பொருள்"

1. வலங்கை, இடங்கையென இரண்டு பிரிவுகளாகத் தமிழ் நாட்டுச் சாதிகள் பிரிக்கப்படும். இப்பிரிவுகளுள் வலங்கைச்சாதியாரே முதன்மை பெற்றவராகக்கருதப்படுவர். வலங்கைச் சாதியாரது விருத்தாந்தத்தை யெடுத்துக்கூறும் நூல் ஒன்று உளது. அதன்பெயர், "வலங்கை மாலை." அதனை "வணங்கான்மாலை" எனவும் சொல்வார்கள்.

2. சோழத்தெரிந்த குதிரை வீரர்கள்:— இவர்கள் அரசனுக்கு மெய்காப்பாளராய்ப் போர்க்களஞ் செல்வோர்; அரசபந்துவான நட்பமைந்த சான்றோராவர்.

3. சிறிது தனம் படைத்த வடுகர்கள்:— சிறிது செல்வவான்களாகிய வடுகர்கள். தென்னாட்டில் விஜயநகர ராயர்களின் ஆட்சி யேற்படுவதற்கு முன்பாகவே வடுகர்கள் வந்து ஆங்காங்கு குடியிருந்ததாகத் தெரிகிறது.

4. பராந்தகக் கொங்கவாளர்:— ஏனாதிநாதனார் முதலிய வீரர்களைப் போன்ற வீரர்கள் இவர்கள்; பராந்தக சோழனது ஆட்சிக்காலத்தில் கொங்குநாட்டில் இருந்துவந்த கூரியவாளை யேந்திய வீரர்களாவர். இதுபற்றியே பெரும்பான்மையான நாடார்கள் "கறுக்குப்பட்டையர்" என்று அழைக்கப்பெறுகின்றனர்.

கறுக்குப்பட்டையர்—கூரியவாளை யேந்தியவர்.

5. காஞ்சியை ஆண்ட பண்புவிச்சோழன் தன்னைச் சேர்ந்தவர்களை வலங்கைச் சாதியென்றான்.

—சித்தூர் ஜில்லாத் தீர்ப்பு.

## 25. சான்றோர் வாழ்த்துக்கள்.

"சங்கை திங்கட் குலாதிபன்
சக்ர வர்த்தி ஈழன்வங் கிசத்தோன்
பஞ்ச திராவிட முதல்வன்
பரம்பரைப் பாண்டியன் நாடன்
கல்விச் சங்க முடையவன்
காசு முத்திரை விடுத்தவன்
சப்த கன்னி புத்திரன்
தமிழைக் குறுமுனிக் குரைத்தவன்
வேப்ப மாலை தரித்தவன்
மேலை வாசல் விசேடத்தோன்
கொற்கை மதுரை யாண்டவன்
கோலப் பனைமீன் கேதனன்
வில்லவன் சொல்லுறுதி விடாதவன்"

என்றும்

"உயர்ந்த சிங்கக் கொடியாதிபதி
சம்பரனை வென்று இரட்டைச் சங்கேந்திநோன்
ஈழந் திறைகொண்டோன்
இலங்கா புரிவேந்தன்
செட்டி தோளேறும் பெருமாள்
வாழைக் கிருகுலை வரக்கண்டோன்
பத்திரகாளி வரபுத்திரன்"

என்றும்

வாழ்த்துக்கள் பரம்பரையாய்க் கூறிவரப்படுகின்றன. இவ் வாழ்த்துக்களினின்று கவனிக்கத்தக்க சில குறிப்புக்களாவன:—

1. **சப்த கன்னி புத்திரர்:—** இஃது சான்ஞோர் ஜாதியைப்பற்றிச் சொல்லி வருகிற கதை ரூபமான ஒரு வரலாறு. காவிரி நதிக்கு வடபக்கமான ஓர் நாட்டில் ஏலாச்சுனையென்னும் மலையடிநதியில் நீராடவந்த நாகராஜனுடைய புதல்விகள் எழுவர், வித்தியாதரனென்னும் இராஜரிஷியைச் சேர்ந்து ஏழு மைந்தரைப் பெற்று, பிட்டாபுரம் என்னும் கிராமத்திலுள்ள காளிகோயிலில் இட்டுப் போயினர். காளிகாதேவி அக்குழந்தைகளை வளர்த்து வட்டுக்கோட்டை அல்லது சக்கரக்கோட்டை என்னும் இடத்தை ஆண்டுவரச் செய்தனள். அம்மைந்தரது சந்ததியாரே பல சான்ஞோர் குடும்பங்களாகத் தழைத்திருக்கலாம்.

2. **தமிழைக் குறுமுனிக் குரைத்தவன்:—** சரித்திர ஆசிரியர்கள் சொல்லி வருகிறபடி, ஆரியநாட்டிலிருந்து திராவிடநாட்டிற்கு வந்த அகஸ்தியமகாமுனிவர் இந்நாட்டிற் பலவிடங்களில் வழங்கி வந்த தமிழ்ச்சொற்களை யறிந்து இலக்கிய இலக்கண ரீதியாக வரம்பு படுத்திய அக்காலத்தில், தென்னுட்டில் படைப்புக் காலந்தொடங்கி யிருந்துவந்த சான்ஞோர் குலத்தலைவர்களே அம்முனிவருக்குத் தமிழ்ச் சொற்களை யெடுத்துக்காட்டி உதவி செய்தோராவர். அதனுலேயே, சான்ஞோர்கள் தமிழைக் குறுமுனிக் குரைத்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றனர்.

3. **கோலப் பனைமீன் கேதனன்:—** சேரராஜன் மாலையாகக் கொண்ட பனையையும், பாண்டியராஜன் கொடியாகக் கொண்ட மீனையும் தம் கொடியடையாளமாகக் கொண்டு சான்ஞோர்குல அரசர்கள் சிற்சில இடங்களில் அரசாட்சி செய்ததாக அறியப்படுகின்றது.

4. உயர்ந்த சிங்கக் கொடியாதிபதி:— சிங்கக்கொடி அரசர்களுக்கெல்லாம் பொது அடையாளமாகும். ஆயினும் இஃது சான்றோர்களுக்குச் சிறப்பாக வழங்கப்பட்டிருக்கிறது.

5. சம்பரனை வென்று இரட்டைச் சங்கேந்தினோன்:— ஓர்காலத்தில் சம்பரன் என்னும் அசுரன் வானமும் பூமியும் நடுங்கக்கொடுங்கோல்செலுத்தி ஆண்டுவந்தனன். சான்றோர் குல வீரனொருவன் அவனோடு பொருது அவன் விருதாகிய இரட்டைச்சங்கைப்பறித்து வெற்றிமாலை சூடினான். பின்பு அவ்வீரன் தான் அடைந்த வெற்றியின் அறிகுறியாகத் தான் பறித்த "இரட்டைச்சங்கு" வடிவிற் செய்த தாலியைத்தன் குலப்பெண்கள் அனைவரும் மங்கலமாக அணியும்படி செய்தனன் என்பது கர்ண பரம்பரையாய் வழங்கும் கதை. சான்றோர்குல மாதர்கழுத்தில் இன்னும் இரட்டைச்சங்கத் தாலி இலங்குவதைக் காணலாம். சம்பராசுரன் ஆண்டது இலங்கைப் பிரதேசம் என்பர்.

"அம்பரத்தோர் துயர்தீர வாளி யேவி
அரக்கர்குலம் வேரறுத்தோ னிவனே யென்னனச்
சம்பரனை வென்றிரட்டைச் சங்க மேந்தித்
தனித்தீழந் திறைகொணர்ந்தும் தங்கள் செய்ய
கொம்பனையார் களத்தினிலச் சங்கத் தாலி
குலவிருதாய்ப் புனைந்தநர சிங்க வீரன்
வெம்புசிங்கக் கொடிக்கதிபன் உலகம் போற்றும்
வீரனெனச் சான்றோரில் விளங்கி னானே"

எனஒருபாடலும் உண்டு. இப்பாடலிற் கூறியிருக்கப்பட்ட நரசிங்க வீரனின் பிரஸ்தாபம் இந்நூலின் 22-ம் பக்கத்தில்

காண்க. "ஈழந்திறை கொண்டோன், இலங்காபுரிவேந்தன்" என்பனவாதிய வாழ்த்துக்களும் மேற்சொல்லிய வரலாற்றையே வலியுறுத்தும்.

**6.** செட்டி தோளேறும் பெருமாள்:— முன்னொரு காலத்திலே சோழவரசனாற் கவர்ந்து செல்லப்பட்ட செட்டியர்குலப் பெண்ணைச் சான்றோர்குல வீரனொருவன், செட்டியர் பரிந்து வேண்டிக் கொண்டதற் கிணங்கச் சோழனோடு போரிட்டு அப்பெண்ணை மீட்டிவந்து உரியவரிடம் சேர்ப்பிக்க, அச்செட்டியர் சான்றோர்குல வீரனைத் தம் தோளிற்சுமந்து வீதிவலம் வந்து களிப்புக்கொண்டாடினர். அதனாற் சான்றோர்களுக்குச் "செட்டிதோளேறும் பெருமாள்" என்றும் சிறப்புப்பெயர் வழங்கலாயிற்றென்று சொல்லுகிறார்கள்.

**7.** வாழைக் கிருகுலை வரக்கண்டோன்:— ஓர்காலம், சான்றோர்குல வீரனொருவன் சோழராஜனுடைய வாழைத் தோட்டத்தைக் காவல் புரிந்துவந்தான். அரசன் அவனது காவலைச் சோதிக்கக்கருதி அவனறியாவண்ணம் ஒரு வாழையின் குலையைக் கொண்டு வரும்படி செய்தனன். காவல் வீரன் பின்னர்வந்து, குலையைக் காணப் பெறாமல் மனம் வருந்தித் தங்கள் குலதெய்வமாகிய காளிகா தேவியைத் துதித்தனன். அன்பனுக்கிரங்கிய அம்பிகை அவன் கோரியவாறே அறுபட்ட குலைக்காம்பிலிருந்தே மற்றொரு குலை தோன்றும்படி அருள்புரிந்தனள். அது முதல் சான்றோர் சாதியினருக்கு "வாழைக் கிருகுலை வரக்கண்டோன்" என்ற வாழ்த்து வழங்கிவரலாயிற்று.

**8. பத்திரகாளி வரபுத்திரன்:—** காளிகாதேவி, அரசர்கள் வழிபட்டுவரும் யுத்ததேவதை; நகர்காவல் தேவதையும் ஆகும். சான்றோர், அரசகுலமாதலின் அத்தேவதையைக் குலதெய்வமாகக் கொண்டு வணங்கி வருகின்றனர். கங்காதீரத்தில் வாழ்ந்து வந்தவர்களைக் கங்காபுத்திரர் என்று கூறுவது போலப் பெரும்பான்மையாய்க் காளிதேவியையே வழிபடுகின்ற சான்றோர் குலத்தினரைப் **பத்திரகாளி வரபுத்திர**ரென்று கூறுதல் சாலவும் பொருந்துவதேயாம். உச்சயினிப்பட்டணத்தில் அரசாண்டுவந்த விக்கிரமாதித்தன் காளிதேவியையே குல தெய்வமாகக் கொண்டானென்னும் கதையும் ஈண்டு பொருந்தத் தக்கதே! கௌரியாகிய காளிதேவியை வழிபட்டு வந்ததனாற் பாண்டியர்களுக்குக் **'கௌரியர்'** என்னும் பெயர் ஏற்பட்டிருப்பதும் கவனிக்கற்பாலது. இக்காரணத்தால், பாண்டியர்குலமும் சான்றோர் குலமும் ஏகசுலம் என்பது தெளிவாகின்றது.

## 26. முதல் அத்தியாயத்தின் முடிவுரை.

சான்றார், சான்றோர் என்னும் பெயர் ஆரிய பாஷையிலிருந்து தமிழில் வழங்கியதாயிருப்பினும், ஆரியர் தென்னாட்டிற்கு வருவதன் முன்பு, திராவிட தேசத்தின் ஆதிக்குடிகளில் அரசவகுப்பார்கள்—சான்றோர்களேயாவர். அக்காலத்தில் அவர்கள் **மேலவர்** (மேன்மக்கள்) என்னும் பெயரால் அழைக்கப்பட்டனர். பழைய தமிழ் இலக்கியங்களில் சான்றார்-மேலவர் என்று கூறப்பட்டிருப்பதால் இஃதுணரலாகும்.

" சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி." — திருக்குறள்.

என்பதற்கிசைய நியாயபரிபாலனம், பூமிபரிபாலனம் ஆகிய பொறுப்புக்களை யுடையவர்களாகவே சான்றோர்கள் இருந்திருக்கின்றனர். கன்னியாகுமரிக்குத் தென்திசையில் எழுநூற்றுக்காவதப் பரப்பையுடைய பூபாகம், சரித்திராசிரியர்கள் குறிப்பிடுகிறபடி இதற்குமுன் பன்னீராயிர ஆண்டளவில் கடல் கொள்ளப்பட்டது. அக்காலத்துக்கு முன் பின்னுகப் பாண்டியர்களது பரிபாலனத்திற் கடங்கியிருந்த முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் ஆகிய முச்சங்கங்களிலும் புலவர்களாக விளங்கியவர்கள் சான்றோர் குலத்தலைவர்களே என்றெண்ணக் கிடக்கின்றது.

இராமாயணம், பாரதம், திருக்குறள், பெரியபுராணம், சங்கநூல்கள் முதலியவற்றினின்றும், ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டுள்ள பல சிலாசாஸனங்களினின்றும், சான்றோர் — அரசர்களே என்பதும், அவர்கள் குலமே அரசர்கள் பெண் கொள்ளவும் கொடுக்கவும் உரியதாய் விளங்கிற்று என்பதும், அரசர்கள் சிறப்புடன் வழங்கிய சேனாபதி, மந்திரி முதலிய பட்டம் பெற்றவர்கள் இவர்களே என்பதும், படைக்கல ஆசிரியர், போர்வீரர், சிற்றரசர், பேரரசர் முதலியவர்களாகவும் இவர்கள் விளங்கினார்கள் என்பதும், ஆகிய விஷயங்கள் இவ்வத்தியாயத்தில் நன்கு ஆராயப்பெற்றன.

சான்றார் என்னும் பதத்தின் மரூஉ " சாணார்." சான்றோர் என்னும் சொல்லில், அறிவு, ஊக்கம், சால்பு, மேன்மை முதலிய உயர்பொருள்கள் அடங்கியுள்ளன. சாணார் என்னும் வார்த்தையில், நீட்டலளவைப் பெயராகிய

சாண் என்பதன் சம்பந்தம் யாதும் இல்லை. கன்றுக்குட்டி — கண்ணுக்குட்டி, மூன்று — மூணு என்று உலகவழக்கிற் பேசப்படுதல் போல, சான்ருர் — சாணர் என வழங்கலாயிற்று.

22-ம் பக்கத்தில் முன்னர் கூறியபடி, இலங்கைத்தீவிற்குச்சென்ற நரசிம்மன் என்னும் ஈழமன்னவனைப் போன்று கி. பி. எட்டாம் நூற்ருண்டில் பர்மா தேசத்திற்குச்சென்று ஆங்கு தங்கள் ஆட்சியை நிலைநாட்டிய சோழ, ஈழசந்ததிகளாகிய சான்ருர்குல மன்னர்கள் **சாண்–ராஜாக்கள்** என்று இன்றும் அழைக்கப்படுகின்றனர். சாண் ராஜாக்களைப்பற்றி, **(Sir Walter Elliot, K. C. S. I., LL. D, F. R. S.)** ஸர்வால்டர் எல்லியாட் பிரபுவும் எழுதியிருக்கின்றனர். அப்பிரபு, "இந்த சான்ருர் குலத்தவர் சோழராஜ வம்சத்தினரே"யென்றும் கூறுகிருர்.

இதுகாறும், நாடார் மன்னரின் பூர்வீகத்தைப்பற்றிக் கூறினோம். இனி அம்மன்னர்களின் பூர்வீக பூமியாகிய தென்னுட்டில் மகமதியர் படையெடுப்பால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் பிறவற்றையும் விளக்குவாம்.

## இரண்டாம் அத்தியாயம்.

# பாண்டியர் ஆட்சியும், மகமதியர் படையெடுப்பும்.

### 1. தமிழ் நாட்டரசர் நிலை.

செந்தமிழ்நாட்டில் சீருந் திருவும் பொலியச் செங்கோல் செலுத்திய முடியுடை மூவேந்தராகிய சேர சோழ பாண்டியர், சிலசமயங்களில் தமக்குள் ஒற்றுமையின்றி ஒருவருக்கொருவர் மாறுபட்டுப் போர்புரிந்து கொண்டிருந்தன ரென்று சரித்திரவாயிலாகத் தெரிகின்றோம்.

### 2. பராக்கிரம பாண்டியன் — குலசேகரபாண்டியன் போர்.

கி.பி.1171-ல் பாண்டிய நாட்டிற் பராக்கிரமபாண்டியன் குலசேகர பாண்டியன் என இருவர் ஆட்சிசெய்து கொண்டிருந்தனர். அவர்களில் பராக்கிரம பாண்டியனுக்கு வீர பாண்டியனென்றும், குலசேகர பாண்டியனுக்கு விக்கிரம பாண்டியனென்றும் இரண்டு மைந்தர்கள் இருந்தனர். இவ்விரு சகோதரருக்குள் பூமியாட்சி விஷயமாய்ச் சச்சரவு வுற்பட்டுப் போர் தொடங்கிற்று. பராக்கிரம பாண்டியன் பக்கம், இலங்கையரசனுகிய பராக்கிரம பாகுவின் சேனுபதியான "தண்டநாதன்" என்பானும், குலசேகர பாண்டியன் பக்கம், சோழ மன்னவனும் பாண்டியநாட்டுச் சிற்றரசர் சிலரும் சேர்ந்திருந்தனர். இலங்கை மன்னவனது சேனை பராக்கிரம பாண்டியனுக்கு உதவிசெய்ய வந்து சேர்வதற்கு முன்னமே குலசேகரபாண்டியன், தன் தமையனுகிய

பராக்கிரம பாண்டியனது படுக்கையறையில் நுழைந்து மறைந்திருந்து வஞ்சகமாக அவனைக் கொன்றுவிட்டனன். உடனே பராக்கிரமபாண்டியன் மகன் வீரபாண்டியன் தன் வீரம் இழந்து மலையாளநாட்டிற்கு ஓடிவிட்டனன். இலங்கை மன்னனது கட்டளையின்படி தண்டுதளங்களுடன் புறப்பட்டு வந்த அவனுடைய சேனாபதி, பாம்பன் துறைமுகத்தில் வந்திறங்கினான். வந்திறங்கியதும் குலசேகரபாண்டியன் தன் துணைவருடன் சென்று அவ்விடத்தில் அவனுடன் போர் தொடுத்தான். போர் மும்மரமாக நடந்தது. "மஹாவம்சோ" என்னும் இலங்கை தேசச்சரித்திரத்தில் அந்தப்போரைப் பற்றியும், அப்போரில் கலந்துகொண்ட சிற்றரசர்களைப்பற்றியும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

## 3. சிற்றரசர், சேனாபதிகளின் பெயர்கள்.

I நாடாள்வார்:—

1. வடவலதிருக்கடை நாடாள்வார்.
2. அங்குட்ட நாடாள்வார்.
3. புங்குண்ட நாடாள்வார்.
4. கெண்டியூர் நாடாள்வார்.
5. கெங்கையாறு நாடாள்வார்.
6. தலண்டூர் நாடாள்வார்.
7. வீரகங்க நாடாள்வார்.
8. அளத்தூர் நாடாள்வார்.
9. கலவண்டைய நாடாள்வார்.
10. பாண்டிமண்டல நாடாள்வார்.
11. அஞ்சுகோட்டை நாடாள்வார்.

II ராயர்:—

1. வில்லவராயர்.
2. நரதுங்கபிரம ராயர்.
3. இலங்கைய ராயர்.
4. அங்குட்ட ராயர்.
5. பாலுடைய ராயர்.
6. குடையமுத்து ராயர்.
7. பணசிவ ராயர்.
8. மாளவ ராயர்.
9. பருத்திக்குடைய ராயர்.
10. தொண்டம ராயர்.
11. வீரப்பெரிய ராயர்.
12. செங்குண்டைய ராயர்.
13. நிகலட ராயர்.
14. குறுமலைத்த ராயர்.
15. நகுல ராயர்.
16. சோம்ப ராயர்.
17. விமூவ ராயர்.
18. மன்னவ ராயர்.
19. செங்காகொண்டப்ப ராயர்.
20. கலிங்க ராயர்.
21. கலிகால ராயர்.

III பலபெயர்கள்:—

1. நரசிங்கத் தேவர்.
2. சில்லமேகன்.
3. மாளவச்சக்கரவர்த்தி.
4. துவரதீப வேலார்.

5. கோளசிங்கர்.
6. கமண்டகுட்டவூர்க்குடிகள்.

இங்ஙனம், சுமார் நாற்பது பெயர்கள் அப் பாம்பன் போரில் கலந்து கொண்டதாக "மஹாவம்சோ" விற் கூறப்பட்டிருக்கிறது.

## 4. சிற்றரசர், சேனுபதிகளின் பெயர்களைப் பற்றிய ஆராய்ச்சி.

ஏறக்குறைய எண்ணூறு வருடங்கட்கு முற்பட்ட காலத்தில் பாண்டிய நாட்டில் தெலுங்கர், கன்னடர், மகமதியர் ஆதியோர் இருந்ததில்லை. ஆகையால் மேலே குறிக்கப்பட்ட பெயர்கள் தமிழ்நாட்டு அரசர்களின் பெயர்களாகவே யிருந்திருக்கவேண்டும். கள்ளர், மறவர் முதலிய சாதியினர் பிரபலம் பெற்றிருந்த காலம் மிகப்பிந்திய காலமென்றே அவர்களைப்பற்றிக் கூறுஞ் சரித்திரங்கள் உரைக்கின்றன. நாடாள்வார் என்னுஞ் சிறப்புப்பெயரை யுடையவர்கள், முதலத்தியாயத்திற் கூறிய சோழநாட்டுச் சிற்றரசர்களைப்போலவேபாண்டியநாட்டுச்சிற்றரசர்களாகிய சான்றோர் குலத்தவரேயாவர். நாடு + ஆள்வார் = நாடாள்வார்.

நாடாள்வார்ப்பட்டம் பெற்றவர் என்று மேலேயெடுத்துக்காட்டப்பட்ட பதினொருவர் ஆண்டநாடுகளான வடவல திருக்கடைநாடு, அங்குட்டநாடு, புங்குண்டநாடு, கெண்டியூர் நாடு, கெங்கையாறு நாடு, தலண்டூர் நாடு, வீரகங்கா நாடு, அளத்தூர் நாடு, கலவண்டையநாடு, பாண்டிமண்டல நாடு, அஞ்சுகோட்டை நாடு என்பவைகள் எங்கெங்குள்ளவைகள்

இன்ன இடத்திலுள்ளவைகள் என்று திட்டமாகச்சொல்ல இயலவில்லை.

“ ராயர் ” என்னும் பெயர், “ராஜா” என்னும் வட சொல்லிலிருந்து பிறந்தது. இந்தப்பெயரும் சிற்றரசர்களாக விளங்கிய சான்றோர் குலத்தவரை குறிப்பதோடு பற்பல கௌரவம் வாய்ந்த மாந்தரையும் குறிக்கலாம்.

“தேவர்” என்பது, அரசர் சகலபிரஜைகளுக்கும் தலைவர் என்ற பொருளில் வருவது. சோழர்களும், பாண்டியர்களும் வெட்டுவித்த பல சாஸனங்களிலும் தேவர் என்னும் சிறப்புப்பெயர் அரசரது இயற்பெயர்களுடன் சேர்த்தே வழங்கப் பட்டிருக்கின்றன. உதாரணம்:— இராஜராஜ தேவர், பராந்தகதேவர். கோவில் என்னும் தேவாலயத்திற்குரியபெயர் தெய்வாமிசமான அரசனது இருப்பிடத்திற்கும் பெயரானமைபோலத் தேவர் என்னும் பெயர் அரசர்களுக்கு வழங்கலாயிற்று.

இராயர், வேளார், தேவர் என வழங்கும் பட்டப்பெயர்கள் ஊர், நாடு இவைகளின் சம்பந்தமில்லாமல் இருப்பதனால் அவைகளும் கௌரவப்பெயர்களாகவே வழங்கப்பட்டிருக்கலாம். இலங்கைராயர், மாளவராயர், கலிங்கராயர், தொண்டராயர் என்பவைகள் அவ்வத்தேயங்களிலிருந்து பாண்டிய நாட்டிற்குவந்து அரசனாற் சிறப்புப்பெற்றவராக இருக்கலாம். இராயர் என்று பொதுவாக வந்துள்ள பட்டப்பெயர்கள் அக்காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்த பல்லவராயர்களையும் குறிக்கலாம்.

கி. பி. 1268ல் மதுரையை ஆண்ட எம்மண்டலமும் கொண்ட குலசேகரபாண்டியன், தன் சேனுபதியாகிய ஒரு மகமதியனுக்கு, "ஆரியச்சக்ரவர்த்தி" என்னும்பட்டம் வழங்கினன் என்பதாக R. அரிகர ஐயர் தாம் எழுதிய பாண்டிய ராஜ வம்ச சரித்திரத்தில் வரைந்துள்ளார். அதுபோல "மாளவச் சக்ரவர்த்தி" யென்னும் பெயர், பாண்டியன் தன் சேனுபதிக்கு அளித்த சிறப்புப் பெயராக இருக்கலாம்.

## 5, பாண்டியர் போர் முடிவு.

முற் கூறியவண்ணம் இலங்கைத் தீவிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்த தண்டநாதன் என்னும் சேனுபதி, பாம்பன் துறைமுகப் போரில் பாண்டிச் சிற்றரசர் பலரையும் வென்று குலசேகரபாண்டியனைப் புறமுதுகு காட்டி யோடுமாறு துரத்தினன். அவன் சென்ற சென்ற இடங்களான நெட்டூர், புதுக்கோட்டை, திருப்புத்தூர், மதுரை முதலியவற்றில் புகுந்து துரத்தி அவனுக்கு உதவியாய் வந்த சோழனையும், அவனையும் கொன்றுவிட்டனன். பின்பு அவன் மலையாளத்துக்குச் சென்றிருந்த பராக்கிரம பாண்டியன் மகன் வீர பாண்டியனை வரவழைத்து மதுரைக்கு மன்னவனுக்கி மகுடமும் சூட்டுவித்துத் திரும்ப இலங்கைக்குப் போயினன். இதுவே அவ் யுத்தத்தின் முடிவு.

மேற்கூறிய வீரபாண்டியன் பாண்டியகுலச் சிற்றரசர் அநேகரை வென்று தன்னடிப் படுத்தினன் என்றும், திருப்புத்தூரை யாண்டவன் வீரபாண்டியன், அவ்வூரில் வசித்தவர்கள்-குறும்ப ராயர்கள் என்றும் பாண்டிய ராஜ வம்ச சரித்திரத்திற் சொல்லப்பட்டுள்ளன.

## 6. பாண்டியர் பலர்.

"வெள்ளா றதுவடக்காம்; மேற்குப் பெருமலையாம்;
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்,—உள்ளான
ஆண்ட கடல்கிழக்காம்; ஐம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி."

எனக் கம்ப நாடர் கூறிய பாண்டி மண்டலத்தில் ஆயிரக் கணக்கான பாண்டியர்கள் பேரரசு, சிற்றரசு, கிராமத் தலைமை முதலிய பதவிகளை வகித்துப் பரவி யிருந்தவர்களை ஒருவாறு கணக்கிட்டுப் புகழேந்திப் புலவர்,

"ஆறு யிரவர் அணிதிரளாம் பாண்டியர்கள்"— என்று, தாம் பாடிய அம்மானைகளில் சொல்லியிருக்கின்றனர். இவ் விதப் பெருக்குடைய பாண்டி மன்னர்களுக்கு வந்த இன் னல்களையும், அரசுமாறுதல்களையும் பற்றி இனி ஆராய்வோம்.

## 7. மாலிக்காபூர்—படையெடுப்பு.

மதுரைத் தல வரலாறு:— "சாலியவாகன சகாப்தம் 1246-க்குக் கொல்லமாண்டு 500 (கி. பி. 1324), ருதிரோற் காரி வருஷம் ஆனிமீ வடக்கே டில்லியிலிருந்து வந்த ஆதி சுல்தான்மலுக்குநேமி என்பவனும் மதுரை வந்து வாளால் விழித்துறங்கும் பாண்டியன் என்ற பராக்கிரம பாண்டிய தேவரைச் செயித்துப் பிடித்துக் கட்டிக்கொண்டு டில்லிக்கு அனுப்பிப்போட்டு ராச்சியத்தைக் கட்டிக்கொண்டார்கள்.'

இவ்விஷயத்தைக் குறித்து வேறு சரித்திர ஆசிரியர் சொல்லியிருப்பதாவது:— கி. பி. 1308-ல் குலசேகர—

பாண்டிய னென்பவன் ஆட்சி புரிந்தான். அவனுக்குப் பட்ட மகிஷியின்பால் சுந்தரபாண்டியன், பராக்கிரம பாண்டியன் என்ற இரு மைந்தர்களிருந்தும், அவன் தன் மோகஸ்திரீயின் புதல்வனாகிய விக்கிரமபாண்டியனுக்குப் பட்டங்கட்ட விரும்பினன். இதையுணர்ந்த சுந்தரபாண்டி-யன் குலசேகரபாண்டியனைக் கொலைபுரிந்தான். அதனாற் பாண்டிய நாட்டிற் குழப்பம் மிகுந்தது. விக்கிரமனுடன் பலர் சேர்ந்துகொண்டு சுந்தரபாண்டியனைத் துரத்தி விட்டனர். உடனே சுந்தரன் டில்லிக்குச் சென்று மகம்மதியச் சக்ரவர்த்தியிடம் சரண் புகுந்தனன். அதன்மேல் மகமதியர் அவனை முன்னிட்டுப் பாண்டிய நாட்டிற்குள் பிரவேசித்தனர்."

மலுக்குநேமி என்பவன் டில்லி பாதுஷாவாகிய அலாவுத்தீனின் சேனாபதி. இவனை "மாலிக்காபூர்" என்பது சரித்திரப் பிரசித்தம்.

மதுரைத் தல வரலாறு:— "சகாப்தம் **1246** முதல் **1294** (கி. பி. **1324—1372**), சாதாரண வருஷம் வரையான 48 வருஷம் அல்லாவுட்டீன் உடயூஜி, குத்புட்டீன், கியாதுடீன், நாசுருடீன், அடில்ஷா, பக்ருடீன், முபரக்ஷா, அல்லாவுடீன் சிக்கந்தர்ஷா என எட்டு மகமதிய ராசாக்கள் மதுரையை ஆண்டார்கள். நாடு துலுக்காணியமாயிற்று. மதுரைக்கு வாய்த்த பெருமாளும், நாஞ்சி நாடு போனார். பெரிய ஆலயத்துப் பஞ்சாட்சரத் திருமதிலும், பதினாலு கோபுரங்களும், தெருவீதியும் இடிபட்டன. கற்பக்கிருகம், மகாமண்டபம், அர்த்த மண்டபம் வரைக்குந் தப்பி

யிருந்தது. இமஸேது பரியந்தம் மன்வந்தரம்போல் துலுக்காணியமா யிருந்தது." இச்சம்பவத்தைப்பற்றித் திருவாளர் **T. V.** சதாசிவ பண்டாரத்தாரவர்கள், செந்தமிழ்த் தொகுதி 33—பகுதி 5-ல் எழுதியிருப்பதாவது:—

இப் படையெழுச்சியைப் பற்றிய செய்திகளை, 'அமீர்—குசுரு' என்பவன் எழுதியுள்ள குறிப்புக்களால் ஒருவாறு உணரலாம்: "அந்நாளில் பாண்டிநாடு மகமதிய வீரர்களால் கொள்ளையிடப் பெற்றமையின் அது தன் செல்வத்தையும், சிறப்பையும் இழந்து வறுமை யெய்தியது. நாட்டில் அமைதியாக வாழ்ந்துவந்த மக்களெல்லோரும் தம் வாழ்நாளில் எங்குங் கண்டறியாத பல்வகை இன்னல்களுக் குள்ளாயினர். அறநிலையங்களும், கோவில்களும் அழிவுற்றன."

பண்டைக் காலந் தொட்டு அன்னியராட்சியில் அகப்படாத மதுரைமாநகரம், பதின்மூன்றும் நூற்றுண்டில் மகமதியர் படையெடுப்பினுல் சொல்ல வியலாத அல்லல் அடைந்தது. மதுரைமாநகரைக் கொள்ளையாடிய மகமதிய வீரர்கள் மேலும் தெற்கு நோக்கிச் சென்றனர். இனி கொற்கை நகரைப்பற்றியும், அதனை மகமதியர் கொள்ளையிட்ட வரலாற்றைப் பற்றியும் கூறுவாம்.

## 8. கொற்கை.

முதற்சங்க ஸ்தானமான தென்மதுரை கடல் கொள்ளப்பட்டதன்பின், இடைச்சங்க காலத்துப் பாண்டியர்கள் ஆட்சி செய்திருந்தது கொற்கைமாநகரமேயாகும். இக் கொற்கையை வால்மீகியார், கபாடபுரமென்று சொல்லியிருக்கின்றனர். அது வருமாறு:

வால்மீகி ராமாயணம், கிஷ்கிந்தா காண்டத்துள் சுக்ரீவன் வானர வீரர்களை வழிகூறித் தென்றிசை நோக்கி யனுப்புகையில், "பயங்கரமான முதலை, மச்சங்களையுடைய தாமிரவர்ணியைக் காண்பீர்கள். அதன் பின் பொன் நிறைந்ததாய் அழகுடைத்தாயும், முத்துமயமான அணி களால் அலங்கரிக்கப்பட்டதாயும், பாண்டியர்களுக்கு யோக் கியமானதாயுமுள்ள கபாடத்தை, வானரவீரர்காள்! பார்க் கக்கடவீர்!" என்று கூறியதாய்க் காண்கிறோம்.

(கபாடம் = கதவு.)

இங்குக் குறிப்பிட்ட "கபாடம்," பாண்டியமன்னனின் கோட்டை வாயிற்கதவு. இதிலிருந்து பாண்டியனது நகரத் தின் கோட்டை, தாமிரவர்ணி கடலோடு கலக்குமிடத்தில் இருந்ததென்று உணரலாம். கபாடபுரம் என்னும் பெயரை யுடைய அந்நகரம், பின்பு 'கொற்கை' யென்னும் பெயரைப் பெற்றதாகத்தெரிகின்றது. வியாசபாரதத்தில் சித்திரவாக பாண்டியன் ஆண்ட நகரை மணிநகரம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. முத்துக்கள் எடுக்கப்படும் கடற்றுறை யுடன் கூடியதாகையால், கொற்கை நகரம் மணிநகரம் என்று அழைக்கப்பட்டதாக ஊகிக்கலாம். கொற்கையைச் சூழ்ந்த நாடுகளுக்கு, "மாறோகம்" என்ற பெயர் பழைய நூல்களிற் காணப்படுகின்றது. மாறோகம் என்பது: மாறர்—பாண்டியர், மாறோகம்—பாண்டியர்க்குப் பிறப்பிட மாகிய பூமி எனப் பொருள்படும்.

கொற்கையின் வடபக்கத்திலுள்ள குளத்தினுள், பழமையான † கோவிலொன்று இருக்கின்றது. பஞ்ச

---

† அக்கோவிலை, வெற்றிவேலம்மன் கோவில் என்பர்.

காவியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்திலே சொல்லப் பட்டிருக்கின்றபடி, மதுரையில் அநியாயமாகப் பாண்டியனாற் கொலையுண்டகோவலனதுமனைவியாகியகண்ணகிஆற்றொணாச் சினங்கொண்டு தன் கற்புத்தீயினால் மதுரைமாநகரைச் சுட்டெரித்தனள். கொற்கைப் பாண்டியனாகிய * வெற்றிவேற் செழியன், கண்ணகித் தெய்வத்தின் உள்ளங்குளிரும் வண்ணம், தன்ராஜதானியாகிய கொற்கைப் பட்டினத்தில் கண்ணகியைப் பிரதிஷ்டை செய்வித்து ஆயிரம் பொற் கொல்லரைப்பலியிட்டு வழிபட்டனன். பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் கோயிலே, மேற்கூறிய கோயிலாகும். கொற்கையில் சமணவிக்கிரகமும் காணப்படுகின்றது. சமண மதம் பாண்டியராஜ்யத்திற் பரவியகாலத்தில், அவ்விக்கிரகம் கொற்கையில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

கொற்கை நகரத்தின் வடபால், "அக்கசாலை" என்றொரு கிராமமுளது. பாண்டியர் நாணயங்களை உற்பத்தி செய்த இடமே இதுவென்று சொல்கிறார்கள். இன்னும் கோபுரங்காடு, கோட்டைக்காடு என்பனவாகிய கிராமங்களும் உள்ளன. இவை முற்காலத்துப் பாண்டிய ராஜதானியின் கோட்டை, கொத்தளம், கோபுரம் முதலியன இருந்த இடங்கள் என்று கூறப்படுகின்றன.

ஸ்ரீவைகுண்டம் தாலூகாவைச் சேர்ந்த "ஏறல்" பக்கமாயுள்ள 'சிறுத்தண்டு' என்னும் கிராமத்தைப் பாண்டியரது சிறுபடை தங்கிய இடமெனச் சொல்கிறார்கள்.

---

* இச்செழியனுக்கு இளஞ்செழியன் என்னும் பெயரும் உண்டு.

## 9. மார்க்கபோலோவும்—கொற்கையும்.

கி. பி. 1291-ம் ஆண்டளவில், கொற்கைப்பட்டினத்தில் சுந்தரபாண்டியன் என்னும் மன்னவன் ஆட்சி புரிந்தான். அவன் காலத்தில் இத்தாலிய தேசத்தவனாகிய "மார்க்க போலோ" என்னும் யாத்திரீகன் கொற்கைக்கு வந்தான். அவ்ன் பாண்டியனைக்கண்டு சம்பாஷித்தான். அவன் தான் ஏழுதிய சரித்திரப் புஸ்தகத்தில் கொற்கை நகரைப்பற்றிப் பின் வருமாறு எழுதியிருக்கிறான்: "சுந்தர பாண்டியனுக்கு முந்நூறு மனைவிமார்கள். கொற்கையில் ஐயாயிரம் தெருக்கள் உண்டு. மாளிகைகளுக்கு நிலைகளும், கதவுகளும் தங்கத் தகடுகளால் ஆனவை. காயல் நாட்டரசனது பொக்கிஷம் மிகுதியானது. அரசன் ஏராளமான அணிகலங்களை அணிந்திருக்கிறான். அரசாங்கத்திற் பல பிரிவுகளிருக்கின்றன. அரசன் அயல் நாட்டினரிடத்திலும், வணிகரிடத்திலும் அன்பு பாராட்டுபவன். அவனுக்கு நான்கு சகோதரர்கள் உண்டு. ஐந்து ராஜபுத்திரர்களும் தமக்குள் மிக ஒற்றுமையாய் வாழ்ந்தனர். அவர்களில் எவனாவது போர் தொடங்கினால், அவர்களின் தாய் அவர்களை நோக்கி, "உங்களுக்குப் பாலூட்டிய என் தனங்களை அறுத்தெறிவேன்" என்பாள். உடனே உயுத்தம் நின்றுவிடும். மூத்தோனாகிய "அஷர்," காயலை யாண்டவன்."

அந்நாட்களில் பாண்டிய நாட்டிற்கு வந்த "வாஸப்" என்னும் மகமதிய வித்வான், சுந்தர பாண்டியனது தலைநகரில் ஆயிரத்திருநூறுகோடிப் பொன்னும், முத்துக்களும் வைத்திருந்தான் எனச் சொல்லியிருக்கிறான். தற்காலம் பழைய காயல், புன்னைக்காயல், மஞ்சணீர்க் காயல் என்னுங்

கிராமங்களைப்பக்கத்திற்கொண்டு கொற்கைக்கிராமம் விளங்குவதால், இவைகளெல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரேபட்டினமாய் விளங்கிய அக்காலத்தில், அக் கொற்கைப் பட்டினத்திற்கு வந்த "மார்க்கப்போலோ" என்னும் யாத்திரைவாசி, கொற்கையைக் "காயல்" என்று குறிப்பிட்டிருக்கிறான்.

சமீபகாலத்தில் இக்கொற்கைப் பிரதேசத்தில் பூமியை வெட்டியவிடங்களில் செங்கல், கருங்கல், முதுமக்கள் தாழிகள், வேறு பிற மண்தாழிகள், பலதேசத்து நாணயங்கள், எஃகினாற் செய்த பல ஆயுதங்கள் முதலியன அகப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து பல ஆங்கிலச் சரித்திர ஆசிரியர்களும், மற்றவர்களும் அவ்விடத்திலே பூர்வீக காலத்தில் ஒரு பெரிய சிறந்த நகரம் இருந்திருக்க வேண்டுமென்று அபிப்பிராயம் கூறியிருக்கின்றனர்.

## 10. மாலிகாபூரும் — கொற்கையும்.

இவ்வாறு சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய திருமணி நகராகிய கொற்கையை மகம்மதிய சுல்தானின் தளகர்த்தனாகிய "மாலிகாபூர்", மார்க்கபோலோ, வாசப் என்பவர்களாற் காணப்பெற்ற குலசேகர பாண்டியன், அவன் சகோதரர் ஆகிய இவர்களுடன் போராடி ஜெயித்து நகரைக் கொள்ளையிட்டனன். எழுநூறு எருதுகளிலும், ஒட்டகங்களிலும், யானைகளிலும் பொன்னாலாகிய கதவுகள், நிலைகள், ஜன்னல்கள், பொன்நாணயங்கள், முத்துக்கள், ரத்னாபரணங்கள், பாண்டங்கள் ஏற்றப்பட்டுச் சென்றனவென்று மகம்மதியச் சரித்திரக்காரர்களே எழுதியிருக்கின்றனர். அதன்பின் நெடுமாறர்கள் என்னும் பெரிய பாண்டியர் அரசாட்சி முடிந்து

உருக்குலைந்து, தற்காலம் காணுகிற விதத்தில் அழிந்து போய்விட்டது. இவ்வுண்மை தெரியாதார் கொற்கையைக் கடல்கொண்டதென்றும், ஆறுவிழுங்கியதென்றும் கூறுவர். மேற்சொல்லிய ஐந்து பாண்டியர் ஆட்சிக்காலம் கி. பி. 1268–1311, என்பதாகச் சரித்திரங் கூறுகின்றது.

## 11. செய்யது இப்ராஹீமும்—பாண்டியரும்.

மேற்கூறிய சம்பவம் நிகழ்வதற்கு சுமார் 160 வருடங்களுக்கு முன், (ஹிஸாத்-582) கி. பி. 1164-ல் பாண்டிய நாட்டில் ஒரு மகம்மதியப் படையெடுப்பு ஏற்பட்டதாக மகம்மதிய மார்க்கப் புத்தகமாகிய தீன்-நெறி விளக்க நூலில் சொல்லப்பட்டிருக்கின்றது. அப் படையெடுப்பின் விபரம்:- ஆதி மகம்மதுக்குப் பதினெட்டாவது தலைமுறையிலிருந்த செய்யது இப்ராஹீம் என்பார் ஒன்பது படைத்தலைவர், சேனைகள், இருபத்தொரு ஸ்திரீகள் சகிதம் கப்பல் மார்க்கமாய் மலையாளம், சள்ளிக்கோட்டையில் வந்திறங்கிப் பவுத்திரமாணிக்கம் என்னும் கொற்கைக்கு வந்து அக்காலம் அதனை ஆண்ட விக்கிரம பாண்டியனுடன் போராடித் தானும் தன் படைத்தலைவரிற் சிலரும் அந்தியமாயினர். ஏறுபடி, வைப்பாறு, புதையூர், திருப்பரங்குன்றம், முதலிய இடங்களில் அப் படைத் தலைவர்கள் அடக்கஞ் செய்யப்பெற்றனர். மகம்மதியர்கள் அவ்விடங்களிற் சென்று அடக்கஞ் செய்யப்பட்ட மகுதித் தலங்களை வணங்கி வருகின்றனர். அவர்களுடன் வந்து யுத்தத்தில் மரணமடையாது சிதறுண்ட மகமதியர் பாண்டிய மன்னர்களின் அநுமதி பெற்றுச் சிற்சிலவூர்களிற் குடியேறினர். தீன்-நெறி

விளக்க நூலில், சுற்று நகர்கள் உட்படப் பல நகரங்களும், எண்காத விஸ்தீரணமும், எண்காதச் சுற்றளவுமுள்ள பெரிய கோட்டையும், ஐயாயிரந் தெருக்களும், ஏழு சிற்றரசுப் பாண்டியர்களும், ஐந்து பாண்டியர் குல சேனுபதிகளும், இரு மைந்தர்களும், ஒருலக்ஷம் பாண்டியர்இன ஜனத்தொகையும் கொற்கைப் பட்டினத்தில் உள்ளனவாகச் சொல்லப்படுகின்றது. இம்மகமதியப் படையெடுப்பினுல் விசேஷ மாறுதல் யாதொன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இத்தாலிய யாத்திரீகனும், மற்றவர்களும் கூறிய நகரச் சிறப்பிற்கும், விசாலத்திற்கும்; தீன்-நெறி விளக்கத்திற் கூறியுள்ள நகரச் சிறப்பிற்கும், விசாலத்திற்கும் விசேஷ வேறுபாடு இல்லையென்பது கவனித்தற்குரியது. ஒருலக்ஷம் பாண்டிய இன ஜனத்தொகை யென்று கூறப்பட்டுள்ள அம்மக்களே பிற்காலத்தில் பல இடங்களிலும் பரவி வாழ்கின்ற சான்ருர் குல மக்களாவர் என்று கூறலாம். இது நிற்க:

## 12. பாண்டிய நாட்டிற்கு ஏற்பட்ட பல இன்னல்கள்.

மாலிக்காபூர் படையெடுப்பால் நேர்ந்த செயலைப்பற்றிச் சதாசிவ பண்டாரத்தாரவர்கள் செந்தமிழ்த் தொகுதி 33-பகுதி 5-ல் எழுதியிருப்பதாவது:—

“முன் சொல்லிய எண்மராகிய (47 - ம் பக்கத்திற் காண்க) மகமதிய மன்னர்களில் சிலர் தம் பெயரால் பொன் நாணயங்களும் வெளியிட்டுள்ளனர். அக்காலத்தி லிருந்த பாண்டியர் மகமதிய ராட்சியி லடங்கி யிருந்தன ரென்பது

ஒருதலை யெனினும் தன் நாட்டில் நடந்து வந்த அயலாரது கொடிய ஆட்சியையும் அதனால், மக்கள் எய்திய எல்லையற்ற துன்பங்களையும் ஒழித்தற்கு அன்னோர் முயன்றும் இருக்கலாம். அம் முயற்சி பயன்படவில்லை போலும்! அத்தகைய முயற்சியி லீடுபட்டுழைத்த போசள மன்னனாகிய மூன்றாம் வீர வல்லாள தேவனும் ஊழ்வலியால் வெற்றி பெறாது போர்க்களத்தில் உயிர் துறந்தது அறியத்தகுந்தது.

ஈண்டுக் கூறிய வீரவல்லாள தேவனைப்பற்றிய பிற விவரங்கள் விளங்கவில்லை. சோழ மன்னர்களில் கி. பி. **1136**-ல் முடிசூட்டப் பெற்று விளங்கியிருந்தவன் "**வீரசம்பச் சோழன்**" என்று சோழசரித்திரம் கூறுவதால், அவ்வல்லாள தேவன் இச் சோழனாக இருக்கலாம்.

இன்னும் மகமதியர் ஆட்சியில் பல திருக்கோயில்கள் கொள்ளையிடப்பெற்று நாள் வழிபாடும், ஆண்டு விழாவும் இன்றிப் பல வருடங்கள் மூடப்பட்டிருந்தன என்று சில கல் வெட்டுக்கள் கூறுகின்றன. சமயக் கொள்கை பற்றிப் பொதுமக்கள் பலவகைத் துன்பங்களுக் குள்ளாயினர் என்பது மகமதிய சரித்திர ஆசிரியனாகிய **இபின்பாதூதா (Ibn-Batuta)** வின் குறிப்புக்களால்; தெரியவருகின்றது. இதனால் பாண்டி நாட்டிற் பல மாறுதல்கள் ஏற்பட்டன. ஆயிரக் கணக்கான ஜனங்கள் மகமதிய மார்க்கத்திற் புகுந்தனர். பல கிராமங்கள், மகமதியர் வசிக்கும் கிராமங்களாயின. பாம்பனிலிருந்து கன்னியாகுமரிவரையுள்ள நூற்றெண்பது மைல் அளவு கடற்கரையை அடுத்துள்ள கிராமங்களில் வசித்துவந்த நெய்தல் நிலமாக்களாகிய பரதவர்கள், மகமதியருடைய இன்னலுக்குப் பயந்து, போர்த்துக்கல் தேசத்

தரசனது அநுமதியின் பேரில் பாரத நாட்டிற்கு வந்த போர்த்துக்கீசியாது ஆதரவை நாடி, ரோமன் கத்தோலிக் மதத்தைத் தழுவினர் என்று பரதவர் சரித்திரங் கூறு கின்றது. பாண்டியர் தத்தம் நகரங்களில் வாழுதற்கு இயலா மல் சிற்றூர்களிற் றங்கித் தலைமறைவாய் வசிக்கலாயினர். மதுரைப் பாண்டியர்களில் ஒருவனாகிய இராஜசிம்ம பாண்டியன் சின்னமனூரில் மறைந்து வசித்திருந்ததாகச் சரித்திரஞ்சொல்லுகின்றது.

## 13. பொதி எருது வர்த்தகம்.

பதினைன்சாம் நூற்றாண்டளவில் தமிழ்நாடு இவ்வித இன்னலுக்குள்ளாகவே, சோழ பாண்டிய மரபினராகிய சான்றோர்குல மக்கள் அரசாங்க ஆதரவை யிழந்தனர் வலங்கையர், பராந்தகக்கொங்கவாளர், நிகரிலி சோழத் தெரிந்த குதிரைச் சேவகர் என்பனவாகிய வீரப்பட்டங் களும், சிற்றரசுப் பாத்தியங்களும், செல்வங்களும் தவிர்ந்து தத்தமக்கேற்றவாறு பற்பலதொழில்களை மேற்கொண்டனர். இவற்றில் பொதிஎருது வர்த்தகமே சிறந்ததாகக்கொண்டு அவர்கள் ஜீவனஞ் செய்து வந்தனர்.

முற்காலத்தில் அரசர்கள் போர்க்களத்திற்கும், பிரயா ணத்திற்கும் ஏற்ற தளவாடங்கள், உணவுப்பொருள்கள் முதலியவற்றைப் பொதி எருதுகளில் ஏற்றிச் செல்வது வழக்கம். போர்க்களத்தில் பகைவரைவெற்றிகொண்டு கைப் பற்றிய பொருள்களைப் பொதி எருதுகளிலேற்றித் தத்தம் தலைநகருக்கு அனுப்புவர். யாத்திரைக்காலங்களில் பிரபுக் களும் ஏனையோரும் தமக்கு வேண்டும் பொருள்களை எருது

களில் ஏற்றிச்செல்வர். வண்டிகளும், தேர்களும் செல்லக் கூடாத பாதைகளில் எருதுகளே மிகுதியும் பயன்பட்டு வந்தன. விநோத ரச மஞ்சரியில், பின்வருமாறு சொல்லப் படுகின்றது:—

"கருணாகர பாண்டியன் தந்த தந்தப்பல்லக்கில், குடகு தேசாதிபதி கொடுத்த யானைகளும், மாறுவாடி தேசத்தரசன் தந்த ஒட்டகங்களும், சிந்துதேசத்தரசன் கொடுத்த குதிரைகளும், ஆந்திரதேசாதிபதி கொடுத்த தண்டவால் எருதுகளும் கொண்டு, கம்பநாடன் பெருங்கூட்டமாக ஒரு ராஜாவின் தண்டு வருவதுபோலப் பிரயாணம் பண்ணுவது உண்டு."

சான்றோர், அரசசேவையில் அமர்ந்திருக்குங் காலத்திற் பொதியெருதுத் தொழில்களிலும் ஈடுபட்டிருந்ததனால் அப்பழக்க வாசனையே அவர்கள் பொதியெருது வர்த்தகத் தொழிலை மேற்கொள்ளும்படி தூண்டிற்று. வாணிபம், வணிகஜாதிக்கே உரியதாயினும், ஒரு தேசத்துப் பொருள்களை இன்னொரு தேசத்துக்குக் கொண்டு போகுங்கால், அநேகமைல்தூரம் பிரயாணம் செய்யவேண்டியது அவயசிமாயிருந்ததாலும், இடையில் கள்ளர், கொள்ளைக்காரர், குறும்பர் முதலியோருடைய உபத்திரவங்களுக்கும், வனவிலங்குகளின் மேற்படும் அபாயங்களுக்கும் அகப்படாமல் இருக்க வேண்டியது அவசியமாதலாலும், அங்ஙனம் இடையூறுகள் நேரிடுமாயினும், அவற்றைக் கடந்து செல்லும் உரமுந்திறமும், பலநாள் பிரயாணத் துன்பத்தைச் சகிக்கும் ஆற்றலும் வேண்டியது அவசியமாதலாலும், இத்தகைய வன்மையுடையவர்க்கே பொதியெருது வர்த்தகம் சாத்தியமாவதா

யிற்று. சான்றோர் வீரதீரஞ் செறிந்த அரசகுலப் பெரு மக்கள் ஆகையால் அவர்கட்கே இப்படிப்பட்ட வர்த்தகம் எளிதாயிற்று.

இன்னும் ஒருவரிடஞ் சென்று இரவாமலும், ஒருவருக்கு அடிமைப்பட்டு நடவாமலும், தம் சுயமரியாதைக்குப் பங்கம் ஏற்படாமலும், பேரூதியம் பயப்பதுமாகிய தொழில் வர்த்தகமே யாதலால் அரசகுல மக்களாகிய சான்றோர் அத் தொழிலைத் தம் உத்தமத் தொழிலாகக் கொண்டமை ஆச்சரியமன்று.

"வாணிபஞ் செய்வார்க்கு வாணிபம் பேணிப்
பிறவுந் தமபோற் கொளின்." [திருக்குறள்.

## 14. விவசாயம்.

"உழுவார் உலகத்துக் காணி அஃதாற்
றெழுவாரை யெல்லாம் பொறுத்து' [திருக்குறள்.

என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து சான்றோர் குல மக்களிற் பலர் விவசாயத்தொழிலிலும் ஈடுபட்டனர். நவதானியங்களைப் பயிரிடுதலிலும், மா, தென்னை, வாழை, புளி, பனை முதலிய விருட்சங்களை வளர்த்து அவற்றிற் பயன் கொள்ளுந் தொழிலிலும் சான்றோர்குல மக்கள் தம் முயற்சியைக் கைக்கொண்டனர். இவ்விரண்டையுங் குறித்து மாவிடைப் பொருள், மரவிடைப்பொருள் என்று சொல்லுவார்கள்.

## 15. தாலவிருட்சம்.

தாலவிருட்சமாவது — பனைமரம். மனிதன் எழுத்

தாணி பிடித்து ஓலையில் எழுதும் உணர்ச்சி யடைந்த காலம் எப்பொழுது என்பது யாவராலும் சொல்ல வியலாது. அப்படிப்பட்ட எண்ணுதற்கரிய பழங்காலத்திலேயே மனிதன் பனைமரத்தில் ஏறி இறங்குந் தொழிலை நடத்தி வந்திருக்க வேண்டும். நமது தேசத்தில் பனைமரங்கள் எல்லா விடங்களிலும் காணப்படுகின்றன. எத்தனையோ ஆயிர வருடங்களுக்கு முன்னமே, பனையோலையேடுகளில் நூல்கள் எழுதப்பட்டு வந்திருக்கின்றன.

கன்னியாகுமரியின் தென்பால், கடலில் மூழ்கிவிட்டதாக நம்பப்படுகின்ற லெமூரியா கண்டம் என்னும் நிலப் பரப்பில் ஏழு நெடும்பனைநாடு, ஏழு குறும்பனைநாடு, ஏழ்—தெங்குநாடு என்பனவாக நாற்பத்தொன்பது நாடுகளில் பனைமரங்களும், தென்னை மரங்களும் செறிந்திருந்தனவாக அதிபூர்வநூல்கள் கூறுகின்றன. தென்னைமரமும், பனை மரத்தையொப்பச் சிறந்ததேயாகும். மனத்திற்கு எட்டாத காலந்தொட்டு ஆலயங்களில் கடவுள் வழிபாடு, தேங்காய், இளநீர் முதலியவற்றுடன் கலந்து வழங்கி வருகின்றது. இரும்பு இல்லாமல் பிரபஞ்சத்தொழில் எதுவும்இயலாது. அதுபோலவே தென்னையும், பனையும் இன்றியமையாத பொருள்களாய் உதவிவருகின்றன. தென்னை, பனைகளின் ஓலைகளினால் வீடுகள் வேயும் பழக்கம், பண்டைக் காலந் தொட்டு நம்நாட்டில் இருந்து வருகின்றது. பனையோலை யைப் பின்னிப் பண்டைக்காலத்துப் பெண்டிர் திருமங்கல நாண்முதலிய அணிகள் தரித்தனர். அதனாலேயே திருமங் கல நாணுக்குத் "**தாலி**" (தாலம்—பனை; பனையோலையினாற் செய்யப்பட்டது—தாலி.) என்னும் பெயர் ஏற்பட்டதென்று

அபிதான சிந்தாமணியில் கூறப்பட்டிருக்கிறது. பனையிலிருந்து எடுக்கப்படும் பொருள்களில் வெல்லமே சிறந்தது. அதுதான் பனங்கட்டியாகும். பனங்கட்டியைப் பனாட்டு என்று பழைய இலக்*ண நூல்களில் உதாரணங்காட்டியிருக்கின்றனர். பனையிலிருந்துதான் முதலில் வெல்லம் செய்யப்பட்டுப் பின்னர் அவ்வுணர்ச்சி வாயிலாகக் கரும்பிலிருந்தும் சர்க்கரைசெய்ய மனிதர்கள் கற்றுக்கொண்டனர் என்று பெரியோர்கள் சொல்லுகின்றார்கள். கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி (717—719) யிற் காஞ்சீபுரத்தையாண்ட இரண்டாவது சிவகந்தராஜா, நந்திவர்மபல்லவன் ஆகிய இவர்கள்காலத்திலேயே எழுதப்பட்ட ஒரு சாஸனத்தில் உப்புச்சாய்ச்சுதல், வெல்லங்காய்ச்சுதல் அரசர் உரிமைகளே என்று கண்டிருக்கின்றது. பனம்பாகு என்பதாசப் பல சாஸனங்களிலும் காணப்படுகின்றது. இதுநிற்க.

'பழையர், துவசர், படுவர், கள்விலைஞர் என நிகண்டு திவாகர நூல்களில் மதுவணிகரைப் பற்றிச் சொல்லியிருக்கின்றது. ஆனால் மதுவானது தென்னை, பனை சம்பந்தப்பட்டதல்ல. "கள்ளடுகுழிசி" என்று சிலப்பதிகாரத்தில் கூறியபடி அடுப்பில் பூ, பட்டை முதலியவைகளைக் கொண்டு காய்ச்சி எடுக்கப்படும் கள் இனத்திற்கு எண்பது பெயர்கள் வழங்குகின்றன. அவை தென்னை, பனை சம்பந்தப்பட்ட பெயர்களாகக் காணப்படவில்லை. பனையிலிருந்து வடிக்கப்படுவது, பனஞ்சாறு. தென்னையிலிருந்து வடிக்கப்படுவது தென்னஞ்சாறு. இவற்றின் உபயோகம் வெல்லங்காய்ச்சுதலே. இவ்விருட்ச பரிபாலனத் தொழில் செய்தல் ஒரு ஜாதிக்கே உரியதல்ல. விச்வகர்மாக்கள், குலாலர்கள் முத

லியவர்களின் தொழில்போன்று ஓரினத்திற்கே உரியதா யிருப்பின் கழாம்பர். வேழம்பர் என்ற பெயர்கள் மூங்கிற் கழியை நட்டுக்கூத்துப்புரியும் மக்கள் கழைக்கூத்தர் என்னும் பெயர் பெற்றமை போல தென்னையர், பனையர் என்றபெயர் பெற்றிருப்பர். அப்படிப்பெற்ற ஜாதியர் எவருமில்லை. ஆனதால் பனை, தென்னை தொழில், பாரத நாட்டு மக்கள் பலருக்குப்பொதுவேயாகும். இவ்வுண்மை தெரியாத சிலர் பனைத்தொழில் சான்றார்க்கே உரியதென்பதாக நூல்களைப் புரட்டி எழுதியிருக்கின்றனர். இவற்றிற்கு இரண்டு உதா ரணம் தருவாம்.

" காவிரிப்பூம் பட்டினத்தில் கள்ளிடுவார் சேரியில்
முல்லைவெண் சாரவில் முறுவை வளர்ந்தனள்" [கபிலரகவல்

என்று ஏட்டுப்பிரதிகளிலிருக்க இதனைப் புத்தகப் பிரதியாக்கினோர்,

" காவிரிப்பூம் பட்டினத்தில் கள்விலைஞர் சேரியில்
சான்றா ரகந்தனில் உறுவை வளர்ந்தனள் "

எனப்புரட்டியிருக்கின்றனர். இராமாயணம், சுந்தர காண்டம், ஊர்தேடுபடலம் — 112-ம் செய்யுள்:

" ஆலையின் மலையின் சாரல் முழையினில் அமுத வாரி
சோலையில் துவச ரில்லில் சோனகர் மனையில் தூய
வேலையில் கொளவொ ணுத வேற்கணூர் குமுதச் செவ்வாய்
வாலெயி றூறு தீந்தேன் மாந்தினர் மயங்கு வாரை."

என்ற பாடலில்

வரும் துவசரென்னும் பதத்திற்கு ஷ இராமாயண உரை யாசிரியர்கள் சான்றோர் என்பதாக அர்த்தம் கொண்டு ஷ

பாடலின் விரிவுரையில்சான்ரோரது கடைகளிலும், வீடுகளிலும் கிடைக்கும்படியான கள்ளை அரக்கர் அருந்தினார்கள் என்று எழுதியிருக்கின்றனர். ஓரினத்தைத் தாழ்வு படுத்துமாறு எண்ணி எழுதிய அவர்களுக்குச் சரியான மறுப்புக் கூற இந்நூல் இடங்கொடாததால் விடுத்துளோம். மணற்பாங்கான விடங்களில் வசிப்பவரும் நாடார்களில் ஏழையாயுள்ள ஒருசிலரும் பனஞ்சோலை வேலைபார்ப்பார்கள். மற்றவர்கள் அவ்வேலை வைத்துக் கொள்வதில்லை.

## 16. உடையாக்களின் வருகை.

மதுரைத்தல வரலாறு:— சகாப்தம் 1293-க்குச் சரியான கி. பி 1121-ல் உடையாக்கள், கன்னடம், மைசூர் வட்டகையிலிருந்து கம்பணவுடையார், அவர் மகன் எப்பணவுடையார், ஷை சப்பணவுடையார் மருமகன் பொற்காசுவுடையார் என்பவர்கள் சேனையுடன் மதுரைக்குவந்து மகம்மதியர்களை வெட்டிச் செயித்து இராஜ்ஜியம் கைக்கொண்டு சிவாலயம், விஷ்ணுவாலயங்களில் திருக்காப்புநீக்கி திருவாலவாயுடைய நயினார்கோவில் சந்நிதியில் திருக்காப்பு நீக்கி சுவாமிதரிசனம் செய்யப்போகையில் சுவாமிக்கு அன்றைக்கு வைத்தவிளக்கும், அன்றைச்குச் சாத்திய புட்பமாலையும், இரவில் சாத்திக் காலைச்சந்தியில் கழிக்கும்போது எப்படியிருக்குமோ அப்படியிருக்கக்கண்டு கன்னங்களில் அறைந்துகொண்டு சந்தோஷமாகி உபசாரம் செய்து திருவிளையாடற்கிராமங்களும் விட்டுக்கொடுத்து விரோதிகிருது வருஷம் முதல் சித்திரபானு வருஷம் வரையான முப்பத்து மூன்று வருஷம் கி. பி. 1404 ஆண்டுவரை ஆண்டுவந்தனர்.

இக்காலத்தில் பல்லாரி ஜில்லா துங்கபத்திரை நதிக்கரையிலுள்ள ஹம்பி என்னும் நகரைத் தலைமையாய்க் கொண்ட விஜயநகர ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, அஃது மகம்மதியரை மடக்கிப் போராடிக்கொண்டிருந்தது. இராயர் உத்திரவுப்படி இலக்கண நாயக்கர், மதன நாயக்கர் ஆகியோர் மதுரைக்கு வந்து சுபானுவருஷம் முதல் விபவவருஷம் வரையான 47 வருஷம் கி. பி. 1451 வரை ஆண்டனர்

இலக்கண நாயக்கர் பழையபாண்டிய வமிசம் அவ்விடம் இல்லாததினால் பாண்டியனுக்குக் காளையார் கோவில் தாசி அபிராமியிடம் பிறந்துள்ள சுந்தரத்தோள் மாவலி வாணதிராயனை, காளையார் சோமனார், அஞ்சாத பெருமாள், முத்தரசர், திருமலை வாணதிராயர் இவர்களைக்கொண்டு வந்து சுந்தரத்தோள் மாவலி வாணதிராயருக்குப் பட்டங்கட்டி வைத்தனர்.

இச்சம்பவங்களைப் பற்றிச் செந்தமிழில் **T. V.** சதாசிவ பண்டாரத்தார் எழுதியிருப்பதாவது:— "இந்நிகழ்ச்சிகளைக்கேள்வியுற்ற விஜயநகரவேந்தனாகிய குமாரகம்பண்ணன் பெரும்படையைத் திரட்டிக்கொண்டு தமிழ்நாட்டிற்கு வந்தான். இவனது படையெடுப்பால் மதுரைமா நகரில் நிலைபெற்றிருந்த மகமதியராட்சி ஒருவாறு நிலைகுலைந்தது. இப்படையெழுச்சி கி. பி. 1364-ம் ஆண்டிற்கு அணித்தாக நிகழ்ந்ததென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இப்படையெழுச்சியைக் குறிக்கும் கல்வெட்டுக்களும் தமிழ் நாட்டில் சிலவூர்களில் உள்ளன. மகமதியராட்சி தளர்வுற்றது கி. பி. 1377 வரையில்" என்பதே.

மேற்கண்ட விஷயங்களைக் கவனிக்கும்போது, முன் சொல்லிய அல்லாவுத்தீன் உடையூஜி, குத்புடீன், கியாதுடீன், நாசர்உடீன், அடில்ஷா, பஹ்ருடீன், முபரக்ஷா, அலாவுடீன் சிக்கந்தர்ஷா என்னும் எட்டு மகமதியராட்சிக்காலமாகிய ஐம்பதுவருடங்களில் தமிழ்நாடு சொல்லவொண்ணுத் துன்பங்களுக் குள்ளாயிற்று. அந்நிர்ப்பந்த மொழிந்தது விஜயநகர ராஜா அனுப்பிய வீரவேந்தர்களின் முயற்சியாலேயே என்னலாம். விஜயநகரராஜ்யயத்தின் காருண்யபார்வை பாண்டி நாட்டிலில்லாமற் போயிருந்தால், இப்போதுள்ள ஜமீன்களின் ஆட்சியைப்போல் மகம்மதியச் சிற்றரசுகளே ஆங்காங்கு வலுத்திருக்கலாம்.

## 17. மாவலி வாணுதிராயர்.

முன் மதுரைத்தலவரலாற்றிற் குறித்த "மாவலி வாணுதி ராயர்கள்," பாண்டியராட்சிக் காலங்களில் குறுநில மன்னர்களாக விளங்கினர். பின்பு அவர்கள் மகமதியரது ஆட்சியில் ஒடுங்கியிருந்து விஜயநகரத்து அரசரது அநுமதியினுலோ, தம் சுய வலியினுலோ, மதுரையின் வடகிழக்குப் பக்கத்திலுள்ள பிரதேசங்களுக்குத் தலைவராயினர். மாவலி வாணுதி ராயரைப்பற்றிய ஒரு சிலாசாஸனம்:—

"மகா மண்டலேசுவரன், பூபாலகோபாலன், புவனேக வீரன், சமரகோலாகலன், சேதுமூலாரக்ஷகதுரந்தரன், மூவராய கண்டன், பட்டர் மானங்காத்தான், வாணுதிராயன்" (கி. பி. 1528.)

செந்தமிழில் T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்கள்,

" ஸ்ரீவில்லிபுத்தூரில் கி. பி. 1455-ம் ஆண்டில் வரையப் பெற்றுள்ள ஒரு கல்வெட்டு, 'மகாபலி வாணதரையர் சீர்மை யான மதுரை மண்டலம்' என்று கூறுகின்றது; 'பாண்டிய ராட்சிக்காலங்களில் அன்னோர்க்குத்திறை செலுத்தி வந்த குறுநில மன்னர்களான மாவலி வாணதிராயர்கள் தம்மை மதுராபுரி மகாநாயகர் எனவும் பாண்டிய குலாந்தகர் என வும் கி. பி. 1483ல் சிறப்பித்துக் கூறிக் கொண்டமை புதுக் கோட்டை ராச்சியத்து நெக்கோணம் என்ற வூரிலுள்ள ஒரு கல்வெட்டாற் புலப்படுகின்றது. இவற்றால் பதினைந்தாம் நூற்றாண்டில் மதுரையிலிருந்து அரசு செலுத்தியவர்கள் வாணதிராயர்களென்பது நன்கு வெளியாகின்றது. பாண்டியர்கள் மிகத்தளர்ச்சி யெய்தியிருந்தநாட்களில் இவ்வாணதி ராயர்கள் அவர்களைப் போரில் வென்று அன்னோர் தலைநகரா கிய மதுரையைக் கைப்பற்றிக் கொண்டதோடு அதனைச் சூழ்ந்துள்ள நாட்டைத் தாமே சுயேச்சையாக ஆட்சிபுரிய வும் தொடங்கியிருத்தல் வேண்டும். இவர்கள் 'பாண்டிய குலாந்தகர்' எனத் தம்மைச்சிறப்பித்துக் கூறிக்கொள்வது ஒன்றே, பாண்டியரிடத்து இன்னோர் கொண்டிருந்த பகை மையை நன்கு விளக்காநிற்கும். அன்றியும், புதுக்கோட்டை நாட்டில் குடுமியான் மலையிலுள்ள இரண்டு கல்வெட்டுக்கள், பாண்டியர்கள் வாணதிராயர்களிடம் தோல்வியுற்று வேற்றி டஞ் சென்றனர் என்பதை வலியுறுத்துகின்றன மதுரை மாநகரினின்றும் அங்ஙனம் அவர்கள் நீங்கியபின்னர், தென் பாண்டிநாட்டை யடைந்து அங்கு அரசுசெலுத்தி வந்தனர் என்பது கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது.

" மால்விட்ட படைதுரந்து வடுகெறிந்த
மகதேசன் வடிவேல் வாங்க

கால்விட்ட கதிர்முடிமேல் இந்திரனைப்
புடைத்ததுமுன் கடல்போய் வற்ற
வேல்விட்ட தொருதிறலும் முகில்விட்ட
தனிவிலங்கும் வெற்பில் ஏற
சேல்விட்ட பெருவலியும் ஆங்கேவிட்டு
(?) நடந்தான் தென்னர் கோவே."

இழைத்த படியிதுவோ வெங்கணு வென்றென்
றழைத்த வழுகுர லேயால்—தழைத்தகுடை
மன்னவர்கோன் வாணன் வடிவேலால் தோற்றுடைந்த
தென்னவர் கோன் போன திசை.

[Inscripions of The Pudukkottai
State No. 653 & 678.

மேற்காட்டிய பாடல்கள், மாவலிவாணாதி ராயர்களிடம் பாண்டியர்கள் தோற்றழிந்தமையைக் கூறுகின்றன.

இதனால் நாம் தெரிந்து கொள்வதாவது:— மதுரையின் வடக்கும் கிழக்குமாகிய பிரதேசங்களிலுள்ள கொடுங்குன்றம், பிரான்மலைநாடு, பொன்னமராவதி, திருப்புத்தூர், நெட்டூர் முதலிய ஊர்களில் வாழ்ந்த பாண்டியர்களுக்கும், மாவலிவாணாதிராயர்களுக்கும் பெரும்போர் நடந்து, "பாண்டியகுலாந்தகன்" என்று சாஸனத்திற் கூறியதற்கிசைய மாவலிவாணாதிராயர்கள் பாண்டியர் குலத்தையெல்லாம் அறக் கருவறுத்ததனால் பாண்டியர்குல மக்களாகிய நாடார்கள் ஏனைய இடங்களில் தங்கியதுபோல மேற்குறித்த விடங்களில் தங்கப்பெறாமல் தென்னாட்டிற்குச் சென்றுவிட்டார்கள்.

## 18. ஐவர் ராஜாக்கள் கதை.

கொல்லம் 442: கி. பி. 1226-ல் பாண்டியர்கள் நாஞ்சி நாட்டு வள்ளியூரில் ஆட்சிபுரிந்தனர். இதற்குச் சுமார் அறுபது வருடங்களுக்குப்பின்னர், குலசேகரப் பெருமாள், மூத்தும் பெருமாள், முகிலம் பெருமாள், முடிசூடும் பெருமாள், பாண்டிப்பெருமாள் என்று சொல்லப்படும் ராஜாக்கள்ஐவர் அவ்வள்ளியூரில் ஆண்டனர். இக்காலத்தில் கன்னடிய தேசத்தரசனொருவன் தன்சேனைகளுடன் தென் பாண்டிநாட்டிற்கு வந்தான். அவன் திருநெல்வேலிக்கு மேற் கேயுள்ள சேரன்மாதேவியின் பக்கத்திற் கோட்டைகட்டி அரசுசெலுத்தினன். அக்கன்னடியமன்னவனுக்கு அழகிற் சிறந்த புத்திரி ஒருத்தியிருந்தாள். அம்மங்கை வள்ளியூரில் அரசுபுரியும் குலசேகரப் பெருமாள் பாண்டியனைப் பற்றிக் கேள்வியுற்று அவனையன்றி வேறெவரையும் மணப்பதில்லை யென வுறுதிகொண்டாள். தன்னருமைப்புத்திரியின் உண் மைக்கருத்தை யறிந்த அரசன் குலசேகரப்பெருமாளுக்குத் தூது அனுப்பித் தன் மகளை மணந்து கொள்ளும்படி வேண் டினன். அதற்குக் குலசேகரன், “தமிழ் நாட்டு மன்னர் தம்குல மகளிரையன்றிப் பிறநாட்டு மன்னர் மகளிரை மணத்தல் செய்யார்” எனத்துடுக்காகப் பதிற் சொல்லியனுப்பி விட்டனன். இதுகாரணமாகக் கன்னடிய னுக்கும், கன்னிநாடனுக்கும் மும்மரமான போர்நிகழ்ந்தது. தமிழரசர்ஐவரும் போரில் வீரசுவர்க்கம்புகுந்தனர். கன்ன டியன் மகளும் தன் கருத்து முற்றுப்பெறுமல் தீப்பாய்ந்து உயிர்நீத்தனள். இக்கதை வில்லடிப் பாட்டிலும் கர்ணபரம் பரையிலும் வழங்கி வருகின்றது.

இக்கதையிலிருந்து நாம் உணரத்தகுந்த உண்மைகள் சில உள. அவையாவன:— பாண்டியராட்சி, தென்பாண்டி நாட்டிற் செழிப்புற்றிருந்த காலத்திலோ, அல்லதுமகமதியர் படையெடுப்பால் நிலைதளர்ந்த காலத்திலோ ஓர் கன்னடிய மன்னவன் பாண்டியநாட்டிற்கு வந்து சேரன்மாதேவிக்குப் பக்கத்தில் அரசாண்டனன். திருநெல்வேலி ஜில்லா அம்பா சமுத்திரந் தாலூகாவில் ஓடுகின்ற கன்னடியன் கால்வாய் இவனால் வெட்டப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. "கன்னடியர்கால்வைக்க மன்னர்படைமடிந்தது" என்றபழமொழியும் தென்னாட்டில் வழங்கி வருகின்றது. குட்ட நாட்டிலுள்ள தண்டமாங்காடு என்னும்கிராமத்தில் ஐவர்—ராஜாக்களுக்கு ஆலயம் ஏற்பட்டு நாடார்களால் வணங்கி வரப்படுகின்றது. அங்ஙனம் வழிபடுவோர் விருதுநகர் முதலிய வூர்களிலும் வசிக்கின்றனர். களக்காட்டுமலைக்கும், சேரன்மாதேவிக்கும் இடையிலுள்ள மலைப்பறம்பு வடுகச்சிமலையென்று பெயர் பெற்றிருக்கின்றது. அம்மலைக்குஅருகில் குலசேகரப்பெருமாள் பாண்டியனும், கன்னடிய ராஜன் மகளும், தெய்வீகமாய் விட்டனர்என்ற கதையின் ஐதீகப்படி அங்கு ஒருஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது. முக்கூடல், களக்காடு முதலிய இடங்களிலுள்ள மேனாட்டுநாடார்களில் எட்டூர்க்காரர்கள் விசேஷ தினங்களில் அவ்வாலயத்திற் சென்று வழிபாடியற்றிவருகின்றனர்.

திருநெல்வேலி ஜில்லா முக்கூடலில்வசிக்கும் கோட்டை **S. S.** செல்லப்பா நாடார் வீட்டிலிருக்கிற, கி. பி. 1808ல் எழுதப்பெற்றதான அடிமை சாஸன வோலையொன்றிற் காணப்படும் " ......சந்திகாவலப் பெருமாள் நாடான்,...

இவன் தமையன் மகுடம் பெருமாள் நாடான்," என்றதைக் கவனிக்கையில், இவ்விரு நாடார்களின் முன்னோர் கோட்டை கட்டியாண்ட காரணமாகக் "கோட்டை நாடார்கள்" என இவர் மரபிலுள்ளவர்கள் இன்றளவும் அழைக்கப்படுகின்றனர். தென்காசிப்பாண்டியர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்களாகவும் இவர்கள் கருதப்படுகின்றனர். கன்னடிய வேந்தனின் கன்னிகையின் ஆலயவணக்கத்திற்கு இவர்களும் உரியோராவர்.

மேற்கூறிய கன்னடிய-பாண்டியர் யுத்தத்தில் உயிர்தப்பிய பாண்டியகுலத்தினர், நாஞ்சி நாட்டிலுள்ள 'ராஜாக்கள் மங்கலம்' என்ற கிராமத்தில் தங்கினர். அங்குதங்கிய அச்சான்றோர்குல மக்களில் ஒருவன் தேரியநாடன் என்பவன். அவனுக்குத் தேரிநாடன் என்றும்பெயர். அவனது ஆதரவினால், இக்கதை வில்லடிப் பாட்டாகப் பாடப்பெற்றது. அத்தேரிநாடன் மரபில் தோன்றிய சீனநாடன் என்பவன் சேரராஜனாற் சன்மானிக்கப் பெற்றுப் படிக்காணிப் பறம்பு என்னுமிடத்திற் சீரும் சிறப்புமாக வாழ்ந்திருந்தனன். அவனது புத்திரிகளாக இருமங்கையர் உண்டு. அம்மங்கையரது அழகு, குணம் முதலிய நலங்களைப் பற்றிக் கேள்வியுற்ற சேரமன்னவன் அவர்களைத் தனக்கு மணஞ்செய்துதரும்படி தூதனுப்பினன். சீனநாடன் சேரமன்னவனுக்குத் தம் புத்திரிகளை மணம் புரிவிக்க * விருப்பம் கொண்டிலன். வந்த தூதுவனிடம் மறுப்பான வார்த்தை

* தூதுவிட்ட அச்சேரமன்னவன், ஆதிசந்திரவமிசம் அல்லது ஆதிஅக்கினி வமிசத்தவரென்று சொல்லப்படும் பண்டைச் சேரர் குலத்தவனாக இராமல், பிற்காலத்தில் வர்மாக்கள் என்று பட்டம் பெற்று ஆண்டுவரும் வேறு மரபினராகிய சேரர்குடியிற் பிறந்தவனாதலாற் சீனநாடன் அவனுக்குப் பெண்கொடுக்க இசைந்திலன் போலும். கி. பி. 1444ல் சேரநாட்டையாண்ட வீர மார்த்தாண்ட ரவிவர்மன், அல்லது ரவிவர்ம ஸ்ரீமார்த்தாண்டன் ஆகிய அரசர்களில் ஒருவனாக அச்சேரமன்னவன் இருக்கலாம்.

கூறிவிட்டுத் தன் வாழ்க்கையும், ஆயுளும் அரச தயவைப் பொறுத்திருப்பதால், அச்சீனநாடன், அவ்விடத்தில் தங்கியிருக்க மனம் பொருந்தாமல் யாருமறியா வண்ணம் தான் வசித்து வந்த பறம்பில் ஆழமான ஓர் கசத்தில் அப்பெண்களைக்கொன்று தள்ளிவிட்டு, இரவிலேயே கீழ்த்திசை நோக்கிச் சென்று, தென்காயற் பக்கத்தில் குடியேறி வாழ்ந்து வந்தனன். அங்ஙனம் அவன் வசித்து வந்த இடத்திற்குச் சீனன்தோப்பு என்று இன்றும் பெயர் வழங்கி வருகின்றது. சீனன்தோப்பு என்னும் கிராமம், திருச்செந்தூருக்கும் ஆறுமுகனேரிக்கும் இடையிலிருக்கின்றது. இந்தச் சீனன்தோப்பு நாடார்களில் சோழநாட்டிற்குச் சென்ற குடும்பங்களில் ஒன்றே, பிறையாற்று வெள்ளைய நாடார் குடும்பமும் ஆகும். இவ்விவரம், மேற்சொல்லிய ஐவர் ராஜாக்கள் கதையிலும், சுமார் அறுபதுவருடங்கட்கு முன் பிறையாற்றுச் சிதம்பர நாடார் எழுதிய சான்றோர்குலதீபம் என்னும் நூலிலும் கண்டு எழுதப்பட்டது ஆகும்.

ஐவர் ராஜாக்களைச் சேர்ந்தவர்களாய்ப் போர்க்களத்தினின்று விடப்பெற்ற நான்கு வீரர்கள், திருவழுதிவள நாட்டிற்கு வந்து அந்நாட்டை அக்காலத்தில் ஆட்சிபுரிந்த சுந்தர பாண்டியனை யடைந்தனர். அப்பாண்டியனிடம் உயர்ந்த சாதிக்குதிரை யொன்றிருந்தது. அஃது ஒருவருக்கும் அடங்காத மூர்க்க குணமுடையது. அதன் மீது ஏறிச் செலுத்த ஒருவராலும் இயலவில்லை. அவ் வடங்காப் பரியை, இவ்வீரர்களிலொருவன் அடக்கிச் சவாரி செய்தமையால், அரசன், அக்குதிரையிலேறிச் சவாரி செய்த இடத்தை அந்நால்வருக்கே காணியாட்சியாகக் கொடுத்து

அவ்விடத்திற்கு மாவடிப்பண்ணை (மா—அடி—பண்ணை) என்றும், குதிரை தென்பாலுள்ள * தேறியில் சென்று திரும்பியதால், அத்தேறிக்குக் குதிரைமொழித்தேறி யென்றும் பெயர் கொடுத்து அதனையும் அவர்களுக்கே வழங்கினன். அரசன் அளித்த சாஸனத்தின்படி நிலச்சுவான்களாய் அவ்வீரர்களின் மரபிலுள்ளவர்கள் தென்திருப்பதி யென்னும் ஸ்தலமாகிய மாவீடுபண்ணைக் கிராமத்தில் வசித்து வருகின்றனர். முற்கூறிய கன்னடியர்மரபும் கயத்தாறு, பேரையூர் முதலிய்வூர்களிற் சிற்சில குடும்பங்களாக இருந்து வருகின்றது.

## 19. கொடுமளூர்க் கூற்றம்.

அரசரது ஆட்சிக்குள்ளடங்கிய பெரிய பூபாகங்களுக்குத் தேசம், மண்டலம் எனவும், அவற்றினுட் பிரிவுகளான இடங்களுக்குக் கூற்றம், கோட்டம், வளநாடெனவும், பெயரிட்டு ஆளப்பெற்றனவென முன் அத்தியாயத்திற் குறித்துள்ளோம். செந்தமிழ்த்தொகுதி 13-பகுதி 3 ல், பாண்டிய

---

* "தேறி-என்பது சிறியதொரு கடல்போலப் பரந்து கிடக்கும் மணல்மேடு. இதனைத் தென்பாண்டி நாட்டில், 'திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி'யின் தெற்கில் காணலாம். முன்னொரு காலத்தில் தென் தமிழ்நாட்டைக் கடல் கொண்டது. குமரியாறும் அதன் தெற்கிலுள்ள நாடுகள் எல்லாம் இன்றும் கடல் வாய்ப்பட்டுக் கிடக்கின்றன. கடல் நீர் வடிந்த நிலங்களுக்குள் இந்நிலம் மணல்தேறி, அதாவது தங்கி, நின்றதால் "தேறி" எனப்பெயர் பெற்றதுபோலும்."

ஸ்ரீமாந். ச. த. சற்குணர் B. A,
சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப்போசிரியர்.

நாட்டுக் கூற்றங்களை குறித்து எடுத்துக் காட்டப்பெற்றுள்ள பழைய பாடல்கள் பின்வருவன:—

"அன்னமிடும் உக்கிரப் பெருவழுதி அம்புவியை ஆளும் நாளில
அரிதான நற்குடி நாற்பத்தெண்ணாயிரம் ஆராய்ந்து தேடி வைத்த
நன்னிலந் தன்னில் ஏழு கூற்றம் பதினெட்டு நாடு [கூற்றம்
வெற்றித்தி வாழ்கின்ற திருமிழலைக்கூற்றம் மிகுந்த முத்தூர்க்-
பத்தியான அரும்பூர்க் கூற்றம் பாரமானத் திருக்கானைக் கூற்றம்
முத்தமிழ்சேர் தொகுவூர்க் கூற்றம் முதன்மையான கொடுமளூர்க்
எத்திசையான இளையான்குடிக் கூற்றம்..........." [கூற்றம்

இப்பாடல்களின் கருத்தாவது:— ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் தெய்வப் புலமைத் திருவள்ளுவரியற்றிய திருக்குறளை அரங்கேற்றிய அவைக்குத் தலைமை வகித்த உக்கிரப்பெருவழுதியாரது ஆட்சிக் காலத்தில், மதுரையின் வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்கு ஆகிய பிரதேசங்கள், திருமிழலைக்கூற்றம், முத்தூர்க்கூற்றம் அரும்பூர்க் கூற்றம், திருக்கானைக் கூற்றம், தொகுவூர்க்கூற்றம், இளையான்குடிக்கூற்றம், இக்கூற்றங்களுக் கெல்லாம் முதன்மையான கொடுமளூர்க் கூற்றம் என்பனவாகிய பல கூற்றங்களாகவும், அவற்றின் உட்பிரிவுகளான பதினெட்டு நாடுகளாகவும், பிரிக்கப்பட்டு அவற்றில் நாற்பத்தெண்ணாயிரம் குடிகள் குடியேறினர் என்பதாம்.

கொடுமளூர்க் கூற்றம் இத்தகைய கூற்றங்களுள் ஒன்றாகும். இக்கூற்றத்திற்குத் தலைநகராகிய கொடுமளூர் ஓர் காலத்திற் சிறந்த பட்டணமாய் விளங்கியதாகத் தெரிகின்

றது. இவ்வூரை யடுத்துள்ள * கிருதமாநதி, பறளையாறு என்ற நதிகளாற் பாயப்பெற்று இவ்வூர்வளம்பட்டிருக்கலாம். கூற்றங்களில் தனித்தனியே சிற்றரசுப் பாண்டியர்கள் செங்கோல் செலுத்தி வந்தார்கள். கொடுமளூரில் "வேளுடன்" என்னும் ஒரு சிற்றரசுப் பாண்டியன் ஆட்சி புரிந்தனன். அக்காலத்தில் சோழன், மதுரைப்பாண்டியனைச் செயித்து இராச்சியத்தைக் கவர்ந்து கொண்டமையால், அவன் நிலை குலைந்து கொடுமளூர் வேளுடனிடம் வந்தடைந்தனன். வேளுடன், பாண்டியனை உபசரித்து விருந்து செய்தான். பாண்டியன், தன்னை யாதரித்துதவிய வேளுடனைக் குறித்துப் பாராட்டி,

" சென்றுமக மேருவின்மேல் சேலேற்றியேபுடைத்த
அன்றிருந்தேம் சங்கத் தவரோடும்—நன்று
விருந்தோம்புந் தென்கொடுமூர் வேளுடன் கூட
இருந்தோம் படிவேண்டி யின்று " எனப்பாடினன்.

இவ்வேளுடனைக் குறித்துக் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர், விக்கிரம சோழனுலாவில்:—

" * * * * *
கலக்கிய வஞ்சக் கலியதனைப் பாரில்
விலக்கிய வேளுடர் வேந்தும்— * * "

எனப்புகழ்ந்துள்ளார்

---

* கிருதமாநதி:— கிருதம்—நெய், 'நெய் போன்று இடையறாத நீரொழுக்கை யுடையது' என்பது இப்பெயர்ப் பொருளாம். பலராமர், தீர்த்தயாத்திரையில் சேதுஸ்நான முடித்துப் பின் இந்நதியிலும் நீராடியதாகப் பாகவத புராணத்திற் கூறப்பட்டிருக்கிறது. இஃது, வைகையாகிய வேகவதியாகவுமிருக்கலாம். மதுரைக் கருகாமையில் தென்புறமாய் ஓடுகிறகால்வாயே கிருதமாநதியென்று சொல்கிறார்கள்.

இவற்றால் வேணாடனது காலம் விக்கிரமசோழனது காலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டென அறியலாகும். இராமநாதபுரம் ஜில்லாவில் பரமக்குடிக்கு அண்மையிலுள்ள "சாலைக்கிராமம்" என்னும் ஊரை உண்டு பண்ணியவனும் இவ்வேணாடனே! இவ்வுண்மை பின்வரும் செய்யுளால் தெரியலாம்:—

" மாறுகொண்ட தெவ்வரை வடவரையி லேற்றி
வல்லாரைத் திறைகொணர்ந்த வரகுணவீச் சுரனுலகு
ஆறிரண்டு பன்னிரண்டின் அடியளந்த கோலால்
அகமகிழ்ந்தே தென்னன்கு கிழமே லெட்டுக்
கூறுகொண்ட மடைகுழி முப்பத்தி ரண்டு
குறுந்தெருவும் பெருந்தெருவுங் குறித்துக் காட்டிச்
சேறுகொண்ட வயற்சாலைக் கிராமங் கண்டான்
தென்கொடுமூர் வேணாடர் செல்வன் றானே."

இவ்வேணாடனது மரபில் அபிராமபாண்டியன்என்பவனொரு வன் தோன்றி, அவனால் ஏற்படுத்தப்பட்டதே, "அபிராமம்" என்னும் ஊராயிருக்கலாம். வேணாடனது பரம்பரையில் குமரபாண்டியன் என்பவன் ஒருவன் தோன்றிக் கொடுமளூ ரில் சுப்பிரமணியசுவாமிக்குத் திருவிக்கிரகம் பிரதிஷ்டை செய்வித்து அதனை வழிபட்டனன். அதனால், அப்பெரு மானுக்குக் " குமரய்யன் " என்ற திருநாமம் வழங்கலா யிற்று. இக்கோயிலில் ஸ்தலவிருக்ஷமாய் விளங்கும் உடை மரம் மிக்க அற்புதம் வாய்ந்தது. அவ்விருக்ஷம் விஸ்தார மாய்க் கொடிபோற் படர்ந்து, உயர்ந்து பக்தகோடிகளுக்குக் குளிர்நிழலைத்தந்து பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

கொடுமேளூர்க் கூற்றம் போலவே, பிறகூற்றங்களிலும், நாடுகளிலும் அரசுபுரிந்த பாண்டியர்குழாங்கள் 65-ம் பக்கத்தில் முற்கூறியவாறு வாணாதிராயர்களால் ஒடுக்கப்பெற்று இடம் பெயர்ந்து சென்று விட்டனர்.

## 20. கள்ளர், மறவர்.

சோழரும் பாண்டியரும் சிறப்புடன் செங்கோல் செலுத்தியகாலத்திற் சேனாவீரர்களாகவும், கிராமக் காவற்றலைவர்களாகவும் வசித்துவந்த மறவர், கள்ளர், பிற்காலத்தில் ஆதிக்கம் பெறத் தொடங்கினர். கள்ளர் சரித்திரம் 51-ம் பக்கத்தில், " கி. பி. 1539-ல் உக்கிரவீர பாண்டியன் என்பான், தொண்டைமண்டலத்திற்குச் சென்று அங்கு ஆட்சி புரிந்திருந்த தொண்டைமண்டலப் பல்லவராஜனது அரண்மனையில் ஏழுநாட்கள்காத்திருந்து அவனைத்தனக்குத் துணையாகஅழைத்துவந்து சேதுபதி நந்திமறவனைக்கொன்றொழித்தான். தனக்கு உதவிசெய்த பல்லவராஜனுக்குப் பாண்டியன், பொன்னமராவதிக்குப் பக்கத்திலுள்ள நிலங்கள் பலவற்றைக் கொடுத்தான்." எனவும், இன்னும், ஷை சரித்திரம் 47-ம் பக்கத்தில், "நெட்டிராஜா பாண்டியன் என்பவன் இருநூறு மறவர் குடிகளைத் துணைக்கொண்டு தன்பகைவனையடக்கி அவர்கட்கு நிலங்கள் அளித்தான்" எனவும் வருதல் காண்க.

கி. பி. 1606-ல் இராமநாதபுரராஜ்யம் ஸ்திரம்பெற்றது. அதற்கு முற்பட்ட காலங்களில் அதிவீர ரகுநாதன், வரதுங்கரகுநாதன், குலோத்துங்கன், சமரகோலாகலரகுநாதன் முதலிய மறவர் குலத்தலைவர்கள், சோழபாண்டியர்களுக்கு

உதவி செய்து நாடுநகரங்களும், விளைபுலங்களும், பரிசில்களும் பெற்றுப் பிரபலம் வாய்ந்திருந்ததாகச் சேதுபதிகள் சரித்திரம் உரைக்கின்றது.

இதுகாறும் நாம்கூறியவற்றால், மதுரைக்குக்கீழ்த்திசையிலுள்ள பிரதேசங்களில் பாண்டியர் பலஹீனமடைய, மற்றையோரது ஆதிக்கம் வலுத்தமை உறுதியாகின்றது.

## 21. பாண்டியர் குடும்பத்தின்—சிதறுண்ட பிரிவுகள்.

டில்லிச்சக்கரவர்த்தியாகிய அலாவுத்தீன் கில்ஜீயினது சேனாதிபதியான மாலிக்காபூரின்படையெடுப்பால், பாண்டிய ராஜ்யம் சிதறுண்டது. அப்படையெடுப்புக்கு முன்னரே, ஏறக்குறைய நாற்பது வருட காலத்திற்கிடையில், மாறவர்மன் குலசேகர பாண்டியனுக்குப் பின்னர், நெல்லூர் முதற் கன்னியாகுமரிவரையிற் பாண்டியராஜ பரம்பரையைச் சேர்ந்த அரசர் பலர் ஆங்காங்கு, வெவ்வேறிடங்களிற் சிறு சிறு ராஜ்யங்களை ஸ்தாபித்துச் செங்கோல் செலுத்தினர் எனப் பாண்டியராஜ வம்ச சரித்திரத்தில் ஸ்ரீமாந் R. அரிகர ஐயரவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மகமதியரது ஆட்சியாற் சிதறுண்ட பாண்டியமன்னர் பரம்பரையைச்சேர்ந்த ஐந்துகுடும்பத்தினர், தனித்தனியே மதுரை, தென்கன்னடம், கரிவலம்வந்தநல்லூர், தென்காசி, திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தத்தம் தலைநகராகக் கொண்டு சுற்றுப்பிரதேசங்களைத் தம்வசப்படுத்திச் சிற்றரசுகளை நிலைநாட்டினர். கயத்தாறு, அழகியபாண்டியபுரம் (ஒட்டப்பிடாரம்), ராஜாங்கோவில் முதலிய சிற்றூர்களிலும்

வேறு வேறு குடும்பங்களாய் வாழ்ந்த பாண்டியர்கள் அரசு புரிந்தனர். கயத்தாற்றுப் பாண்டியன் — வெட்டுமாறன்; அழகியபாண்டியபுரப் பாண்டியன் — அழகிய ஜெக வீர பாண்டியன்.

## 22. எட்டையாபுரம்—பாஞ்சாலங்குறிச்சிப் பாளையப்பட்டுக்கள்.

கன்னடம், தெலுங்குநாடுகளினின்று மகமதியரின் இன்னல்களைப் பொறுக்கவியலாமல் முற்கூறிய கொல்லம்— 500 (கி. பி. 1325)ஐ ஒட்டியகாலத்தில் தமிழ்நாட்டிற் குடியேறி, மாடு கன்றுகளைப் பரிபாலனஞ் செய்து கொண்டிருந்த நாயக்கர்களின் சந்ததியாரே எட்டையாபுரம், பாஞ்சாலங் குறிச்சிப் பாளையப்பட்டுக்களின் தலைவராவர். கயத்தாற்று வெட்டுமாறபாண்டியனும், அழகிய பாண்டியபுரத்து ஜெக-வீர பாண்டியனுமாகிய இரு பாண்டியர்களின் தயவைப் பெற்று, அவர்கள் தமக்கெனக் கோட்டைகளை நிர்மாணித்துக் கொண்டனர். அழகிய ஜெகவீர பாண்டியனின் மந்திரியாகிய பாஞ்சால பாண்டியனுடைய இடமே—பாஞ்சாலங் கோட்டை எனப்பெயர்பெற்றது. இதுபோன்றே, திருமங்-கலத்தின் அருகிலுள்ள "கவுண்டன் கோட்டை" என்னும் ஊர்கள், கன்னட தேயத்திலிருந்து வந்த 'அனுப்பர்" என்-னப்பட்ட கவுண்டர்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கலாம். பாண்டியராட்சி அழிவுற்ற பின்னர், பாஞ்சாலங்குறிச்சி, எட்டையாபுரம், கவுண்டன் கோட்டை, இன்னும் இவை போன்ற பிரதேசங்கள், ஆங்காங்குப் பிரபலம் பெற்றிருந்த அவர்களுக்கே சுவாதீனமாயின. பாஞ்சாலங்கோட்டை, எட்டையாபுரங்கோட்டை ஆகிய இவைகளைத் தன்னகத்துக்

சொண்ட நாட்டிற்கு, "இளசைநாடு" என்று பெயர். திருவழுதிவளநாடு, கீழ்வேம்புநாடு, மேல்வேம்புநாடு என்று வழங்கிய இடங்கட்கு வடபக்கத்திற் பாண்டிய குடும்பம் ஒன்று இருந்து, அக்குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரரில் மூத்தவன் ஆண்டது, கயத்தாறு—கங்சரக்கோட்டையாகிய மேல்பக்கமும், இளையவன் ஆண்டது ஓட்டப்பிடாரம், ஈரால், எட்டையாபுரம், உப்பத்தூர் முதலாய கீழ்பக்கமும் ஆகும். இவற்றுள் இளையவன் ஆண்ட நாடு — இளசுநாடு. இளசைநாடு எனப் பெயர் பெற்றதாகத் தெரிகின்றது இளவரசன்-ஏந்தல் என்னப்பட்ட ஒரு பாளையப்பட்டுக் கிராமமு மிருப்பது குறிப்பிடத்தக்கது. இப் பாளையப்பட்டுக்கள் ஸ்திரம்பெற்ற காலம், கி- பி. பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியாகலாம். இளசைநாட்டில், ஈரால் ஈராட்சி, சென்மப்புதூர், சோழபுரம், புங்கவர்நத்தம், எப்போதுவென்றான், செய்த்தலை முதலியகிராமங்களில் பாண்டியகுல நாடார்கள் பரவியிருக்கின்றனர். திருக்குறள் என்னும் தெய்வீக நூலிற்குச் சிறந்தவுரையையியற்றிய பரிமேலழகர், தென்காசியைச்சேர்ந்த பனையடிப்பட்டி யென்னுங்கிராமத்தி லுதித்தவராவர். இவரது வமிசத்திற் பிறந்த "பரிமேலழகக் குருக்கள்" என்பார் கி. பி. 1660-ல் ஈராலில் வந்து குடியேறினர். பொதியெருது வர்த்தகத்திற்சிறந்து, "பேட்டை நாடார்கள்" என்று பெயர் வழங்கப் பெற்ற நாடார்களில் ஒருவனாகிய மயிலேறிநாடன் அக்குருக்களுக்கு இல்லம் அமைத்துக் கொடுத்து ஒருஏக்கர் விளைநிலமும் விட்டுக்கொடுத்துத்தன்சமூகத்தில்ராட்டுக்குக்காற்பணம் வரிவசூலும் செய்து கொடுத்து, அவரது குடும்பத்தையும் ஆதரித்தனன். இவ்விவரம் ஏட்டுப்பிரதிகளிற்கண்டெழுதியதாகும்.

இளசை நாட்டிற்குக் கீழ்புறமுள்ளது " ஆப்பநாடு." ஒருகாலத்தில் பாண்டிய னொருவன் வேட்டையாடச்சென்ற விடத்தில் சூரியன் அஸ்தமித்துவிட்டது. சிவலிங்கபூஜை செய்யும் வழக்கமுடைய பாண்டியன், குதிரைகட்டும் முளை-யைச் சிவலிங்கமாகப் பாவித்துப் பூஜைசெய்து அருட்பேறு பெற்றனன் எனத் திருவாப்பனூர்த் தலபுராணங் கூறு-கின்றது. அங்ஙனம் பூஜைசெய்த விடமே திருவாப்பனூ ரென்றும், அதைச்சூழ்ந்த பிரதேசங்கட்கு 'ஆப்பநாடு' என்றும் பெயர் வழங்கலாயிற்று. இவ்வாப்பநாடு, தடாதகை திருக்கைநாடு முதலியன கொடுமளூர்க் கூற்றத்தில், அடங்கியனவாம். இந்நாடுகளில், " கொண்டையங்கோட்-டையார் " என்னும் வீரமறவர் மிகுதியாக வாழ்ந்துவருகின்-றனர். அதனால் சிற்றரசுப் பாண்டியருடைய ஆட்சிகள் முன்னமே எடுபட்டுப் போகவே நாடார்கள் மேனாடு-களில் வசிப்பதுபோல் பெரும்பான்மையாய் வசிப்பதற்கின்றிச் சிறுபான்மையாய்ச் சிலவூர்களில் வசித்துவருகிறார்கள்.

## 23. இரண்டாம் அத்தியாயத்தின் முடிவுரை.

செந்தமிழ்நாட்டைப்புரந்த முடிமன்னர் வரலாறுகளைப் பற்றிச் சரித்திர ஆசிரியர்கள் பல அபிப்பிராயங்கள் கூறுகின்றனர். ஆரியாவர்த்தத்திலிருந்து திராவிட தேசத்திற்குவந்த சூரியசந்திரகுல வேந்தர்களின் மரபினரே சேரர், சோழர், பாண்டியராவரென்றும், பண்டைத் தமிழ்நாட்டுப்பழங்குடி மரபினரே முடியுடைய மூவேந்தரு மாவரென்றும், இரு வகை அபிப்பிராயங்கள் ஆராய்ச்சிக்குரியவை. 'பண்டையர்' என்னும் சொல், "பாண்டியர்" என மருவிற்று என்று ஒரு

நூலாசிரியர் சொல்கிறார். பழமையான பெயர் எவ்வாறாயினும் ஆகுக. எத்தேயத்தினரும் புகழும் முச்சங்க பரிபாலனமும், முறையரசுரிமையும், வாழையடி வாழையாய் வளர்ந்தோங்கிய குலாபிவிருத்தியும் உடைய பாண்டியர் ஆட்சி செய்த நாடு, பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை பிற பாஷைமன்னரது ஆட்சிக்குட்பட்டு இருந்ததில்லை. பன்னிரண்டாம்நூற்றாண்டில் பாண்டியமன்னர் ஒருவருக்கொருவர் பகைத்துப்போராடிய போராட்டத்தால், இலங்கைத்தீவின் தண்டநாதன், மாலிகாபூர் முதலிய அன்னியர் பாண்டிய நாட்டிற் புகுவதற்கு ஏதுவுண்டாயிற்று.

முன் 43-ம்பக்கத்திற் கூறியவாறு "நாடாள்வார்" என்னும் பட்டப்பெயர், சோழபாண்டிய நாட்டில் சிற்றரசு செலுத்திய சான்றோர்குல வேந்தர்க்குப் பாரம்பரியமாய் வழங்கி வந்திருக்கின்றது.

கம்பநாடர் பாடிய ஏரெழுபதில்,

" முடியுடைய மன்னவரின் மூவுலகும் படைத்துடைய
கொடியுடைய மன்னவரில் குலவுமுதற் பெயருடையான்
இடியுடைய வொலிகெழுநீ ரெழுபத்தொன் பதுநாட்டுக்
குடியுடையான் சென்னிபிறர் எண்ணுடையான் கூறீரோ!

என்று சொல்லிய சோழதேயத்து எழுபத்தொன்பது நாடுகளிலுஞ்சிற்றரசுசெலுத்தியவர் சான்றோர்களேயாவர்! கி. பி. 11, 12-ம் நூற்றாண்டுகளில்வசித்த ஸ்ரீராமாநுஜரது காலத்தவனும், ஸ்ரீவைணவனும், பக்த சிரோமணியுமாகப் பிரக்கியாதி பெற்றவன் "அகளங்க நாடாள்வான்". இவ் அகளங்க நாடாள்வானைப் பற்றிய சரமகவியொன்று பின்வருமாறு:—

"சீராரு மாங்கத்துச் சிலபகல்கண் மன்னஅந்நாட்
பாராரு மன்னவன் பாகவத ரிடத்திலென்றும்
ஆராத காதலனும் அகளங்க நாடாள்வான்
நேராரும் வைகுந்த நாடாள வேகினன்."

இங்ஙனம் நாடாள்வார் எனும் பட்டம் வாய்ந்த சான்றோர்களின் சந்ததியார், நாடன், நாடான், நாடர், நாடார் என வழங்கப் பெறுகின்றனர். இவர்களுக்குரிய மாதரின் பட்டப்பெயர்கள் நாடாத்தி, நாடாய்ச்சி என்பனவாய் வழங்கப்படுகின்றன.

மாலிகாபூரின் படையெடுப்பால் பாண்டியநாட்டிற்கெய்திய கதியைக்குறித்து, மதுரைத்தல வரலாற்றில் சொல்லப்பட்டிருப்பதை ஆதாரமாகக்கொண்டே இவ்வத்தியாயத்தில் எழுதப்பட்டுள்ளது. கொற்கையைப்பற்றிய வரலாறும் விளக்கமாக ஆராயப்பெற்றுளது. அது ஒரு காலத்திற் கடல்துறைமுகமாயிருந்து, கிரீஸ்தேசம், ரூமேனியா நாடு, அரேபியா முதலியவற்றுடன் கடல்வாணிபமும் நடைபெற்றிருக்கிறது. சுமார் ஆயிர வருடங்கட்கு முன்பு அரேபியா நாட்டுக்காயிறான் பட்டணத்திலுள்ளவர்கள் தம்நாட்டிலேற்பட்ட பஞ்சத்தின் காரணத்தால் கடல்மார்க்கமாய்க் கப்பலில் பாண்டிய நாட்டிற்குவந்து பாண்டியரது அனுமதி பெற்றுத் தங்கிய இடமே இன்றளவும் காயற்பட்டணம் என வழங்குகின்றது. கப்பல் தலைவனாக வந்தவன் "மகம்மது கல்ஜிக்" என்பவன். அம்மகமதியர், குதிரையோட்டுவதால் "ராவுத்தர்" எனவும், மரக்கலம் நடத்துவதால் மரக்கலராயர்—"மரைக்காயர்" எனவும் பெயர்பெற்றனர். இவ்விவரம் மேற்கூறிய கப்பல்தலைவன் பாண்டியநாட்டு அரசனுக்கு எழுதிக்

கொடுத்ததாகச் சொல்லப்படும் ஓர் தாமிர சாஸனத்தில் தெளிவாகக் காட்டப்பட்டுளது. மகமதியர் இங்ஙனம் பாண்டிய நாட்டிற் குடியேறியதை முன்னிட்டே “செய்யது இபுராகிம்’. நாடுபிடிக்கவும், மதத்தைப் பரவச்செய்யவும் ஆகிய நோக்கங்களுடன் வந்தனர். மாலிகாபூரின் படையெடுப்பும் இவ்விரு நோக்கங்களினாலேயே நிகழ்ந்தது.

வர்த்தகத் தொழில் புரிவோர், வணிகர். அரசருக்கு அடுத்த அந்தஸ்து உடையோர் வணிகரே! ஆதலின் அவர்கள் “இளங்கோ” என்று பெயர் பெற்றனர். சான்றோர், அரசகுலத்தினராதலின் தம் அரசுரிமை இழந்ததும் வாணிபத்துறையிலிறங்கினர். வியாபாரத்திற்குரிய பொருள்களைக் கொண்டு செல்வதற்கு, வடஇந்தியாவிலும், அரேபியா, பாரசீகம் முதலிய பிறநாடுகளிலும் குதிரை, ஒட்டகை, கோவேறுகழுதையாகிய இவற்றை உபயோகித்தனர். தென்னாட்டில் வியாபாரத்திற்குப் பொதியெருதுகளை உபயோகித்தனர். இவ்வழக்கத்தைப் பின்பற்றியே நாடார்களும் பொதியெருதுவர்த்தகத் துறையிலிறங்கினரென விளக்கிக்காட்டப்பட்டது. மணற்பிரதேசத்தில் இருப்பது பனைமரமே. வறட்சியான காலத்திலும் தன்னிடமுள்ள சாறு, பாகு, நுங்கு, பழம் முதலியவற்றைத் தந்து மக்களைக் காப்பாற்றுவது பனைமரமே யென்பது உலகப் பிரசித்தம். கற்பகச் சோலையாகிய பனஞ் சோலைகளில் வசிக்கும் சான்றோர்கள் எப்பகைவருக்கும் அஞ்சுவதில்லை. சுலபமாய்த் தம் இடம் விட்டுப் பெயர்வதும் இல்லை.

விஜயநகரத்து ராஜாக்களின் உத்திரவுப்படி பாண்டிய நாட்டிற்கு வந்த உடையாக்களின் திறமையினால், பாண்டிய

நாட்டில் மகம்மதியராட்சியால் ஏற்பட்ட வெப்பமொழிந்து நன்னிலையடைந்ததும் இங்கு விளக்கப்பட்டுள்ளது. கி. பி. 1375-க்கு மேல் தோன்றிய மாவலி வாணாதிராயர்களின் ஆட்சி, பாண்டியநாட்டில் கிழக்கே — சேது, மேற்கே — ஸ்ரீ வில்லிபுத்தூர், வடக்கே — பிரான்மலை ஆகிய இவற்றிற்குட்பட்ட பிரதேசங்களில் பிரபலம் பெற்று விளங்கியதாகத் தெரிகிறது. "வடுகெறிந்த மகதேயன்" என்று முற்குறிப்பிட்ட பாடலின் கருத்தை நோக்கும் பொழுது, இராயர்களின் உத்திரவுப்படிவந்து ஆங்காங்கு ராச்சியங்களை ஆளத் துவக்கிய நாயக்க மன்னர்களையும் மாவலி வாணர் ஜயித்ததாகப் புலப்படுகிறது. (மகதேயன்—விஸ்தீரணமான தேசத்திற்கு அதிபதி என்று பொருள்படும்.) மேற்சொல்லிய பிரதேசங்களிலுள்ள பாண்டியர்கள், வாணர்களின் ஆட்சியை, எதிர்த்தபடியால், அவ்வாணர்கள் ஆட்சியைக் கைவிட்டுச் செல்லுமாறு பாண்டியரைத் துரத்தித் துன்புறுத்தினார்கள். வானரவீர மதுரை (மானாமதுரை)யில் அளத்தூர் நாடாள்வார்கள் என்னும் பெயர் கொண்ட இருவர் சிறப்பாக வசித்திருந்தனரென மஹாவம்சோ கூறுகிறது. அவ்விரு நாடாள்வார், முன் 41-ம் பக்கத்திற் சொல்லப்பட்டிருக்கும் நாடாள்வார் வரிசையைச் சேர்ந்தவர்களேயாவர். இந்நாடாள்வார் சந்ததியைச் சேர்ந்தவர்களாகவோ, அல்லது வேறு பாண்டிய மரபைச் சேர்ந்தவர்களாகவோ வுள்ள ஓர் அரசகுடும்பத்தை, வாணாதிராயர்களின் இம்சையினின்று, வானரவீர மதுரைப் பக்கத்திலுள்ள மிளகனூரில் வாழ்ந்த செம்பிநாட்டு மறவர் குலத்தலைவர் காப்பாற்றியதாகவும் அறிகிறோம்.

தெலுங்கர் கன்னடியர் முதலியோர் பாண்டியநாடு வந்த

பொழுது வந்த கன்னடிய வேந்தனொருவனது ஆட்சி திருநெல்வேலிச் சீமைக்கு மேல்பக்கம் ஊன்றியதாகத் தெரிகிறது. கன்னடியன் கால், கன்னடியன் சத்திரம் என்பன இருப்பதே அதற்குச் சான்றாகும். நாஞ்சி நாட்டினுள்ள வள்ளியூர்க் கோட்டையை ஆண்ட ஐவர்ராஜாக்களென்னும் பாண்டியர்களும் அக்கன்னடிய வேந்தனும் போராடியதும் அவ்ஐவர் ராஜாக்களின் சந்ததியார் பரவியிருந்த இடங்களும் மற்ற விபரங்களும் நன்கு ஆராய்ந்து சொல்லப்பட்டிருக்கின்றன.

''வெள்ளாறதுவடக்கு' என்று சொல்லியிருக்கிறபடி வெள்ளாற்றுப் பக்கமான காநாடு வடக்காகவும், சேது—தெற்காகவும் மதுரைக்குச் சமீபமான இடங்களே மேற்காகவும், கடலே—கிழக்காகவுங் கொண்ட பிரதேசத்தை ஆதியில் உக்கிரப்பெருவழுதியார் பதினெட்டுநாடுகளாகவும், ஏழு கூற்றங்களாகவும் பாகுபடுத்தியவை நன்கு ஆராயப்பெற்றன. மாணிக்கவாசக சுவாமிகள் குதிரை வாங்கச் சென்றதும், அவருக்காக ஆலவாய்ப் பெருமான் நரிகளைப் பரிகளாகத் திரட்டியதும் இப்பிரதேசமேயாகும். சப்தமாதர்கள் சாப விமோசனம் பெற்று உபதேசமடைந்த திருவிளையாடல் நடந்த இடமாகக் கருதப்படும் "பட்டமங்கலம்" என்னும் ஊரும் இப்பிரதேசத்திலே தான்.

திருச்சுழியல், திருக்கானப்பேர், திருவாடானை, திருப்பெருந்துறை, உத்தரகோசமங்கை, திருப்புல்லணை, இராமேச்சுரம் என்ற சிறந்த க்ஷேத்திரங்கள் இப்பிரதேசத்திலேயே உள்ளனவாம். இவற்றுட் கொடுமளூர்க் கூற்றமே நம்

ஆராய்ச்சிக் கெடுத்துக் கொள்ளப்பட்டது. கிருதமாநதி, புண்ணியநதிகளில் ஒன்றென்பதாய்ப் பாகவத புராணத்தி லிருந்து எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. கொடுமளூரை யாண்ட வேணுடன் பூர்வீக சிற்றரசுப்பாண்டியனென்பதை நன்குணரலாம். கொடுமளூரில் குமாரக்கடவுளை ஸ்தாபனம் செய்தவன், அவ்வேணுடனது மரபினனான குமுணபாண்டியன் அல்லது குமரபாண்டியனாகுமென யூகித்து எழுதப் பட்டது.

மேற்காட்டிய பிரதேசத்தில் வாழும் கள்ளர் மறவரது சவிஸ்தாரங்களைக் கள்ளர் சரித்திரம், செந்தமிழ்த்தொகுதி ஆகியவற்றிற் காணலாம். இப்பிரதேசங்களிலுள்ள நாட்டுப் பெயர்கள் பாண்டியர்காலத்தனவாயிருப்பினும், கள்ளர், மறவர் பிரபலம்பெற்ற பிற்காலங்களிற் சில நாட்டுப்பெயர்கள் மாறினவாகவுந் தெரிகின்றது. மதுரையின் வடமேற்கு, மேற்கு, தென்மேற்கு ஆகிய பிரதேசம், வடக்கு வராக மலைச்சாரலிலிருந்து தெற்கே தென்காசிவரை சிற்றரசுகளாக ஆண்டுவந்த பாண்டியர்கள், மாவலி வாணாதிராயர்களால் ஒடுக்கப்படாமல் விஜயநகர வேந்தர்களுக்கு நேருக்குநேராய்க் கப்பங்கட்டி வந்ததாகத் தெரிகின்றது.

எட்டையாபுரம், பாஞ்சாலங்குறிச்சி ஆகிய பாளையப் பட்டுக்கள் ஏற்பட்டவிதமும், ஆங்காங்குப் பாண்டியராஜாக்களின் தயவு பெற்று, சிற்றரசுகளாகவும், அவை ஜமீன்களாகவுமான விதமும் ஆராயப்பட்டுள்ளன.

மகமதியர் படையெடுப்பால் பாண்டியநாட்டிற்கு நேர்ந்த கதியும் மற்றுமுள்ள தன்மைகளும் இதுகாறும் சொல்லப் பட்டன. இனிப் பாண்டியநாடு, நாயக்கமன்னரது ஆட்சிக் குட்பட்ட விதமும், அதனால் பாண்டியகுல மரபினராகிய சான்றார்குல மக்கள் அடைந்த துன்பங்களும் மூன்றாம் அத்தியாயத்தில் விவரிக்கப்படும்.

# மூன்றும் அத்தியாயம்.

## நாயக்க மன்னர் ஆட்சியின் சூழ்ச்சியும், பாண்டிய மன்னர் ஆட்சியின் வீழ்ச்சியும்,

### 1. சந்திரசேகர பாண்டியன்.

சந்திரசேகர பாண்டியன் கி. பி. பதினாறும் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மதுரையில் அரசாட்சி புரிந்துகொண்டிருந்தான். அவன் மதுரையை ஆண்ட விஷயத்தை ஊகிக்குமிடத்து, கி. பி. 1483 ஆகிய வருட காலங்களில் பிரபலம் பெற்று விளங்கிய வாணாதிராயர்களின் ஆட்சியும் ஒடுங்கி மகமதியரது அதிகார உக்கிரமமும் தணிந்து சாந்தமடைந்த காலமாயிருந்ததால், சந்திரசேகரன் மதுரையை ஆளும்படியாயிற்று என்று தெரிகிறது. அச் சந்திரசேகர பாண்டியனும், தென்காசி, திருநெல்வேலி முதலிய தென்றமிழ் நாட்டில் அரசாண்ட பாண்டியர்களும், விஜயநகரத்து வேந்தர்களுக்குக் கப்பங்கட்டி வந்தனர்.

செந்தமிழ் 33-ம் தொகுதி, 8-ம் பகுதியில் ஸ்ரீமான் **T. V.** சதாசிவபண்டாரத்தார் இதைப்பற்றிக்கூறுவதாவது:- "சடையவர்மன் சீவல்லப பாண்டியன்: இவன் ஆகவராம பாண்டியனின் புதல்வன். கி. பி. 1534 முதல் 1543 வரையில் அரசாண்டவன். இவன் காலத்தில் திருவாங்கூர் ராஜ்யத்திலிருந்த உதயமார்த்தாண்டவர்மன் என்ற சேரமன்னனொருவன் * தென்பாண்டி நாட்டைக் கைக்கொண்டான்.

*சேரனது கல்வெட்டுக்கள், பிரமதேசம், சேரன்மாதேவி, அம்பாசமுத்திரம், களக்காடு ஆகிய ஊர்களிலுள்ளன. ஆகவே இப்பகுதிகள் அவனது ஆளுகைக்கு உட்பட்டிருந்தனவென்பது திண்ணம். சீவல்லப பாண்டியனுக்கு "இறந்தகாலம் எடுத்தவன்," "பாண்டிய ராஜ்ய தாபனாசாரியன் என்ற பட்டங்களும் உண்டு.

தன் நாட்டையிழந்த சீவல்லபபாண்டியன் விஜயநகர வேந்தனாகிய அச்சுததேவராயனிடம் முறையிடவே, அவனும் பெரும்படையோடு தென்னாட்டிற்கு வந்து உதயமார்த்தாண்டவர்மனைப் போரில்வென்று அவன் கைப்பற்றியிருந்த தென்பாண்டி நாட்டைப் பிடுங்கிப் பாண்டியற்குக் கொடுத்தனன். அச்சுததேவராயன் இத்தகைய அரிய உதவி புரிந்தமைபற்றிச் சீவல்லபன், தன் மகளை ராயனுக்கு மணஞ் செய்துகொடுத்து மகிழ்ச்சியுற்றான்."

சந்திரசேகர பாண்டியன் மதுரையில் ஆட்சிபுரியுங் காலத்தில், சோழமண்டலத்தில் திரிசிரபுரத்தில் வீரசேகர சோழன் அரசு செலுத்திக் கொண்டிருந்தான். இவ்விரு வேந்தர்களுக்குள் பூமியின் எல்லை காரணமாய்ப் பகைமை யேற்பட்டுப் போர் விளைந்தது. அப்போரில் சோழன் தன் வல்லமையால் பாண்டியனைவென்று மதுரையைக் கைப்பற்றிக் கொண்டான். சந்திரசேகர பாண்டியன், தன்குமாரனை சுந்தரபாண்டியனோடு விஜயநகரத்திற்குச்சென்று அக்காலத்தில் அங்கு அரசனாகவிளங்கிய இராமராயனிடம் முறையிட்டனன்.

## 2. நாகம நாயக்கன் பாண்டியநாட்டிற்கு வருதல்.

பாண்டியன் பகர்ந்தவற்றை யெல்லாங்கேட்ட இராயன் சீற்றம் பொறுக்கலாற்றாது, "சோழபாண்டிமண்டலங்களிலுள்ள மன்னர்களின் பூமிவிஷயமான விவகாரங்களை என் முன்னிலையில் தீர்த்துக்கொள்ளுதல் கடமையாயிருக்க, ஒருவனுக்குரிய நாட்டை இன்னொருவன் அபகரித்துக் கொள்ளு

தல் தருமோ?" என்றுகூறித் தன் சபையிலுள்ள சேனுபதி யாகிய நாகமநாயக்கனை நோக்கி, "நீ படையுடன் தென்தேச மடைந்து சோழனையடக்கிப் பாண்டியனுக்கு ராச்சியத்தை அளித்துவருக" என்று கட்டளையிட்டான். நாகமநாயக்கன் பெருஞ்சேனையுடன் பாண்டியனையும் அழைத்துக்கொண்டு தென்றிசைக்கு வந்து திரிசிரபுரக்கோட்டையை முற்றுகை யிட்டு வீரசேகரசோழனேடு போராடி வெற்றிமாலை புனைந்-தான். இப்போரைப்பற்றிச் "சான்றோர்குலதீபம்" என்னும் நூலிற் சொல்லியிருப்பதாவது:— "வீரசேகர சோழனு-டைய சகோதரராகிய அன்னமுடிச் சோழன், அரசமுடிச் சோழன், வல்லன், தஞ்சன் என்னும் நால்வரும் நாகம நாயக்கனுடன் நடந்த போரில் மாண்டனர்; தான் அடைந்த அபஜயத்தினுல், சோழன், தன் இருபத்தொரு மனைவியரை யும் வெட்டிக்கொன்று தானும் ஈட்டியிற்பாய்ந்து மடிந்தான்; இவரது சந்ததியார் தெற்கே நாஞ்சிநாட்டிற்குப்போயினர்." சோழரது ஆட்சி அழிவுற்ற பின்னர், சோழமரபினராய், சோழர்குடிகளாய்க் காவேரிப்பிரதேசங்களில் வாழ்ந்த சான்-றோர்கள் பாண்டியநாட்டிற் குடியேறினர். அவர்கள் "காவேரி புரத்தார்" என்று அழைக்கப்படுகின்றனர். சோழநாட்டி லும் அப்பூர்வகுடிகளான சான்றோர்கள் வாழ்ந்து வரு-கின்றனர்.

கி. பி. 1324-ல் மாலிகாபூர் தென்னுட்டிற்குப் படை யெடுத்து வந்தபொழுது, அவன் சோழநாட்டையும் கைப் பற்றியதாகச் சரித்திரங்களிற் குறித்துக் கூறப்படவில்லை. சுமார் இருநூறுவருட காலங்களாய்ச் சோழநாட்டையாண்ட அரசர்களின் பிரஸ்தாபம் விளங்கவில்லை. ஆனுல் மகமதிய

வீரர்களால் பாண்டியராஜ்யத்திற் கெய்திய இன்னல் சோழ ராஜ்யத்திற்குப் பெரும்பாலும் ஏற்பட்டிருக்காதென்றே எண்ண இடமுண்டு. முன் நாம்கூறிய வீரசேகரசோழன் விஜயநகர வேந்தனுக்குக் கப்பங்கட்டி வந்த சிற்றரசனாக விருக்கலாம். சோழனை வெற்றிகொண்ட நாகமநாயக்கன் கி. பி. 1543-ல் மதுரைக்கு வந்தான். அவன் இராயனின் கட்டளைப்படி பாண்டியநாட்டைச் சந்திரசேகரன்பால் ஒப்பு விக்காமல் தானே சிங்காதனமேறிச் செங்கோல் செலுத்த லாயினன். பாண்டியன், இதைப்பார்த்து மறுபடி இராய னது சபையையடைந்து, நாகமன் செய்த துரோகத்தை எடுத்துரைத்து முறையிட்டான். விஜயநகரவேந்தன் கடுங் கோபமுற்றுத் தன்சபையிலுள்ளவர்களைநோக்கித் தன் கட்ட ளையை மீறிய நாகமன் என்னும் துரோகியைக் கட்டித் தம் முன் கொணர்பவர் அங்கு யாருமில்லையோ என வினவ, நாகமநாயக்கனது மகனாகிய விசுவநாதநாயக்கன், "நான் தங்க ளுடைய கட்டளையை நிறைவேற்றுவேன்" என்று பதிலு ரைத்தான்.

## 3. விசுவநாதநாயக்கனும் நாகமநாயக்கனும்

விசுவநாத நாயக்கன் சிறந்தவீரன்; சாதுரியம் படைத் தவன். துர்க்காதேவிக்குப் பலியிடுதற்காகக் கொணரப்பெற்ற ஓர் எருமைக்கடாவின் கொம்புகள் அரிவாளினால் வெட்டு வதற்குஇயலாதபடி கழுத்தின்பக்கம், பின்புறத்தில் தாழ்ந்து வளைந்திருந்தன. விசுவநாதன் தன் சாகஸத்தினால் ஒரே வீச்சில் அக் கடாவின்தலையை வெட்டிக்கொன்று மன்னவன் தயவைப் பெற்றுச் சிறந்து விளங்கினான். அவன் ராஜசபை யில் எழுந்து நின்று, "என்தந்தையை நானே பிடித்துக் கட்

டிக்கொணர்வேன்" என மொழிந்ததை இராமராயன் நம்பி அவன்பால் பெரும்படையொன்றைத் திரட்டிக்கொடுத்துத் தென்றிசைக்கு அனுப்பினான். அவன் பாண்டியநாட்டை யடைந்து மதுரையில் தன் தந்தையுடன்போரிட்டு அவனைச் செயித்துப் பிடித்துக்கட்டி இராயன் முன்னர்க் கொணர்ந்து நிறுத்தினான். இராயன், அவனுடையஉறுதியையும், திறமை யையும் பாராட்டி, " உனக்குவேண்டுவது என்ன? " என்று கேட்டான். விசுவநாதன், "என் தந்தைக்கு உயிர்ப்பிச்சை தரவேண்டும். அதுவே எனக்கு வேண்டிய வரம்" என்றனன். இராயன், அச்சுத்தவீரனது உத்தமகுணத்தை வியந்து அங்ஙனமே நாகமநாயக்கனை விடுவித்தான்.

## 4. விசுவநாதநாயக்கன் மதுரைக்குஅரசனாதல்

இராயன் விசுவநாத நாயக்கனை நோக்கி, "நீ திரிசிரபுரக் கோட்டைக்கு அரசனாக விருந்து சோழபாண்டிய நாடுகளி லுள்ள அரசர்களின் திறைப்பொருள்களை வாங்கி நமக்கு அனுப்பி வரக்கடவாய்" என்று உத்தரவு செய்து காஞ்சீ புரத்தையடுத்த மெய்ப்பேடு என்னுங் கிராமத்திலுள்ள "அரியநாயகமுதலி" என்பவனை அவனுக்கு உற்ற துணை வனாகவும், அமைச்சனாகவும் இருந்து பாதுகாத்து வரும்படி நியமித்து, அவனைத் தென்றிசைக்கு அனுப்பினன். விசுவநாத நாயக்கன், முதலியைத் துணைக்கொண்டு பரிவாரமும் படைகளும் புடைசூழ மதுரைமாநகருக்கு வந்து, விஜயநகரவேந்தனின் உத்தரவுக்கு மாறுபாடாகத் தானே சிம்மாதனம் ஏறினான். அவன் சிம்மாதனமேறியது கி. பி. 1559-ஆம் வருஷம் மார்கழிமாதம் பதினைந்தாந் திகதியிலாகும். மதுரைத்தலவரலாறு:— "சகாப்தம் 1481-(கி. பி.

1559)ல் இராயன் உத்தரவுப்படி கட்டியம் நாகம நாகமநாயக்கரும், அவர் குமாரர் விசுவநாதநாயக்கரும், அரியநாயக முதலியாரும், பாண்டியர் வழியில் ஒரு தாயாதி வர்க்கம், அவனிவேந்தராமபாண்டியனை அழைத்துக்கொண்டு போய்ப் பட்டங்கட்டி வைத்து வரும்படி உத்தரவாகப் பதின்மூவாயிரம் குதிரைத் தளத்துடன் திரிசிரபுரக்கோட்டையைக் கட்டிக்கொண்டு மதுரைவந்து அவனிவேந்த ராம பாண்டியனை யாளும்படி உத்தரவு செய்யாமல் விசுவநாத நாயக்கருக்குப் பட்டங்கட்டி வைத்து அரியநாயகமுதலியார் தளபதிநாயனார். அவனிவேந்தராம பாண்டியனுக்குக் கங்கை கொண்டானில் லக்ஷம்பொன் சீமையை விட்டுக்கொடுத்தார்.”...

இத்தலவரலாற்றிற் கூறப்பட்டிருக்கிற அவனிவேந்த ராமபாண்டியனே, நாம்சொல்லிவரும் சந்திரசேகர பாண்டியனவன். இராயனது உத்தரவு ஒருவிதம்; ஆனால் நடந்தது மற்றொரு விதமாகப் பாண்டிய நாட்டு விஷயம் முடிந்தது. விசுவநாத நாயக்கனது ஆட்சி பாண்டிய நாட்டில் ஆரம்பித்தது.

## 5. திருவழுதி வளநாடு.

ஆழ்வார்திருநகரிக் கோவிற் சாஸனத்தில், “அருளாளன் ஆதிச்சன் சுந்தரபாண்டியன் திருநாட்டரையன் திருப்பணிகள், பலஉபயங்கள் செய்திருக்கின்றான். திருவழுதி வளநாடு ஆதிச்சநல்லூரென்னும் ஆதிச்சன் காணிப்பறம்புக்கும் தாமிரபரணிச் சங்கமத்திற்கும் இடையிலுள்ள பிரதேசம்” என்று கண்டிருக்கிறது. இப்பிரதேசம், திருநாடு

கள் பல அடங்கிபிருப்பதால் வளநாடு எனப்பெயர்பெற்றது. திருவழுதிவளநாட்டைத் திருவடி தேசம் என்றும் சொல் வார்கள். கி. பி. 1682-ல் மதுரையையாண்ட ரங்ககிருஷ்ண முத்துவீர நாயக்கனது மந்திரியாகிய மாறைத் திருவேங்கடேசுவரர் தாம்பாடிய பணவிடுதூது என்னும் நூலில்,

“ திருவடி தேசமொரு செங்கோல் செலுத்தும்
பருவமெலாம் நன்ருய்ப் பழகி— * * * *

என வருவதூஉங் காண்க. திருவடி நாடான் விளையென்னு மூர் ஏறலுக்கு மேல் பக்கம் சேர்மன் அருணசல சுவாமி ஆலயத்தை யடுத்திருக்கின்றது. திருவழுதிவளநாட்டிற்கு ஆதி அதிபதியாய்ப் பாண்டியர் மரபினராய்க் குருகூரென்னும் ஆழ்வார்திருநகரியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி விளங்கும் நம்மாழ்வார், பன்னிரண்டு ஆழ்வார்களில் முதன்மை பெற்றவர் அவ்வாழ்வாருக்கு மாறன், நாடன், என்னும்பெயர்கள் தமிழ்வேதமாகிய திருவாய்மொழியிலும். கம்பநாடரியற்றிய சடகோபரந்தாதியிலும், இன்னும் பல நூல்களிலும் காணப்படுகின்றன. நம்மாழ்வாரே தாம்பாடிய திருவாய் மொழியில் தம்மைத் “திருவழுதிவளநாட”னென்று குறித்துள்ளார். இத்தகைய தெய்வீக வள்ளலின் அவதார ஸ்தலத்தைக் கொண்ட நாட்டின் பெருமையை நம்மனோர் சொல்லுந் தரத்ததோ? தென்னுட்டில் நாடார் ஜமீனக இன்றும் நிலைத்துவிளங்குகின்ற நட்டாத்திஜமீனும், பழந்தமிழ்நாட்டுத் துறைமுகமாகிய கொற்கைப்பட்டினமும், வைணவர் போற்றிவணங்கும் நவதிருப்பதிகளும் திருவழுதி வள நாட்டிலேயே அமைந்துள்ளன. கொற்கை ராஜ்யம் மசமதியரால் சீர்குலைந்தபின், கொற்கை, காயல், குறும்பூர் நாலுமாவடி, மாறை ஆகிய ஐந்துஇடங்களைத் தம்மிருப்பிட

மாகக் கொண்டு பஞ்சபாண்டியர்கள் அல்லது பஞ்சவழுதி நாடார்கள் என்றழைக்கப்படும் சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்தனர்.

## 6. கயத்தாற்று ஒற்றைமற்போர்.

விசுவநாத நாயக்கனின் உத்தரவுப்படி யெழுதப்பட்டிருந்த **பாண்டிய மண்டலத்தில் கர்நாடகத்துரையள் ராச்சியம் ஆண்ட செய்திகள்:**— "விசுவநாதநாயக்கர், திருநெல்வேலிச் சீமைக்கு அரியநாயகமுதலியாரைச் சிறிது தளங்களுடன் கூட்டியனுப்பியதில், அங்குத்தட்சிணம் திருநெல்வேலிச் சீமையில் அஞ்சுபேர் ராசாக்கள், அஞ்சு பாளையப்பட்டாக இருந்ததில், அரியநாயக முதலியார் கேட்டபடி பாண்டியர்களுக்குக்கொடுத்த காணிக்கையை இவர்களுக்குக் கொடாமல் ஒருங்குசேர்ந்து எதிர்ப்பாளையஞ் செய்தனர். அரியநாயக முதலியார் நிர்வாகஞ் செய்யமுடியாமல் விசுவநாதநாயக்கருக்கு எழுதியனுப்பினார். அவர் வெகு தளத்துடன் வந்து இறங்கி ஆறுமாதம்வரைக்கும் சண்டை பண்ணினதில் இந்த அஞ்சுபேர் ராசாக்களைச் செயிக்கமுடியாமல், உபயதளத்திலும் வெகுசனங்கள் இறந்துபோய்ப் பாளையத்திலும் சீமையிலும் செத்துப் போனவர்களுடைய சமாச்சாரக் கூக்குரலும், அழுகைச்சத்தமும்கேட்டு விசுவநாதநாயக்கர் 'நாமொருவர் ராச்சியமாண்டு போகபாக்கியங்களை யநுபவிக்கத்துணையாய் வந்தவர்கள் இறந்து அவர்கள் பந்துக்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே!' என்று எதிரிகளுக் கெழுதியதாவது: 'நீங்கள் அஞ்சுபேர் வந்திருக்கிறீர்கள். நாமொருவர் வந்திருக்கிறோம். உங்களுக்கும் நமக்குமாக ஏழைகளிறந்து போகின்றனர். அப்படிவேண்டாம். யுத்தத்தை நிறுத்தி

உபயதளத்துக்கும் மத்தியில் ஒரு கம்பம் நிறுத்தி அதிற் பட்டயம் எழுதி'— 'நீங்கள் அஞ்சுபேர் வாருங்கள். நாம் ஒருவர்வருகிறோம். சண்டைசெய்து, நாம் உங்களை ஜெயித்தால் உங்கள்சீமைகளையும், ஆஸ்திகளையும் விட்டுவிட்டுக் கட்டின வஸ்திரத்தோடு போய்விடுகிறது. நாம் தோல்வியாய்ப் போனால் அப்படியே போய்விடுகிறது'—என்று ஆணைசத்தியத்துடன் பட்டயமெழுதிக் கம்பத்தின்மேலே கட்டிக் கம்பத்தடியிற் சண்டை பண்ணுகிறது. இதுவே அதன் விபரம்: என்று (நாயக்கர் கடிதப்) எழுதிச் சேனைபதியிடம் கொடுத்தனுப்பினார். அதற்கு அந்த ஐவரும், 'நீர் ஒருவர் வருகிறது; நாங்கள் ஐந்துபேரும் வந்து போர்செய்கிறது ஞாயமல்ல. ஐவரில் ஒருவர் வருகிறோம். நீரும் வாரும். சண்டை பண்ணுவோம்' என்று சொல்லியனுப்பினர். அதற்கு விசுவநாதநாயக்கர் நீங்கள் அஞ்சுபேரும் அவரவர் சீமைக்காக வந்திருக்கிறீர்கள். நாம் ஒருவரும் அந்த அஞ்சு சீமையும் கட்டவேண்டுமென்று வந்திருக்கிறோம். ஆனதால் அஞ்சு பங்குக்கும் அஞ்சுபேர் வரலாம்" என்று சொல்லியனுப்பினர். அவர்கள் அது சம்மதியாமல் நீர் எங்கள் அஞ்சுபேரில் ஒருவரைச் செயிப்பீரேயானால், மற்றவர்கள் சண்டை செய்யாமல் தேசத்தைவிட்டுப் போய்விடுகிறது," என்று சொல்லியனுப்ப, விசுவநாத நாயக்கருஞ் சம்மதித்து, எழுதவேண்டியவைகளை யெழுதிக் கம்பத்தடியில் வந்து நின்றார். அவர்களும் அஞ்சுபேரில் ஒருவருக்குச் சீராவுந் தொடுத்துப் பட்டாவுங் கொடுத்துக் குதிரையில் ஏறிக் கொண்டு போகும்படி செய்தனர். அந்தப்படியே அவர்வ விசுவநாத நாயக்கர், ராசாவைப் பார்த்து "நீர் முன்னே வெட்டும்' என்றார். அந்தப்படி ராசா விசுவநாத நாயக்கரை

வெட்டினார். விசுவநாத நாயக்கர் இந்த வெட்டைக் கத்தியி னாலே தாங்கினார். மறுபடி அந்தராசா விசுவநாதநாயக்கரை, " நீர் மூன்று வெட்டு வெட்டும் " என்று சொன்னார் அம் மூன்று வெட்டையும் ராசா கத்தியால் தாங்கினார். பின்பு நாயக்கர் ராசாவைப் "பத்திரமாய் இரும்" என்று சொல்லி, இரண்டு துண்டாகும்படி வெட்டினார். ராசா மாண்டு விழுந் தார். அந்த நாலுபேர் ராசாக்களும் பட்டயத்தில் எழுதின படிக்குச் சீமையைவிட்டுத் தேசாந்தரம்போய்விட்டார்கள்." இதுவிபரம்: கர்னல் மக்கென்ஸைச் சேர்ந்த தென்னிந்திய சரித்திரப்பிரதிகளை யாராய்ந்து பாண்டிதேச சரித்திரமெழு திய புரொபஸர் உவில்ஸன் துரை யெழுதியிருக்கிறார்.

—சான்றோர் மனு.

## 7. பாண்டிய-நாயக்க யுத்தத்தைப் பற்றிய அபிப்பிராயங்கள்.

இவ் யுத்தம் திருவழுதி வளநாட்டில் தொடங்கி திரு வழுதி நாடார்களின் புயவலியாலும், படைவலியாலும் நாயக்கரின் படைகள் பின் தள்ளப்பெற்று ஆறுமாத கால மாய் அமராடிப் பின்பு கயத்தாற்றுக்கு வந்து யுத்தம் முடிவு பெற்றதாயறிகிறோம். "அந்த அஞ்சு பேர் ராசாக்களைச் செயிக்கமுடியாமல் உபயதளத்திலும் வெகு சனங்களிறந்து போய்ப் பாளையத்திலும், சீமையிலும் செத்துப்போனவர் களுடைய சமாசாரக் கூக்குரலும், அழுகைச் சத்தமும் கேட்டு..." என்று சொல்லியிருப்பதே நாம் கூறியதை வலி யுறுத்தும். "நீர் ஒருவர் வருகிறது; நாங்கள் ஐந்துபேரும் வந்து போர் செய்கிறது ஞாயமல்ல' என்று சொல்லியிருப் பது, க்ஷத்திரியதருமத்தை நிலைநாட்டும் வாக்கியம் அல்லவா?

நான்கு பேர்களும் போராடாமற் சென்றது சத்திய பரிபாலனமேயாம்! வெட்டுண்ட அக்ரபாண்டியன், குறும்பூர்ப் பாண்டியனே என்பர். நால்வர்களும் தங்கள் தங்கள் நகருக்குவந்து மனைவி மைந்தர்களை யழைத்துக்கொண்டு நாஞ்சி நாட்டிற்குச் சென்றனர். இந்தயுத்தத்தால் பல்லாயிரக்கணக்கான வருடகாலங்களாய் விளங்கியிருந்த, கொற்கையைத்தலை நகராகக் கொண்டிருந்த திருவழுதி வளநாட்டுப் பாண்டிய ராஜ்யம் அழிந்தது.

கனம் டெயிலர்துரை இவ் யுத்தத்தைப் பற்றிக் குறிப்பிடுவதாவது:— 'கயத்தாற்று வட்டகையிலுள்ள ஐந்து பாண்டிய ராஜாக்களின் வகையராக்களும் சீமையை விட்டுப் போட்டுத் தேசாந்தரம் போய்விட்டார்கள். ஆனால், "கர் நாடகத்துரையள் பட்டம் ஆண்ட பேர்களின் விபரம்" என்னும் சரித்திரப் பிரதியில், இவர்களைப் "பஞ்சதிருவடி ராசாக்கள்" என்று கூறப்பட்டிருக்கிறது, — —' என்பதே.

—சான்றோர் மனு.

இன்னும் இவ் யுத்தத்தைப் பற்றி வேறு சிலருடைய அபிப்பிராயங்களையும் இங்கே எடுத்துக் காட்டுவோம்.

ஸ்ரீமான் நாராயணையர், தாமெழுதிய "நாயக்க அரசர்" என்னும் சரித்திரத்தில் "ஐவர் தலைவன் வெண்டுண்டான்; ஒப்பந்தப்படி மற்ற நால்வரும் தம் ராஜ்யத்தை யிழந்து பரதேசம் சென்றார்கள்" என்று எழுதியுள்ளார்.

"வடகரை ஜமீன்தார்களின்சரித்திரம்" என்ற புத்தகத்

திற் சொல்லியிருப்பதாவது:— "* வடகரை ஜமீன்தார்— பெரியசுவாமி சின்னணைஞ்சாத் தேவர், தளகர்த்தர் இருளணைஞ்சாத் தேவர், தாயாதி பெரியணைஞ்சாத் தேவர் இவர்கள், பாண்டியர்களுக்கும் விசுவநாதநாயக்கருக்கும் நடந்தயுத்தத்தில் நாயக்கருக்கு உதவியாகச்சென்றனர். ஜமீன்தாரும், தளகர்த்தரும் இறக்க, தாயாதி பெரியணைஞ்சாத் தேவர் ஊர்வந்து சேர்ந்தார். மதுரையில் ‡ கர்த்தாக்கள் நால்வரது ஆட்சியில் சோழபாண்டியருடன் எட்டு வருடம் போராட்டம் நடந்தது. இந்த யுத்தகாலங்களில் தென்காசிப் பாண்டியனும், கயத்தாற்றுப்பாண்டியனும் கொச்சி சென்றிருந்தனர்" என்பதே.

## 8. பாண்டியர் மரபும்—பங்குனி விழாவும்.

வடகரைஜமீன் பாளையப்பட்டைப்போன்று, பாண்டிய நாட்டிலுள்ள மற்றப் பாளையப்பட்டுக்களும் விசுவநாத நாயக்கருக்கு உதவியாய் நின்று பாண்டியரை எதிர்த்துப் போர்புரிந்தனவேயாம். ஆங்காங்கு குடிகளைப்போன்றிருந்த

* செம்புலிங்கம் சின்னணைஞ்சாத் தேவன் கி. பி. 1391-ல் சேதுநாட்டிலிருந்து, அக்காலம் தென்காசியை ஆண்ட குலசேகர பாண்டியனது அநுமதிபெற்று வடகரை ஜமீனை ஸ்தாபித்தனன் என்று வடகரை ஜமீன்தார் சரித்திரத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றது. ஜமீன் பிரதேசத்தைக் "கல்லக நாடு" என்று கடிகைமுத்துப் புலவர், ஜமீன்தாரைப் பற்றிப் பாடிய பாடல்களிற்சொல்லியிருக்கின்றனர்.

‡ சோழ பாண்டியர், தங்களுக்கு (தெய்வம்) 'தேவர்' என்ற பட்டத்தை வைத்துக்கொண்டதுபோல நாயக்கர்கள் தங்களுக்குக் "கர்த்தா" என்னும் பட்டத்தை வைத்துக் கொண்டதாகத் தெரிகின்றது.

பாண்டிச் சிற்றரசுகள் பஞ்சபாண்டியர்களுக்கு உதவியாய் நின்று போராடினர். தெலுங்க நாட்டிலிருந்து வந்த படைப் பலமும், உள்நாட்டு உதவியும் நாயக்கர்பால் மிகுந்திருந்ததால், பாண்டியர் சக்தியற்றுப்போயினர். மற்றப் பாண்டிய மரபினராய மக்களும் பாண்டிய நாட்டில் தங்குவதற்கின்றிப் பலவேறிடங்கட்குச்சென்று குடியேறலாயினர். கி.பி. 1559—ரௌத்திரி ஞூ மார்கழிமீ விசுவநாத நாயக்கன் மதுரையின் ஆட்சியைக் கைக்கொண்டு சீமைக் காறுபாறுகள் பார்த்து ஆறுமாதம் பஞ்சபாண்டியருடன் போர்புரிந்ததாகச் சரித்திரங்கூறுவதால், போர் முடிவுபெற்றது கி.பி. 1561 துன்மதி ஞூ பங்குனிமீ என்று தெரிகின்றது. அக்காலம் மதுரைச் சீமையிலுள்ள நாடார்கள் தங்கள் தலைவர்களுக்கு நேர்ந்த கதியை ஓர் விசேஷமாகக்கொண்டு பங்குனி மாதம், மாரியம்மன் திருவிழாக் கொண்டாடி வருகின்றனர். மலையாள தேசத்தில் மயல்நாடு என்னும் இடம் பட்டய ஒப்பந்தத்தின்படி போர் செய்யாது சென்ற நாலு பாண்டியர்களும் மற்றவர்களும் தங்கிய இடமாகும். அவ்விடத்தில் இந்த ஐந்து பாண்டியர்களின் பேரால் ஆலயம் ஏற்படுத்தப்பட்டு, பங்குனி—சித்திரை மாதங்களில் திருவிழா நடைபெற்று வருகின்றதென்றும், அத்திருவிழாவை நடாத்துவோர்கள் சான்றோர்களே என்றும் சான்றோர் மனுவிற் கூறப்பட்டிருக்கின்றன.

## 9. அரியநாயக முதலியார்.

திருவழுதி நாடாக்களின் யுத்தம் முடிவுபெற்றவுடன் மதுரைச் சீமையிலும், திருநெல்வேலிச் சீமையிலும், விசுவநாத நாயக்கனின் ஆட்சி யோங்கிற்று. அவனது

ஆட்சியின் சவிஸ்தாரங்களை சரித்திரங்கள் பலவற்றிலும் காணலாம். பாண்டியருடன் செய்த யுத்தத்தில் தனக்கு உதவி செய்த மறவர், நாயக்கர் குலத்தலைவர்களைப் பாளையப் பட்டுகளாக்கி விசுநாத நாயக்கன் பாண்டிய ராஜ்யத்தை ஆளும்படி செய்தான். "அரியநாயக முதலி பிரஸ்தாபம்"— என்னும் நூலில், எழுதியிருப்பதாக கண்ணுயிர நாடார் எழுதிய "க்ஷத்திரியகுல வினு விடை" என்னும் நூலில் எடுத்துக் காட்டியிருப்பது பின்வருமாறு:—

"அரியநாயகர் தம் வம்சத்தவராகிய வேளாளர் முந்நூறு வீட்டுக்காரரை மதுரை நகருக்கடுத்த சோழவந்தானிற் குடியேற்றி வைத்தான். நாயக்கர், கம்பளத்தார், ரெட்டியார்களாகிய இச்சாதிமாந்தரை விருத்திசெய்தார்" என்பதே. இன்னும் அந்நூலிற் சொல்லியிருப்பதாவது: "மதுரையில், கம்பளத்தார்களும், பட்டுநூற்காரரும், கோமுட்டிகளும் வந்து குடியேறிக்கொண்டார்கள்" என்பதே.

## 10. சோழபாண்டிய ராஜ்யங்களில் நாட்டிற்குரிய அதிகாரஸ்தானங்களை வகித்தவர்கள்.

1. சோழ சேனாபதி:— கிருஷ்ணன்ராமனான மும்முடிச்சோழ பிரம மாராயன். (மாராயன் என்பது—ராஜாநுக்கிரக விசேஷப் பெயர்)

2. நாட்டைக் கண்காணிப்போன்:— ஆதித்தன் தான மூவேந்த வேளான் மாராயன். (வேளான் — ஆடவரிற் சிரேஷ்டன்.)

3. நாட்டைச் சுற்றி ஆராய்வோன்:— மதுராந்தகன்

(மதுரையைச் செயித்தவன்), கண்டராதித்தன், திருவடிகள் சாத்தன்.

4. அரசன் உடன்செல் அதிகாரி :— ராஜேந்திர சிங்க மூவேந்த வேளான்.

5. அரச காரியம் பார்ப்போர் :— க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு திருநாரையூர் நாட்டுக்குடையான், பிரசங்கன் பாலூரான், மீனவன் மூவேந்த வேளான்.

6. அரசன் நாடு சுற்றிப் பார்க்கப் போகும்பொழுது கூடச் செல்பவன்:— காளி ஆதித்தன்.

குறிப்பு:— மேற்கூறப்பட்ட பெயர்கள் முழுமையும் இராஜராஜ சோழனைப் பற்றிய சாஸனங்களிற் கண்டெழுதியவையாகும்.

கி. பி. 1263-ல் வெட்டப்பெற்றதாகிய, (திருமங்கலந் தாலூகா) விக்கிரமங்களம் மதுரோதயாஸவர் ஆலயத்தினுட் பிரகாரத்திலுள்ள ஒரு சிலாசாஸனத்திற் பின்வரும் விஷயம் காணப்படுகின்றது:— "தென்கல்லக நாட்டுத் தேசி பட்டணமான விக்கிரமசிங்க நகரத்தார் மேற்படி ஆலய வகைக்கு விட்டுக்கொடுத்த நிலவகைபற்றி எழுதியதில் சாட்சியானவர்கள்— இப்படிக்கு: வை. பெரியான் கூத்தனை நயன சோழன் எழுத்து. இந்நகரக் கணக்கு: பூவணி ராமனை உத்தம பாண்டியன் எழுத்து" என்பதே.

இவ்வாறு ஷை சாஸனங்களிற் காணப்படும் பெயர்களெல்லாம் சோழ பாண்டியர்க்குரிய பெயர்களாகவே யிருத்தலால், சோழபாண்டிய மரபினரே பூமியாதிபத்திய மேற்

பார்வைகளைச்செலுத்தி வந்திருக்கின்றனர் என்பது விளங்குகிறது. அவ்வதிகாரங்கள், பாண்டியநாட்டிலேற்பட்ட மாறுதலால் அதாவது நாயக்கராது ஆட்சியின் காரணமாய் பாண்டியர்மரபினராகிய நாடார்களை விட்டுநீங்கி மற்றச்சாதியினருக்குச் செல்லும்படியாயின.

## 11. பெரிய வீரப்ப நாயக்கன்.

கி. பி. 1564-ல் விசுவநாத நாயக்கன் காலஞ் சென்றபின் அவன்மகன் குமாரகிருஷ்ணப்பநாயக்கன் பட்டத்துக்கு வந்தான். அவன் பத்துவருடகாலம் அரசுபுரிந்த பிறகு, அவனது குமாரனை பெரியவீரப்ப நாயக்கன் சிங்காதனமேறினன் இப்பெரிய வீரப்ப நாயக்கனது ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களைக் குறித்துத் தமிழில், "க்ஷத்திரிய வினவிடை" என்னும் நூலிற் காணும் விபரமாவது:— "சகல கிராமங்களிலும் வாசம்பண்ணின பலஜாதி அதிகாரங்களையும் வரவழைத்து பாண்டிய குலத்தாரிடம் பந்திபோஜனஞ் செய்யக்கூடாதென்றும், அவர்களுடைய நன்மைதீமை காலங்களுக்குப் புரோகிதர் முதலிய யாவரும் போகக்கூடாதென்றும் இவன் (பெரியவீரப்பநாயக்கன்) கட்டுப்பாடு செய்தானென்று பாண்டியகுலப் பெரியார்கள் சொல்லி வருகின்றது வழக்கமாயிருக்கின்றது" என்பதே.

இன்னும் இவனது ஆட்சியில், நாடார்கள் ஓர் ஊரில் தங்குவதாயிருந்தால் வர்த்தகம் ஆதிய தொழில்களுக்கேற்றபடி இத்தனை நாள்வரை அவ்வூரிலிருந்து விட்டு உடனே மற்றோர் ஊருக்குப் போய்விட வேண்டும் என்கிற நிபந்தனை விதித்து "குடிபேரும் நிருபஆனை"— ஏற்படுத்தியதாகவும்,

ஆகவே அதன்படி நாடார்குல மக்கள் நிலையற்ற வாழ்க்கையினராய் அலைந்தனரென்றும் சொல்லப்படுகின்றது.

சான்றோர் மனு என்னும் நூலில் 116-ம் பக்கத்தில் "கன்னிவாடிச் சின்னக்கதிர்நாயக்கன் என்னும் பாளையக்காரனால் தலைவாங்கப்பெற்ற சிற்றரசுப் பாண்டியர்களில் ஒருவனாகிய ஆள்வார் (நாடாள்வார்) என்பவனது வகையராக்கள் மலையாளம் போய்ச் சேர்ந்தார்கள்" என்று எழுதியிருக்கின்றது.

இவைபோன்ற குரூரச் செயல்கள் அரியநாயக முதலி வகையாரது சூழ்ச்சியாலும், மற்றையோரது பொறுமைக் குணத்தாலும் மதுரைச் சீமையில் நடைபெற்றன. ஆகலால், ஆங்காங்குள்ள நாடார்களிற் சிலர் இம்சை பொறுக்க முடியாமல் திரிசிரபுரம், கோயம்புத்தூர், சேலம் முதலிய இடங்களை அடைந்து செட்டி, முதலி என்னும் பெயர்களுடன் இன்றளவும் வசித்து வருகின்றனர்.

## 12. திருவழுதி வளநாட்டில் நாயக்கர் ஆட்சி.

கி. பி. 1564-ல் விசுவநாத நாயக்கன் காலஞ்சென்றானென்று முன் கூறினோமல்லவா? அவனுக்குப்பின் அவன் மகன் குமாரகிருஷ்ணப்ப நாயக்கன் சிங்காதனம் ஏறினான். அவன் திருநெல்வேலிக் கடுத்த பாளையங்கோட்டையின் கீழ் புறத்தில் "கிருஷ்ணாபுரம்" எனத் தன்பெயரால் புதிதாக ஓர் ஊரை உண்டாக்கி அதில் ஜனங்களைக் குடியேற்றினான். ஆழ்வார் திருநகரியில் நாயக்கப் பிரதிநிதிகள் இருந்ததாகத் தெரிகின்றது. இஃது திருச்செந்தூர்ச் சாஸனங்களால் தெளியப்படும். அச்சாஸனம் பின் வருமாறு:—

"கொல்லம்— 760, (கி. பி. 1584) தைமீ 14உ சுக்கிர வாரமும், அஸ்தநக்ஷத்திரமுங்கூடிய சுபயோக சுபதினத்தில் குடநாடு திருச்செங்செந்தூர் திரிபுவனமகாதேவி சதுர்வேதி மங்கலத்தில் நாயனாரிளையநயினார் கோவில் சொர்ண நிலையத்தில் திருச்செந்தூர் சுவாமி சிவக்கொழுந்தீஸ்வரர் கோவில் சிவக்கொழுந்துமுதலியார் திரவியத்தினாலும் சுவாமிக் கொத்தனாலும் வேலாயுதச்சிவம் பண்டாரத்தாலும் கட்டப்பட்ட பெரிய கொட்டாரவாசல் பெரிய கதவுக்கும் கிழக்கு; விஜய ரெங்கநாயக்கர், காசிபக்கொத்துநாயக்கர் இவர்கள் அதிகாரத்தில் அவர்கள் வகை நரசிங்கராயர், கிருஷ்ணராயர் அதிகாரத்திற் கட்டப்பட்ட மண்டபத்துக்கு எல்லையாவது: வட எல்லை—திம்மிசெட்டி, சுப்பராய செட்டி நந்தவன பூசை மடத்துக்கும் தெற்கு; கதவில்லாத பெரிய கொட்டார வாசலுக்கும், கருப்பசாமிக் குத்துக்கல்லுக்கும் மேற்கு; சிவனணைந்த பெருமாள்பிள்ளை சத்திரத்திற்கும், பாசுரம்பையன் முன்னோர்கள் காலிமனைக்கும் வடக்கு; இந்நான்கு எல்லைக்குட்பட்ட மண்டபம், சாயாமொழியிலிருக்கும் சிவந்தி ஆதித்த நாடன், குமாரசாமி ஆதித்தநாடன் உள்ளிட்டாரால் அப்போது வழங்கப்பட்டநாணயம், தடிக்காசு குண்டுப் பூவராகன் ஏக்ராநாணயம்..........இதுகளால் கட்டப்பட்ட மண்டபம். இதன் கணக்கு—நாடாக்கள் வீட்டில் சோதனை செய்து மேற்படி கணக்கில் அதிகாரஸ்தர்கள் கையெழுத்து சகிதம், பார்வையிடப்பட்டும், கையெழுத்து வைக்கப்பட்டிருந்தகணக்கு சீரணப்பட்டு அதற்குப்பதில் நகல் எழுதப்பட்டிருக்கின்றது. நகல் எழுதினது நாடாக்கள் கணக்கு வீரவாகு பிள்ளை.

இதுவும் இதுபோன்ற விவரங்களும், காயாமொழி ஆதித்த நாடார்களின் பூர்வீக சவிஸ்தாரங்களும், பாளையங்கோட்டை, ஸெயின்ற்ஜான்ஸ் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர், பண்டித - தா. மாசில்லாமணி நாடார் எழுதிய "பாண்டியதேச ஆதித்தநாடார் வம்ச சரித்திரம்" என்னும் நூலில் விரிவாய்க் காணலாம்

கி. பி. 1560-ல் பஞ்சபாண்டிய நாயக்க யுத்தம் நடந்து, அப்பால் இருபத்துநான்கு ஆண்டுகள் சென்றபிறகு எழுதப்பட்டதாகக் காணப்படுகின்ற மேற்கூறிய சாஸனத்தில், "விஜயரங்க நாயக்கர், காசிபக்கொத்து நாயக்கர் அதிகாரம்" என்று வருவதால், நாயக்கப் பிரதிநிதிகளின் ஆட்சி தாமிரவருணி தீரத்தில் நிலைபெற்று விளங்கியது உறுதிப்படுகின்றது.

சகாப்தம் 1641 (கி. பி. 1719)-ல் ரங்ககிருஷ்ணமுத்து வீரப்ப நாயக்கனின் மகன், விஜயரங்க சொக்கநாத நாயக்கன் குருகைப்பிரானுக்குச் சில சாதனங்கள் செய்து, உத்தம பாண்டிய நல்லூரென்னும் பெருங்குளக் கிராமத்தில், பார்ப்பனர்களுக்கு விளைநிலங்களை விட்டுக்கொடுத்ததாக ஆழ்வார் திருநகரிக் கல்வெட்டுக்களிற் காணப்படுகின்றன. விஜயரங்க சொக்கநாத நாயக்கன் கி. பி. 1715-ல் குற்றாலக் குறவஞ்சி பாடிய மேலகரம் திரிகூட ராஜப்பக் கவிராயருக்குக் "குறவஞ்சிமேடு" என்று இன்றும் வழங்குகிற விளைநிலத்தைச் சர்வமானியமாக விட்டுக்கொடுத்தான்—" என்பது. தேவராய சுவாமிகள் ஆதீன பரம்பரைச்சரித்திரம்.

இங்ஙனம் நாயக்கர் ஆட்சி, தென்னாட்டிலும் பிரபலம்

பெற்றிருந்ததால் திருவழுதிவளநாட்டில், தாமிரவருணியின் வடகரையிலுள்ள சில கிராமங்களின் உரிமைகளை நாடார்கள் இழந்தனர். அவை பார்ப்பனர், வேளாளர் முதலியோர்க்கு உரிமையாயின.

இனித் திருநெல்வேலியிலும் அதன் மேல்பக்கங்களிலும் ஆட்சிசெய்த பாண்டியர்களைப்பற்றிக் கவனிப்போம்.

## 13. வீரபாண்டியன் (1552—1564).

பஞ்சபாண்டிய—நாயக்க யுத்தம் நிகழ்ந்த காலத்தில் திருநெல்வேலியிலிருந்து அரசுபுரிந்தவன் "வீரபாண்டியன்" என்னும் வேந்தனாவன்.

மதுரைத் திருப்பணிமாலையில், விசுவநாத நாயக்கனைக் குறித்த ஓர் பாடலில்—

"விஞ்சிவரு திருவடி தனைப்பொருது திறைகொண்டு
மீனவனை வாழ்வித்த மால்
* * * * " என வருகின்றது.

இப்பாடலின் கருத்தை உற்றுநோக்குகையில், விசுவநாத நாயக்கன் திருவழுதிவளநாட்டுப் பஞ்சதிருவடி ராஜாக்கள் அல்லது பஞ்சதிருவழுதி நாடார்கள் என்னும் பாண்டியரைச் செயித்துத் திறைகொண்டு திருநெல்வேலிப் பாண்டியனாகிய வீரபாண்டியனுடன் நட்பாயிருந்து வந்தானென்பது புலனாகின்றது. பாண்டியநாயக்க யுத்தகாலத்தில் கயத்தாற்றுப் பாண்டியனும், தென்காசிப் பாண்டியனும் கொச்சிராஜ்யத்திற்குச் சென்றுவிட்டதாக "வடகரைஜமீன் சரித்திரம்" கூறுகின்றது. அப்பாண்டியர்களைப் போல இவ்வீரபாண்டி

யனும் பாண்டியர்—நாயக்க யுத்தசமயத்தில் வேற்றிடம் போயிருக்கலாம். வீரபாண்டியன், தன்மகளை ஆதித்த நாடார்குலத் தலைவனொருவனுக்கு மணப்புரிவித்து, அவனை வீரபாண்டியன் பட்டணத்துக்கு மன்னவனாக்கி அரசாளும்படி செய்தானென்று ஆதித்தநாடார் சரித்திரம் குறிப்பிடுகின்றது.

பாண்டியராஜ வம்ச சரித்திரம் எழுதிய ஸ்ரீமான் R. அரிகரமையர், தாமியற்றிய திருநெல்வேலிஜில்லாச் சரித்திரத்தில், "திருநெல்வேலியில் ஆண்ட வீரபாண்டியன், கயத்தாற்றுக் காவலனான வெட்டும்பெருமாள் பாண்டியனோடு 'இளவேலங்கால்' என்னும் இடத்திற் போராடி அவனை வென்று கயத்தாற்று ராஜ்யத்தைத் தன் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான்' என வரைந்துள்ளார்.

கயத்தாற்றில் ஆண்ட வெட்டும்பெருமாள் பாண்டியனென்பவன், முற்கூறப்பட்ட ஐவர் ராஜாக்களில் மூத்தோனாகிய குலசேகரப்பெருமாள் பாண்டியனுக்குத் தன்புத்திரியை மணஞ்செய்து கொடுத்தோனாவன். "வெட்டும்பெருமாள்"— என்னும் பட்டப்பெயர், கயத்தாற்றுப் பாண்டியர்களுக்கு வமிசபரம்பரையாய் வழங்கிவந்த பட்டப்பெயர்போலும்! வீரபாண்டியனால் அரசு இழந்த வெட்டும்பெருமாள் பாண்டியன தும்பியினர், தென்கடற்கரையிலுள்ள * குட்ட

---

* திருவழுதிவளநாட்டிற்குத் தென்பாலுள்ள மானவீரநாடு, குட்டநாடு என்ற இருநாடுகளும் முற்காலத்திற் பிரபலம் பெற்று விளங்கின. திருச்செந்தூர் என்னும் ஸ்தலம், குட்டநாட்டின் கண்ணுள்ளதே. திருச்செந்தூர்ச் சாஸனங்களில், (குட்டநாடு) குடநாடு திருச்செந்தூர் என்று காணப்படுகின்றது. குடம் — 'குட்டம்' என்பதின் இடைக்குறைவிகாரம்.

இலக்கண நூல்களிற் சொல்லப்பட்டிருக்கும் கொடுந்தமிழ் நாடுகளில் ஒன்றான குட்டநாடு இதுதான் என்பது சிலர் கொள்கை.

காட்டிற் சென்று வசித்துவந்தனர். இவர்களுடைய சந்ததியார், வெட்டும்பெருமாள், குத்தும்பெருமாள், வீரசூரப் பெருமாள் என்று பெயரிட்டு அழைக்கப்படுகின்றனர். திருநெல்வேலியில்ஆண்ட வீரபாண்டியனதுகாலமும், விசுவநாத நாயக்கனது காலமும், விஜயநகரராஜ்ய ஆட்சிக்காலமும் முடிவுபெற்றன (கி. பி. 1564). நாடார்குல மக்களுக்கு எய்திய இன்னல்கள் விசுவநாதன், வீரபாண்டியன் ஆகிய இவர்களின் காலங்களில் மிகுதியாயில்லாமலிருந்து, இவர்கள் காலங்கடந்தபின்னர் அதிகமாயின என்று தெரிகின்றது.

## 14. அரிகேசரி பராக்கிரமபாண்டியன் (கி. பி. 1420—1462)

அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தென்காசியில் அரசாட்சி செய்தான். இவன் சிம்மாஸனமேறினதும் விக்கிரம சிங்கபுரம், ராஜவல்லிபுரம், விந்தநல்லூர், வைப்பாறு, செண்பை, அறந்தை, முதலை, அனுரை என்ற எட்டு ஊர்களிலும் ஆண்ட சிற்றரசுப் பாண்டியரைத் தோற்கடித்து வாகை புனைந்தானென்று திருநெல்வேலி ஜில்லாச்சரித்திரம் சொல்லுகின்றது.

கி. பி. 1324-ல் நடந்த மகமதியப் படையெடுப்பினாற் சிதறுண்ட பாண்டியர் குடும்பங்களில், தென்காசிக்குவந்து குடியேறிய அரசர் சந்ததியையோ, அல்லது தென்காசியிலேயே பரம்பரை பூர்வமாக வாழ்ந்த பாண்டிமன்னரது சந்ததியையோ சார்ந்தவன் இவ்அரிகேசரி பராக்கிமபாண்டியன் என்று புலப்படுகின்றது. இவ்அரிகேசரி பராக்கிரம பாண்டியனது ஆட்சிக்காலம்– கி. பி. 1420 முதல் 1462 வரையான 42 வருடங்களாகும்.

தென்காசிப்பதியில் விசுவநாதர் ஆலயத்தைக் கட்டியவன் இப்பாண்டியனே! இவ்வரிகேசரி பராக்கிரமபாண்டியனுக்கு காசிகண்ட பாண்டியன், செண்பகராம பாண்டியன் அண்ணுவிப்பாண்டியன் என்ற பெயர்களும் வழங்குகின்றன. இப்பாண்டியன் தன் தேவியுடன் காசிக்குச்சென்று சிவலிங்கம் கொண்டுவரும் பொழுது பாண்டி மண்டலத்திலுள்ள * மல்லி நாட்டில் வரும்பொழுது அரசமாதேவி பூப்பு எய்தினுள். அவ்விசேஷ வைபவத்தை முன்னிட்டு, பாண்டியன், சிவலிங்கம் ஸ்தாபித்துப் பூஜை செய்த இடமே-"சிவகாசி" என்று வழங்கலாயிற்று

பொதியெருது வர்த்தகத்தைத் தம் தொழிலாகக் கொண்ட நாடார்குலமக்கள், சுமார் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் சிவகாசியைத் தம் வாசஸ்தலமாக்கிக்

---

* மல்லிநாடு:— 'வில்லி' யென்னும் வேடனது தாயான "மல்லி" என்பவள் ஆண்டநாடு – மல்லிநாடு. ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் சிவகாசிக்கும் இடையிலுள்ள பிரதேசமே – மல்லிநாடு. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலைப் பாடலில், "மல்லிநாடாளும் மெல்லியல் நினக்கு" என வருவதூஉங் காண்க. சிலப்பதிகாரத்தில் கட்டுரை காதையிற் கூறப்படும் 'திருத்தங்கால்' என்னும்பதி சிவகாசிக்கு அருகிலுள்ள திருத்தங்கல் என்னும் க்ஷேத்திரத்தைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். "பாண்டிநாட்டிலுள்ள தோரூர்; இது வார்த்திகனுக்கு ஒரு பாண்டியனாற் கொடுக்கப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சமீபத்திலுள்ளது; திருத்தண்கால் என வழங்கும்"............டாக்டர் வே. சாமிநாதையர். இவ்வூர் சிவகாசிக்கு வடக்கே 2 மைல் தூரத்திலுள்ளது.

கொண்டனர். பெரியவீரப்ப நாயக்கனது ஆட்சியினிறுதிக் காலமும் ஏறக்குறைய அக்காலமேயாம். கி. பி. 1623-ல் மதுரைமாநகரிலே பாண்டிய ராஜ்பாதிபதியாகச் சிங்காதனமேறிய திருமலை நாயக்கனது தம்பியாகிய குமாரமுத்து நாயக்கனென்பான் சிவகாசியின் பிரதிநிதியாகச் சிலகாலம் விளங்கினான். அவனது ஆட்சிக்காலத்திற்றான் சிவகாசி வளம்பெறத் தொடங்கிப் பின்னர் நாளாவர்த்தியில் நாடார் குல மக்களின் நன்முயற்சியால் சீரும் திருவும் பொலியும் மணிநகராகமாறலாயிற்று. இதைப்பற்றி ஸ்ரீ தேவராயசுவாமிகள் சரித்திரத்திலும் சங்கிரகமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

## 15. அரிகேசரி பாண்டியன் சந்ததியார்.

அரிகேசரி பராக்கிரம பாண்டியனின் மகன் அபிராம பராக்கிரம பாண்டியன். இவன் மகன் வீரபாண்டியன். பஞ்சபாண்டியர் யுத்தகாலத்திலே நெல்வேலிப் பதியில் அரசாண்டவன் இவனேயாவன். இவனது தாயாதிக்காரர்களில் ஒருவன் ஆகவராம பாண்டியன். அவனே கங்கைகொண்டானில் ஆண்ட காவலனாவன். முன்பு இந்நூலின் 92-ஆம் பக்கத்தில்குறிப்பிட்ட சந்திரசேகரபாண்டியனென்ற அவனிவேந்தராம பாண்டியன், இவ்ஆகவராம பாண்டியனே யென்று எளிதின் யூகித்துக்கொள்ளலாம். மதுரைத்தல வரலாற்றில், "பாண்டியர் வழியில் ஒரு தாயாதிவர்க்கமான அவனிவேந்தராம பாண்டியன், தக்ஷிணம் – கங்கைகொண்டானில் லட்சம்பொன் கிடைக்கக்கூடிய பூமியை அடைந்தான்" என வருவதே இதனை வலியுறுத்தும்.

## 16. வீரபாண்டியன் சந்ததியார்.

முன் சொல்லிய திருநெல்வேலி – வீரபாண்டியனுக்கு இரண்டுபுதல்வர்கள் இருந்தார்கள். அப்புதல்வர்களில் மூத்தவன் சீவலபாண்டியன்; இளையவன் அதிவீரராம பாண்டியன்; இவர்களின் மற்றொரு தாயாதி * வரதுங்கராமபாண்டியன். கீழ்வேம்பு நாடு, மேல்வேம்பு நாடு, முள்ளிநாடென்று வழங்கும் திருநெல்வேலிச்சீமை; தென் ஆரியநாடு, கல்லகநாடென்றழைக்கப் பெறும் தென்காசிச் சீமை; செல்லி நாடென்று

---

* வரதுங்கராமபாண்டியன் என்பவன், மகம்மதியர் படையெடுப்பில் மதுரை, கொற்கைநகரங்களில் ஆண்டு பின் சிதறுண்டபாண்டியர்களில் ஒருவனுகி கரிவலம்வந்தநல்லூர்ப் பக்கம் சிங்கந்திடர் என்னுமிடத்தில அரசியலையும், கரிவலம் வந்தநல்லூர் பால்வண்ணநாதர் ஆலயத்தையும் ஏற்படுத்தியவன்ஆவன் இவன் அந்தியத்தைப்பற்றிய கவி.

இறுதியிலாப் புகழ்பரவக் கலியுகவாண் டொருநாலாயிரத்து நானூற்
றறுபதுவி சாரியாம் வருடமார் கழிமாதம் அமர பக்கம்
மறுவில்சதுர்த் தசியெனுநா ளிற்கருவை யம்பதிப்பால் வண்ண நாதன்
நறுமலர்த்தாட் கன்புடையோன் வரதுங்கன் பரமபதம் நண்ணி னானே.

என்று கரிவலம்வந்தநல்லூர்த் தலபுராணத்திற் காணப்படுகின்றது. இப்பாட்டிற் சொல்லியவருடம், கலியுகம் 4460 (கி. பி. 1360). நாம்சொல்லிவருகிற வரதுங்கராமபாண்டியன் காலம் கி. பி. 1560. 200 வருடங்கள் முன்பின்னுக இருப்பதால் பாட்டிற் சொல்லியிருக்கப்பட்ட வரதுங்கராமபாண்டியன் இப்பாண்டியனின்முதாதைகளில் ஒருவனுகஇருககலாம்

கூறப்படும் கரிவலம்வந்தநல்லூர்ப்பக்கம், சோழாபுரம் ஆகிய இடங்களில் முறையே முற்கூறிய மூவர் பாண்டியர் ஆட்சி புரிந்து கொண்டிருந்தனர். இவர்களது அரசாட்சிக் காலம் கி. பி. **1560**-க்குப் பிற்பட்டதே யாகும். விஜயநகர ஆட்சி, இக்காலத்தில் அடியோடு தொலைந்து போய்விட்டமையால், இவர்கள் மதுரையில் அரசாண்ட கர்த்தாக்களாகிய நாயக்க மன்னர்களுக்கே கப்பம் செலுத்திக்கொண்டிருந்தனரென்று தெரிகின்றது. வரதுங்கராம பாண்டியனும், அதிவீர ராம பாண்டியனும் சிவபக்திச் செல்வமும், செந்தமிழ்ப் புலமையும் வாய்ந்தவர்களாய் விளங்கினர். இவர்களாற் பாடப்பெற்ற நூல்கள்: பிரமோத்திர காண்டம், நைடதம், கொக்கோகம், கூர்மபுராணம், இலிங்கபுராணம். மாகபுராணம், காசிகாண்டம், கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி, கருவைக்கலித்துறையந்தாதி, கருவை வெண்பாவந்தாதி, அம்பிகைமாலை, நறுந்தொகை முதலியன செந்தமிழ்த் தெய்வத்தின் திருவாபரணங்களாகத் திகழ்கின்றன.

வீரபாண்டியனின் மூத்தகுமாரனான சீவலபாண்டியன்;

“ சகன்காலம் ஆயிரத்து நானூற்றெண் பத்தாறிற்
சலதி சூழ்ந்த
செகங்காண விரதத்தாட்சி ஆண்டுசித் திரையிருபான்
தேதி வேந்தர்
புகழ்ந்தேவல் செய்பூர்வ திதியாறில் முதல்வாரம்
புனர்பூ சத்தில்
சுகந்தாதி புனையழகன் சீவலவேள் எனமகுடம்
சூடி னானே.” ...... எனவருஞ்

செய்யுளின்படி கி. பி. 1564—ல் திருநெல்வேலியில் மகுடாபிஷேகஞ் செய்து கொண்டான்.

இளையகுமாரனான அதிவீரராம பாண்டியன் தென்காசிப்பதிக்கு அரசானான். அவன்மகன் ஸ்ரீவல்லப பாண்டியன் (கி. பி. 1616-வரை) சிலகாலம் அரசாண்டிருந்தான். அவனுக்குப்பிற்பட்ட பாண்டியர்வரலாறு சரித்திரவாயிலாக அறியக்கூடவில்லை.

## 17. தென்காசிப் பாண்டியர்களின் முடிவு.

தென்காசிக்கருகில் உள்ள பாவூருக்கு மேல்பக்கத்தில் குறும்பலாப்பேரி என்று ஒரு ஊர் உண்டு. அவ்வூரில்வாழும் பெரியாரொருவரது வீட்டிலுள்ள ஏட்டுப்பிரதியில் பாடல் ரூபமானவரலாறு ஒன்று வரையப்பட்டிருக்கின்றது. தென்காசியில் ஆண்ட பாண்டியர்களின் முடிவுகாலத்தைப் பற்றிய குறிப்பு அவ்வரலாற்றால் நன்கு விளங்குகின்றது. அதன் விபரம் அடியில் வருமாறு:—

தென்காசியில் ஓர்பாண்டியன் கீர்த்தியுடன் அரசாண்டு வந்தான். அவனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தனர். அம்மன்னவன்பெயரும், மைந்தர்பெயரும் அறியக்கூடவில்லை. மூத்தவன், தந்தையிறந்தபின் சிங்காதனமேறினான். இளையவன், இளவரசாகவோ, அல்லது ராஜ்யத்தில் பிரசித்திபெற்ற வேறு அதிகார முடையவனாகவோ மேன்மையுற்று விளங்கினான். தென்காசியின் மேல் புறத்தில் ஒன்றும், கீழ்புறத்தில் ஒன்றுமாக இரண்டு கோட்டைகள் இருந்தன. மூத்தவன் மேலக்கோட்டையிலும், இளையவன் கீழைக்கோட்டையிலும் வசித்துவந்தார்கள். மூத்தவனுக்கு அழகன் பெரு-

மாள்பாண்டியன், வீரபாண்டியன் என இரண்டு புத்திரரும், இளையவனுக்கு குலசேகரபாண்டியன், சிவலபாண்டியன் என இரண்டு குமாரரும் இருந்தனர். நால்வர் அரசகுமாரரும் வளர்ந்து வாலிப மடைந்தனர். அவர்களுள் மூத்தவனை அழகன்பெருமாள் அரியணையேறினன். தந்தையர் வாழ்ந்த வாறே மூத்தவன் மைந்தன் மேலைக்கோட்டையிலும், இளையவன்குமாரர் கீழைக்கோட்டையிலும் வசித்தார்கள். தந்தையர் வானுலகேறினர். அப்பால் மைந்தர்க்குள் மனக்கசப்பு ஏற்படலாயிற்று. இளையவன் மைந்தருள் மூத்தவனாகிய குலசேகரன், அரசுபுரக்கும் அழகன் பெருமாளிடம் தனக்குப் பாதிராஜ்யம் பகிர்ந்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தான். அழகன்பெருமாள் யாதுகாரணங்கொண்டோ, அவ்வேண்டுகளை மறுக்க மனமின்றி "அங்ஙனமே பாதி ராஜ்யம் தருவேன்," "தருவேன்" எனக் காலகரணஞ் செய்து கொண்டிருந்தான். இதுவே காரணமாக, இவ்விருவருக்குள் உட்பகை தோன்றி வளர்லாயிற்று. ஒருவர்மேல் ஒருவர் சீற்றமும் கொண்டனர். வைராக்கியம் நாளுக்குநாள் முதிர்ந்து கொண்டிருந்தது.

ஆயினும் வஞ்சகராகிய இளையவன் மைந்தர் தம் பகைமையை வெளிக்குக் காட்டாமல் நட்பும் உறவும் சிறிதும் குறையாதவர்போலவே நடித்து வந்தார்கள்; தாம்வசிக்கும் கீழைக்கோட்டையில் நிலவறையொன்று அமைத்தார்கள். ஒருநாள் அம்மைந்தர் அந்நிலவறையில் கொலையாளிகள் சிலரை மறைந்திருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டுத் தம் பெரியதகப்பனது மைந்தர் வாழும் மேலைக்கோட்டைக்குச் சென்று, அவர்களுடன் அன்பாக வெகுநேரம் பேசிக்கொண்

டிருந்தார்கள். அவர்கள் தம்மை விபரீதமாக எண்ணமாட்டார்கள் என்பதை நன்குணர்ந்த கீழைக்கோட்டைக் குமாரர்கள், "இன்று எம்மனையில் ஓர்விசேஷம் நடைபெறுகின்றது. நீங்கள் விருந்துக்குவரவேண்டும்" என்று அன்பாக அவர்களை அழைத்தார்கள். வஞ்சகமறியாத அவ்விருவரும், "ஆஹா! அப்படியே வருகிறோம்" என்று ஒப்புக்கொண்டனர். வந்தவர் இருவரும் தம்மிடத்திற்குத் திரும்பினர்.

அச்சமயத்தில், அழகன் பெருமாள் பாண்டியனது தேவி, "நேற்றிரவு நான் நித்திரை செய்யும் பொழுது கனவு ஒன்றுகண்டேன். அதாவது — கிழக்கேயிருந்து இரண்டு வண்டுகள் மேற்குநோக்கி வந்தன. மேற்கேயிருந்த இரண்டு வண்டுகள் எதிர்சென்று பின் அவைகள் நான்கும் ஒன்று சேர்ந்து சென்றன. நீர்நிறைந்த தாமரைத்தடாகம் ஒன்று காணப்பட்டது. அதன் நடுவே ஓர் செந்தாமரை மலர் பூத்திருந்தது. வண்டுகள் அம்மலரை நாடிச்சென்றன. அதில் அவைகள் உட்கார்ந்தன. உடனே தாமரை இதழ்கள் திடீரென்று குவிந்தன. உள்ளேசென்ற வண்டுகள் அப்படியே மறைந்து போய்விட்டன. இவ்விதம் நான் சொப்பனங் கண்டமையால் நீங்கள் விருந்துக்குச் செல்வது உசிதமன்று. உங்களுக்கு ஏதேனும் அபாயம் நேருமோ என்று அஞ்சுகின்றேன்" என்று கூறி அரசகுமாரர், தம் சகோதரர் வீட்டுக்குச் செல்வதைத் தடுத்தாள். அவள் எவ்வளவோ கூறியும், அவர்கள் அப்பேதையின் சொல்லைப் பொருட்படுத்தாமல் கீழைக்கோட்டை நோக்கிச்சென்றார்கள். வஞ்சகமைந்தர் அவ்விருவரையும் அன்புடன் வரவேற்று முகமன்கூறி உள்ளே அழைத்துச் சென்றார்கள். சம்பிரமமான விருந்து

முடிந்து சகோதரர் நால்வரும் சல்லாபமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது வஞ்சகர், விருந்தினரிருவரையும், நோக்கி, "யாம் இக்கோட்டையில் புதிதாய் ஒரு நிலவறை யமைத்துள்ளோம். அதை நீங்கள்பார்க்கவேண்டாமா?" என்று கூறியவாறே அவர்களிருவரையும் அழைத்துக் கொண்டு சென்று, சாதுரியமாய் அவர்களை நிலவறைக்குள் தள்ளிக் கதவைச் சாத்திப் பூட்டிவிட்டனர். கொலையாளிகளோ இருவர்மீதும்பாய்ந்து கொல்லமுயன்றனர். மூத்தன் கொலையுண்டான். இளையவனாகிய வீரபாண்டியன், எதிர்பாராது நேரிட்ட இடையூற்றை நினைந்து, மனங்கொதித்துத் தாங்கொணக் கோபத்துடன் கொலையாளிகளைத் தாக்கிக் கொன்று, நிலவறையைத் திறந்து வெளியேறி அங்குநின்ற இருவர் ராஜ குமாரரையும் தன் வாளிற்கு விருந்திட்டான். பழிக்குப்பழி வாங்கிய பாண்டியன், "சுற்றத்தாரும் தமையனும் இறந்த பின் நாமிருந்து என்னபயன்?'; என்று கருதி, வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தற்கொலை புரிந்து கொண்டான்.

கீழைக்கோட்டையில் நடந்த செய்திகள் நிமிஷநேரத்தில் மேலைக்கோட்டைக்கு எட்டிற்று. அழகன்பெருமாள் பாண்டியனின் பத்தினி ஆற்றொணுத் துயரமடைந்து மனம் புழுங்கி, "ஒரே குடும்பத்திற் பிறந்தவர்கள் இங்ஙனம் வஞ்சனை மோசங்கள் செய்து கொன்று மடிந்தார்களே! இனித் தென்காசியில் என்குலத்தார் இருக்கமாட்டார்கள்" என்று சாபம்கூறிக் கனலிற் பாய்ந்து கணவன் சென்ற வழிச் சென்றாள். இத்துடன் தென்காசியிற் சிறப்புற்று விளங்கிய பாண்டியர் ஆட்சி அடியோடொழிந்தது.

இக்கதைத் தொடக்கத்திற் கூறப்பட்ட பாண்டியன்,

கி. பி. 1616 வரை யாண்ட ஸ்ரீவல்லப பாண்டியனது மகன் அல்லது பேரனாக இருக்கலாம். வைகரைஜமீன் சரித்திரத் திற் சொல்லப்பட்டிருக்கும் மாவலிவெட்டு மாறனது சந்ததி யாகவுமிருக்கலாம். எங்ஙனமாயினும் தென்காசியிற் பாண்டி யர் ஆட்சி ஒழிந்தது. நாயக்கரது ஆட்சி ஏற்படலாயிற்று.

## 18. தென்காசிப்பாண்டியர் சந்ததியும்— நாடார்குல மக்களும்.

மேற்கூறியவாறு திடீரென வானுலகு சென்ற பாண்டி யர் நால்வரில், ஒருவனுக்கு மைந்தர் இருவர் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் அபிராமபாண்டியன் என்பவன்; மற்ற வன் குலசேகரபாண்டியன் என்பவன். இவ்விருவரும் தென் காசிக்குக் கிழக்கேயுள்ள குறும்பலாப்பேரி, பாவூர் முதலிய வூர்களில் வசித்து வந்தனர். அவர்கள் தம் மூதாதையர்க்குச் சொந்தமாகவிருந்த ஏராளமான விளைநிலங்களைத் தம் வசப் படுத்திக் கொண்டு அவற்றின் உதவியாற் சுகமாக வசித்து வந்தார்கள். நாயக்கர், மறவர் ஆகியவர்களின் ஆட்சி ஆங் காங்குத் தோன்றிப் பரவலாயிற்று. மதுரைக்கர்த்தாக்களின் உதவியும் ஆதரவும் அத்தலைவர்களுக்கு இருந்தபடியால், பலங்குன்றிய அப்பாண்டியர் சிறகு ஒடிந்த பறவைபோல யாதும் இயலாமல் வாழ்ந்துவரலாயினர். அபிராமபாண்டிய னுக்குக் குறும்பலாப்பேரியிலும் பாவூரிலுமாக சுமார் நூற் றிருபது கோட்டை விரைப்பாடுள்ள விளைநிலங்களிருந்தன. பாண்டியர் மரபினரான கீழ்ப்பாவூர் * கூத்தராம நாடன்,

* ஆதிபரிமேலழகர் வகையைச்சேர்ந்த "சிவலோகநாதர்" என்னும் நாடார்குலக் குருக்களின் பழமையான திருவாலய மொன்று குறும்பலாப்பேரிக்கும் – பாவூருக்கும் இடையில் அமைந்துள்ளது. இக்குருக்கள், பல அற்புதங்களையியற்றிய பெரியார். கூத்தராமநாடன், பெரியராமநாடன், வினோ தீத்தநாடன் ஆகிய மூவர் அவ்வாலயத்திருப்பணிகளையியற் றியவர்கள். ஆகவே இம்மூவரது பிரதிமைகள் அவ்வாலயத் தின் கற்றூண்களிற் காணப்படுகின்றன.

பெரியராம நாடன், வினைதீர்த்த நாடன் ஆகிய இவர்கட்கும், இவர்களது சந்ததியார்க்கும் அவ்விளைநிலங்கள் உரியனவாகி, அவர்களால் அநுபவித்து வரப்பட்டிருக்கின்றன. அந்நிலங்கள் தற்காலம் பலபோ தைக்கு மாறிச்சிதறிக்கிடக்கின்றன. குலசேகரபாண்டியன், குறும்பலாப்பேரியில் வந்து தங்கிய இடம், "குலசேகரபுரம்" என இன்றும் வழங்குகின்றது. குலசேகரபாண்டியனது மகன் — மலையராமபாண்டியன். இவனது சந்ததியாராகிய முந்நூறு வீட்டுக்காரர்கள் இக்காலத்திலும் அப்பக்கங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

தென்காசித் தாலுகாவில் வீரகேரளம் புதூருக்குப் பக்கத்தில் வாழ்ந்து தற்பொழுது சென்னைப் பட்டணத்திற் குடியேறியுள்ள டாக்டர் **A. C.** ஆசீர்வாதநாடார் முதலியோர், தென்காசியை யாண்ட அபிராமநாடாள்வார் என்னும் அபிராமபாண்டியனின் நேரான சந்ததியார் என்ற ஐதீகம் இன்றளவும் வழங்கி வருகின்றது.

திருச்செந்தூர்த் தாலூகாவைச்சேர்ந்த பள்ளக்குறிச்சி கிராமத்தில் வசிக்கின்ற விசுவநாதநாடார், தாம் முந்நூறு வருடங்களுக்கு முன் தென்காசியையாண்ட சிற்றரசுப்பாண்டியனின் வமிசத்தவர்என்று தம்மைச்சொல்லிக்கொள்கிறார்.

—நாடார்குலவரலாறு

மற்றப்பாண்டியர் இனங்களும் நாடார் இனங்களாய் இவ்விதம் கலந்துவிட்டன. இதுநிற்க.

கி. பி. **1595** முதல் **1602** வரை—லிங்கமநாயக்கராட்சி; **1602** முதல் **1609** வரை – விசுவநாத நாயக்கராட்சி; **1609** முதல் **1623** வரை முத்துவீரப்ப நாயக்கராட்சி. இங்ஙனம் மதுரைக் கர்த்தாக்களாகிய நாயக்கராட்சி நடைபெறுங்காலத்

தில் நாடார்குல மக்களுக்கு ஏற்பட்டிருந்த சகிக்கவியலாத இன்னல்கள் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து சிற்சில கிராமங்களில் ஆங்காங்கு நிலையான வாழ்க்கை யெய்தலாயினர். அவ்வாறு நிலையுற்ற இடங்களில், வர்த்தகப்பொருள்களை வசதியாகவைத்தற்கும், வியாபாரிகள் தங்குதற்குமாகப் பேட்டைகளைக் கட்டினர்; "பேட்டை நாடார்கள்" என்ற பெயரும் சிலர் பெறத்தொடங்கினர்; "வியாபாரிகள்" என்ற பட்டமும் வழங்கலாயிற்று. ஆயினும் நாடார்குலமக்கள் ஜமீன் பாளையப் பட்டுக்களிடம் தாமரையிலைத் தண்ணீர் போலத் தங்கிச் சமயோசிதம் போலத் தமக்குகந்த சௌகரியங்களையும் தேடிக் கொள்ளவேண்டியவராயினர்.

## 19. ரகுநாத சேதுபதி, (1647—'72).

பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சேதுநாட்டையாண்ட ரகுநாத சேதுபதி, பாண்டியனைத்தாக்கிய எட்டையாபுரம் முதலிய பாளையப்பட்டுத் தலைவர்களை அடக்கி, அவ்வுதவியின் பயனாக "சுவாமிதுரோகிகள் முண்டன்" என்னும் பட்டமும், சுவாமிதுரோகிகள் வண்டையமும் அணிந்தவர்; மேலும் திருநெல்வேலியிலிருக்கும் வண்ணார்கோவில்மாகாணமும், திருநெல்வேலிக்கரையில் முத்துச் சலாபமும் பெற்றவர் என்பதாகச் செந்தமிழ்த்தொகுதி 6, பக்கம் 45-ல் ஸ்ரீமான் ரா. ராகவையங்காரவர்கள் கூறியிருக்கின்றனர்.

இவ்வசனத்தை நாம் கவனிக்கும்பொழுது, பாண்டியர் பரம்பரை இந்நாட்டிற்கு உரிய உயிர்நிலை யென்பதும், அம்மரபு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரரின் தெய்வீகமரபு என்ப

தும், பாண்டியர் குலத்தினர்க்குத் துரோகம் இழைத்தல அம்மீனாட்சிசுந்தரேஸ்வரருக்கே துரோகம் செய்தது போலாகும் என்பதும் ஆகிய பல உண்மைகளைக் கருதியே, சேதுபதி, பாண்டியரது நேசத்தை விரும்பிப் பாளையப்பட்டுத் தலைவர்களையழிக்க ஒப்புக்கொண்டதாகத் தெரிகின்றது. முண்டன்–பகைவர்களைமுண்டி அடக்கவல்லவன் வண்டையம்–பகைவரைக் கொன்றொழித்து அவ்வெற்றியின் அறிகுறியாகக் காலில் அணிந்து கொள்ளும் ஆபரணம். வண்ணார் பண்ணை மாகாணம்–இன்னதென்பது தற்காலம் திட்டமாய்த் தெரியக்கூடவில்லை தாமிரபரணியின்தென்கரையில், "சேது வாய்க்கால்" என்று ஓர் கிராமமுளது. அதனருகில் ஓர் ஆற்றுக்காலும் ஒடிக்கொண்டிருக்கிறது. வண்ணார் கோவில் மாகாணம் என்பது இதுசம்பந்தமாய் ஏற்பட்டிருக்கலாம். திருநெல்வேலிச் சில்லாக் கடற்கரையென்பது–தூத்துக்குடி, ஆறுமுகனேரி முதலிய ஊர்களாகும். சேதுபதியின் ஆட்சிக்காலம் கி. பி. 1647—1672 ஆதலால், திருநெல்வேலியில் 1564-ல் முடிசூடிய வீரபாண்டியனது மகனான சீவலபாண்டியனது ஆட்சி நிலைபெற்றிருக்க, அப்பாண்டியனது நேயத்தையே சேதுபதி அடைந்திருக்கவேண்டும். சேதுபதியின் நேயம் பெற்றவன் வீரபாண்டியனது பேரனாகவுமிருக்கலாம்.

## 20. திருமலை நாயக்கன்.

மதுரைமாநகரில் ஆண்ட நாயக்க மன்னருள் பெருங்கீர்த்தி வாய்ந்தவன் - திருமலை நாயக்கன். திருமலை சவுரி நாயினி அய்யலுகாரு எனவும் இவன் வழங்கப் பெறுவன். கி. பி. 1623 முதல் 1659 வரையான வருடங்களில் இம்மன்னவன் செங்கோல் செலுத்தினான். திருமலைநாயக்கனைப்

பற்றி வழங்கும் பற்பல விசித்திரக்கதைகளும், அவன் கட்டிய மணிமாமண்டபமும், வெட்டிய வண்டியூர்த் தெப்பக்குளமும், இயற்றிய ஆலயத்திருப்பணிகளும் உலகப்பிரசித்தமானவை. இவ்வரசனால் ஆதரிக்கப்பெற்ற புலவரும் பலர்.

திருமலைநாயக்கனது தளகர்த்தன் இராமப்பையன் என்பவன். அவன், நாயக்கர்ஆட்சியில் அதற்குமுன் செயிக்கப்படாத பலவிடங்களைச்செயித்து நாயக்கராஜ்யத்தைப் பரவச்செய்தான். நாயக்கர் ஆட்சியில், திருமலைநாயக்கனதுகாலம் பிரசித்திபெற்று விளங்கியதற்கு இத்தளகர்த்தனது ஆற்றலும் உதவியுமே முக்கியாமிசங்களாய் விளங்கின. நாயக்கரதுஆட்சி வளர்பிறைபோல் வளர வளர, சிற்றரசுகளாக வேனும் ஆங்காங்குத் தலைகாட்டிக் கொண்டிருந்த பாண்டிய வமிசம் தேய்மதிபோலக் குறைந்துகொண்டு வந்தது பாண்டியவமிசம் அரசுரிமையை அடியோடுஇழத்தற்கு, திருமலைநாயக்கனது ஆட்சி மாட்சியுற்றதே முக்கியகாரணமாகும்.

இவ்வுண்மை பின்வரும் பாடலால் நன்குஅறியப்படும்:-

திரமேற விஸ்வநாதத் திருமலேந்திரன்
சித்தமகிழ் ராமப் பையன்
செங்கோட்டு வேலருடன் உமைபாகரைத்தொழுது
திக்குவிஜ யஞ்செய்தனன்;
உரமான தென்கடற் றிருவணை யடைத்தனன்;
உலகுநாற் பதிலக்கமும்
ஒருகுடைக் கீழாக வாக்கினை புரிந்தனன்;
உடையவன் மனது வரவே
துரமான மலையாளமுங் கொள்ளை கொண்டனன்;
துட்டரைக் கழுவேற்றினன்;

சோரரை யொடுக்கினன்; குருவியழ கன்தலை
துணித்தனன்; பாண்டியரையும்
பொரமாற விட்டுச் சடைக்கனை யடக்கினன்;
பூசுரர்கள் தேவர் பதியும்
பொலிவுற நடத்தினன் சந்திரசூ ரியரளவு
புகழ்நிலை நிறுத்தி னனே.

இஃது திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையிலுள்ள பாடல். "பாண்டியரையும் பொரமாறவிட்டு" என்று வருவதே, நாம் முற்கூறிய விஷயத்திற்கு உண்மையான சான்று பகரும்.

## 21. பாளையப்பட்டுகள்.

பாண்டியர் ஆட்சி அநேகமாய் ஒழிந்தது. பாளையப்பட்டுகள் சிறப்புற்று ஓங்கிவளரத் தலைப்பட்டன. நாயக்கர் ஆட்சியில்ஏற்பட்டிருந்த பாளையப்பட்டுகள் எழுபத்திரண்டு. அவை யாவன:—

1. இராமநாதபுரம் — சேதுபதி
2. சிவசெங்கை — உதையத்தேவர்
3. புதுக்கோட்டை — தொண்டமானூர்
4. அரியலூர் — நயனூர்
5. துரையூர் — ரெட்டியார்
6. இலுப்பூர் — காமாட்சி நாயக்கர்
7. குளத்தூர் — இராமசாமித்தொண்டமானூர்
8. காத்தலூர்பெறும்பு — தீத்தக்குட்டித் தேவர்
9. மருங்காபுரி — பூச்சிநாயக்கர்
10. நத்தம் — லிங்கமநாயக்கர்

11. ......... — லக்கையநாயக்கர்
12. ......... — வீரணர்காமிநாயக்கர்

13. தொகைமலை — விசுவப்பநாயக்கர்
14. ......... — பிள்ளைமுழுங்கிமூர்த்திநாயக்கர்
15. ராமகிரி — சாமிநாயக்கர்

16. வீரமலைப்பாளையம் — காமயநாயக்கர்
17. பள்ளி — சென்னமநாயக்கர்
18. விருப்பாட்சி — கன்னிவாடி — ஆயக்குடி [பரம்பரை
19. இடையகோட்டைஆமலூர் —வல்லக்கொண்டம [நாயக்கர்
20. ......... — மபிலூர்நாயக்கர்

21. சொங்கராயன்கோட்டை—வாலமூர்த்திநாயக்கர்
22. மருளுத்து — அம்மையநாயக்கர்
23. எழுக்காளபுரம் — கூளப்பநாயக்கர்
24. தேவரசியமடை — கோப்பியநாயக்கர்
25. தொட்டியன்கோட்டை—திருமலைகந்தநாயக்கர்

26. திருமலை — போடிநாயக்கர்
27. ......... — பூசாரிநாயக்கர்
28. பெரியகுளம் — ராமபத்திரநாயக்கர்
29. ......... — அப்பாச்சிக்கவண்டர்
30. குருவிகுளம் — பெரியவீரப்பநாயக்கர்

31. ......... — இரச்சக்கநாயக்கர்
32. மதுரைப்பாளையப்பட்டு — வாக்கமநாயக்கர்

33. ......... — உத்தமநாயக்கர்
34. ......... — தொட்டப்பநாயக்கர்
35. கவண்டன்கோட்டை — வெள்ளைக்கவுண்டர்
சிறுபாலைக்கச்சைக்கட்டி — காமயநாயக்கர்.
36. சிறுவலை — மாதவநாயக்கர்
37. திருநெல்வேலிப்பாளையப்பட்டு — ஏழாயிரம்
பண்ணை வன்னியனார்
38. எட்டையாபுரம் — எட்டப்பநாயக்கர்
39. பாஞ்சாலங்குறிச்சி — கட்டபொம்முநாயக்கர்
40. சிவகிரி — வரகுணராமவன்னியனார்
41. சேத்தூர் — திருவண்ணாத்தேவர்
42. கொல்லராயடி — கலங்காநாயக்கர்
43. நாகலாபுரம் — இரவப்பநாயக்கர்
44. ஊற்றுமலை — மருதப்பத்தேவர்
45. குருக்குவெட்டி — அழகத்தேவர்
46. மணியாட்சி — (சொக்கன்பட்டி) .........
47. சுரண்டை — (நடுவக்குறிச்சி) .........
48. தலைவன்கோட்டை — .........
49. கொல்லபட்டி — .........
50 கொல்லங்கொண்டான் — ...........
51. சிங்கம்பட்டி—தென்னாட்டுப்புலி நல்லகுட்டித்
[தேவர்.
52. நெற்கட்டாம்செவல் — ...........
53. ஊர்க்காடு — .............
54. கடம்பூர் — ...........
55. காடல்குடி — ...........
56. விரசிலம்பட்டி — ...........

57 குளத்தூர் — ................
58. மேமாந்தை — .............
59. மாவிலோடை — ................
60. ஆலங்குளம் — .........
61. சென்னிலைக்குடி — .........
62. பாவாலி மூவரையன் — .........
63. தும்பிச்சி நாயக்கர் — .........
64. ......... — சாமிநாயக்கர்
65. எரமனட — கூளப்பநாயக்கர்
66 மன்னார்கோட்டை — .........
67. ஆற்றங்கரை — பெத்தணநாயக்கர்
68. இரட்டைக்குடை வன்னியனார்
69. தாரமங்கலம் — கெட்டிமுதலியார்
70. எளம்பரம் — மாரவல்லரவணப்பநாயக்கர்
71. நடுவாயல் — அழகிரிநாயக்கர்
72. கரிப்பட்டு — பொம்மியநாயக்கர்

இப்பாளையப்பட்டு வரிசையில் நாற்பதுபேர் நாயக்கர்களாகவும், முப்பத்திரண்டுபேர் மறவர் முதலிய மற்றச்சாதியினராகவும் காணப்படுகின்றனர். மகமதியர் படையெடுப்பு முதலியன நிகழ்ந்த காலங்களில், இப்பாளையப்பட்டுக்களின் தலைவர்களுடைய முன்னோர்கள் ஆங்காங்குப் பிரபலத்துடன் வேரூன்றித் திகழ்ந்தனர். நாயக்கரது ஆட்சி மதுரையில் ஏற்பட்டவுடன் பாளையப்பட்டு என்னும் பட்டத்துடன் அவர்கள் பலமடைந்தார்கள் என அறிகின்றோம். பாளையப்பட்டுகள் ஏற்பட்டுள்ள தலைமையிடங்கள், முன்பு சிற்றரசுப் பாண்டியர்கள் வசித்தவைகளும் புதிதாய் ஏற்படுத்திக்கொண்டவைகளுமாகிய ஊர்களேயாம். திருவழுதிவளநாடு. திரு

நெல்வேலியாகிய இடங்களுக்குத் தெற்கேயுள்ள பிரதேசங்களில் பாளையப்பட்டுக்களின் ஆட்சி தலைக்காட்டவில்லை. பல சாலிகளான நாடார்குலமக்கள் அப்பிரதேசங்களில் ஸ்திரமாக வசிக்கத் தொடங்கிவிட்டமையால், அவர்களுடைய ஆட்சியன்றிப் பிறஆட்சிக்கு அங்கு இடமில்லாமற்போய்விட்டது.

## 22. தென்னாட்டுக்கலகம்.

இராமப்பையனது இராஜாங்க அதிகாரம் பாண்டியநாடு முழுதும் பரவியிருந்தது. அவனது ஆதரவுகொண்டு பல வேறு ஜாதிக்காரர்கள் நாடார்குலமக்களைத் துன்புறுத்தலாயினர். ஆலயங்களிலே நாடார்குலமக்கள் வழக்கமாய்ப் போய் வந்து கொண்டிருந்த மேலைவாயில் அடைக்கப்பட்டது. அதனை ஆற்றொணாத நாடார்மரபினர் ஆக்கிரமித்தனர். ஆனால் அரசாங்க ஆதரவில் வாழ்ந்த நாயக்கரும் மற்றச்சாதியினரும் நாடார்மரபினருடனே போராடலாயினர். அப் * போராட்டத்தில், ஒருங்கே திரண்டு எதிர்த்த எதிராளிகளுக்கு முன்னிற்கமாட்டாமல் இளைத்தார்கள். இதுவே ஏற்றசமயம் எனவுணர்ந்த பகைவர், சந்திரகுலமக்களுக்குச் சகிக்கவியலாச் சதியாலோசனைகளுடன் தீங்கிழைக்கத் தலைப்பட்டார்கள். இத்தீமைகளைத்தாங்க வியலாமற் காயற்பட்டினத்தில் வாழ்ந்த நாடார்குடிகள், சுமார் எண்ணூறு பேர் மகமதிய மதத்திற் சேர்ந்துவிட்டனர். அங்ஙனம் மகமதிய மதத்திற் சேராமலும், தம் கட்டளைக்குக் கீழ்படியாமலும் வாழ்ந்த நாடார்குலமக்களை அடியோடழிக்கக் கங்க

---

* இப்போராட்டத்தில் நாடார்களுக்குத் தலைமைவகித்தவர், "நவாபு குமாரவீர மார்த்தாண்ட நாடார்" என்பவர்.

ணங்கட்டினர் நாயக்க வேந்தர்கள். நாடார்கள் சிலர் ஆலய விஷயங்களிலே தமக்குப் பாரம்பரியமாய் ஏற்பட்டிருந்த சுதந்தரங்களை இழக்க மனம்பொருமல் தீவிரமான கிளர்ச்சி செய்யவே, மதுரை அரசாங்கத்தார், அவர்களைக் கப்பலில் ஏற்றிக்கொண்டுபோய்க் கடலில் தாழ்த்திவிடுமாறு காயற் பட்டினத்திலிருந்த மரைக்காயர்களுக்குக் கட்டளையிட்டனர். படைவீரர் பலர் நாடார்குலமக்களை வளைந்துபிடித்துக்கட்டிக் கொணர்ந்து கப்பலில் ஏற்றினர். மகமதியர், கப்பலில்ஏற்றிய நாடார்களை நடுக்கடலுக்குக்கொண்டுபோய், அவர்களைநோக்கி "நீங்கள் எங்கள் மதத்திற் சேர்கிறீர்களா? அல்லது கடலில் வீழ்ந்து மடிகின்றீர்களா?" என்று கேட்டனர். அம் மக்கள் உயிருக்குப்பயந்து, "உங்கள்மதத்திற் சேர்கிறோம்' என்று சொன்னார்கள். உடனே அம்மகமதியர் அவர்களைக் கொல்லாமல், இலங்கை, தலைமன்னார், கோட்டைமன்னார் என்னும் துறைமுகங்களிலே கப்பல்களைநிறுத்தி, அவர்களை அக்கசாலை, பேய்சாலை என்னும் கிராமங்களிற் கொண்டு போய்ச்சேர்த்து மகமதியர்களாக மாற்றிவிட்டார்கள்.

திருநெல்வேலிச் சீமையில் இங்ஙனம் நடைபெற்றது போலவே, வடக்கிலும் நிகழ்ந்தது. இராமநாதபுரத்திற்குத் தெற்கிலுள்ள கீழக்கரை வட்டகையிலுள்ள நாடார்கள் நூறு பேரைக் கொல்லும்படி மதுரையிலிருந்து உத்தரவுபிறந்தது கீழக்கரையிற் பிரபலம்பெற்று விளங்கிய மரைக்காயர்கள், அந்நாடார்களைநோக்கி, "நீவிர் எம்மதத்திற் சேர்வதாயின், உம்மை மரணத்தினின்று தப்புவிக்க முடியும்" என்று கூறினார்கள். மரணத்திற்குஅஞ்சிய அவர்கள், "அங்ஙனமே செய்கிறோம்" என்றார்கள். உடனே மரைக்காயர், அவ்விஷயத்

தை ஆற்காட்டுநவாபுக்கு அறிவித்தார்கள். ஆற்காட்டுநவாபு, நாடார்களுக்கு விதித்த தண்டனையை உடனே மாற்றிவிடுமாறு, மதுரை நாயக்கமன்னருக்கு நிருபம் விடுத்தான். மதுரையரசர் ஆற்காட்டுமன்னனின் வேண்டுகோட்படியே தண்டனையை நிறைவேற்றாது விடுத்தனர் நாடார்கள் தம் வாக்கின்படியே மகமதியமதத்திற் சேர்ந்தார்கள். அக்காலத்தில், உமூரிக்காடென்னும் கிராமத்திலே வசித்த கலியநாடனென்ற கலிகாத்தபெருமாள் நாடான் உரோமன்கத்தோலிக்க மதத்தை மேற்கொண்டான்.

மேற்கூறிய விபரங்கள், சான்றோர் குலதீபத்திற் கண்டவையும், கர்ணபரம்பரையாகக் கேட்டவையுமாம். நாடார்குல மக்களுக்கு இவ்வின்னல்கள் ஏற்பட்டகாலம், பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலாகும். அப்பொழுது திருமலை நாயக்கன் ஆட்சி முடிந்துவிட்டது. அதன்பின் முத்து அழகிரி நாயக்கன் (கி. பி. 1660—1677); அவனுக்குப்பிறகு, முத்து லிங்கநாயக்கன்– (கி.பி. 1677–1682); அப்பால் ரங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கன் – (1682—1689) இந்நாயக்க அரசர்களுடைய ஆட்சிக்காலத்தில்தான் நாடார்குலமக்கள் மிக்க துயரங்களை யெய்தினார்கள். திருமலைநாயக்கனது அரசாட்சியில் பிரபலத்துடன் விளங்கிய தளகர்த்தனாகிய இராமப்பையன், திருமலைநாயக்கன் காலத்திலேயே கொல்லப்பட்டான். பின்பு "நரசப்பையன்" என்பவன் நாயக்கர் படைக்குத் தலைமை வகித்தான்

## 23. மூன்றும் அத்தியாயத்தின் முடிவுரை.

தமிழ்நாட்டு மூவேந்தரில் சோழரும், பாண்டியரும் கி பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பதினொன்றும் நூற்றாண்டு வரை கீர்த்தியுடன் அரசாண்டனர். அக்காலத்தில் அவர்கள் வீரபராக்கிரமம் வாய்ந்து, வெற்றிமேல் வெற்றி புனைந்து வாழ்ந்தனர். இலங்கை (கடாரம்), பர்மா முதலிய கடல்கடந்த நாடுகளிலும், கிருஷ்ணு, கோதாவரி நதிகள் பாயும் வெங்கி யென வழங்கிய ஆந்திர நாட்டிலும், கலிங்கநாட்டிலும் அவர்கள் தம் ஆணைசெலுத்தி வந்தனர். திரிபுவன சக்கரவர்த்திகள், பூலோக தேவர்கள் என்னும் அபிதான (பட்ட)ப்பெயர்களும் சூடிப் பிரக்கியாதிபெற்ற அச்சோழ பாண்டிய மன்னரது பட்டத்துத் தேவிமாரும் 'உலகமுழுதுடையாள்,' 'திரிபுவனதேவி' என மெய்க் கீர்த்திகளிலும், சிலாசாஸனங்களிலும் புகழ்ந்தெழுதப் பெற்றனர். யாம் இரண்டாம் அத்தியாயத்தில் விவரித்துக் கூறியவண்ணம் இம்மன்னவர், சிங்களர், மகமதியர், கன்னடியர் முதலியோராற் பிற்காலத்திற் சீர்குலைந்து வலி குன்றினர். சரித்திரவாயிலாய் யாமறிந்தவாறு, பல்லாயிரக்கணக்காகவும், நாளாவட்டத்தில் பல லட்சங்களாகவும் பல்கிய நாடார்குலமக்கள், ஆங்காங்குத் தென்னாட்டின் பற்பல பாகங்களில் இராஜ்யங்களை ஸ்தாபித்து சிற்றரசுபுரிந்து வாழ்ந்தார்கள். மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப் புன்காகம் கைக்கொள்ளப் போனவாறுபோல, அவ்வரசுரிமையை பார்ப்பனர், வேளாளர், நாயக்கர், ரெட்டியர், மறவர் முதலான பலவேறு ஜாதியாரும் கைக்கொள்ளலானார்கள். ஆகவே நாடார்கள், பரம்பரையாகக் கைக்கொண்டிருந்த அரசுரிமையை இழந்து வணிகம், விவ

சாயம் முதலிய தொழில்களை மேற்கொண்டு ஜீவனஞ்செய்யத் தொடங்கினார்கள்.

நெடுங்காலமாக ஒதுங்கித் தலைமறைவாய் வாழ்ந்திருந்த பாண்டியர் குடும்பத்தைச் சேர்ந்த சந்திரசேகரபாண்டியன் என்னும் அவனிவேந்தராமபாண்டியன் பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பத்தில், மதுரையிற் சிங்காதனம் ஏறினான். பராக்கிரமபாண்டியனுக்கு உதவியாய்வந்து சோழநாட்டிற் போராடிய இலங்காபுரித் தண்டநாதனது புயவலியால், படைவலியொடுங்கப்பெற்ற குலசேகரசோழனுக்குப் பின்னர் சோழபரம்பரையும் பல சிற்றரசுகளாகப் பிரிந்தது. அப்படிப்பிரிந்தவர்களில் ஒருவனே, முன் 55-ம் பக்கத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட வீரசம்பச்சோழன்.

தமிழ் நாட்டிற் பரம்பரையான சோழபாண்டியரது ஆட்சி நிலையாகஇருக்க வேண்டுமென்பதே விஜயநகரச் சக்கரவர்த்திகளின் முடிவான அபிப்பிராயம். அபிராமபாண்டியன் ஆண்டநாட்டைத் திருவாங்கூர் மன்னன் கைப்பற்றினான்; அதனைப் பொறுக்கலாற்றாக விஜயநகரவேந்தன் திருவாங்கூர் மன்னனைவென்று பாண்டியனிடம் அவனதுநாட்டை ஒப்பித்தான். இது, விஜயநகர வேந்தர் பாண்டியர்மீது கொண்ட விருப்பத்தைக் காட்டுமென்றோ? விஜயநகரவேந்தனது ஆணையைச்சிரமேற்றாங்கிப் பாண்டியனுக்கு உதவிசெய்தற்கென்று பாண்டியநாட்டிற்குவந்த நாகம நாயக்கனும், விசுவநாதநாயக்கனும் தாம் மேற்கொண்டுவந்த காரியத்தைச் செய்ய மனமின்றிப் பாண்டிநாட்டுக் குழப்பங்களை அடக்கித் தாமே சிம்மாசனத்தைக் கைப்பற்றினார்கள். "பாண்டியர் பலவீனமுற்றனர்" என்பதைக்காட்ட இது சரியான சான்றேயல்லவா?

சிற்றரசுப்பாண்டியர்களிற் சிலருடைய அன்பும் ஆதரவும் அந்நாயக்க மன்னர்க்கு இருந்தன. விசுவநாத நாயக்கனது ஆட்சியை எதிர்த்துப் போராடியவர்கள் திருவழுதி நாடாக்களாகிய பஞ்சபாண்டியரேயாவர். அரியநாயகமுதலி, திருநெல்வேலியிலிருந்து, பஞ்சவழுதியரிடம் திறைப்பணம் வாங்கிவருமாறு ஆள்விடுக்க, அவர்கள் "நாங்கள் எங்கள் குலத்தலைவராகிய பாண்டியர்களுக்கேயன்றி வடுகருக்குக் காணிக்கைசெலுத்துவோமா?" என்று கூறியனுப்பினர் இச்செய்தியிலிருந்து கொற்கை ராஜ்யமழிந்த பிறகு, தென்சீமையில் செங்கோல் செலுத்திய சிற்றரசர்கள் தாம் தாமே சுவாதீன மடைந்துவிட்டனரென்றுதெரிகிறது. மாவலிவாணாதிராயரின் ஆணையும் பஞ்சபாண்டியரை அடக்கமுடியவில்லை. இப்பஞ்சவழுதி நாடாக்களின் தீரமும், வீரமும், நியாயமும், சத்தியந்தவறாமையும் பாரதமக்களால் என்றென்றும் போற்றத்தக்கவையேயாம்! புரொபஸர் உவில்ஸன்துரை, "கயத்தாற்று ஒற்றைமற்போர்விபரம் எழுதியவர், பாண்டியரது வகையினரல்லர்; எதிரிகளாகிய நாயக்கரது வகையினரே" என எழுதியுள்ளார். அங்ஙனமாயின் ஒற்றைமற்போரைக்குறித்து நாம் முற்கூறிய விஷயங்கள் யாவும் உண்மையேயென்பதில் ஐயமில்லை.

விசுவநாதநாயக்கன் அப்போரின் முடிவில், தனக்கு உதவிசெய்தவர்களைத் தலைவராகக்கொண்ட எழுபத்திரண்டு பாளையப்பட்டுக்களை யேற்படுத்தி, ஆங்காங்குக் கொத்தளங்களை அமைத்து, அக்கொத்தளங்களைக் காக்கும் பொறுப்பும் அவ்வத் தலைவர்களுக்கே யளித்து, யுத்தகாலத்தில் அவர்கள் அனைவரும் அக்கொத்தளங்களிலுள்ள சேனைகளுடன் வந்து தனக்கு உதவிசெய்ய வேண்டுமென்றும் கட்டளையிட்டனன்.

இப்பாளையப்பட்டுக்களின் விபரம் முன் (122....125ம் பக்கங்களில்) எடுத்துக்காட்டியுளது. அவற்றிற் சிற்சில ஊர்ப்பெயர், அல்லது தலைவர் பெயர் துலங்காமலுமுள.

“ * * * — மலைக்கோட்டில்
ஆளை வைத்துப் பார்க்கும் அறுபத்து நாலுமன்னர்
பாளையத்தை வென்ற படையாளை— * ”

எனச் சுப்பிரதீபக் கவிராயரியற்றிய விறலிவிடுதூதில் வரூஉம் நிலைக்கோட்டை ஜமீன்தாரைப்பற்றிய வருணனையும் காண்க.

மேற்கூறிய வீரசேகர சோழனது ஆட்சியும், நாகம நாயக்கனால் அழிவுண்டது. பின்னர் விசுவநாதநாயக்கனது இளவர்க்கம் தஞ்சையிற் சிறிதுகாலம் ஆண்டது. அப்பால் மராட்டியர் தஞ்சையைக் கைப்பற்றினர். இங்ஙனம் சரித்திரம் கூறிச்செல்வதால், சோழமரபினரான சிற்றரசர்களும் சீர்குலைந்து அழிந்துவிட்டனர்போலும்! சோழநாட்டைப் பிற்காலத்தில் பல்லவராயர், மழவராயர், உடையாக்கள், கள்ளர் குலத்தலைவர் முதலானோர் அவ்வக்காலங்களிலே தலையெடுத்து ஆங்காங்கு அரசுரிமைநடாத்தி வந்திருக்கின்றனர். இலங்காபுரித் தண்டநாதன், பாண்டிய நாட்டில் கீழைமங்கலம், மேலைமங்கலம் என்னும் இடங்களை “கண்டதேவ மழவராயனை” ஆளும்படி செய்தானெனப் பாண்டியராஜ வம்ஸ சரித்திரத்தில் R. அரிகாஐயர் கூறியுள்ளார். “மழவராயர்” —என்போர் மாவலிவாணாதி ராயரைப்போன்ற அரசசம்பந்தமுடைய ஒரு ஜாதியினராவர்.

இவ்வத்தியாயத்தில் திருவழுதி வளநாட்டின் பூர்வீகம் நன்கு கூறப்பட்டிருக்கின்றது. பாளையங்கோட்டை திருநெல்வேலிக்கருகிலுள்ளதோர் இடம். பன்னிரண்டாம் நூற்றாண்டில், "பாண்டியர்--சிங்களவர்-சோழர்" யுத்தத்தில், பாளையங்கோட்டையிலும் போர் நடந்ததாகச் சரித்திரங்கூறும். சேனைகள் தங்கிய இடமே—பாளையங்கோட்டை. பாண்டியர் இவ்விடத்தில் அரசாட்சி செய்துமிருக்கலாம். பாண்டியரது ஆட்சி வீரபாண்டியன்காலத்தில், பெருமைகுன்றிவிட்டமையால், அவன்குமாரன் சீவலபாண்டியன், தன்னைச் "சீவலவேள்" என்றுகுறிப்பிட்டுள்ளான். அரிகேசரி பராக்கிரமபாண்டியன் தென்காசியில், "விசுவநாதர்-விசாலாட்சியம்மை" ஆலயங்கண்டனன். அவனே சிவகாசியிலும் "விசுவேசர்-விசாலாட்சி" ஆலயம் ஸ்தாபித்தனன். பராக்கிரம முனிவரும், அவர்பத்தினியும் இலிங்கப் பிரதிஷ்டை செய்ததாகச் சிவகாசித்தலபுராணம் கூறுகின்றது. நாடார்கள் வந்துதங்கிய பழமையான இடம்—சிவகாசி.

தென்காசியில், பாரதகதைபோலத் தாயத்தார் வஞ்சகச்சூழ்ச்சியால் அரசகுலம் அழிந்தது. பாண்டிமாதேவியிட்ட சாபத்தால் நாடார்குலமக்கள் அவ்வூரில் தங்குதற்கும் இல்லாமற்போய்விட்டது. தென்காசிப் பாண்டியர்வமிசம் பல பிரிவுகளாகப் பிரிந்து சுற்றிலுமுள்ள பற்பல ஊர்களை நாடிச்சென்றது. கி. பி. 1700 க்கு மேல் தான், தென்காசியில் நாயக்கர் ஆட்சி வேரூன்றியது. அதிவீரராம பாண்டியன் மகன் ஸ்ரீவல்லப பாண்டியனது ஆட்சி-கி. பி. 1616. ஆகவே இடைப்பட்ட எண்பது வருடகாலத்தின் நடுவில், மேற்கூறிய தென்காசிப்பாண்டியரது ஆட்சியின் நாசத்திற்குரிய

பயங்கரசம்பவ மேற்பட்டிருக்கவேண்டும், கங்கை கொண் டான் சீமையை, அவனிவேந்த ராமபாண்டியன் ஆட்சி புரிந்தான் என்பதற்கு அத்தாட்சியாய் "இராஜாக்கள்" என்னும் ஓர் வகுப்பார் கங்கைகொண்டானில் வசித்து வருகின்றனர்.

திருச்செந்தூர் என்னும் தெய்வீகஸ்தலத்தில் நாடார் கள் வகித்துவந்த பற்பல வுரிமைகளின் விளக்கத்தை "நாடார் குல வரலாறு," "ஆதித்த வமிச சரித்திரம்" என்னும் நூல் களிற்பரக்கக் காணலாம். மகமதியராக மாறிய நாடார்கள் வசிக்குந்தெரு என்று ஒரு தெரு காயற்பட்டணத் தில் உளது.

பாண்டிய நாட்டில், நாயக்க மன்னர் பாண்டியரை வென்று தம் ஆட்சியை நிலைநாட்டினமையால், பாண்டியர் குடும்பங்கள் சிதறுண்டு பலவேறிடங்களையடைந்து பற்பல இன்னல்களுக்கு இலக்கானவிவரம் இதுகாறும் எடுத்துக் கூறப்பட்டது இனி ஆங்காங்கு வசித்து வந்த பாண்டிய குல நாடார்களது நிலைமைகளைப் பற்றி ஆராய்வோம்.

நான்காம் அத்தியாயம்.

# நாடார் மன்னரின் முன்னேற்றம்.

## 1. அஞ்சுபத்து நாடார்கள்.

திருவழுதி வளநாட்டின் தெற்கேயுள்ளது — மானவீர வளநாடு. அஃது வடபத்து, தென்பத்து என இரு பிரிவுகளையுடையது. தென்பத்தில், மானவீரநாடுஆண்ட மாணிக்கியா நாடன், வல்லநாடுஆண்ட சின்னமாட நாடன், சித்தன் விளையிலாண்ட வள்ளிக்குட்டி நாடன், அடப்பனூரிலாண்ட குலசேகரநாடன், நங்கைமொழியில்ஆண்ட சொக்கன் திருப்பாபு நாடன் என ஐந்து ஜமீன்தார்கள் விளங்கினர். இவர்கள், ஐந்துகரைநாடாக்கள், அல்லது அஞ்சுபத்து நாடாக்கள் எனவும் வழங்கப்பெறுவர். இவ்விவரம் குமாரசுவாமிநாடன் கதையென்னும் சரித்திரப் பாடலிற் காண்க. இவ்வைவரும் தென்னாட்டுப் பாண்டியரது நேர்சந்ததியாராவர். பாண்டியராஜ வம்சத்தைச் சேர்ந்தவராயிருந்தும், ஆட்சிக்குரியரல்லாதார், சான்றோர் குடும்பங்களாகவே வாழ்ந்து வந்தனர். இக்குடும்பத்தினர் தாம் தாம் குடியேறிய இடத்திற்குத் தக்கவாறு தெய்வவழிபாடு நடத்திவந்தனர். வள்ளிக்குட்டி நாடன், குமாரசுவாமி நாடன், சின்னமாட நாடன் என்னும் இப்பெயர்கள், அவரவர்களது வழிபடுதெய்வங்களின் பெயர்களை யொட்டியே வந்தனவென்று அறியக்கிடக்கின்றது. கொற்கையைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய பாண்டியராட்சியிலே, இச்சிற்றரசுகள் அடங்கியிருந்து, அப்பால் மகமதியர் கொற்கையை நிலைகுலையச் செய்தபின், இவ்வரசு

கள் தனித்தனியே நாடு, கிராமங்களைக் கைப்பற்றி ஆண்டு வந்தன வென்று தெரிகிறது. கொல்லம் 705, அதாவது கி. பி. 1529-ல்எழுதப்பட்ட ஓர்சிலாசாஸனத்தில், "அடைக்கலபுரம் திருப்பாபுநாடாள்வான் தன்மம்" என்றுகாணப்படுகின்றது. இஃது, அடைக்கலபுரம் பழங்கிணறு, பழந்தொட்டியிற் பொறிக்கப்பட்டது. பஞ்சபாண்டிய-நாயக்க யுத்தம், கி. பி. 1560. ஆகவே திருப்பாபு நாடாள்வான். அவ்யுத்தத்திற்கு முப்பது வருடங்கட்கு முன் வாழ்ந்தவன். ஆதலால் இவ் அஞ்சுபத்து நாடார்கள் பஞ்சபாண்டிய – நாயக்கயுத்த காலத்தில் வாழ்ந்தனராதல் வேண்டும். ஆனால் இவர்கள் அவ்யுத்தத்திற் சம்பந்தப்பட்டு மாண்டனரோ, மீண்டனரோ, விளங்கவில்லை.

## 2. சிங்கநாடன்.

'திருவடிதேசம்'என்றும் "திருவழுதிவளநாடு"என்றும் வழங்குகின்ற பிரதேசத்திலே, 'சக்கரபாணி' என்பாரின் வழித்தோன்றலான 'காரி' என்பாருக்கும், 'உடையநங்கைக்கும்' உதித்தருளியவர்—நம்மாழ்வார். மாறன், சடகோபன், திருநாடாள்வான் எனவும் அவர் அழைக்கப்பெறுவர். ஆழ்வார்திருநகரி—நம்மாழ்வார் தோன்றிய ஸ்தலம். அவ் ஆழ்வார்திருநகரிக்கு வடக்கே, தாமிரவாணியின் அக்கரையில் "ஆழ்வார் தோப்பு" என்று ஒரு கிராமம் உளது. அதனருகே ஆற்றின்கரைமேல் ஆலயம் ஒன்று காணப்படும். அவ்வாலயத்து அமர்ந்தருளிய பெருமாள் – வடபெருங்கோயிலுடையான். நம்மாழ்வார், அல்லது அவர்க்கு முன்பின்வாழ்ந்த அவர் தம் வமிசத்தவர் மா, பலா, வாழை, தென்னை, பனை முதலிய விருக்ஷ ஜாதிகளை வைத்துப் பரிபாலித்து வந்த

இடமே, ஆழ்வார் தோப்பு என்னும் பெயருடன் விளங்கு கின்றதெனை ஊகிக்க இடமுண்டு. இவ்வூரில் நாடார்கள் பரம் பரையாய் வசித்துவருகின்றனர்.

பாண்டியமன்னரது அனுமதி பெற்ற நாடார்குலத் தலைவர் அறுபத்துநால்வர் அங்குப் பிரபலமாக வாழ்ந்தோ ராவர். அவர்கள் " தலைப்பாக்கட்டிகள் " என்றழைக்கப் பெறுவர். ராஜவிருது வைத்துக்கட்டிய வர்ணத்தலைப்பாகை யுடையோராதலின், அங்ஙனம் பெயர் பெற்றார்கள். இவர் கள் வசித்த இடம், "ஆழ்வார் தோப்பு" என்பதில் ஐய மில்லை. ஆயின், காலமும், பிற விவரங்களும் அறியக் கூடவில்லை. இவ் அறுபத்து நால்வரிற் "சிங்கநாடன்' என்பவன் பிரபலம்வாய்ந்தவன். ஸ்ரீவைகுண்டத்தில், கள் ளப்பிரான் கோயிலின் மேற்குவாயிலை அமைத்தவன்--இச் சிங்கநாடனே! "சிங்கநாடன் வாசல்" என, அஃது இன் றும் பெயர்துலங்குகின்றது. ஆற்றின் வடகரையிலே வாழ்ந்த இத் தலைப்பாக் கட்டிகளுக்கும், தென்கரையிலே வாழ்ந்த பார்ப்பனர் முதலியோருக்கும்இடையே, பகைமையேற்பட்டு அஃது முற்றிவிட்டது. பாண்டியநாட்டில், பார்ப்பனரை யாதரிக்கும் ஆட்சிவலுத்தது; நாடார்களை ஆதரித்து அன்பு காட்டும் அரசாட்சியழிந்தது. ஆதலால் தலைப்பாக்கட்டிகள் தலையெடுக்க வழியின்றி மறைந்துவிட்டார்கள். இவர்களிற் சிலரும், வேறு சில நாடார்களும், நம்மாழ்வாரது திருப்பணி களில்ஈடுபட்டு, வைணவமார்க்கத்தில்கலந்து பிராமணருடன் கலந்துவிட்டதாகச் சொல்லப்படுகின்றது.

## 3. பதின்மர் பிரபுக்கள்.

முற்கூறிய மானவீரவளநாட்டின் வடபத்தில், அதாவது வடபகுதியிலுள்ள கிராமங்களில்: 1. ஆதிச்ச நாடன், 2. கோவிந்தப்பணிக்கநாடன், 3. வீரப்பநாடன், 4. தீத்தியப்ப நாடன், 5. பிச்சநாடன், 6. அய்யக்குட்டிநாடன், 7. திக்கெல்லாம்கட்டி நாடன், 8. நினைத்தது முடித்தநாடன், 9. அவத்தைக்குதவிநாடன், 10. குத்தியுண்டாநாடன் எனப் பதின்மர் பிரபுக்கள் கிராமாதிபதிகளாகப் பிரபலம் பெற்று விளங்கினார்கள். சகாப்தம் 1561, கி. பி. 1639-ல் எழுதப் பட்டதாகிய, குதிரைமொழித்தேரிச் சார்பிலுள்ள முத்துக் கிருஷ்ணபுரத்தின் தெற்கே நிற்கும் ஒரு பெரிய சாஸனக் கல்லின்கண், இப்பதின்மர் பிரபுக்களின் பெயர்கள் பொறிக் கப் பட்டிருக்கின்றன. ஜமீன்தார்கள் போலப் பிரபலத்து டன்வாழ்ந்த இப்பதின்மரும் தங்கள் இலாகாவுக்குள் அடங் கிய சர்வஜாதிக் குடிஜனங்களின்மீது சர்வாதிகாரமும் உடை யோராவர். தீர்வைகளை விதிக்கவும், விலக்கவும், ஏற்ற இறக்கவும் இவர்களே அதிகாரம் பெற்றிருந்தார்கள்.

## 4. கோவிந்தப்பணிக்க நாடன்.

மேற்கூறிய பதின்மர் பிரபுக்களில் ஒருவன்-கோவிந்தப் பணிக்க நாடன். "பணிக்கன—சிலம்பம் பயிற்றுவோன்" என டாக்டர் உவின்ஸிலோ துரையும், "யுத்தவித்தை கற்றுக் கொடுத்தலாகிய பணிக்கு உரியோன்--பணிக்கன்" என தஸ் டன்துரையும் கூறுவர்.

"தெண்டிரைவா ரிதியுடுத்த மண்மகட்குத் திலதமெனு
மதுரையின்கண் முன்னோர் காலம்
பண்புடையா னொருபணிக்கன் தோன்றி யெண்ணில்
பத்திநிகழ் புதல்வர்க்குப் பலவி தஞ்சேர்

ஒண்டிறலா யுதக்கலைகள் பயிற்றி யங்கண்
ஒருசாமப் பொழுதொழித்தா லயத்தில் நண்ணி,
வண்புகழ்சேர் சொக்கனருள் கூற நாளும்
வலஞ்செய்தன் பாற்றெழுவன் மற்றைப் போதும்"
[வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணம்.

ஆயுதவித்தை கற்றுக்கொடுப்போனாகிய ஒருபணிக்கன் முன்னொருகாலத்தில் மதுரைமாநகருக்குவந்து சிறுவர்பலர்க்குப் படைக்கலப்பயிற்சி கொடுத்துக்கொண்டு சோமசுந்தரக் கடவுளையும் வணங்கிவந்தான் என்பது இச்செய்யுளின் கருத்தாம். சான்றோர் குலவள்ளலாகிய ஏனாதிநாதநாயனார், ஆயுத வித்தைக்கு ஆசிரியரன்றோ! இக் கோவிந்தப்பணிக்கநாடன் பிரபுசிகாமணியாயும், படைக்கலம் பயிற்றும் தொழிலுடையோனாயும் விளங்கினான். படைத்தொழில்களில் சிலம்பத் தொழிலும் ஒன்றேயாம். தென்னாட்டுநாடார்களிற் பலர் இன்றளவும் சிலம்பத் தொழிலில் வல்லுநராக விளங்குகின்றனர். வீரப்பநாடன், திக்கெல்லாம்கட்டிநாடன், நினைத்தது முடித்தநாடன், அவத்தைக்குதவிநாடன், குத்தியுண்டாநாடன் என்னுமிப் பெயர்கள் க்ஷத்திரியவீரத்தைத் தெற்றெனக் காட்டுபவையாகும். இந்தப் பத்துமன்னவர்களின் காலம், சிலாசாஸனப்படி கி. பி. 1639 ஆக இருப்பதால் பாண்டியநாயக்க யுத்தகாலத்திற்கு (கி. பி. 1560) ப்பின் எண்பது வருடகாலமாகின்றது. ஒற்றைமற்போரில் வெட்டுண்ட பாண்டியனொருவன்போக மற்றநால்வரும், அவர்களைச் சேர்ந்தவர்களும் நாஞ்சிநாட்டிற்குப் போனதாக முன் சொல்லியிருப்பதால், அவர்களின் சந்ததியாரே தம் சொந்தநாட்டிற்குத் திரும்பிவந்து, குட்டம், படுக்கைப்பத்து, செம்மறிக்குளம் முதலிய இடங்களிற் றங்கியதாகத் தெரிகின்றது.

மேற்கூறிய பிரபுக்கள் மலையாளத்திற்குப்போய்ப் பின்திரும் பிவந்த பாண்டிய மரபினராவர்.

## 5. ஏழுகரைக்காரர்.

மானவீர வளநாட்டில், பற்பல கிராமங்களின் ஆட்சி யைத் தமக்கு உரிமையாகக்கொண்ட ஏழுகரைக்காரர் என்ற பிரபுக்கள் வாழ்ந்திருந்தார்கள் இவர்கள், செல்வாக்கும் பலத்த அதிகாரமும் வாய்ந்த பூபதிகளாய்த் திகழ்ந்தார்கள். மேலும் இவர்கள் கோட்டைகள் கட்டி வெண்கலக் கதவுகள் போட்டு வெகுபிரஸ்தாபமாக விளங்கினார்கள். இவர்களு டையபெயர்கள் பின்வருமாறு:— 1 தலைவன்-வெட்டியாண் டான் என்ற வெற்றிகொண்டான், 2. சிம்மங்கரையான் என்ற சிமிளி, 3.பின்னங்கரையான், 4. குமாரகரைக் காரன் 5. அத்திபெரியவன், 6. அறம்வளர்த்தாண்டான், 7. சரவணபெரியவன்.

இவ்வேழு பிரபுகுலமக்களும் பிரபலமாக வாழ்ந்து வரு கையில், கடற்கரைப்பக்கம் வசித்த பரதவருக்கும்-நாடாருக் கும்இடையிற்பகைமூண்டு உயுத்தம்நேரிட்டது. அவ் யுத்தத் தில் ஏழுகரைக்காரரே முன்னின்று பொருது வெற்றிமாலை சூடினர். இவ்யுத்தம், "பரவர்படைவெட்டு" என்று பெயர் பெறும். வெற்றிபுனைந்த எழுவரில், வெட்டியாண்டானது மரபினர், வடக்கே வைப்பாற்றுக்கு அருகில் "மேல்மாந்தை ஜமீன்" பூமியில் வந்து தங்கினர். பின்னர் அவர்கள் கமலை யென்ற கமுதி, விருதுநகர் முதலிய இடங்களிற் பரவினர். தற்காலம் அவர்கள் விருதுநகர், தூத்துக்குடிபோன்றசிறந்த நகரங்களிற் பிரபல வியாபாரிகளாக விளங்குகின்றனர். ஏழு

கரைக்காரரில் தலைவனை வெட்டியாண்டான், எதிரிகளை முறியடித்து முழுவலியொடுக்கி வெட்டிவென்றவனாதலின், அவன் வெட்டியாண்டான், வெற்றிகொண்டான் என்றே அழைக்கப்பெற்றான். இவனது மரபு, "வெட்டிநாடான்குலம்" என இன்றும் அழைக்கப்பெறுகின்றது. இவ்வெழுவரில் இன்னொருவன், "அத்திபெரியவன்". இவன் விவகாரங்களை நடுநிலைமையுடன் ஆராய்ந்து தீர்ப்பளிக்க வல்லவன் "அறுத வழக்கெல்லாம் அத்திபெரியவனிடத்தில் அறும்" என்று அக் காலத்திலே ஒரு வசனம் வழங்கலாயிற்று.

ஏழுகரைக்காரருக்குத் தாயாதிகளான வீரப்பநாடன் தீத்தியப்பநாடன், வடமலைநாடன் என்ற மூவரும், தமக்கு எழுவரும் சரியானபடி தாயபாகம் தராமைபினால் பகைமே விட்டுக் காயாமொழியில் வாழ்ந்த ஆதித்தநாடன், திக்கெலாம் கட்டிநாடன் ஆகியவர்கள்பால் உதவி வேண்டினர். ஆதித்தர், மூவருக்கும் படைப்பலமும், பணவுதவியும் அளித்தனர். போர் நிகழ்ந்தது. அப்போரில் எழுவர் தோற்றனர். மூவர், ஏழுகரைக்காரர் ஆண்ட காணியாட்சிகளைக் கைப்பற்றியாளத்தொடங்கினார்கள். குதிரைமொழிக் கிராமத்திலிருக்கும் சுந்தராட்சியம்மன்கோயிலுக்கும், கலியுகவரதர் ஆலயத்திற்கும், கறுக்குவேலையன் கோயிலுக்கும், வெளிநின்ற பத்திரகாளியம்மன்கோவிலுக்கும் சர்வமானியங்கள் இம்மூவரது ஆட்சியில் அளிக்கப்பெற்றன. இம்மூவரது காலம்-ஆதித்தர் சரித்திரக்குறிப்பின்படி கி. பி. 1630-ஆக இருக்கலாம். இம் மூவரில் வடமலைநாடனது சந்ததியார் பள்ளிப்பத்திலும், வீரப்பநாடனின் சந்ததியார் சீருடையா புரத்திலும், தீத்தியப்பநாடனின் சந்ததியார் பரமன்குறிச்சியிலும் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்.

## 6. ஏழுபத்து நாடாக்கள்.

கொற்கைப்பாண்டியனின் ஆதிச்சந்ததியார், பகைவரது இன்னல்களுக்குச் சிறிதும் அஞ்சாமல் கொற்கையையடுத்த குறும்பூரில் வாழ்ந்திருந்தார்கள். இவர்கள் பிற்காலத்தில் மதுரைச்சீமைக்கு வந்து குடியேறினார்கள். எனினும், இவர்களுக்குக் "குறும்பூர் நாடாக்கள்" என்னும் பெயர்வழங்கப்பட்டுவந்தது. அருப்புக்கோட்டை, விருதுநகர், சிவகாசி, கமுதி, பெருநாழி முதலிய வூர்களில் 'குறும்பூர் நாடாக்கள்' என்னும்பெயர் இன்றளவும் காணப்படுகின்றது. குறும்பூர் நாடாக்கள் குதிரைமொழித் தேரியின் வடகீழ்ப்பக்கத்தில் ஏழு சிறு ராஜ்யங்களை ஸ்தாபித்து, செல்வாக்குடன் பூமியாதிபத்யம் நடாத்தினர். இவ்வேழு சிற்றரசுப்பூமிகளை 'ஏழுபத்து' என்று சொல்வது வழக்கம். ஏழுபத்து நாட்டிற்குரியோர் ஏழுபத்து நாடாக்கள். இவர்களாவார்:— 1. கானம் நாடாக்கள், 2. மூலப்புளி நாடாக்கள், 3. அம்மன்புரம் புதுக்குடி நாடாக்கள், 4. மூலக்கரை நாடாக்கள். 5. நல்லூர் என்னும் வீரமாணிக்கபுரம் நாடாக்கள், 6. நாலுமாவடி நாடாக்கள், 7. குறும்பூர் என்னும் பணிக்கநாடான் குடியிருப்பு நாடாக்கள். இவ்வேழு பேர்களில் அம்மன்புரம் புதுக்குடி நாடாக்களில் அருணாசல நாடன் என்பான் மிகக் கீர்த்தி வாய்ந்தவன். அவன் மகன் இராமசாமி நாடன். அவனது திருக்குமாரர், தாமிரவருணி நதிக்கரையிலுள்ள ஏறல்நகரில் தெய்வீகமாய்த் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சேர்மன் அருணாசலசுவாமி. இந்த ஏழுபத்து நாடார்களின் காணியாட்சி, இன்னும் இவர்களது சந்ததி விருத்தியாரின் அநுபவத்திலிருந்து வருகின்றன.

கி. பி. 1760-ல், ஆற்காட்டு நவாபுவின் பிரதிநிதி ஸ்தானத்தில் மதுரையையாண்ட "கான்சாய்பு" என்னும் மகமதிய வீரன், ஒருசமயம் பாண்டியநாட்டுப் பாளையகாரரிடம் நிர்த்தாக்ஷணியமாய் நடந்துகொண்டான். இவனது செய்கைக்கு இரங்கிய இவன் மனைவி "மாசா" என்பவள் பின்வருமாறு சொல்கிறாள்.

" * * * *

எதிராடி வடக்கே பகை யாதே—நமது
ஈசுவர நவாபுதுரை செய்திதெரி யாதோ?
மேற்கேபகை யாதே துரை மகனே!—அந்த
விருதுபெற்ற 'ஐதர்' என்றால் பொல்லாத வண்டன்;
ஏற்கவே தெற்கே பகை யாதே—அதிலே
'எழுதண் டிகைக்காரர்' பொல்லாத போக்கர்;
கிழக்கே பகை யாதே துரைமகனே!—அந்தக்
கீழ்நாட்டு மறவருட செய்திதெரி யாதோ?
* * * * * "

—கான் சாயுபு சண்டை.

இங்ஙனம் மாசா மயங்கிக் கூறும் மொழிகளினின்று நாடார் மன்னவர்களாகிய ஏழுதண்டிகைக்காரர் முதலியோர் தெற்குத்திசையிற் பிரபலம் பெற்று விளங்கியதன் உண்மை புலப்படுகின்றதல்லவா?

## 7. நட்டாத்திப்பண்ணை.

திருவழுதிவளநாட்டிலே நாடாரினத்தவர்க்குரிமையான நட்டாத்திப்பண்ணை அல்லது நட்டாத்திஜமீன் என்ற சிற்றரசுப்பூமி, சிலகாலம் பிரபலமாய் விளங்கிற்று. இன்றும்

அந்தஜமீன் குடும்பம் செல்வாக்குடன் வாழ்ந்து வருகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னே தமிழ்நாட்டில் பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் இடையிற் போர்கள் நிகழ்ந்தன வன்றோ? பாண்டியநாட்டைச் சிலகாலம் சோழர் கைப்பற்றி யாண்டனர் அக்காலத்தில் சோழராஜ பரம்பரையைச் சார்ந்தவர்களான சிலர் பாண்டியரது கேண்மையைப் பாராட்டி, அவர்களுடன்கலந்து உறவாடிக்கொண்டு தாம்பிரவருணி நதிக்கரையிலே தங்கி நிலைத்துவிட்டார்கள். இவர்களும் இவர்களது சந்ததியுமே 'நட்டாத்தியர்' என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றனர். நட்ட — (பாண்டியரோடு) சிநேகங்கொண்ட, ஆத்தியர் — ஆத்திப்பூமாலையையுடைய சோழர் மரபினர். இந் நட்டாத்தியர் நெடுங்காலமாகத் திருவழுதி வளநாட்டையே தம் தாயகமாகக்கொண்டு வசித்து வருகின்றனர். பாண்டிய—நாயக்கயுத்தத்திற்கு (கி. பி. 1560) பின்னர்த்தான் "நட்டாத்திஜமீன்" ஏற்பட்டிருக்கவேண்டும். நட்டாத்தி ஜமீனுக்குத் தலைநகர் — நட்டாத்தி. இஃது குளந்தாபதி என்றும் வழங்கும். தலைவர்- 'திருவழுதிநாடன்' என்னும் பொதுப்பெயரால் அழைக்கப்பெறுவர். பெருங்குளம் என்று சாதாரணமாய் வழங்கப்படுகின்ற உத்தமபாண்டியநல்லூரில் எழுந்தருளியிருக்கும் திருவழுதியீஸ்வரர் ஆலயத்திற்கு மானியங்கள் பல நட்டாத்தி ஜமீன்தார்களால் விடப்பெற்றுள்ளன. ஆலயத்திருப்பணிகளும் அருமையான பல கைங்கரியங்களும் பல நூற்றாண்டுகளாக இவர்களாலேயே நடைபெற்றுள்ளன. திருச்செந்தூரில் நடைபெறும் திருவிழாவில், "வள்ளியம்மன் தினைப்புன மண்டபப்படி" இந்த ஜமீனிலிருந்தே நடத்தப்படுகின்றது. ஆதித்த நாடார்களைப் பற்றிய சரித்திரம் தனிநூலாகப் பிரசுரிக்கப் பட்டிருக்கிறபடியால், அவர்களைப்பற்றி ஈங்குக் கூறப்படவில்லை.

## 8. குட்டத்து நாட்டார்.

சகாப்தம் 1707 (கி. பி. 1785)-ல் எழுதப்பட்ட சாஸனக்கல் ஒன்று குலசேகரன் பட்டணத்தில் உளது. அச்சாஸனத்திற் குறிப்பிட்டிருக்கும், குட்டம்— சந்திர மார்த்தாண்டப் பணிக்கநாடன், குமாரவீரமார்த்தாண்ட நாடன் முதலியோர், அவ்வட்டகையில், அக்காலத்திய அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகளாய்ப் பிரபுகுல மக்களாக விளங்கினரெனத் தெரிகிறது. பண்டைக்காலத்து வேந்தர்களிடம், இக் குட்டத்து நாடார்கள் பல்லக்கு, படை முதலிய வரிசைகள்பெற்று மேன்மையாக வாழ்ந்தனர். முன் இரண்டாம் அத்தியாயத்தில் யாம் குறிப்பிட்டுள்ள ஐவர் ராஜாக்களுடன் இப் பிரபுக்களும் தொடர்புடையவர்களென்றே கருதலாம். குலசேகரன் பட்டணத்தையடுத்த 'சிறுநாடான்குடியிருப்பு' என்னும் கிராமத்தில் 'அறம் வளர்த்தாள்' என்னும் தேவியின் ஆலயமொன்றுளது. இந்நங்கை குட்டநாட்டிற் பிறந்தவள். குலசேகரபாண்டிய மன்னனின் மகள். ஐவர் ராஜாக்களைச் சேர்ந்தவனுன "பொன்னும் பாண்டியனை" மணந்தவள். இவளது இயற்பெயர், 'அறம் வளர்த்தாள்' என்பது. இவ் வரசமாதேவி, தாய் வீட்டில் தனித்திருக்கையில், போர்க்களஞ்சென்றிருந்த நாயகன் வீர சுவர்க்கம் எய்தினுன் எனக் கேள்வியுற்றுத்தானும் உடனே தீப்பாய்ந்து கணவனெய்திய இடத்தையடைந்தாள். பத்தினிக் கடவுளாக இவ் வரசமாதேவி கருதப்பட்டனள். ஆலயங்கட்டி அதில்வைத்துத் தொழத்தக்கவளுமாயினள் என இவ் வறம் வளர்த்த நாயகியின் வரலாறு கூறப்படுகின்றது.

குட்டத்து நாடார் மரபு விஷயம் முன்னர் இரண்டாம் அத்தியாயம் 68-ம் பக்கத்திற் சொல்லப்படடது. தெற்கில் உள்ளது குட்டநாடு; வடக்கில் உள்ளது மானவீரவளநாடு. குட்டநாட்டுக்கு உடையவர்கள் மார்த்தாண்ட நாடார்கள். மானவீரவளநாட்டுக்கு உடையவர்கள் ஆதித்த நாடார்கள். இவ் விருநாட்டார்களைப்பற்றிக் குற்றாலக் குறவஞ்சியிற் பின் வருமாறு கூறப்பட்டிருக்கின்றது.

" * * * * *

சிங்கன்: மார்பிற்கு மேலே புடைத்த சிலந்தியிற்
கொப்புளங் கொள்வா னேன்? சிங்கி!

சிங்கி: பாருக்கு ளேற்றமாங் காயாங் குளத்தார் தந்த
பாரமுத் தாரமடா சிங்கா!

சிங்கன்: எட்டுப் பறவை குமுறுங் கழுத்தினில்
பத்தெட்டுப் பாம்பேதடி? சிங்கி!

சிங்கி: குட்டத்து நாட்டாருங் காயாங் குளத்தாரும்
இட்ட சவடியடா! சிங்கா!

* * * * * "

காயாமொழி — காயாங்குளம். காயாமொழியிலுள்ள ஓர் குளத்தின் பெயரால், அவ்வூர் அங்ஙனம் பெயர்பெற்றது. மானவீர வளநாட்டின் முக்கியபட்டணம், காயாமொழி. திருச்செந்தூர் சண்முகக்கடவுளின் உதயமார்த்தாண்ட பூசைக்குரிய புஷ்பச்செலவு, குட்டம்—குமாரவீரமார்த்—தாண்ட நாடனது குடும்பத்தாரால் இன்றளவும் நடைபெறுகின்றது. மார்த்தாண்ட நாடனது வீரச்செயல்களைப்பற்றி ஆதித்தர் சரித்திரத்திலும் கூறப்பட்டிருக்கின்றது.

## 9. நாகமணி மார்த்தாண்ட நாடன்.

நாஞ்சிநாட்டில், அகஸ்தீஸ்வரம் என்றொருநகரம்உண்டு கி. பி. 1560-ல் நிகழ்ந்த நாயக்க-பாண்டிய யுத்தத்தில் நாஞ்சி நாட்டிற்குச்சென்ற நால்வர் பாண்டியரில் ஒருவனது சந்ததியில் உதித்த "நாகமணி மார்த்தாண்ட நாடனது" குடும்பம் ஒன்று அகஸ்தீசுவரத்தில் இன்றும் புகழுடன் வாழ்ந்து வருகின்றது. இக்குடும்பத்தார் "ஜமீன்தார்" அல்லது "பண்ணையார்" என்னும் சிறப்புப்பெயருடன் விளங்கினர். இவர்கள் திருவாங்கூர் அரசர்களால், கோட்டைகட்டிக் கொடுக்கப் பெற்று, நூறு பொருநர் (வீரர்) புடைசூழப் பல்லக்கிற் பவனிவரும் சிலாக்கியம் அடைந்திருந்தார்கள். இவ்விதச் சிறப்புக்கள் சொற்பகாலத்தில மாறிவிட்டனவென்றும் சொல்லப்படுகின்றது. கி. பி. 1871-வரை, இக்குடும்பத்தார் க்ஷீணதிசையுற்றிருந்த காலத்திலுங்கூட முற்கூறிய மரியாதைகளுடன் வாழ்ந்ததாக, "மத்தீர்" எனனும் பாதிரிதுரை யெழுதிய திருவாங்கூர் ராஜ்யத்தைப் பற்றியதோர் புஸ்தகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

## 10. கலியுகராம பாண்டியன்.

ஆழ்வார்திருநகரிக் கோவிற் சாஸனத்தில் உள்ளதாகச் சில வசனங்கள், செந்தமிழ் 12-ம் தொகுதி, 12-ம் பகுதியிற் காணப்படுகின்றன. கலியுகராமன் அல்லது கலியுகராம பாண்டியன் என்ற ஓர் சிற்றரசுப் பாண்டியன் இருந்தான். 'கலியன்' என்னும் பெயரும் இவனுக்குஉண்டு. அப்பாண்டியன் மூவாயிரம் பணம் செலவிட்டுக் குருகைப்பிரான் (நம்-மாழ்வார்) திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்துளான்

என்றும், அவன் ஏற்படுத்திய நாணயம், கலியுகராமன் பணம், கலியுகராமன் மன்றல், கலிப்பணம் என்னும் பெயர்களால் வழங்கிற்று என்றும் அச்சாஸனப்பகுதியால் தெரிய வருகின்றது. கலியுகராமனது காலம், இற்றைக்கு மூந்நூறு வருடங்கட்கு முன் என்று ஆராய்ச்சியாளர் அபிப்பிராயப் படுகின்றனர். ஆனால், அக்காலத்திற் பாண்டி நாட்டில் நாயக்கராட்சி பிரபலமாக இருந்தது பிரசித்தம். ஆகையால் அந்நாளில் கலியுகராமன் வாழ்ந்தது உண்மையாயின் அவன் தன் சொந்தத்தில் நாணயங்களை ஏற்படுத்தியிருக்கமுடியாது. ஆகவே இக் கலியுகராமனது காலம், மாலிக்காபூர் படையெடுப்புக்காலத்திற்கும் (கி பி. 1325) — விசுவநாத நாயக்கன் படையெடுப்புக்காலத்திற்கும் (கி. பி 1560) இடைப்பட்ட காலமாயிருக்கவேண்டுமென்று நாம் கருதலாகும். அவ்விடைப்பட்ட காலத்திற்முன் சிற்றரசுப்பாண்டியரது ஆட்சிகள் எங்கணும் நிலைத்து நின்றன. கலியுகராமன் ஆண்ட இடம் கொற்கையை யடுத்துத்தானிருக்கவேண்டும்.

ஏறல் நட்டாத்தியம்மன் கோவிற் பக்கத்தில் தொடங்கி வாழவல்லான் கிராமப்பக்கம் ஓடிக் கொற்கைக்குளத்தில் பாய்கின்ற கால்வாயைக் "கலியன்கால்" என்று சொல்வார்கள். அக்கால்வாய் பிற்காலத்திற் செப்பனிடப் பெற்றுள்ளது. கலியனது ஆட்சிக்குட்பட்டிருந்த விளைபுலங்கள் இக்காலத்திலும் "கலியன்புள்ளி" என வழங்கப்பெறும். தாமிரவருணியின் வடகரையில் 'உமரிக்காடு', 'வாழவல்லான்' என்னும் கிராமங்களிருக்கின்றன. கொற்கைராஜ்யம் அழிந்தபின்னர் இக்கிராமங்கள் நிலைபெற்றன. நிலைமைக்கார நாடார்களும், மற்றவர்களும் பரம்பரையாக இங்கு வசித்துவருகின்றனர்.

தற்காலம் உமரிக்காடு இராமசாமி நாடனென்பவர் கொற்கைக்குக் கிராமமுன்சீபாக வேலைபார்த்து வந்தனர். அவர் சமீப காலத்திலிறந்துவிட்டபடியால் அவரது மைந்தர்களிலொருவர் அவ்வேலையைப் பார்த்துவருகின்றனர். கலியுகராமபாண்டியனது சந்ததியார், 'கலியநாடன்', 'கலிதீர்த்தபெருமாள் நாடன்' என்னும் பெயர்களால் அழைக்கப்பெற்று வந்திருக்கின்றனர். இம்மரபிலுதித்த 'கலிகாத்தபெருமாள்நாடன்' என்பவன் உமரிக்காட்டில் வாழ்ந்தானெனவும், திருச்செந்தூரில் ஆலயவிஷயமாகப் பலர்செய்த இன்னல்களுக்கு ஆற்றாது உரோமன்கத்தோலிக் மதத்திற் சார்ந்தனனெனவும் முன் (128-ம் பக்கம்) இந்நூலிற் கூறியுளது. இன்னும் இம்மரபினர் வாழவல்லான் கிராமத்திலும், கடையத்தை யடுத்த 'புங்கம்பட்டி'யிலும் வாழ்கின்றனர்.

## 11. திருமங்கலம்.

மதுரைக்குத் தெற்கேயுள்ளது 'திருமங்கலம்' என்னும் புராதன நகரம். முற்காலங்களிற் பாண்டியர்கள் இவ்விடத்திற் கோட்டைகட்டி யாண்டதாகத் தெரிகிறது. அரியநாயக முதலி, வேளாளர்களைச் சோழவந்தானிற் குடியேற்றியது போல, திருமங்கலத்திலும் குடியேற்றியதாகச் சரித்திரங் கூறுகின்றது. கி. பி. 1560-ல் நடந்த பாண்டிய–நாயக்க யுத்தத்திற் பாண்டியர் தோற்று, நாடு வேற்றரசாகிவிடவே, பாண்டிய மரபினரான நாடார் பலர் இந்நகர்வந்து தங்கியதாகத் தெரிகிறது. நல்வளங்கள்பொருந்தி ஆற்றங்கரையிலுள்ள இந்நகரம், நாடார்களின் ஆதிவியாபார ஸ்தலங்களில் ஒன்றுயுள்ளது. முற்காலங்களில் நாடார்கள் இந் நகரில் ஏற்படுத்திய

'பேட்டை' மிகப் பிரபலம் பெற்றிருந்தபடியால், குற்றாலக் குறவஞ்சியில்,

" தஞ்சை சிராப்பள்ளிக் கோட்டைதமிழ்ச்
சங்கமதுரைதென் மங்கலப் பேட்டை "

என்று கூறப்பட்டிருக்கிறது. இங்கு நூலாசிரியர், 'திரு' என்னும் அடைமொழிக்குப் பதிலாக "தென்" என்னும் அடைமொழி கொடுத்து திருமங்கலப்பேட்டையை அழைத்துளார். மதுரைச்சீமையில் இந்நகர்போன்று, சாத்தன்குடி, சிவகாசி, விருதுநகர். அருப்புக்கோட்டை, பாலையம்பட்டி என்னும் ஊர்கள் நாடார்கள் வசிக்கும் ஊர்களில் தலைசிறந்தனவாய் விளங்கும். இவ் ஆறு கிராமங்களில் வாழும் நாடார்கள் ஆறூர் உறவின்முறை என்னப்படுவர். இந் நகர்களிலும் மற்றும்இடங்களிலும் உள்ள நாடார்கள் ஆங்காங்கேபேட்டைகள்கட்டி வர்த்தகத்துறைகள் நடத்திவந்தபடியால் பேட்டை நாடார்களென்று சொல்லப்படுவர். திருநெல்வேலிச் சீமையிலுள்ள நாடார்கள் "தக்ஷிணமாற நாடார்கள்" என்றும், மதுரைச் சீமையிலுள்ள நாடார்கள் "உத்தரமாறநாடார்கள்" என்றும் அழைக்கப்பெறுவர். உத்தரமாற நாடார்களுக்கு 96 பேட்டைகளும், தக்ஷிணமாற நாடார்களுக்கு சுமார் 50 பேட்டைகளும் உள.

பாதாள மெழுகடல் சூழ்மது ராபுரிப்
பட்டணந் தன்னில் மூன்னாள்
பார்த்திப வருஷத்தில் முக்காற் படியிற்கன
பஞ்சமும் வந்த செய்தி

காதாரக் கேட்டதொன் றல்லாது நானதைக்
கண்ணாரக் கண்ட தில்லை
கலியுகம் வரவர விரோதிவரு ஷந்தனிற்
கனபஞ்சம் வந்து மெத்தக்

கோதாரி யாச்சுது பேட்டையில் தானியம்
கொள்ளவுங் கிடைக்க வில்லை
கோமுட்டி கடையிலே அரிசியோர் படியில்லை
கோவிலிலும் பூசை யில்லை
ஆதாளி யிடுங்கூட லழகர்தங் கோவிலோ
டடைத்திடுஞ் சொக்கர் கோவில்
அழகான மதுரையில் வளருமீ னாட்சியே
அங்கயற் கண்ணி யுமையே.

இப்பாடலிற் குறிப்பிட்டுள்ள 'பேட்டை', நாடார்கள் ஏற்படுத்திய பேட்டையென்னும் வியாபாரஸ்தலமே! ஆகவே 'கோட்டைநாடார்' என்பதுபோலப் 'பேட்டைநாடார்'எனப் பெயர் வழங்கலாயிற்று.

## 12. பற்பலர் ஆட்சி.

மதுரையில் மங்கம்மாளின் ஆட்சிமுடிந்தது. விஜயரங்க சொக்கநாதநாயக்கன், மீநாக்ஷி, விஜயகுமார முத்துத்திருமலை நாயக்கன் ஆகிய இவர்களது ஆட்சிகளும் கி. பி 1741-வரையிலிருந்து முடிந்தன. மதுரைத் தலவரலாற்றில் காணப்பெறும் பின் வரும் விவரம், இங்குக் கவனிக்கத்தக்கது:—சகாப்தம் 1664 (கி. பி. 1740) ருதிரோற்காரிஸூ நிஜாம் வடக்கிருந்துவந்து திரிசிரபுரம், மதுரைக் கோட்டைகளைக் கைக்கொண்டு மாபோசிகான்சாய்பு, மம்மதுல்லிகான் சாய்பு என்னும் இருவரையும் வைத்துவிட்டு வடக்கே போய்விட்டான் அவர்கள் பத்துவருடம் ஆண்டனர். கி. பி. 1752-ல் ஆற்காட்டுநவாபு ஆட்சிவகை மயானாவும், அவனமைத்துனன் ஆல்முகானும் இவர்களைச்சார்ந்த மற்றவர்களும் தொண்டை-

மான் சீமைவழியே இரண்டாயிரம் குதிரைப்படையுடன் வந்து மதுரைக்கோட்டையைக் கட்டிக்கொண்டு ஒருவருடம் திருவடிராஜ்யம் (திருவழுதிவளநாடு)வரை ஆண்டனர். அப்பால் மயானவை அரசனுக்கி வைத்துவிட்டு ஆல்முகான் வந்தவழியேபோயினன். மயான, மதுரைச்சீமையை மைசூராருக்கு விற்றுப்போட்டு மோகூர் போய்விட்டான். முற்கூறிய 1752-ம்ஸு புரட்டாசிமீ 30வ மைசூர்வகையாளான கூகூசாய்பு வந்து ஆண்டனன். பின்பு சேதுபதி வாசல் தளகர்த்தன்–வெள்ளையன் சேர்வையும், உடையாத்தேவர் வாசற் பிரதானி – தாண்டவராய பிள்ளையும் படையுடன் வந்து மதுரையை வளைந்தனர். அங்கிருந்த கூகூசாய்பு திண்டுக்கல் மார்க்கமாய்ப் போய்விட்டான். பின்புஇருவரும் வெள்ளிக் குறிச்சியிலிருந்த பங்காரு திருமலை நாயக்கரது குமாரர் விஜயகுமாரமுத்துத் திருமலைநாயக்கரைக் கொண்டு வந்து ஆளும்படி செய்து போயினர். அவர் ஆறுமாதம் ஆண்டனர். பின்பு மோகூரிலிருந்த மயான, மகதிமீயா, நபிகான் ஆகிய இவர்களுடன் வந்து கர்த்தாக்களைத்துரத்தி, விட்டுப் பழையபடியாண்டனர். மைசூர்வகை கூகூசாய்பு வெள்ளையன் சேர்வைகாரருடன்சேர்ந்து அனுப்பானடியில் பாளையம்இறங்கிப் போர்தொடுத்தனர். அப்போரில் மயான வகையார், சாய்புவையும் சேர்வைகாரரையும் வெட்டிப் படைகளைத்துரத்தியடித்து இராஜ்யத்தை மீண்டும்ஆளத்தொடங்கினர்.

கி. பி. 1755-ல் தேவனம் பட்டணத்திலிருந்து ஆயிரம் பிரஞ்சுக்(பறங்கிக்)காரருடன் மாபோசிகான் படையெடுத்து வந்து மயானகூட்டத்தாரை ஜயித்துத்தானே ஆளத்தொடங்

கினன். பறங்கியர் திரும்பிப்போகும் பொழுது * மோகூர்க் கோவிலி லுள்ள விக்கிரகங்களைத் திருடிச் சென்றனர் ஆனால் வழியில் கள்ளர்கள் அவர்களை மறித்து விக்கிரகங்களைப் பறித்துக்கொணர்ந்து அழகர் கோவிலுக்குச் சேர்ப்பித்தனர். பின்பு கான்சாய்புவின் ஆட்சி பிரபலமாயிற்று. ஆனால் கி. பி. 1766-ல் அது முடிவுற்றது. பின்பு இந்துக்களும், மகமதியர்களுமாக 1790 வரை மதுரையில் அதிகார வேலைகள் பார்த்து வந்தனர். தேச ஆட்சி ஆற்காட்டு நவாபு வசமிருந்து வந்தது. இங்ஙனம் சுமார் அறுபது வருஷ காலம் நிலையான ஆட்சியின்றி நாடு தன்னைத்தானே அரசு செலுத்தி யிருந்தது. ஆகவே இக்காலத்தைத் "தன்னரசுக் காலம்" என்பர்.

## 13. தாலிக்கு வேலி.

இனி அக்காலங்களில் பிரஸ்தாபமாக விளங்கிய நாடார்களின் சரித்திரம் கூறுவாம்.

கடையம்: இது ஒரு பழமையான இடம். கி. பி. 711-779 ஆகிய காலங்களில் சேரரும், பாண்டியரும் இவ்விடத்தில் போர் செய்தனரென்று கல்வெட்டுக்களின் மூலம் அறியக் கிடக்கின்றது. சங்க நூல்களிற் கேட்கப் பெறும் "ஓலைக் கடையத்தார்" என்னும் புலவர் தங்கிய இடம் இதுவாயிருக்கலா மென நிதானிக்கக் கூடும். சான்றோரின்

* மோகூர் — பழையன் என்னும் சிற்றரசுப் பாண்டியன் ஆண்ட இடம் இது; மதுரையின் வடக்கே அழகர் கோவிலுக்கு அருகில் உளது.

குல குருவாகிய பரிமேலழகரின் குருவான சென்னவீரைய-ரின் சமாதி யிவ்விடத்தில் இருக்கிறது. கடையத்தில் தற்காலம் வாழ்கின்ற நாடார்கள், பண்டைநாளில் திருநெல்வேலி, தென்காசி முதலிய நகரங்களிற் செங்கோல் செலுத்திய பாண்டிய மன்னருக்குப் படைத்தலைவர்களாய் விளங்கிச் சேர்வைகாரர் என்னும் பட்டம் பெற்ற வீர மக்களின் சந்ததியாராவர். நாயக்க மன்னரது தளகர்த்தராகத் திருநெல்வேலிச் சீமையில் தலைமைபெற்று விளங்கிய அரியநாயக முதலியார், கொல்லம் 836 — 865 (கி. பி. 1561 முதல் 1590) ல் அதிகாரம் பூண்டிருந்ததாகத் திருநெல்வேலிக் கோவிற் சாசன ஏட்டினின்று தெரியவரும் அப்பால் நூறு வருடகாலம் நாயக்கர் ஆதிபத்யம் திருநெல்-வேலியில் நடைபெற்றது. பிறகு ஆற்காட்டு நவாபின் தளகர்த்தமாக அரியநாயக முதலி மரபினர், எழுபத்திரண்டு பாளையப்பட்டுக்களுக்கும் சர்வாதிகாரியா யிருந்து கப்பப் பொருளை வசூல்செய்து நவாபுக்குச் செலுத்தி வந்தனர். இவர்கள் மரபினர் "தளவாய் முதலி" யென்னும் சிறப்புப் பெயருடையோர். இவர்களுள் மாவைக் குமாரசாமி முதலி மருமகன் ஆறை அழகப்ப முதலியார் மிக்க பிரபலத்துடன் அதிகாரஞ் செலுத்தியவர். இவருடைய அதிகாரத்தில் தளவாய் இருக்கும் ஆசனம் போடப்பட்டுள்ள மேடைக்கெதிரில் சிறிது தூரம் சேறுக்கிக் கிடக்கும் பூமியில் பாளையக்காரர்கள் நடந்து வந்து, பின் மேடையில் வைத்திருக்கும் நீராற் கால்கழுவிச் சுத்தஞ் செய்துகொண்டு பின் அவரை அருகில் வந்து வணங்குவது வழக்கம். இது தளவாய் முதலியார்களின் அதிகாரப் பெருமையைக் காட்டுவதற்கு ஓர் அறிகுறியாகும். 'சேறுடிக்காணல்', 'சேறுடிச்சேவித்தல்'

என்று இவ் வழக்கத்திற்குப் பெயர். பாளையகாரரும் ஆற்காட்டு நவாபின் அதிகாரத்திற்கு அஞ்சி யிங்ஙனம் செய்துவந்தார்கள். பாளையகாரர் சிலருக்கு இஃது ஒரு பெரிய அவமதிப்பாகத் தோன்றியது. ஆகவே தளவாய்க்கு எதிராகச் சதிவேலையும் நடைபெற்றது. சிவகிரி ஜமீன்தாரான தென்மலை வன்னியனாரும், வடகரை ஜமீன்தாரும், அழகப்ப முதலியார் நித்திரை செய்துகொண்டிருக்கையில் அவரைக் காணப் போவதுபோலச் சென்று அவரைக் குடல் சரியக் குத்தி வீழ்த்தினர்.

இச்சம்பவத்தைக் குறித்துப் பின்வரும் பாடல் ஒன்று வடகரை ஜமீன் சரித்திரத்திற் காணப்படுகிறது.

"கங்குல் வைத்திடுங் கன்னடி ராணுவை
சங்கு வன்னியன் பெற்ற வரகுணன்
தெங்கு தெங்கெனத் தெங்கெனத் தெங்கினன்
தொங்கு தொங்கெனத் தொங்கெனத் தொங்கினன்"

இச்செய்யுள் வடகரைஜமீனின் திவானாக இருந்து மூற் கூறியசதியிற் கலந்துகொண்ட பொன்னம்பலம்பிள்ளை யென்பவரால் பாடப்பட்டது என்பர்.

அழகப்பமுதலியார் இறந்துவிட்ட செய்திகேட்டு அவரது மருமகன் குமரப்பமுதலி வெகு கோபாவேசமாகி ஆற்காடு சென்று பட்டாளங்களைக் கொண்டுவந்து, பழிக்குப்பழி வாங்குவதாகக் கூறிக்கொண்டிருந்தான். இச்செய்தியை யுணர்ந்த பாளையகாரர்கள், மாமனைக்கொன்றதுபோல மருமகனையும் கொலை செய்து விடுகிறதென்று கூடிப்பேசினர். குமரப்பமுதலி, பாளையப்பட்டுக்களின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களைக்கடந்து ஆற்காட்டுக்குச்செல்வது அசாத்திய

மாயிற்று. தானிருக்குமிடத்தில் தனக்கு உதவி செய்வதற்கும் ஆள் இல்லே. ஆகவே, குமரப்பமுதலியார் தம் தேவியுடன் கடையத்தை யடைந்தார். அவ்விடத்தில் பெயர் பெற்ற நாடார்குலவீரர் நால்வரிருந்தனர். அவர்கள்: பேயமாட நாடன், மாடக்கண்ணு நாடன், புறங்காட்டாப்புலி, சூட்சமுடையான் என்னும் பெயரினராவர். இந்நால்வரும் தளவாயை நன்குவரவேற்று "நாங்கள்பகைவரைத்தொலைத்து உம்மைக்காப்பாற்றுகிறேம்" என்று உறுதி கூறினர். இந் நால்வரில் பேயமாடநாடனுடைய வீட்டிலே, இருவரும் அடைக்கலமாகத் தங்கியிருந்தனர். பாளையகாரர் இதனையுணர்ந்து படையுடன் கடையத்தை வளைந்து கொண்டனர். பகைவர்களையெதிர்பார்த்திருந்த நாடார்குலமக்கள், உடனே ஆயுதபாணிகளாகிப் படையாகத்திரண்டு, பாளையக்காரர்களை எதிர்த்துப் போராடினார்கள். நாடார்கள் முன்னேறிச் சென்று எதிராளிகளைக் கடையத்திலிருந்து கழுநீர்க்குளம் வரை எட்டுமைல்தூரம் விரட்டியடித்தார்கள். '"முதலி" யின் தலையை வெட்டிக்கொணர்வேன்' என்று சபதம் கூறி வந்த பாளையத்தலைவனது தலையைப் * பேயமாடநாடன் வாளால் வெட்டி, அதனைக் கையிலேந்திக் கொண்டு வந்து

---

* 'பேயமாடன்' என்னும் பெயர், காளிகாதேவியின் பரிவார தெய்வங்களுள் ஒருதெய்வத்தின் பெயராகத் தென்னுட்டில் இன்றளவும் வழங்கிவருகின்றது. சுடலையாடியாகிய சிவபெருமானின் ருத்திரமூர்த்தமே இத்தெய்வம் என்பது சிலர்கொள்கை. துஷ்டதேவதைகளில் ஒன்றாக இதனைக்கொள்வர். அரசியல்நீங்கப்பெற்ற பாண்டியமரபினர் காலத்திற்கேற்ற கோலம்பூண்பவராகி, இம்மாதிரி தெய்வ வணக்கமுடையராய்ப் பெயர்களையும்வைத்துக்கொண்டார்கள் என்று தெரிகிறது.

முதலியார்முன்னிலையில் வைத்தனன். அவ்அசகாயசூரனது வீரத்தை மெச்சி, அழகப்ப முதலியாரின் புத்திரி,

"நிலைகொண்டகீர்த்தி அழகப்பவேந்தனின் நித்திரையில்[லே
கொலைகொண்டபாதகன் தென்மலை வன்னியன்கோட்டையி
அலைகொண்டுமோதி யிராவணன்கோட்டை யழிந்ததுபோல்
தலைகொண்டு வந்தான்என் தாலிக்கு வேலி தளசிம்மமே"

என ஒரு பாடலைப் பாடிப் பாராட்டினுள். குமாரப்பமுதலியார் மனமகிழ்ந்து நாடார்குல வீரர் நால்வருக்கும், அவர்களுக்கு உதவிசெய்த மற்றவர்களுக்கும் விளைநிலங்கள் பலவற்றை விட்டுக்கொடுத்தார். இவ் விளைநிலங்கள் இன்றளவும் அவ்வீரர்களின் சந்ததியார்பால் இருந்து வருகின்றன. திருச்செந்தூர் வேல்குமார பண்டாரத்துக்கு ஆலங்குளத்து நாடார்கள் எழுதிக்கொடுத்த திருமட சம்பந்தமான தாமிர சாஸனத்தில் கையெழுத்துவைத்திருக்கும் நாடார் பன்னிருவரில் "தளவாய் நாடன்" என்ெருரு பெயரும் காணப்படுகின்றது அச்சாஸனகாலம், சகம். 1686 (கி. பி. 1774).

## 14. சிவகாசி—அய்ய நாடன்

முன் 109—110-ஆம் பக்கங்களிற் கூறியவாறு, மல்லி நாட்டில் ஒரு திருநகராகத் திகழும் சிவகாசி, மேற்கில் சிவகிரி, சேத்தூர், கொல்லங்கொண்டான், பேரையூர் முதலிய பாளையப்பட்டுக்களாலும், கிழக்கில் கோவார்பட்டி, கொல்லபட்டி, ஒண்டிப்புலிநாயக்கனூர் முதலிய பாளையப்பட்டுக்களாலும் நெருக்குண்டு நிர்ப்பந்தமுடையதாக இருந்தது. அந்நகரில் தெப்பக்குளத்தை அமைத்த செண்பகக்குட்டி நாடன் மரபில் அய்ய நாடன் என்பவன் மிக்க செல்

வாக்கு உடையவனாக வசித்திருந்தான். மதுரைத் துரைத் தனத்தாருக்கு இப்பக்கங்களி லுள்ள குடிகளிடம் வரிவசூல் செய்து கொடுக்கும் பொறுப்பும் இவனது குடும்பத்தி லிருந்து வந்தது. மதுரை, மகமதியரது ஆட்சியிலிருந்த பொழுது, நவாபு ஒருவன், வரிப்பணம் வந்து சேராமையால் அய்ய நாடனது தந்தையை மதுரைக்குக் கொண்டுபோய்ச் சிறையி லடைத்துவிட்டான். அய்ய நாடன், உடனே மதுரையை யடைந்து, சமயம் பார்த்து நவாபுவைப் பேட்டி கண்டு, தன் சொற்சாதுர்யத்தால் அவனை மகிழ்வித்து அவனாற்கொடுக்கப்பெற்ற தண்டிகையும், குதிரையும் பெற்று நூறு பொருநர் புடைசூழ விருதுகளுடன் சிவகாசிக்குத் திரும்பி வந்து வரிப்பணங்களை ஒழுங்காய் வசூல்செய்து அனுப்பி வந்தான். நவாபுவின் நன்மதிப்புடையவனானமை-யால், பாளையப்பட்டுக்களுக்குஅஞ்சாநெஞ்சினனாகி ஆடம்பர மாக அவன் வாழ்ந்திருந்தான். சிவகாசி நாட்டாண்மைக் காரரது குடும்பமும் இத்தகைய பெருமதிப்பு உடையதோர் குடும்பமேயாம்.

## 15. பெரியமுத்து நாடன்.

பேரையூரையடுத்த சாலிச்சந்தை யென்னுங் கிராமத் தில் 'பெரியமுத்து நாடன்' என்பவன் பிரபலமாக வாழ்ந்த வன். அவன் பேரையூர் ஜமீன்தாருக்கு உற்றதோழன். ஜமீன்தாரின் அரண்மனைக்கருகில் நாடார்களின்பேட்டையை அமைத்திருப்பதே அவனது ஆற்றலுக்கு அறிகுறி. அவன் தஞ்சாவூர்ச்சீமையைச்சேர்ந்த, அம்மாபேட்டையில் நாடார் கள் பேட்டையைஏற்படுத்தியவன். பெரியசீமானாகவாழ்ந்து தன் தொண்ணூற்றாறாம் வயதில் உயிர்துறந்தான். அவனைப் பற்றிய சரமகவிகள்:—

(1) நீறிணுன் ஈசன்; நெடியோன் உடல்கறுத்தான்
ஓறும்உமை பாதி உடம்பாளுள்—கூறும்
கரியமுக மாளுன் கணபதிசெஞ் சாலி
பெரியமுத்தைக் காணுக பின். [திருமலைக்கொழுந்து

(2) அரிவளர்த்தும் மருப்பொடித்தும் சோதிச் சங்கை
அத்தம்வைத்தும் கரும்பைவளைத் தடுத்துப் பார்
கரியுரித்தோன் ஆனைமுகன் கமலக் கண்ணன் [த்தும்
காமனிவர் பெரியமுத்தைக் காணு மேதோ?
தெரியவில்லை யென்றைய முற்ற போது
செஞ்சாலி தனில்வளர்ந்து தெளிவா யோங்கும்
பெரியமுத்தைக் காண்மீரென் றும்பர் நாட்டில்
பேணிவந்தார் கண்டுநலம் பெருகி ளுரே!
[திருமலைக்கொழுந்து

(3) மதிகு றைந்தனன் வாரி கதறின
மாந்த லற்றனர் வானநன் ளுட்டவர்
நதியுளந் தெளி யாது கலங்கின
நாம வேலன் மலையடி நண்ணினன்
எதிரில் மாயவன் பாற்கடற் றுஞ்சினன்
எங்களுயகன் எங்களுற் றுனரோ
துதிபெருகும் பெரியமுத் தேந்திரன்
துஞ்சி ளுனெனும் சொல்லுற்ற போதிலே.
இன்னும் சில செய்யுட்கள் உள. [பிச்சுவையர்.

பல வித்துவான்களின் பாடல்களைத் திரட்டித் "தனிச் செய்யுட் சிந்தாமணி" என்னும் நூலைத் தொகுத்தவர், 'அரிவளர்த்தும்' என்ற இரண்டாவது சாம கவியை,

திருநெல்வேலி ஜில்லா சாலிச்சந்தை பெரியமுத்துப்பிள்ளை-யின் தேகவியோகத்தைக் குறித்துத் திருமலைக்கொழுந்தாற் பாடப்பெற்றதென்று எழுதியிருக்கின்றார். இஃது உண்மை யறியாமல் எழுதியதென்று தெரிகிறது. அய்ய நாடன், பெரியமுத்து நாடன் போன்ற பல நாடார் குலப் பிரபுக்கள் மேற்கூறியவாறு, தன்னரசுக் காலத்தில் சுயேச்சையுடன் மதுரை, திருநெல்வேலிப் பிரதேசங்களில் ஜமீன்தார்களின் நட்புக்குப் பாத்திரராய் விளங்கினார்கள்.

## 16. கட்டபொம்மு நாயக்கனும்-நாடார்களும்.

தென்னாட்டுப் பாளையக்காரரில், பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட கட்டபொம்மு நாயக்கன் மிகுந்த வலிமை படைத்தவன். ஆயினும் அவன் ஆட்சி ஒழுங்கற்றதாகவே இருந்தது. கி. பி. 1790 க்குப் பின்பு, தமிழ் நாட்டின் தென் பகுதி, ஆற்காட்டு நவாபு முகமது அலியின் கையினின்று ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிற்று. பாளையக்காரர் ஆங்-கிலேயக் கும்பெனியாருக்குக் கப்பங்கட்ட இசைந்தனர். கட்டபொம்மு அங்ஙனஞ் செய்ய இசையவில்லை. 'திசை காவல்' என்றொரு வரியை அவன் தன் குடிகளிடமிருந்து பலாத்காரமாக வசூலித்து வந்தான். இத்திசைகாவல் வரி காரணமாய்க் காயாமொழி ஆதித்த நாடனுக்கும், கட்டப்-பொம்மு நாயக்கனுக்கும் போர் நிகழ்ந்து, பின் இருவரும் சமாதானம் மேற்கொண்டு ஒருவரோடொருவர் உறவாடிக் கொண்டனரென்று "ஆதித்தர் சரித்திரம்" கூறும். பாஞ்சாலக்குறிச்சிப் படைவீரரை களக்காட்டு நாடார்களும் குட்டத்து நாடார்களும் முறியடித்ததாகவும் கூறப்படுகின்றது. பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகில் வசித்த நாடார்கள்

கட்டபொம்முவிடம் வேலைபார்த்திருந்ததாகவும் தெரிகிறது. காட்டுநாயக்கன்பட்டி நாடார்களில் ஒருவரான "திருப்புகழ் ஞானி" என்பவர் கட்டப்பொம்முவிடம் சேவை செய்தவர். அவர் அவ்வாறிருப்பது மற்றவர்களுக்குவிருப்பமின்மையால் விரோதபாவம் விளையும்படி செய்தனர். தனக்கு விரைவில் அபாயம் நேரிடுமென்று அறிந்த ஞானியார்,

"காகம் பறவாத கட்டபொம்மு கோட்டையிலே
கூகை யிருந்து குலாவுங்காண் அம்மானை;
கூகை யிருந்து குலாவுமே யாமாயில்
கோகனக மாது குடிபோவாள் அம்மானை;
கோகனக மாது குடிபோவா ளாமாகில்
ஏக வெளியா யிருக்குங்காண் அம்மானை;
ஏக வெளியா யிருக்குமே யாமாகில்
எருக்கும்குருக்குமுளைத்திருக்குங்காண் அம்மானை!"

என்றபாடலைப் பாடிவிட்டு, அவ்வூரினின்று நீங்கிச் சிவகாசி வட்டகையில் கல்போதில் சிலகாலம் வாழ்ந்திருந்து விருது-நகரில் சமாதிநிலை யெய்தினர்.

" * * * *

ஏழு கிராமத்து மாடசாமி தம்பி
இங்கிதக் காரன் அதிகாரன்"

"கொங்கலக் குறிச்சிப் பிள்ளை மகன்,
குலையன் கரிசல் ஆறுமுகம்:
காருக்கவண்டன் கரிக்கவண்டன் காயங்
காட்டுச் சிவசங்கு நாடானும்
புதியம் புத்தூர்ப் பழனிநாடன்
பொறுக்கும் பல்லக்கு வரிசைபெற்றோன்"

—கட்டபொம்முகும்மி.

இப்பாடலில், ஏழுகிராமங்களுக்குத் தலைமை வாய்ந்த சிறுத்தண்டுக் கிராமத்து மாடசாமிநாடன், ஆறுமுகநாடன் முதலியநாடார்குலமக்களின் பெயர்கள் வாப்பெறுதல்காண்க. ஆகவே கட்டப்பொம்மூக்குத் துணையாக நாடார்குலப் பிரமுகர் பலர் இருந்தனர் என்பது வெளிப்படை. இன்னும் கலெக்டர் ஜாக்ஸன்துரையைக் கட்டபொம்மு சந்திக்க நேர்ந்த பொழுது, அவனுடன் பல நாடார்களும் சென்றதாகக் கதை கூறுகிறது. கட்டபொம்முகதையில் தானுபதிப்பிள்ளை மகன் கலியாணத்துக்காக நெல்லிருக்கும் இடவரிசைகளைச் சொல்லுமிடத்தில் ஆறுமுகனேரி பெரியவீட்டுக்கார நாடனது பெயரும் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

மேல்மாந்தைப் பாளையப்பட்டுக் குஞ்சையநாயக்கனது அரண்மனைக் காருபாராக இருந்த சேதுதுங்க நாடன், நட்டாத்திஜமீன்தார் வைகுண்டநாடன் முதலிய பிரபல நாடார் பிரபுக்கள்பாஞ்சாலங்குறிச்சிக்கட்டப்பொம்முவுக்குத் துணை நின்று கம்பெனியாருடன் போராடினர். வைகுண்டநாடன் களக்காட்டில் வைத்துக் கும்பெனியாரால் பிடிக்கப்பட்டு எட்டையபுரம் மன்னரது அநுமதியால் மன்னிப்புக் கேட்டு விடுதலையுற்றான். சாயாமொழிச் சிவந்தி ஆதித்த நாடன் போரிற்கலந்துகொள்ளவில்லை. எனினும், அவன் பாஞ்சாலங் குறிச்சியாரோடு சிநேகங் கொண்டவனாதலின், பாளையங் கோட்டைக்குக் கொணர்ந்து சிறையிலிடப்பெற்றான். அவனது கண்ணியத்தையும் ஒழுங்கு நிலையையும் நேரிற் கண்டுணர்ந்த கம்பெனியார் அவனை விடுதலை செய்தனர். நாடார்கள், பாஞ்சாலங்குறிச்சியுடன் மாத்திரமன்றி மற்றப் பாளையப்பட்டுக்களுடனும் தொடர்பு உடையவராகவே இருந்து

வந்தார்கள். கட்டப்பொம்மு யுத்தம் (கி. பி. 1799—1801) முடிவுற்றபின் ஆங்கிலேயர் ஆட்சி தடையின்றித் தென்னாடெங்கும் பிரகாசிக்கத் தொடங்கிற்று.

## 17. தேவாலயங்களும் நாடார்களும்.

நாடார்குலமக்கள் நம் சரித்திர ஆராய்ச்சியின்படி பண்டையரச மரபினரென்பதில்ஐயமில்லை. ஆதிகாலத்திலிருந்து அவர்கள் தமிழ்நாட்டைத் தாயகமாகக்கொண்டு தமிழ்மொழியையும் ஆதரித்து வந்தவர்களாவர். காலத்திற் கேற்றவாறு நாட்டில் தெய்வவழிபாடுகளும் மாறிக்கொண்டே வருகின்றன. சைவம், வைணவம் ஸ்மார்த்தமாதிய மதங்கள் தமிழ்நாட்டில் வெகுகாலமாய் வழங்கி வருகின்றன. தமிழ் நாட்டில் பற்பல தலங்களிலுமுள்ள தேவாலயங்களைச் சேர சோழபாண்டிய மன்னர்களே பெரும்பாலும் நிர்மாணித்தனர். ஆயினும் அக்காலங்களிலும், பிற்காலங்களிலும் தமிழ் நாட்டில் ஆங்காங்கு வாழ்ந்த சிற்றரசர், பிரபுக்கள் முதலியோர் அவ்வாலயங்களைப் புதுப்பித்து ஜீரணோத்தாரணங்களும் திருப்பணிகளும் இயற்றினார்கள். இவ்விஷயம் மதுரைத் திருப்பணிமாலை முதலிய ஸ்தல திருப்பணிப் பாமாலைகளால் அறியக்கிடக்கின்றன.

நாடார்குல வரலாற்றில் பின்வரும் விஷயங்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன:—

குற்றாலக் குறவஞ்சியில், "அப்பனே மேலைவாசலில் அரசே" எனப் பாண்டியர் புகழப்பெற்றுளர். தமிழ்நாட்டில் பெரும்பாலான தேவாலயங்களில் 'மேலைவாசல்' என்றொரு வாயில் மேற்குப்பக்கத்தில் விடப்பட்டிருந்தது. அவ்வாயிலை நாடாட்சிக்குரிய பாண்டியகுல நாடார்களே வெகுகாலமாய்த்

தனியுரிமையுடன் உபயோகித்து வந்தார்கள். தெலுங்க ருடைய ஆளுகை வியாபித்திருக்கையில், இவ்வாயிலை கற்கள் வைத்து அடைத்து இத்தகைய சுதந்திரத்தைப் பறித்தார் கள். இச்செய்தி நாடார்குலத்துப் பெரியோர் முதல் சிறி யோர்வரை யாவரும் உணர்வர். இதர குலத்தோரும் இதற் குச் சான்று கூறியிருக்கிறார்கள்.

ஆலய விஷயமாக நாடார்கள் அடைந்த இன்னல்கள் மூன்றும் அத்தியாயத்திற் கூறப்பட்டன. இவ்வளவு இன் னல்களுக் கிடையிலும் நாடார்கள் வழக்கம்போல ஆலயத் திருப்பணிகளையும் நடத்தி வந்திருக்கின்றனர்.

## 18. உத்தரமாற நாடார்களின் திருப்பணிகள்.

திருப்பரங்குன்றம் சுப்பிரமணியர் ஆலயத்தில் மஹாமண் டபம், ஆஸ்தானமண்டபம் முதலிய எல்லா மண்டபங்களும் சுமார் பத்துலட்ச ரூபாய் செலவில் நாடார்களாலேயே கட் டப்பெற்றன. ஐம்பதுவருஷங்களுக்குமுன் அம்மண்டபங்க ளைப்புதுக்கி, முன்னலங்காரங்களும் செய்வித்துத், தளவரி சைகளும்போட்டு ஆலயத்திருப்பணிகளை ஒருலட்சரூபாய்ச் செலவில் சிங்காரமாகச் செய்தவர்களும் நாடார்களே. பங்- குனி உற்சவத் திருத்தேரும் ஒருலட்சரூபாய்ச் செலவில் நாடார்களே இற்றைக்கு நூறுவருஷங்கட்குமுன் செய்து முடித்தார்கள். நாள்தோறும் அக்கோயிலில் அர்த்தசாமக் கட்டளை, பாரம்பரியமாக இன்றளவும் நாடார்களாலேயே நடைபெற்று வருகின்றது. நித்தமும் சுவாமியின் அர்ச் சனைக்கு உரிய புஷ்பங்களுக்காக நந்தவனங்களும், பாலுக்கு உரிய பசுக்களும் நாடார்களாலேயே பரிபாலிக்கப் பெற்று

வருகின்றன. ஆஸ்தான மண்டபத்தில் திருவாட்சிக்குரிய நித்திய தீபார்ச்சனைச் செலவுகளும், மாதாந்தங்களிலும் உற்சவ காலங்களிலும் சுவாமி, திருக்கோயிலைச்சுற்றி வரும் போது நடக்கும் தட்டிதிருக்கண், தீபார்ச்சனைச் செலவு களும் இன்றளவும் செய்வோர் நாடார்களே! ஐப்பசிமாதம் நடைபெறும் ஸ்கந்தஷஷ்டி உற்சவத்தில் ஒருமண்டபப்படி நாடார்களால் நடைபெறுகின்றது. திருப்பரங்குன்றத்தில் நாடார்குலமக்கள் தங்குவதற்குரிய மண் டபங்கள், மடங்கள் சத்திரங்கள் முகலிய வசதிகளும் தொன்றுதொட்டு இருந்து வருகின்றன.

மதுரை மீநாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில், ஸ்ரீசொக்க நாதருக்கு நாடோறும் காலை இரண்டாம் சந்தியிற் சூடும் 'இண்டை' என்னும் கொண்டைமாலை நாடார்களின் செலவே யாம்! ஆவணிமாதம் பிட்டுத் திருவிழாவில், சுவாமி எழுந் தருளுகையில் பழைய சொக்கநாதர் கோயிலுக்குமுன் நிகழும் மண்டபப்படி நாடார்களின் செலவில் நடைபெறுகின்றது.

பழனியில் தண்டாயுதபாணிக்குக் குதிரை வாகனம் நூறு வருஷங்கட்குமுன் நாடார்களாலேயே தங்கத்திறைற் செய்து வைக்கப்பெற்றது. சில வருஷங்களுக்கு முன் அத் தங்கக் குதிரைவாகனம் நாடார்களின் பொருட்செலவில் புதுக்கி வைக்கப்பெற்றது. ஆலயத்தில் முன்னுள்ள ஆஸ்-தான மண்டபத்தை ஒருலட்சரூபாய் செலவில் கட்டிவைத்த வர்கள் நாடார்களே! புரட்டாசிமாச உற்சவத்தில் நாடார் கள் மண்டபப்படியும் நிகழ்ந்து வருகின்றது.

கும்பகோணத்தில் கும்பேஸ்வரர் கொண்டருளும்

வைகாசிமாதத் திருவிழாவில் மூன்று மண்டபப்படிகள் நாடார்களால் நடைபெறுகின்றன.

சிதம்பரத்தில் ஒரு காலப்பூஜை நாடார்களாலேயே நாடோறும் நடந்து வருகின்றது. இரண்டாயிரம் ரூபாய்ச் செலவில் செடிவிளக்கு ஒன்று நாடார்களாற் செய்யப் பெற்றுக் கனகசபையில் வைக்கப்பட்டிருக்கிறது. அவ்விளக்குக்குரிய நித்தியச்செலவும் நாடார்களின் பொறுப்பேயாம்!

உத்தரமாற நாடார்களின் ஆலயத் திருப்பணிகளில் குறிப்பிட்ட சிலவற்றை இதுகாறும் கூறினோம். இனித் தக்ஷிணமாற நாடார்கள் செய்வித்த திருப்பணிகளிற் சில கூறுவோம்

## 19. தக்ஷிணமாறநாடார்களின் திருப்பணிகள்.

திருச்செந்தூர்ச் சிவாலயத்தின் உள்மண்டபம் காயாமொழி சிவந்தி ஆதித்தநாடன் கட்டியது. சிவக்கொழுந்தீஸ்வரர்சந்நிதி ஆயிரக்கால்மண்டபம், தண்ணீர்ப்பந்தல், நந்தவனம் முதலியன சிவந்தி ஆதித்தநாடனும், குமாரசாமி ஆதித்த நாடனும் ஏற்படுத்தியவை. இவர்கள் செய்வித்த திருப்பணிகளிற் குறையாயிருந்தவைகளை நூறுவருஷங்கட்கு முன் வாழ்ந்த இராமலிங்க ஆதித்தநாடன் பூர்த்தி செய்தனன். ஆவணி, மாசி மாதங்களில் நிகழும் சிவக்கொழுந்தீஸ்பரர் திருவிழாக்களில் நைவேத்தியச் செலவுகள் ஆதித்த நாடார்களுக்கு உரியவை. ஆறுந்திருநாள் "சாட்டையடி மண்டபப்படி" ஆதித்த நாடார்களுக்குரியது. திருச்செந்தூர்த் திருத்தேர் செய்வித்தோர் ஆதித்தரே! ஆதித்தநாடன் வந்து தேர்வடந் தொட்டுக் கொடுத்தபின்புதான் தேர் புறப்

படுவது வழக்கம். தேர் அலங்கரிக்கும் செலவை இன்றும் ஆதித்தர்களே நடத்துகிறார்கள். இன்னும் அறுபத்துமூவர் அர்ச்சனைசெலவும், விசாகத்திருநாளில் ஊரடங்கப் பிராமண போஜனச்செலவும், ஐப்பசிமாதத் திருக்கலியாண உற்சவத்தில் மாப்பிள்ளை வீட்டுக்குரிய விருந்துச்செலவும் ஆதித்தர்களே நடாத்துகின்றனர். திருக்கல்யாணத்துக்கு மறுதினம் நடைபெறும் பெண்வீட்டுவிருந்தும், வள்ளியம்மை தினைப்புன மண்டபப்படியும் நட்டாத்தி ஜமீன் திருவழுதி நாடனுக்குரியவை. ஆவணிமாதமும் மாசிமாதமும் சுப்பிரமணிய சுவாமிக்கு திருவாங்கூர் மகாராஜாவால் நடத்தப்பெறும் திருவிழாக்களில் இரண்டாம்சேவை ஆதித்தநாடார்களுக்குரியது. திருக்கார்த்திகையில்சொர்க்கப்பனையும் அதைச்சேர்ந்த சகல செலவுகளும் ஆதித்தருடையன. வெயிலுகந்த அம்மன் எட்டாம் திருநாள் மண்டபப்படிக்கு உரியோர் ஆதித்தரே பிரதிமாதத்திலும் கடைசிச் சுக்கிரவாரத்தில் நடைபெறும் நைவேத்தியம், அலங்காரம், எழுந்தருளல் முதலிய செலவுகளை நடத்துவோர், ராஜாக்கள் மங்கலத்துப் பத்மநாபநாடார் குடும்பத்தினராவர். தினந்தோறும் உதயமார்த்தாண்ட பூஜைக்குரிய புஷ்பச்செலவு, குட்டத்துக் குமாரவீர மார்த்தாண்டநாடனுடைய குடும்பத்தாரதுபொறுப்பு. கோபுரத்தில் மேலவாயிலில் எழுந்தருளிய அம்மனுக்குரிய நித்திய பூஜைச்செலவு, மூலப்புளி—சிவசுப்பிரமணியநாடன் குடும்பத்தாருக்குரியது. இன்னும் இவைபோன்று பல. இவ்விவரங்கள் நாடார்குலவரலாற்றிலிருந்து எடுத்தெழுதப் பெற்றவை. இங்ஙனம் தமிழ்நாட்டிற் பிரபல்யமான தேவாலயங்களிலெல்லாம் அளவில்லாத் திருப்பணிகளை நாடார்குல மக்களே இயற்றியிருப்பது உலகமறிந்தவிஷயமே. இவ்வாலய விஷய

மாய் நாடார் சாதியினருக்கும் பிறசாதியினர்க்கும் ஏற்பட்ட வழக்குகளில், நாடார்குலமக்களின் பழம்பகைவராகிய இந் நாட்டுப்பிறசாதி மக்களில் அதிகாரவர்க்கத்தினரும், அவர் களின் வார்த்தைகளையே பெரிதெனமதித்து நடக்கும் அந் நிய நாட்டரசாங்கத்தினரும் தம் மனங்கொண்டபடி தீர்ப்புக் களை யெழுதிவிடுகின்றனர். தெய்வவழிபாட்டில் சாதிவேறு பாடு காட்டுதல் அறிவுடைமைக்குப் பொருத்த மாகுமோ? இதுபோன்ற துவேஷங்கள் தற்காலத்தில் சிறிது சிறிதாக மாறிக்கொண்டேவருகின்றன. இத்துவேஷங்கள் அடியோ டழியும்நாளே, இந்நாடு பொன்னுடாகும் நன்னுள்! நாடார் கள் ஆலயவிஷயங்களில் இன்றளவும் தம் கௌரவத்தை விட்டுக்கொடாமலே நடந்து வருகிறார்கள்.

## 20. மகமை.

மகமையாவது தருமக்கொடை. தமிழரசர்களது கால முதற்கொண்டு மகமைஇருந்துவந்ததாக ஊகிக்கலாம். வர்த்த கத்துறையில் இந்நிதிவசூலிக்கப்படுவதால் இதனைச்'சுங்கவரி' என்று கூறுதலும் பொருந்தும். நாடார்குலமக்கள் நாடாட் சியைக் கைவிட்டகாலமுதல் மகமையை விடாப்பிடியாக நடத்திவருகிறார்கள். நாடார்களுக்குரிய விசேஷ லட்சணங்க ளுள் இதுவும் ஒன்று. நாயக்கர்களும், நவாபுகளும் ஆண்ட காலங்களில், நாட்டிலே செம்பு, வெள்ளி, பொன் நாணயங் கள் கிடைப்பது அரிதாயிருந்தது. அக்காலத்தில்நாடார்கள் ஏராளமானபொருட்செலவில் ஆலயத்திருப்பணிகளை யியற்று வதற்கு ஆதாரவாயிருந்தது இம்மகமை நிதியே யாம்! ஆங் காங்கு நாடார்கள் வசிக்கும் நகரங்களில் தற்காலம் உயர்தர

பாடசாலைகள், ஆரம்பபாடசாலைகள், ஆலயங்கள், பேட்டைகள், சத்திரங்கள், தண்ணீர்ப் பந்தல்கள், நந்தவனங்கள் முதலிய அளவிலாத் தருமங்கள் நடைபெறுவதெல்லாம் மகிமைவாய்ந்த இம் மகமையாலேயாம்.

## 21. குருக்கள்.

சான்றோர் குலத்தின் குருக்களாகக் கூறப்படுவோர் பின்வரும் பரம்பரையினரேயாவர்:- திருமங்கலம்-ஸ்ரீதேவராயசுவாமிகள்பரம்பரை; நாஞ்சிநாடு—சட்டநாதக்குருக்கள் பரம்பரை; அந் நாஞ்சி நாட்டு சத்திபூஜை தவசியையாக் குருக்கள் பரம்பரை; பனையடிப்பட்டி-பரிமேலழகக்குருக்கள் பரம்பரை; திருவெண்காட்டுக்குருக்கள் பரம்பரை; பூந்துறை கவண்டச்சி பாளையத்துக் குருக்கள் பரம்பரை; பாசூர்—அகிலாண்ட தீக்ஷிதக்குருக்கள் பரம்பரை; குளஞ்சிவாடிக் குருக்கள் பரம்பரை.

இவர்களில், குளஞ்சிவாடிக்குருக்களுக்கு, லோககுரு-சிருங்கேரிமடம் ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் கொடுத்த ஸ்ரீமுகத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கின்றது:—

"தாராபுரந் தாலூகா குளஞ்சிவாடி கேற்கேசுர அக்கிரகாரம், ஸ்ரீமடத்திலிருந்த சிவசாமிசாஸ்திரியளின் பௌத்திரர் சிவசாமி சாஸ்திரியளுக்கு சௌமியவூ (கி. பி. 1789) வைகாசிமீ 18உ கொடுத்த ஸன்னது:

பாண்டிய குலமாயும், சிவகோத்திர சம்பன்னளாயும், பாண்டியதேசத்திற் பிறந்தவாளாயும், க்ஷத்திரிய வம்சஸ்தாயமிருக்கிற நாடார்கள் குலம் சமஸ்தத்திற்கும் குலகுருவாய் நியமுகஞ் செய்து................" எனவரும்.

"குருமொழியே மலையிலக்கு" என்பதுபோல, நாடார் குலமக்கள் குருபக்தி நியமனமுடையவர்களென்பது பிரத்தியட்சம்.

## 22. கிறிஸ்தவமதமும்—நாடார்களும்.

ஆசியாக் கண்டத்தில் பலஸ்தீன நாட்டில், ஆதியில் கிறிஸ்தவமதம் தோன்றிற்று. பண்டைக்காலத்தில், அசோகச்சக்கரவர்த்தி தன் ஆட்சித்திறமையால் புத்தமதத்தைப் பலநாடுகளிலும் தீவாந்தரங்களிலும் பரவச்செய்தனன். அதுபோல கிறிஸ்தவ மதமும் இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, இத்தலி, போர்த்துக்கல் முதலிய மேனாட்டரசர்களெல்லாம் கிறிஸ்தவ மதத்தைக் கைக்கொண்டிருந்தபடியால் அவர்கள் தங்கள் ஆட்சி வன்மையால் தங்கள் மதமாகிய கிறிஸ்தவ மதத்தை உலகெங்கும் பரவச்செய்தனர். அரபியநாட்டினர் வந்து தங்கள் அரசியலையும் மதத்தையும் பரப்பிய பின்னர் கி. பி. 15-வது நூற்றாண்டின் இறுதி அல்லது 16-வது நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டியர் முதலிய பண்டையரசர் ஆட்சிபுரிந்த காலத்திலேயே கிறிஸ்தவ மதம் பாரத நாட்டிற் புகுந்தது. "பெஸ்கி" யென்ற வீரமாமுனிவர் போன்ற பல மேதாவிகளின் முயற்சியால் கிறிஸ்தவ மதம் இந்நாட்டில் வளரத்தொடங்கிற்று. முன் 55 & 56-ம் பக்கங்களிற் கூறியவாறு மகமதியர்செய்த கலகத்தைச் சகிக்கமாட்டாமல் கடற்கரை வாசிகளாகிய பரதவர்கள் கிறிஸ்தவமதத்திற்புகுந்து, போர்த்துக்கல்நாட்டிலிருந்து தென்னாட்டிற்கு வந்துகுடியேறியவியாபாரிகளின் ஆதரவைப்பெற்றுவாழ்ந்திருந்தார்கள். நாடார்குலமக்கள் பகைஞர்கள்செய்யும்இன்னல்களுக்கும் மகமதியர் படுத்துந் துன்பங்களுக்கும் ஆற்றாதவர்

களாய், பலர் ரோமன்கத்தோலிக் மதத்தைச் சேர்ந்தார்கள்.
ஆங்கில ஆட்சி நம் நாட்டில் ஸ்திரமாய் வேரூன்றிய பிறகு,
அதாவது கி. பி. 1800-க்குப் பிறகு, புரோடஸ்டண்டு
கிறிஸ்துவ மதமும் பலமான அஸ்திவாரத்துடன் வளரத்
தொடங்கிற்று. ஐரோப்பிய நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு
வந்து கிறிஸ்துவ மதத்தைப் பரவச்செய்யும் நோக்கத்துடன்
ஆங்காங்குப் பற்பல இடங்களில்தங்கிய பாதிரிமார்கள் பலர்,
மக்களுக்குக் கல்வியறிவையும் புகட்டத் தொடங்கினார்கள்.
பல பாடசாலைகள் நாடெங்கும் தோன்றி அபிவிருத்தியடைந்
தன. சாதாரணஜனங்களும் ஆங்கிலக்கல்வியில் முன்னேறும்
வண்ணம் உதவி புரிந்தவை இக் கிறித்தவ பாடசாலைகளும்,
கல்லூரிகளுமேயாம். பெண்கல்விக்காகவும் தனிப் பாடசாலை
கள் பல வேரூன்றி வளர்ந்தன. நம்நாட்டுத் தற்காலப் பெண்
மணிகளிற் பலர் கல்வியறிவைப் பெற்றது இப்பாடசாலை
களிலேயாம். கிறிஸ்தவசங்கத்தார் நம்நாட்டில் கல்விக்காகப்
பெரிதும் பாடுபட்டு வருகிறார்கள் என்பது ஒருவராலும்
மறுக்கவியலாது. பஞ்சாங்கம், புரோகிதம், கோயில்பூஜை
யாகிய தொழில்களையன்றி வேறு துறைகளையறியாத பிரா-
மணர்கள், பிரபல அரசியல் வாதிகளாகவும், வழக்கறிஞர்
களாகவும், நீதிபதிகளாகவும், கலெக்டர்களாகவும் விளங்கு
மாறு செய்வித்தவை இக்கிறித்தவகல்லூரிகளென்று சொல்ல
லாம்.

தென்னாட்டில், பசுமலை, பாளையங்கோட்டை, சாயர்
புரம்,நாஸரேத், இடையன்குடி முதலியநகரங்களில்கிறிஸ்தவ
பாடசாலைகள் மிகப்பெரியனவாய்ப் பலஉள. கிறிஸ்தவ மத
போதனைக்காக ஆலயங்களும் ஆங்காங்கு ஏற்பட்டன. கால்டு

வெல்பிஷப், மர்காஷிப்பாதிரியார், போப்பையர் முதலிய ஐரோப்பியப் பாதிரிமார்கள் முயற்சியாலும், அன்பினாலும் திருநெல்வேலிச் சீமையில் வாழும் நாடார்குல மக்கள் சுமார் மூன்று லக்ஷம் பேர்களில் அரைலட்சம் பேர் கிறிஸ்தவமதத் தழுவினர். திருநெல்வேலிக்கு வடக்கேயுள்ள இடங்களில் ஏறக்குறைய இரண்டுலக்ஷம் நாடார்குலமக்கள் கிறிஸ்தவமதத் திற் புகுந்தார்கள். இன்னும் முடிவாய்க் கூறுமிடத்துப் பழந்தமிழ்நாட்டுப் பெருங்குடி மரபினராய நம் குலமக்களில் சுமார் மூன்றுலட்சம் பேரைக் கிறித்தவமதம் இழுத்துக் கொண்டதென்று கூறலாம்.

நோயாளிகள் வைத்தியரை நாடுவதுபோலப் பிறசாதி யினரால் ஒடுக்கப்பட்டு ஒதுங்கியிருந்த நாடார்கள் கிறிஸ்தவ பாதிரிமார்களின் அன்புக்குப் பாத்திரராகி அரசாங்க ஆதர வும் அடைந்து, சிறந்த கல்விமான்களாகி உயர்தர உத்தி யோகங்களையும் வகிக்கலாயினர். கிறிஸ்தவமதம் பொறுமை யைப் பெருக்கிப் பகைமையை நசுக்கிச் சாதிமதபேதங்களைப் பொசுக்கி அறிவை வளர்க்கும் வன்மைவாய்ந்த சிறந்த மத மாதலால் அம்மதத்தைத் தழுவிய நாடார்களால் இதரநாடார் குலமக்களுக்கு யாதொரு தீமையும் ஏற்படவில்லை. தமையன் ஓரறையிற் சிவபூஜை செய்வான்; தம்பி இன்னோரறையில் கர்த்தரை நோக்கிச் செபஞ் செய்வான்!

## 23. கிறிஸ்தவ நாடார்களைப்பற்றிச் சில மேதாவிகளின் அபிப்பிராயங்கள்,

" அதிகமாய் உண்மைசொல்வது (நாடார்களுடைய) அவர்களுடைய விசேஷ குணமாயிருக்கின்றது "—

—ரிங்கில்டாப் பாதிரியார். (கி. பி. 1806)

" நாடார்கள் கிறிஸ்தவ மதத்தில் உண்மையிருக்கிற தென்றுவந்துசேர்ந்தனர். பலவந்தமாய்ச்சேர்க்கப்படவில்லை"
—பழைய ஜெர்மன் மிஷனரிரிப்போர்ட்டு. (கி. பி. 1809)

" இந்தியாவில் சகல ஜாதிகளிலும் கிறிஸ்தவ மதத்தில் அதிகத்தொகையாய்ச் சேர்ந்திருப்பவர்கள் சான்றோர் ஜாதியார்" —மதராஸ் அட்மினிஸ்டிரேஷன் மானுயல் கி. பி. 1893

" கிறிஸ்து மார்க்கம் இந்தியாவில் கொண்டாடும் மகா வெற்றிப் பிரதாபமான பிரஸ்தாபங்களெல்லாம் கபடமற்ற ஜாதியாரான சான்றோர் அம்மதத்தை அநுசரித்ததில்தான் ஆகியிருக்கிறது "
—பையர்லேன், தமிழ்நாட்டைக்குறித்தெழுதிய புஸ்தகம்

"ஜாதிக் கொள்கை சிலவற்றை மாற்றுமலே கிறிஸ்துவ மதத்தை யநுசரிக்க இடங்கொடுத்திருந்ததால் இந்தியாவிலுள்ள சகல சாதிகளிலும் குலாபிமான விஷயமாய் மகா ரோசம், மானம் பாராட்டும் ஜாதியாயிருந்த சான்றோர் தங்களுக்கு இடுக்கண் மிகுதியாயிருந்தகாலத்தில் பெருந்தொகையாய்க் கிறிஸ்தவ மதத்திற் சேரும்படியாயிற்று. இந்தியாவிலுள்ள சகலஜாதி இந்துக்களிலும் சான்றோரைப்போல் ஜாதியபிமான விஷயமாய் மகா மானரோசம் பாராட்டும் ஜாதி இல்லவே யில்லை "
—சிம்மன்ஸ் பாதிரியார்,

இத்தகைய அபிப்பிராயங்களைக்கொண்டு கிறிஸ்தவமதம் புகுந்த போதிலும் நாடார்கள் தங்கள் ஆசார வழக்கங்களை விடுகிறவர்கள் அல்லர் என்பதை அறியலாம்.

## 24. நாடார்குல கிறிஸ்தவமேதாவிகள் சிலர்.

சுமார் நூறு வருஷங்களுக்குமுன் கிறிஸ்தவ மதத்திற்

சேர்ந்த நாடார்குலமேதாவிகளான திருவாளர்கள் ரபி. சட்டாம்பிள்ளை ஐயா, வின்பிரிட் ஐயர், ஞானமுத்து ஐயர் முதலிய பலர் சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியிற் சேர்ந்து ஆங்கிலம், கிரீக், லத்தீன், எபிரேயு, சமஸ்தகிருத மாகிய பல பாஷைகளைப் படித்து அறிவாளிகளாக விளங்கினர். பேரறிவாளியாகிய ரபி. சட்டம்பிள்ளை ஐயா, கிறிஸ்தவமதக் கோட்பாடுகளுக்குள்ளடங்கியதாய், பழைய 'மோசே' முதலிய தீர்க்கதரிசிகள் கொண்டுவந்துள்ள கோட்பாடுகளுக்கு ஒத்த தாய்உள்ள ஓர் புதிய மதத்தை ஸ்தாபித்து, அம்மதத்திற்கு 'ஏகோவா மேசியா மதம்" என்று பெயரிட்டனர்.

சில நாடார்குல கிறிஸ்தவ மேதாவிகள் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய மேனுடுகட்குச் சென்று கலாவல்லுநர் களாய் நம்நாடு திரும்பி, பாரிஸ்டர்களாகவும், நீதிபதிகளாக வும், கலெக்டர்களாகவும் விளங்குகிறார்கள்.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி முதலிய தேசங்களில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள கிறிஸ்தவ சங்கங்களைப் போலத் தென்னிந்தியக் கிறிஸ்தவ நாடார்கள், "இந்திய மிஷனரிச்சங்கம்" என்று ஓர் சங்கத்தை யேற்படுத்தித் தகுந்த நிதிகள் சேகரித்து, மிகுந்த கல்வியறிவாளராகிய "அசேரியா" என்னும் பெரியாரை மிஷனரி யாகும்படி கோரினர். அவர் மேனுடுகளிலுள்ள தலைமைச் சங்க ஸ்தாபனங் களின் அனுமதியைப் பெற்று "பிஷப்" என்னும் பட்டம் அடைந்து பிரசித்தியாகவிளங்குகின்றனர். தற்சமயம் அவர் தெலுங்கநாட்டில் "தோரணக்கல்" என்னுமிடத்தில் வசித்து வருகிறார். தஞ்சாவூரில் இரு பெருந் திருவு மொருங்கே வாய்த்துப் பிரபு சிகாமணியாக விளங்கிய ராவ்ஸாஹிப்

ஆபிரகாம் பண்டிதரவர்கள் தமிழ் இசை நுட்பங்களைக் கண்டறிந்து, "கருணாமிர்த சாகரம்" என்ற அரிய பெரியதோர் நூலை எழுதி வெளியிட்டிருக்கின்றார். அவர் பரோடா நாட்டையடைந்து, அம்மன்னரவையில் தம்மாணவர்களையும் மாணவிகளையும் இசைபாடச் செய்து அரசரால் நன்கு மதிக்கப்பெற்றார். அவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் ஓர் அங்கத்தினருமாவர். தமிழ்மொழியையும் தமிழ்ப்புலவர்களையும் நன்கு ஆதரித்தார். இங்ஙனம் நாடார்குல கிறிஸ்வமாந்தர் சகல கலா விற்பன்னராய் உலகியற்றுறையிலும் அரசியற்றுறையிலும் முன்னேற்றமுடையவராய் பிராமணருக்கு ஒப்ப மேம்பட்டு விளங்கி வருகிறார்களென்பது பிரசித்தம்.

## 25. நாடார் மகாஜனசங்கம்.

கல்விசெல்வம், வியாபாரம், விவசாயம், கைத்தொழில் முதலியவற்றில் அதியுன்னத நிலைமையை அடைந்துள்ள நாடார்குல மக்கள் நமக்குள் "சங்கம்" ஒன்று ஏற்படுத்துதல் அவசியமென்பதை யுணர்ந்தனர். சோழநாட்டில் பிறையாறு என்னும் திருநகரின்கண் வள்ளலார்குலமணியும், தனவந்தர் தலைமணியுமாக விளங்கி அரசாங்கத்தாரால் பட்டங்கள் அளித்துக் கௌரவிக்கப்பெற்றவராகிய ராவ்பஹதூர் வெ. த இரத்தினசாமிநாடார் அவர்கள் நாடார் மஹாஜனசங்கத்தின் முதற்கூட்டத்தைக் கி. பி. 1910-ம் வருடம் பிப்ரவரி மாதம் தம் ஊரிலேயே நடைபெறும் வண்ணம் உதவினார்கள். பின்னர் சென்னை மாகாணத்திற் பற்பல நகரங்களில் வருஷத்துக்கு ஒருமுறை மகாநாடுகள்கூடின. இராமநாதபுரம் ராஜா, ஜட்ஜ் சதாசிவஐயர், சங்கரநாயர், பிஷப் அசரியா முதலிய பெருந்தகையாளர்கள் மகாநாடுகளுக்குத் தலைமை வகித்து அரிய

சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறார்கள். நாடார்மஹாஜன சங்கம் நம் குலமக்களுக்காக அரிய பெரிய தொண்டு ஆற்றி வந்திருக்கின்றது. தமிழ் நாட்டிலும், பிற நாடுகளிலும் வாழ்கின்ற லக்ஷக்கணக்கான நாடார்குல மக்களுக்குள் ஒற்றுமையும் ஆற்றலும் உண்டு என்பதை இச்சங்கம் உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்கிக் காட்டுகின்றது. நாளிதுவரை பதினாறு மகாநாடுகள் கூடியிருக்கின்றன.

## 26. நாடார்களைப்பற்றிச் சிறந்தமேதாவிகள் கூறியிருக்கும் அபிப்பிராயங்கள்.

ஏறக்குறைய இரண்டாயிர ஆண்டுகளுக்குமுன் பலஸ்தின நாட்டிலிருந்து, சேரநாட்டில் வந்து குடியேறிய யூதர்களுக்கு அக்காலத்திலிருந்தோர் எழுதிக் கொடுத்திருந்த தாமிர சாஸனப்பட்டயத்தில் கையெழுத்திட்டிருப்பவர்கள்,

1. கோவர்த்தனமார்த்தாண்ட வேணாடன்.
2. கோதைஸ்ரீகந்தவேணுவழி நாடன்.
3. மானவேப்பலமானவில்ஏரால நாடன்
4. ஈராயிரஞ்சாத்தவள்ளுவன் நாடன்.
5. கோதையிரவிநெடும்புரையூர் நாடன்.

இவர்களை ஐந்து சிற்றரசர்கள் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

2 நாடன்என்பது நாட்டுக்கு அரசன்என்று பொருள்படும் என்றார்—தர்ஸடன் துரை.

3 நாடார்களை மற்றொருவிதமாக நிலவுரிமைக்காரர் என்று அழைக்கப்படும் என்றார்

—சென்னை லார் டுபிஷப்துரை.

"நாடார்கள் பூமியை ஆண்ட புராதன அரச சந்ததியார்கள் மாத்திரமேயல்லாமல் அவர்கள் ஆரிய க்ஷத்திரிய வம்சத்தர்களாகவும் கூறுகிறார்கள்" என்றார், கார்னிஸ் துரை.

"சான்றோர் தங்களை க்ஷத்திரியர்என்று சொல்லுகிறார்கள்; தாங்கள் பாராட்டுகிறபடியே பூர்வம் தமிழ்நாட்டு ஜாதிகளுக்குள் மிகவும் மதிப்பான அந்தஸ்துகளையுடையவர்களாக இருந்திருக்கலாம்; ஆனால் அப்புறம் பிராமணர் தென்னாட்டுக்கு வந்து பின்னால் ஆண்ட ராஜாக்களை முகஸ்துதியாய் ஏமாற்றி தங்களுக்கு உயர்ந்த பதவிகளை ஆகப்பண்ணிக்கொண்டது முதல் தான் சான்றோர் குறைவடைந்தார்களென்று சொல்லலாம். எனக்குச் சந்தேகமறத் தெரிந்தபடி, ஒரு புது ராஜாங்கத்தார் வந்து முந்திய ராஜாங்கத்தாரைத் தலைகீழாய்த் தாழ்த்தி, அவர்களைப் பூமியாதீனத்தை விட்டோடப் பெலவந்தஞ்செய்ததால் அவர்கள் வேறெங்கேயாகிலும் புகலிடந்தேடி அங்கே தங்கள் பேரையும் பூர்வோத்தரத்தையும் மறைத்து, விறகுவெட்டிகளும் தண்ணீர்ச்சுமைக்காரர்களும் ஆனதுபோல், மேற்படி புதுராஜாங்கத்தாரின் தயவைப் பெற்று சிலாக்கியம்அடைந்த இதர ஜாதிகளால் அவமதிக்கப்படுகிற தாழ்ந்த தொழில்களை நடத்திவருகிறது சகசந்தான். ஆகையால் இவ்விஷயங்களை ஒருவகையாய் விசேஷித்துக் கவனிக்கவேண்டியதாகவேயிருக்கின்றது. இப்படி அவமதிக்கப்படுகின்ற, இந்தச்சாதியார் தங்கள் பூர்வ உயர்வுநிலையைக் கண்டு பிடித்ததனால் தங்களிலே மனஎழுப்பமாகி, தங்களின் தற்கால நிலைமையை கல்விமுதலியவற்றால் மேன்மைக்குக் கொண்டுவரப் பிரயாசைப்பட்டால் அவர்களுக்கு மற்றவர்கள் சகல கனத்தையும் மகிமையையும் கொடுக்கவேண்டுமென்றே

நான் தாராளமாய்ச் சொல்வேன்'' என்றார்,

திருவனந்தபுரம் காலேஜ் புரொபஸரும்,
மனோன்மணீய ஆசிரியருமாகிய,
ராவ்பஹதூர் **P**. சுந்தரம்பிள்ளை.

திருவாங்கூர் திவான் பேஷ்காராயிருந்த கனம் பகதூர் வி. நாகம ஐயரவர்களைக் கொண்டு திருவாங்கூர் கவர்ன்மென்றார் தயாரித்த திருவாங்கூர்ஸ்டேட்மானுயலில் அடியிற் கண்டபடி சொல்லப்பட்டிருக்கின்றது.

"அதாவது, இக்குலத்தாருடையபேரின் சரியானரூபம் சான்றார். சான்றோர்-சான்றவர் என்னும்மொழிகள் அதின் பிரதி வடிவங்களாக இருக்கின்றன. தமிழ் இலக்கிய நூல்களிலே காணப்படுகிற சில குறிப்புகளிலிருந்தும், இந்தக்குலத்தாருக்கு மாத்திரம் உரியவைகளாயிருக்கும் ஐதீகங்களிலிருந்தும், சான்றார் வடஇந்தியாவிலிருந்து தெற்கே குடியெழும்பி வந்த துணிவான யுத்தஜாதியாரின் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்று நமக்குத் தெரியவருகின்றது. அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான, ஏனாதிநாத நாயனார், சான்றார் ஜாதியைச் சேர்ந்தவரென்பதாக தமிழ் பெரிய புராணத்திலும் அவர் ஸாக்ஷிகுலோத்பவரென்பதாக அதன் ஸமஸ்கிருத பிரதியிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிபூர்வ காலங்களில் இச்சாதியார் இத்தேசத்தின் பல பாகங்களில் அரசாளுவோராய் அமர்ந்ததாகப் புலப்படுகின்றது. அவர்கள் ஒருகாலத்தில் ராஜாங்கம் ஆளும் ஜாதியார்களாயிருந்தார்களென்ற உண்மைச் சங்கதியானது நாடார் நாடாள்வார் போன்ற அவர்களுக்குரிய பட்டப்பெயர்களால் மாத்திரமல்ல, அவர்களுக்கு மாத்திரம் உரியதான திரளான

பழக்கவழக்கங்களாலும், இன்னும் வேறு சங்கதிகளாலும் ருசுவாகின்றன. நாடாள்வார் என்னும் பட்டப்பேர் திருவாங்கூர் நாட்டில் சில பூர்வ சாஸனங்களில் காணப்படுகின்றது. அவர்களுடைய ஆளுகை பின் வந்த திராவிட ஜனங்களின் படையெழுச்சியால் பின்னை ஒருகாலத்தில் கவிழ்க்கப்பட்டது............... இந்தஜாதி ஜனங்கள் சாதாரணமாய்ச் சான்றூர் என்று சொல்லப்பட்டாலும் அவர்கள் நாடார்கள் என்னும் பேரைத்தான் தங்களுக்கு வழங்குகிறூர்கள். நாடார் என்னும் பதம் பட்டப்பேராக வழங்கி வருகின்றது" என்பதே.

1821-ல் திருநெல்வேலிச்சீமை விபரம் எழுதிய தர்ண்புல் துரை சொல்லியிருப்பதாவது:—

"பாண்டியதேசம் இங்கிலாந்தின் கௌண்டிகள்மாதிரி சிறுநாடுகளாகப்பிரிக்கப்பட்டிருந்தது. அரசகுலப்பிரபுக்கள் அக்கௌண்டிகளுக்குத் தலைவர்களாயிருப்பது போல் பாண்டிய தேசத்தின் உள்நாடுகளுக்கு பாண்டியவம்சச் சான்றோர் தலைவர்களாயினர். ஆதலால் அவற்றின் ஆதிஉரிமைக்காரர்களாகிய சான்றோர்களுக்கு நாடன், நாடான், நாடவி, நாடாள்வான் என்னப்பட்ட பெயர்கள் வழங்கலாயின" என்பதே.

மிஸ். டக்கர் துரைசானி 1843-ல் எழுதிய தனது நூலில் சொல்லியிருப்பதாவது:—

"திருநெல்வேலி ஜில்லா தென்பாகத்தில் சான்றோருள் உயர்ந்த வகுப்பினராயிருக்கிற நாடாக்கள் ஆக்ஷேபமற்ற பூமியதிபதிகளே. ஒருநாடான் தன்பூஸ்தியில் ஒருபாகத்தை விற்றுப்போட்டாலும் அதில் அவனுக்கிருக்கும் ஒருவகையான குடிட்ரென்றுத் தீர்வை பாத்யதையை அவன் விட்டு

விட மாட்டான். இந்த ஏற்பாடு நம் இங்கிலாந்து தேசத்திலுள்ள (மேனேர்) பிரபுக்களின் வரிசைக்கு ஒத்ததாயிருக்கின்றது. ஆனால் இவர்கள் சங்கதியில் மேலாயிருக்கும் விசேஷம் என்னவென்றால், நிலச்சொத்து விஷயமாய் லா கோர்ட்டில் ஏதாகிலும் வியாஜ்யம் கொண்டுவரப்பட்டால் மற்றும் சகல சாதியாரும் தங்கள் பாத்யதைகளை எழுத்தாதாரங்கள் மூலமாய் ஸ்தாபிக்க வேண்டியதிருக்க இந்த நாடானுக்கோ குறிப்பிட்ட இன்ன இடத்து நாடான் என்று அவன் தன்னை இனங்காண்பிக்கிற அவ்வளவே போதுமானதாயிருக்கின்றது. எதிரி தான் அதை அறுதிக்கிரையமாக வாங்கிப் போட்டதாக ருஜுப்பண்ணினாலன்றி தாவாச் சொத்து நாடானுக்கே சரிப்படுத்தப்படும்" என்பதே.

கி. பி. 1909-ல் டாக்டர் தர்ஸ்டன் துரை தென் இந்திய எத்னாக்கிரபிப் புஸ்தகத்தில் விருதுநகர் க்ஷத்திரியாவித்யாசாலையைப்பற்றி எழுதியிருப்பதாவது:

"க்ஷத்திரியரது அறுவகைத் தொழில்களில் ஒன்று ஈதல். இந்த க்ஷத்திரியவித்தியாசாலையில் பிராமணர்உள்பட ஏராளான இதர ஜாதிப்பிள்ளைகள் யாதொருபீஸும் கொடுக்காமல் நாடார்களிடம் வித்யாதானம் பெற்று வருகின்றனர்" என்பதே.

விருதுநகர் சி. ச. சுப்பைய நாடார் தாம்எழுதிய உபந்நியாசம் என்னும் புஸ்தகம் 39-ம் பக்கத்தில் நாடார்களுக்காகச் சொல்லியிருப்பவை:—

நாம் மதுரையை ஆண்டுவந்த அரசர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு அநேக ஆதாரங்களும் இன்னும்

நடந்து வரக்கூடிய பழக்க வழக்கங்களும் உண்டு. நமது ராஜ்யத்தை அபகரித்துக்கொண்டவர்களால் நம்மைப் பல வகைகளிலும் ஒடுக்கி வைக்கப்பட்டதைத் தவிர வாஸ்தவத்தில் நாம் ஒடுக்கப்பட்டவர்களல்லர்.

"மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி இந்தஜில்லாக்களின் பல பாகங்களில் நமக்குச் சமத்துவமில்லாமலிருக்கிறதே யொழிய மற்ற ஜில்லாக்களிலும், மதுரை ஜில்லாவின் சில பாகங்களிலும் நமக்குச் சமத்துவம் இருந்துதான் வருகிறது. நாம் ஒடுக்கப்பட்டவர்களாகவே இருந்தால் எல்லா ஜில்லாக்களிலும், எல்லாவிடங்களிலும் ஒரே படித்தாய் ஒடுக்கப்பட்டிருப்போம். மதுரையை அரசு செய்தவர்களுடைய எல்லைக்குள் செய்துவைத்த கொடுமையைத் தவிர வேறில்லை. இராஜ்யத்தைக் கைப்பற்றியவர்கள் முந்திய அரசர்களையும், அவர்களைச் சேர்ந்தவர்களையும் கொலை செய்வதும், ஒடுக்கப்படுத்தி வைப்பதும் வழக்கத்தில் உள்ளவைதாம். இராஜ்யத்தை இழந்தவர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் எப்போதும் விரோதமாயிருந்துவருவார்களென்ற பயம் பிந்தியவர்களுக்கு இருந்து வரக்கூடியது சகசந்தான். ரஷியா சக்ரவர்த்தியையும் அவர் குடும்பத்தினரையும் ஒரு கிராமத்தில் கொண்டுபோய் வைத்திருந்து அப்பால் கொலை செய்யப்பட்டதும், ஜெர்மனி சக்ரவர்த்தியை ஆலண்டு தேசத்தில் பந்தோபஸ்து செய்து வைத்திருப்பதும் யாருக்குத்தான் தெரியா! நாம் ஒடுக்கப்பட்ட நிலைமையிலேயே இருந்துவரவேண்டிய அவசியமும் இல்லை. நம்மை ஒடுக்கிவைத்தவர்களுடைய அரசும், அதிகாரங்களும் இப்பொழுது கிடையா" ... ... என்பதே.

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான் சரவணப் பெருமாள் கவிராயர் பிறையாறு வயிரவ நாடன் பேரில் பாடிய காதற்பிரபந்தத்தில் தலைவன் புகழ்ச்சியைச் சொல்லுமிடத்து,

"வாடாத தோள்வீர வாகைகொண்டு தெண்டிரைசூழ்
நாடாராம் சத்திரிய நற்குலத்தில் உற்பவித்தோன்"
என்று சொல்லியிருக்கின்றனர்.

முகவூர் அருணாசலக் கவிராயர் பாடிய சிவகாசித் தல புராணத்தில் நூலுக்கு உபகாரிகளாகிய நாடார்களைப் பற்றிக் கூறுமிடத்து, திருவாவடுதுறை ஆதீனம் மகாசந்நிதானத்து ராயசம் பொன்னுச்சாமி பிள்ளை, சொல்லிய சாற்றுக்கவி 2-ம் பாட்டு 4-ம் வரி,

"இசையுறப் புரியும் செண்பகச் சூட்டி
யென்றசான் றோர்குல திலகன்"......... என்றும்

மதுரை ஐஸ்கூல் உபாத்தியாயர், சபாபதி முதலியார் சொல்லிய சாற்றுக்கவி, 3-ம் பாட்டு, 3-ம் வரி

"அறைகடல்சூ ழுலகுபுகழ் சான்றோர்தங்
குலதிலக னாகி நீதி"......... என்றும்,

கல்போது-புன்னைவனக் கவிராயர் பாடிய சாற்றுக்கவி 2-ம் பாட்டு 1-ம் வரி;

"செந்தமிழ் விளங்குஞ் செழுஞ்சிவ காசி
செய்யசான் றோர்குல திலகன்"...... என்றும்,

ஷை நூலாசிரியர்,

"மன்னராய் விளங்கி யகமகிழ் சான்றோர்
மரபுயர் வானவ ராகி"......... என்றும்

சொல்லியிருக்கின்றனர்.

# நான்காம் அத்தியாயத்தின் முடிவுரை.

பாண்டிய நாயக்க யுத்தம் (கி. பி 1560) முடிந்தபின் சுமார் இருநூறு வருட காலம் நாயக்கராட்சி தென்னாட்டில் நடைபெற்றது. அக்காலத்தில் பாண்டியர் ஆட்சி படிப்படியாய்க்குறைந்து திருமலைநாயக்கனது தளகர்த்தனின் வன்மையால் வேரோடு வீழ்ந்தது. பாண்டியமரபினர், "நாங்கள் வழுதி குலத்தினரே!" என்று கூறிக்கொள்ளவும் நாணும் நிலைமை அடுத்தது. நீரில் தோன்றும் குமிழிகள் அழகும் ஒளியும் தோன்றத்திகழ்ந்து நீருடன் கலந்து விடுதல்போல பண்டைத் தமிழரசர் சந்ததியார், சான்றோ ரினத்தினின்று தோன்றிய வாறே ஒன்றிக் கலந்தனர். இவ்வுண்மை முன் 26-ம் பக்கத்திற் சங்கநூல் மேற்கோளுடன் விளக்கப்பட்டிருத்தல் காண்க. மேற் கூறிய இரண்டு நூற்றாண்டுக் காலத்தினிடையே, மதுரைச்சீமையில் வாழ்ந்த பாண்டியகுல நடார்கள் ஆங்காங்கு வியாபார ஸ்தலங்களாகிய பேட்டைகளை யேற்படுத்தினார்கள். குன்றக்குடியிலுள்ள குமரவேள் ஆலயம் திருப்புத்தூர் வட்டகை நாடார்களால் பிரகாசிக்கப் பெற்றது. தென் பாண்டி நாட்டில் அஞ்சுபத்து நாடார்கள், பதின்பிரபுக்கள் ஏழுகரைக்காரர், ஏழுதண்டிகைக் காரர், அறுபத்துநான்கு தலைப்பாக் கட்டிகள் முதலியோர் பிரபலம் பெற்றிருந்தனர். இவர்களை உள்ளிட்டோ, அன்றி இவர்களின் வேறாகவோ பதினெண் நாடார் பாளையப்பட்டுகளும் பிரசித்தமாக இருந்தனவென்று தெரிகிறது. காயாமொழி ஆதித்த நாடார்களைப் பற்றி நாலாங்கரைக் கவிராயர் பாடிய பின் வரும் பாடல் இதனை அறிவுறுத்தும்.

* * *

" ஆதித்தன் நீயே! உலகுக் கெல்லாம்
ஆதித்தன் நீயே!

* * * * *

வலங்கைத் தலைவனீயே! மாகாளிவரபுத்ரர்
வலங்கை யாதியர் பதினெட்டுப் பாளையம்
வந்து வணங்கிட வரிசை பெற்றுயர் [ஆதித்தன்

* * * * * "

" நிலமக்கள் சால வுடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்." [திருக்குறள்

என்றவாறு ஆட்சியை யிழந்த நாடார்குல மக்கள் தாம் தாம் வசிக்கும் கிராமங்களில் அம்பலம். நாட்டாண்மை முதலியன தேர்ந்தெடுத்துத் தமக்குள் ஏற்படும் வழக்குகளைத் தமக்குள்ளேயே தீர்த்துக்கொண்டு சிறப்பாக வாழ்ந்தனர். அவர்கள் பிறசாதியாருடன் கூட்டங்களிற் கலந்து கொள்வதுமில்லை. நாடார்குல மக்களின் இத்தகைய சிறந்த பழக்க வழக்கங்கள்' " திருவாங்கூர் ஸ்டேட். மானுவல்" என்ற நூலில் கனம் திவான் பகதூர் நாகம ஐயர் அவர்களாற் பாராட்டப் பெற்றுள்ளன. முன் 178-179-ம் பக்கங்களிற் காண்க பிற்காலத்தில் பிரபலம் பெற்றுத் தற்சமயம் சிறப்புடன் விளங்குகின்ற நாடார் மஹாஜன சங்கம், அக்காலத்தில் நாடார் குலத்தவர் ஏற்படுத்திய உறவின் முறைச் சபைகளின் அபிவிருத்தியே யாகும்.

" நூறுநூ றாயிரம் இயல்பினதாகி
ஏறுடை யீசன்இப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையும் தானும் வந்தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசை

சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்"

* * *

[திருவாசகம்.

சிவபிரான் உலகமக்கள் தெய்வவழிபாடியற்றி உய்யும் வண்ணம் பலகோடி தெய்வபேதங்களாகத் தோன்றிய திருவுருவங்களில் பராசக்தியுடன் மலைநாட்டின்கண் குதிரைவாகனத் தூர்ந்து ஐயனாராக எழுந்தருளினர் என்ப. நாடார்குலமக்கள் அவ் ஐயனார் வணக்கமும், காமாட்சி, பெத்தனாட்சி பார்வதி, காளி என்னப்பட்ட சத்திவழி பாடுகளும் புரிந்து வருகின்றனர்.

அருப்புக்கோட்டை நாடார்கள் தங்கள் நகரில் பேர், பெற்றஓர்சிவாலயமும் செய்திருக்கின்றனர். தற்காலம் சோழ பாண்டி நாடுகளிலுள்ள தேவாலயங்களில் நாடார்கள் தரும கர்த்தர்(கமிட்டி)ஆலோசனை அங்கத்தினர்களாகவும் இருந்து வந்திருக்கின்றனர்.

கட்டபொம்மு சரித்திரத்திற் சொல்லியிருப்பதுபோல் நாடார்கள் அதற்கு முற்காலங்களிலும் சிறுபான்மை ஜமீன் பாளையப்பட்டுக்களிடம் சேர்ந்து உரிய சேவைகள் செய்து வந்ததாகவும் தெரிகின்றது.

தற்காலம் பிரிட்டீஷ் ராஜாங்கத்திலும் நாடார்கள் மன எழுச்சியுடையவர்களாக இராஜாங்க அனுமதியால் அமைக்கப் பெற்றிருக்கும் நகர சபை, கல்விக் கழகம், ஜில்லா சபை, மாகாண சபை ஆகிய இடங்களிலும் ஸ்தானங்கள் பெற்று விளங்கிவருகின்றனர். இன்னும் சட்டசபை ஸ்தானம், மந்திரிபதவி முதலிய உயரிய நிலைகளில் நிற்பதற்கும் முயற்சி

யுடையவர்களாகவே யிருந்து வருகின்றனர். நாடார்கள் அடைந்துள்ள-சம்ஸ்தானங்கள், உத்தியோகங்கள் ஆகியவற்றை நாடார்குலவரலாறு, ஆறுமுகனேரி-எஸ். பி. பொன்னைய நாடார் சரித்திரம் ஆகிய நூல்களில் பரக்கக்காணலாம்.

நாடார்கள் தாங்கள் மற்றவர்களுடன் சேர்ந்து ஒற்றுமையாய் தேசத்துக்குரிய காரியங்களை சிந்திக்கும் தகுதி வாய்ந்தவர்களே யன்றி வேறல்லர். தற்காலமுள்ள காங்கிரஸ் ஜஸ்டிஸ் ஆகிய கக்ஷிகளில் நாடார்களிருந்து வருவதே முன் சொல்லியதற்கு சாக்ஷி. இவ்வத்தியாய இறுதியிற் சொல்லப்பட்டிருக்கும் இந்து ஆங்கில மேதாவிகளின் அபிப்பிராயங்களை நன்கு தெளிந்து நாடார்கள் அரசர் குலச்சந்ததிகளே-என்பதைத் தெளிந்து கொள்வார்களாக.

## முடிவுரை.

இந்நூலில், 'சான்றோர்' என்னும் ஜனசமூகத்தைப் பற்றிப் பெரியதோர் ஆராய்ச்சி செய்திருக்கிறோம். சான்றோர், தமிழ்நாட்டுப் பழங்குடிகளாவர். தென் கடலில் ஆழ்ந்தொழிந்த "லெமூரியா" என்னும் பூப் பிரதேசமே ஆதியில் மனிதர்க்கு உற்பத்திஸ்தானமென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. ஹெய்க்கல் துரைமகனார், லெமூரியாவில் மனிதர் உற்பத்தியாகிப் பூமிமுழுதும் பரவினர் என்று அபிப்பிராயப் படுகின்றனர். பல்லாயிரக்கணக்கான வருடங்கட்கு முன் தமிழ் நாட்டின் பரப்பு மிகப் பெரியதாயும், முற்கூறிய லெமூரியாக்கண்டத்தின் ஒருபகுதியாயும் விளங்கிற்று. முதற்சங்கம் இருந்தது அதனில்தா னென்றும், அத்தமிழ் நாடு நாற்பத்தொன்பது சிறுநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்றும் அறியப்

படுகின்றன. பண்டைத் தமிழ் மக்கள் தாம்வாழ்ந்த நாட்டை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்திணை களாகப் பகுத்து, அவ்வத் திணைகட்குரிய முதற்பொருள் கருப்பொருள், உரிப்பொருள்களும் வகுத்திருக்கின்றனர், இவ்வைந்து மாநிலமக்களையும் அடக்கி யாள்வோரே அரசர். அரசவகுப்பினர் காலஞ் செல்லச் செல்லக் கணக்கின்றிப் பல். கினர்; பலதீவாந்தரங்களுக்கும், அயல்நாடுகளுக்கும் சென்று தம் குலமரபிற் கேற்ற அரசுரிமையை நிலை நாட்டலாயினர். இத்தகைய பண்டைத் தமிழரசர்மரபு சான்றோர் மரபேயாம் என்பதைப் பலகாலும் இந்நூலினுள் தெள்ளத் தெளியக் காட்டியுள்ளோம். நீர்மயமாயிருக்கும் ஆவின்பால், கட்டியா கத்திரண்டு வெண்ணெயெனப் பெயரடைந்தாற் போலச்சான் றோரினத்துத் தறுகண் வீரனொருவன் தன் புஜபல பராக்கிர மத்தாலும், நற்குண நற்செய்கைகளாலும், சாதுரிய சாகஸத் திறமையாலும் ஏனையோரனைவர்க்குந் தலைவனாகி அரசு வகித் தான் என எளிதில் ஊகித்துக் கொள்ளலாம். அரச பதவி யேற்பதற்கு முன், ஒருவன் அரசனுக்கு உற்ற துணைவனாயி, ருந்து அரசகாரியம் பார்க்கின்றனன். இருக்கு வேதத் (717 ii) தில் "அரசரைச் சுற்றியிருந்தவர்கள்: ரதக்காரர்கள், ரா ஜக்ருதர்கள், ஸூதர்கள், கிராமணிகள்(சான்றோர்கள்)ஆவர்." என்று உரைத்தலுங் காண்க.

தற்காலம் வடகன்னடம் ஜில்லா "வட்டுக்கல்" என்னும் சக்கரபுரிப் பட்டணத்தில் அரசாண்ட "சுராபாண்டியன்" அறுபத்துநான்கு சகோதரருடன் வாழ்ந்திருந்தான் என்று ஒரு பழங்கதை கேட்கப்படுகின்றது. பிரமோத்தர காண்டத் திலும் இக்கதை வழங்கும். (முன் 34-ம் பக்கத்திலுங்காண்க.)

இச் சுராபாண்டியன் தன் நாட்டிற்கருகிலுள்ள * "ஓரங்கல்" நகரில் அரசு செலுத்திய பிரதாபருத்திரனைப் போரில் வென்று தன் தம்பியருள் முதல்வனுகிய மதுவீரபாண்டிய னுக்குப் பட்டங்கட்டினன். அம் மகுடாபிஷேக வைபவத்தில்:

"சிம்மால கோட மன்னிய வர்த்தனபுரி சுராபாண்டி-சுராராஜமன்ய க்ஷத்திரிய சூரியவம்சம் மதுகேசர் உக்கிரகேத்திரத்திற் பிறந்து ரேணுகா புத்திர பாஞ்சோதி புத்திரனுகிய சுராபாண்டிசுரர் தம்பியான மதுவீர பாண்டியருக்கு ஓரிக்கல் நகரமும் சமஸ்தமும் அளித்திருப்பதால் மதுவீர பாண்டியரே நாடாள்வார்..." என்று ராஜ விளம்பரம் செய்வித்து; கட்டியத்தில். "சிம்மால கோடமன்ய வர்த்தன சக்கர புரிக்கு அரசனுகிய அமிர்த பாண்டிய விக்காதி பாண்டியர் பராக்கு! (எச்சரிக்கை), சூரிய குல மன்ய க்ஷத்ரிய சௌரிய பராக்ரம கவுண்டலீய கோத்ர அசுர ஸம்ஹார தேவஸகாய ரேணுகா வரபுத்ரா பராக்கு!" எனக் கூறிவந்தது அமரபுராணத்தால் அறியப்படும்.

டாக்டர் தர்ஸ்டன்துரை, தானெழுதிய "தென்னிந்திய ஜாதிகளும் குலங்களும்" என்ற எத்னுகிரபிப் புத்தகத்தில் கீழ்க்காணும் சரித்திரம் கூறப்படுகின்றது:

பாண்டிய மரபினனுகிய "தேவ பாண்டியன்" என்பவன் கி. பி. 77-ம் வருடகால அளவில் தமிழ்நாட்டைவிட்டு வெளியேறி கருநாடதேசத்துக் கடற்கரையிலுள்ள "ஜயந்தி" என்

* ஓரங்கல்: இஃது விஜயநகரத் தரசரது சேனைகள் தங்கிய இடமெனச் சரித்திரக்காரர் கூறுவர்.

னும் நாட்டை அடைந்து, தன் திறமையால் அந்நாட்டைத் தன்னடிப்படுத்தி அரசாளுகையில், அம் மன்னவன் வியா பார்க் கப்பல்கள் பலவற்றைக் கட்டி முடித்துக் கடலில் முதற் றடவையாக மிதக்கவிட்டபொழுது, ‘ குண்டோதரன் ’ என் னும் தேவதை அவனிடம் நரபலி கேட்டது. உடனே தேவ பாண்டியன் தன்மனைவியிடம், “குமாரனைக் கொடுக்கலாமா?” என இரண்டு முறை கேட்டும், அவள் மறுத்து விட்டமை-யால் வருந்தி நின்றான். அவன் சகோதரியாகிய ‘சத்தியவதி’ யென்பாள், தன்குமாரனை “ஜெயபாண்டியன்.” என்பவனை ஒப்புவித்தாள். குண்டோதரன் இரக்கமுற்று “ நரபலி வேண்டாம் ” என்று விருப்பத்துடன் கூறிக் கப்பல்கள் இனிதே நடக்க அருள்புரிந்தனன்.

கிரேக்க நாட்டினராகிய பிளினி என்பார் தம் காலமா கிய கி. பி. 77-ல், “ இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பிர தேசத்தில் ஓர் பாகம் பாண்டிய மன்னனின் ஆளுகையி லி-ருந்த தென்றும் அது பாண்டிய ராஜாக்களின் உள் நாட்டுப் பண்டகசாலையாகிய மதுரையினின்று வெகு தூரத்திலிருந்-தது ” என்றும் கூறியுள்ளார். சுரபாண்டியன், ‘வித்தியாத-ரன்’ எனவும் அழைககப் பெறுவன். இவன் ஒரு ராஜரிஷி. நாகராஜன் புதல்வியாகிய ஏழு கன்னியரை மணந்து அவன் ஏழு மைந்தரைப் பெற்றன னென்றும், காளிதேவி அவ் வேழு மைந்தரையும் அன்புடன் வளர்த்தா ளென்றும் சான்-றோர் புராணம் கூறும். தென்கன்னடம் ஜில்லா, கலியாண புரத்தில் சான்றோர்களின் ஆட்சி சிறப்புற்று விளங்கியது. (முன் 14, 15-ம் பக்கங்களிற் காண்க.) சுரபாண்டியனுக்கு வழங்கிய மற்றொரு பெயர் “ தேவபாண்டியன் ”. சான்றோர் களாகிய பாண்டியர் காளிதேவியி னருளால் வீரஞ் செறிந்து

நாடுபிடித்தல், கப்பல்நடத்தல், ஆட்சிபுரிதல் முதலியன நடத்தினர் என்பது மேற்கூறியவாற்ருல் அறியப்படும். இங்ஙனம் கன்னட நாட்டிற் பிரபலமாக வாழ்ந்த பாண்டியர், 'சூரியகுலத்தவர்' என்று அழைக்கப்படுவர். சான்ருர ராஜாக்களெனப்படுவோரும் சூரியகுலத்தவரே! இவையன்றி 'ஆதித்தர்' என்னும் பட்டப் பெயர் தாங்கிச் சிலர் இந் நாட்டிலும் பிற நாடுகளிலும் ஆண்டிருக்கின்றனர். "விக்கிரமாதித்தன்" என்னும் பெயர் இதனை வலியுறுத்தும்.

1914-ம் ஆு பிரசுரமான விஸ்வகர்ம பத்திரிகையொன்றின் இதழில்:

"விக்கிரமாதித்தன் அரசு செலுத்திய நாட்டிற் கருகாமையில், அவ்வரசனது காலத்திற்குப் பின்பு கம்பநாடு என்றெரு நாடு இருந்தது. அதனை ஆண்டவன் 'ஆதித்தன்' என்பான். அவன் பகையரசரோடியற்றிய போரில் உயிர் துறந்தான். அவன் உயிர்துறக்கையில் அவனுடைய மனைவி கர்ப்பமுற்றிருந்தாள். அவ் விராசபத்தினி தன்னைச் சூழ்ந்து வந்த மக்கள் சிலருடன் தென்றிசைப் போந்து காஞ்சீபுரத்திற்குப் பக்கத்திலுள்ள மாவண்டூரில் வாழ்ந்த சகல சாஸ்திர பாரங்கதனுன ஓர் விசுவப்பிராமணனது ஆதரவில் தங்கியிருந்தனள். அவ்வமயத்தில் இராசபத்தினி ஓர் மைந்தனை யீன்றனள். அம் மைந்தனை கம்பநாடன், கம்பன் என அவ் விசுவகருமப்பெரியாரால் நாமகரணஞ் செய்யப்பெற்றனன்" எனக் கூறப்பட்டிருக்கிறது. கால்டுவெல் பிஷப் முதலிய ஆங்கிலக் கல்விமான்களும், "கம்பன் புரோகிதகுலத்தவனல்லன், சிற்றரசன் குமாரனுக வேண்டும்" என்றே அபிப்பிராயப்படுகின்றனர்.

" ஆதவன் புதல்வன் முத்தி அறிவினை யளிக்கும் வள்ளல்
போதவ னிராம காதை புகன்றருள் புனிதன் மண்மேல்
கோதவஞ் சிறிது மில்லான் கொண்டல்மால் தன்னை-
[ யொப்பான்
மாதவன் கம்பன் செம்பொன் மலரடி சென்னி வைப்பாம்."

" இம்பரும் உம்பர் தாமும் ஏத்திய ராம காதை
தம்பமா முத்தி சேர்க்கும் சத்தியம் சத்தி யம்மே!
அம்பரந் தன்னின் மேவும் ஆதித்தன் புதல்வன் ஞானக்
கம்பன் செங் கமல பாதங் கருத்துற விருத்து வாமே!"

" அம்பிலே சிலையை நாட்டி அமரர்க்கன் றமுத மீந்த
தம்பிரா னென்னத் தானும் தமிழிலே தாலை நாட்டிக்
கம்பநா டுடைய வள்ளல் கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலை யாலே நருக்கின் றமுத மீய்ந்தான்."
[ கம்பராமாயணம்.

" தேவிற் சிறந்த திருமாற்குத் தக்கதெய் வக்கவிஞன்
பாவிற் சிறந்த திருவாய் மொழிசொல் பண்டிதனே!
நாவிற் சிறந்தநம் மாறற்கு வந்தருள் நாவலவன்
பூவிற் சிறந்தவாழ் வான்கம்ப நாட்டுப் புலமையனே!
[ சடகோபரந்தாதி.

என வரூஉம் பாடல்களால் கம்பர், கம்பநாட்டிற்குரிய அரச மரபினரென்பதும், ஆதித்தன் என்பவனுக்குப் புதல்வர் என்பதும் நன்கு தெளியப்படும். " கமலத் தடங்கண்ணன் தங்கை " யெனக் காளிகாதேவியைப் புகழ்ந்துள்ள தெய்வக் கவிஞராகிய கம்பர் சான்றோரினத்தவரே யாவர். கன்னட நாட்டில் சான்றோர்கள் வசித்ததுபோல ஒட்டியம் துளுவம், மலையாளம், சிங்களம் முதலிய நாடுகளினும் ஆட்சி புரிந்தன

ராவர். "பஞ்ச திராவிட முதல்வன்" எனப்பழங்கால முதல் வாழ்த்தப் பெற்று வருதல் இக் கருத்தையே வலியுறுத்து மென்க.

பாண்டியர் வரலாறு பலவிதமாகக் கூறப்படுகின்றது. மலயத்துவச பாண்டியன் திருமகளாகிய தாடதகைப் பிராட்டியார் காலமுதல் வரிசைப்படுத்திக் கூறுவர் ஒரு சாரார். அவையெல்லாம் புராண கற்பிதமாகலான், சரித்திராசிரியர் சங்கநூற்கள், சிலாசாஸனங்கள், மெய்க்கீர்த்திகள் முதலிய ஆணித்தரமான சாதனங்களையே துணைக்கொண்டு பாண்டியர் சரித்திரம் வரைவாராயினர். நாம் எழுதப்புகுந்த இச் சரித்திர நூலுக்கு நீண்டகாலத்தொடர்பான வர்த்தமானங்கள் வேண்டிற்றிலம். ஆகவே முதலத்தியாயத்திற் பண்டை வரலாறுகளைச் சுருங்கக் கூறிவிட்டுப் பன்னிரண்டாம் நூற்றூண்டு முதற்கொண்ட சரித்திரங்களே நன்காராயப் பெற்றுள்ளன. பராக்கிரம பாண்டியனும் குலசேகரபாண்டியனும் அரசு விஷயமாகப் பகையுற்றுப் பொருத போராட்டத்திலே சிங்களப்படையும், நாடாள்வார் பதினொருவர், ராயர் இருபத்தொருவர், பிறர் அறுவர் ஆகிய தளகர்த்தர்களும் கலந்தன வாதிய விஷயங்களே கூறப்பெற்றன. அவ்விஷயம் "மஹாவம்சோ" விற் கூறியுளது. செந்தமிழ்த் தொகுதி 13-பகுதி 12-ல், இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை திருவாளர். S. சோமசுந்தர தேசிகர், பல்லவராயன் பேட்டைக்கல் வெட்டு முதலிய சில கல்வெட்டுக்களைக்கொண்டு ஒருவரலாறு கூறியுள்ளனர். அதனைச் சுருங்கக் கூறுதல் ஈண்டு மிகையாகாது:

"இலங்கை யரசனுன பராக்கிரம பாகுவின் கட்டளை யால் தண்டநாதன், ஜெகத்திரய தண்டநாயகன் என்பவர் ஈழப்படையுடன் வந்து திருவிராமீச்சுரத்தில் தேவர் கோயிலைக் காப்பிட்டுப் பூஜைமுட்டப்பண்ணி அங்குள்ள ஸ்ரீபண்டாரமெல்லாங் கொள்ளையிட்டுப் பாண்டி நாட்டுச் சிற்றரசர் பலரைக் கொன்றனர். குலசேகரபாண்டியன் சோழ நாடு புகுந்து எதிரிலிச் சம்புராய னெனப்பட்ட ராஜராஜசோழனிடம் அடைக்கலம்புக அவன் திருச்சிற்றம்பலமுடையான் பெருமாணம்பி பல்லவ ராயனைப் பெரும் படையுடன் அனுப்பினன். அவன் சென்று போராடியும் ஈழப்படை மீறி சோழ நாட்டிலும் புகுந்தது. சோழன் தன் குருவாகிய சுவாமிதேவரிடம் விண்ணப்பிக்க அவர் பாபகர்மாக்களாகிய ஈழப்படை அறப்பட்டுத் தூரப்புண்டுபோமாறு இருபத்தெட்டு நாட்கள் அகோர பூஜை செய்தருளினர். அப்பால் முற்கூறிய சோழ சேனுபதி ஈழசேனுபதிகளின் தலைகளைக் கொய்து மதுரை வாயிலில்லதைப்பித்துக் குலசேகரனை மதுரைக்கு அரசனுக்கித் திரும்பினன் ஆயினும் குலசேகரபாண்டியன் சோழனது கட்டளைக்கு மாருகச் சிங்களவேந்தனுடன் உறவு பூண்டனன் ஆகவே சிங்களச் சேனை பாண்டிய நாட்டைக் கடந்து சோழ நாட்டிற்குட் புகுதற்கு எளிதில் இடமுண்டாயிற்று. சோழனது உத்திரவின்படி நாட்டின் எல்லைக் காவலராக விளங்கிய இராஜராஜகார், குடியராயன், ராஜ கம்பீர அஞ்சு கோட்டை நாடாள்வான் ஆகிய இவர்களைக் குலசேகர பாண்டியன் வென்று வெள்ளாற்றுக்கு வடக்கே துரத்தினன். சோழ மன்னவன் குலசேகர பாண்டியனது வஞ்சகத்தை யுணர்ந்து படையுடன்போந்து குலசேகரனிடமிருந்து அரசைப்பறித்து மலை நாட்டிற் றங்கி யிருந்த பராக்கிரம பாண்டியனது புதல்வ

ஞகிய வீரபாண்டியனுக்கு அளித்தனன்.-" இவ்வரலாற்றில் அஞ்சுகோட்டை நாடாள்வான், "ராஜகம்பீர" என்னும் அடைமொழியுடன் வழங்கப்பெறுதல் குறிப்பிடத்தக்கது.

டில்லியில் அரசு செலுத்திய அலாவுடீன் என்னும் மகமதிய மன்னவனின் சேனுபதியாகிய மாலிகாபரின் படையெடுப்பும், அதற்கு முற்பட்ட செய்யது இபுராஹீம் என்பாரது படையெடுப்பும் பாண்டிய நாட்டிற் குழப்பத்திற்கும் அரசர் வீழ்ச்சிக்கும் அடிகோலின. பனைமரத் தொழில் தேசமக்கள் அனைவர்க்கும் பொதுத்தொழிலேயாம்; தாலவிலாசம் என்னும் சமஸ்கிருத நூலில், பனையினிடத்தில், எண்ணூற்றொரு பிரயோசனப் பொருள்கள் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இத்தகைய விருக்ஷங்கள், ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கென்று படைக்கப் பட்டதேயன்று சிவபக்தரொருவர் பனைமரச் சோலையுண்டாக்கிப் பரிபாலித்தனர்; பனைகளெல்லாம் ஆண்பனைகளாயிருந்தமையின், அந்நாளிலே தலயாத்திரையாக ஆங்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைப் பிரார்த்திக்க, அவர் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப்பாசுரங்களால் அவையெல்லாம் பெண்பனைகளாக மாறின என்றதோர் கதை திருத்தொண்டர் புராணத்தா னறியப்படும். இக்கதை "பனைத் தொழில் இச்சாதியினர்க்குத்தா னுரியது அன்று" என்னும் உண்மையை வலியுறுத்துமன்றோ?

யாதவகுலத்திற் கண்ணன்மரபினராய் விதர்ப்பநாட்டில் தேவகிரிப்பட்டணத்தை யாண்ட அரசகுலத்தினரான இருவர் மைசூர் நாட்டிற்கு வந்து, அந்நாட்டரசன் புதல்வியை விரும்பிய 'காருக அள்ளி' யென்னும் மைசூர் மன்னனைக்

கொன்று அப்பெண்ணுக்கும் மைசூர்நாட்டிற்கும் 'உடையார்' ஆனமையால் உடையாக்கள் எனப்பட்டனர். உடையாக்கள் தமிழ் நாட்டின் மீது நாட்டமுற்றவிபரம் முற்கூறப்பட்டது. 'ஐவர் ராஜாக்கள் கதை'' இரண்டாம் அத்தியாயத்திற் கூறப்பட்டது. அது உண்மைவரலாறுகச் சரித்திரக்காரரால் 'இதுகாறும் மதிக்கப்பெறவில்லை. ஆயினும் திருநெல்வேலி ஸ்ரீநெல்லையப்பர் திருக்கோயிற் சாஸனத்தில், "வீரகேரள ராஜா வம்ஸத்திலுதித்த குலசேகரப் பெருமாளும், அவர். தம்பியர் நால்வரும் திருக்குறுங்குடிக்குப்போய் பத்திரகாளி-யின் உத்திரவுப்படி கோட்டைகட்டி சுவாமி பேரருளாளப் பெருமான் பிரதிஷ்டைசெய்தனர்" என்று கண்டிருக்கின்றது

இவைபோலும் சரித்திரக் கதைகள் பலவுள. அவையெல்லாம் விரிப்பிற் பெருகும்.

அன்புடையீர்!

நாடார்குல வாலிபர்கள் சமூகப்பற்றும் தேசாபிமானமும் ஓங்கி, "சமூக வலிமையே தேச முன்னேற்றம்" என்னும் உண்மையை அறிந்து தம்பணிசெய்வார்களாக! பெரியோர்கள் அவர்கட்குத் துணைபுரிவார்களாக!

முற்றும்.

---

Printed at the Satchithanandam Press, Virudhunagar.-37